www.padippakam.com

உரை மொழிவு

URAI MOZHIVU

தொகுப்பு: 1 எண்: 2 நவம்பர் 2003 விலை: 2 கனடிய டொலர்

கருத்துரை

ஊரும் அடையாளமும்
- சிவா தாட்சாயணி

சமூகப்போராளி அய்யா வைகுண்டசுவாமி
- சு. செல்வகுமாரன்

இலங்கை நாட்டுச் சித்தர்கள்
- ஆ.. கணேசலிங்கம்

ஈழநாட்டுச் சித்தர்கள்
- கஜானி குமார்



தொலைக்காட்சி, தொழில்நுட்பம், சிறுவர்கள்: நீல் போஸ்மனின் சிறப்பு எழுப்பும் கேள்விகள்
- உ. சேரன்

கட்டுரை

மரணத்து ஞாபகப் படிவுகளும் ஞாபகப் படிவுகளின் மரணமும்: நாட்டார் தெய்வங்களின் குறிப்பீட்டாக்கம்.
- லூயிஸ் ஜோசப் தருமராஜ்

தமிழ்நாட்டில் தண்ணீருக்கான போராட்டத்தில் (1924-2003) அரசும் தீண்டாமையும்
- கோ. ரகுபதி

ஒக்டோபர்:
பெண்வரலாற்றில் ஒரு கவனக்குவிப்பு
- கௌசலா

யாழ் நூல் - ஓர் ஆய்வு
- பேராசிரியர் நா. சுப்பிரமணியன்

இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஜே. எம். குட்சிய
- என். கே. மகாலிங்கம்

நெல்லை மாவட்ட தட்டார்களின் வாழ்வியல்
- பெ. சாந்தி

கனடாவிலிருந்து ...

www.padippakam.com

உரை மொழிவு
URAI MOZHIVU

பதிப்பகம் Publication:
உரை மொழிவு பதிப்பகம்
'Urai Mozhivu' Publications

Address முகவரி:
P.O.Box - 63617
1571, Sandhurst Circle,Scarborough, ON
CANADA, M1V 1V0
Tel: 416-703-5620 Fax:416-265-2027
E-mail:editor@uraimozhivu.com

மதிப்பிற்குரிய மதியுரையாளர்:

முனைவர் அம்மன்கிளி முருகதாஸ்
Dr. AMMANKILI MURUGADAS
(கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்)
(Eastern University, Sri Lanka)
திரு. சண்முகம் குகதாசன்
Mr. Shanmugam Kugathasan
(இயக்குனர்,தமிழீழச்சங்க வேலைதேடல் பிரிவு, ரொரன்ரோ)
(Director, TES, Toronto)
முனைவர் ஆ.செல்லப்பெருமாள்
Dr.A.CHELLAPERUMAL
(தூய சவேரியார் கல்லூரி, தமிழ்நாடு)
(St.Xavier's (university)College, Tamilnadu)
முனைவர் சேரன் உருத்திரமூர்த்தி
Dr.CHERAN URUDRAMURTHY
(யோர்க் பல்கலைக்கழகம்)
(York University)
முனைவர் தொ. பரமசிவன்
Dr.THO.PARAMASIVAN
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்)
(MSUniversity, Tamilnadu)
முனைவர் தே. லூர்து
Dr.LOURDU
(தூய சவேரியார் கல்லூரி, தமிழ்நாடு. ஓய்வு)
(St.Xavier's (university)College, Tamilnadu (emeritus))
முனைவர் வீ.அரசு
Dr.V.ARASU
(சென்னைப்பல்கலைக்கழகம்)
(University of Madras)

ஆசிரியர்: Editor
VAR. சந்தியாப்பிள்ளை
VAR.Chantiapillai

உதவி ஆசிரியர்: Assistant Editors:
சித்திரா மணிவண்ணன் - Chithra Manivannan
சிவாநந்தன் - Sivananthan
விஜயநாதன் பே. - Wijayanathan.P

ஒருங்கிணைப்பு ஆசிரியர்: Coordinating Editor
தேன்மொழியாள் கங்காதரன்
Thenmoliyal Kangatharan

பங்களிப்பு ஆசிரியர்: Contributing Editors:
கஜானி குமார்- Kajani Kumar
கௌசலா - Kavusala

மொழிபெயர்ப்பு, தட்டச்சு, மெய்ப்பு:
Translation, Typeset, Proof:
கஜானி, கௌசலா, சித்திரா
தேன்மொழியாள், ரொனிற்றா

விளம்பரம்: Add :
சுப்பிரமணியம் இரட்ணசிங்கம் - Ratnasigam Subramaniyam

வணிகத்தொடர்பு: Commercial Contacts:
கஜேந்திரன் பரராஜசிங்கம்- Kajendran Pararajasingam

விநியோகம்: Distribution :
இளையதம்பி வன்னியசிங்கம் - Ilayathambi Vanniyasigam

ஒருங்கிணைப்பாளர்: Coordinators:
இலங்கை / Sri Lanka:
தயாளினி உதயராஜ் B.A.(Hon)
Thayalini uthayaraj B.A (Hon)
முகவரி :
81, Rajavarothayam Street,
Trincomalee,
Sri Lanka.
Tel: (+26) 2224321

தமிழ்நாடு / Tamilnadu:
பே. சாந்தி
P. Shanthi
முகவரி :
37/17, Ramasamy Koil sannathy street
Palayamkottai, Tirunelveli
Tamilnadu - India
627002
Tel: (+462)2560083

வடிவமைப்பு: Layout & Design
பா. அ. ஜயகரன் - P. A. Jayakaran
Jaya Creative Solution

உரை மொழிவு

URAI MOZHIVU

தொகுப்பு: 1 எண்: 2 நவம்பர் 2003 விலை: 2 கனடிய டொலர்

உரைமொழிவு எதற்காக என்ற கேள்வி இன்னும் பல முனைகளில் தொக்கிநிற்கின்றது. நேரடியாகச் சொன்னால், இதழில் தரப்படும் மாதிரிக் கட்டுரைகள் போன்ற எழுத்துப் பயிற்சியை, அவரவர் படிப்புப் புலம்சார்ந்து புதிய சந்ததியினர் எழுதிப் பழகுவதற்கான தளம். அதனால், மாதிரிக் கட்டுரைகளும் எப்போதும் இருக்கும். பயில்வோரின் எழுத்துக்களும் எப்போதும் இருக்கும். தமிழில் நூல்களைத் திறனாய்வு செய்வது குறைவாக இருப்பது போலவே சமூக நிகழ்வுகளையும் செய்திகளையும் திறாய்வு அணுகுமுறையுடன் பார்ப்பது குறைவாயிருக்கிறது. உரைமொழிவினூடாக அந்தக்குறையை, குறைவை நீக்கும் எண்ணம். பல இதழ்கள் வருகின்றன. ஆனால் பெரும்பாலும் தமிழில், இலக்கிய இதழ்கள் அல்லது பொழுது போக்குப் பொதுவாசிப்பு இதழ்கள்தான் கூடுதலாக வருகின்றன. பொதுவாசிப்பாளர் தவிரத் தீவிர வாசிப்பாளரும் உள்ளனர். அடுத்து குறிப்பான தேடல்களுடன் அவர்களுடைய தேடற் புலம்சார்ந்து, கல்விப்புலம் சார்ந்து வாசிப்போர் உள்ளனர். பொது மக்களிலிருந்து இந்த மூன்றாவது மட்டம் வரை வாசிப்பின் எல்லைகள் மாறுபடும். அப்படியிருக்க 'உரைமொழிவு' வாசிப்பிற்கான நெகிழ்ச்சியுடன் இல்லை என்பதாகக் குறையிருக்கிறது. உரைமொழிவில் எழுதுவதற்கு தீவிர ஆய்வாளர்கள், இலக்கியத் திறனாய்வாளர் மற்றும் அடிநிலைச் சமூகத்துடன் பணிபுரிவோர் எனப்பலரும் உள்ளனர். அனைவரதும் பொதுநோக்கு, அவர்கள் எந்நிலைப்பாட்டைச் சார்ந்திருப்பினும், கல்விப்புலமாயினும் இலக்கியமாயினும் சமூக சேவையாயினும், 'தமிழிற்கான' எதாவது ஒருவகைப்பங்களிப்பு. இந்த இதழ், தமிழ்ச் சமூகப் பண்பாட்டு நிகழ்வுகள் குறித்த சீரிய, குறிப்பான பார்வைகளை முன்வைக்கும் திறனாய்வு நோக்கிலான கட்டுரைகளையும் செய்திகள் பற்றிய ஆய்வுப்பார்வைகளையும், சிறுதிரட்டுக்களையும், நூலறிமுகங்களையும் கொண்டிருக்கும் இலக்கில்தான் செயல்படுகின்றது. எழுதுவதற்கு மட்டுமல்லாது வாசிப்பதற்கும் பழகும் பொதுத்தளமாக இது இருக்கட்டுமே. ஒரு சமூகம் சரியாக இயங்குவதற்கு, அல்லது அந்தச் சமூகம் அடிப்டைப்பண்புகளுடன் நின்றுபிடிக்க பத்துவீதம் ஆட்களாவது அடுத்தகட்டத்துக்கான வாசிப்பு, சிந்தனை, எழுத்து, செயல்பாடு என இயங்குபவர்களாக இருக்கவேண்டும். இவர்கள் அனைவருக்கும் குறைந்தளவு ஒத்த கருத்து இல்லாவிட்டபோதும் கூட, இப்படி இயங்கும் ஒரு பிரிவு இல்லாத சமூகம் நெகிழ்வான இயக்கப்போக்குகளைக் கொண்டிருக்காது.

பல இடங்களிலும் தொடர்பு கொள்ள முனைகின்றோம். பதில் தொடர்புகள் கிடைக்காது போகின்றது. பல இடங்களிலிலுமிருந்து எழுதவைக்க எண்ணம். தொடர்புக்குக் காத்திருக்கிறோம். எங்கள் கருத்து எங்களதாகவும் உங்கள் கருத்து உங்களதாகவும் மாறாதிருக்கட்டும். ஆனால் கருத்துக்களைப் பறிமாறிக் கொள்வோம்.

பல்துறைசார்ந்த ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. தமிழிலும் ஆங்கிலத்திலும் அனுப்பலாம். ஒவ்வொரு இதழிலும் குறிப்பிட்ட பக்கங்கள் ஆங்கிலத்திற்கு ஒதுக்கப்படுகின்றன. ஆங்கங்களைத் அஞ்சலில் அனுப்ப விரும்புவோர் தபால் செலவைத் தவிர்க்க விரும்பின் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இருக்கும் எமது தொடர்பாளர்களின் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்.

உரைமொழிவிற்கு தரப்படும் ஆக்கங்கள் தமிழிலாயின் 3000 சொற்களுக்குள் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். அதற்கு மேற்பட்ட ஆக்கங்களை இடத்தேவை கருதி (சிறிது காலத்திறகு மட்டும்)இரு பகுதிகளாக வெளியிட வேண்டியிருக்கும். 1000 சொற்களுக்குக் குறையாமல் இருக்குமாறு கருத்துரைகளைப் பாரத்துக் கொள்க. ஆக்கங்களை கணினித் தட்டச்சுச் செய்வதாயின் 'பாமினி' எழுத்துருவைச்சார்ந்தவற்றில் தட்டச்சு செய்யவும். இது எழுத்துத் தவறுகள் நேராவண்ணம் பார்த்துக்கொள்ள உதவும். உரைமொழிவில் பயன்படுத்தப் படும் எழுத்துரு பெரும்பாலும் "அகரம்" என்பது. இதனை நீங்கள் எங்களுடைய இணையத் தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஆக்கங்கள் அனுப்புவோர் அவற்றின் நம்பகத்தன்மையை நிலைநாட்டும் பொருட்டு சான்றுகள் நூற்குறிப்புக்கள் இடுதல் நலம். தனிமனிதத் தாக்குதலின்றிய அனைத்து ஆக்கங்களும் பதிப்பிற்குரியன. தமிழ்ச் சமூகத்திற்குப் பங்களிப்புச்செய்யும் விதமாகவோ அல்லது இச்சமூகத்திலிருக்கும் பண்பாட்டிலிருக்கும் இயக்கப்போக்குகளை, மெய்மைகளை அடையாளம் காட்டும் விதமாகவோ அமையின் நன்று. படைப்பிலக்கியங்கள் (தமிழிற்கு அறிமுகப்படுத்தவேண்டிய விலக்க முடியா மொழி மாற்றுக்கள் தவிர) இடம்பெறா. கூடுமானவரை எழுத்துத் திருட்டை (plagiarism) விலக்குதல் நலம். பெயர் குறிப்பிடப்படாத பாடங்களுக்கு இதழே பொறுப்பு.

மேற்கோள்கள், துணைநூல்கள் பின்வருமாறு அமையலாம்:

நூலாயின்:
வானமாமலை, நா. 1974. மக்களும் மரபுகளும். சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.

தொகுப்பு நூற்களில் இருந்தாயின்:
செல்லபெருமாள், ஆ. 1999. இந்தியஃதமிழக சாதியப் படிமுறையும் ஆள்பற்றிய கருத்தாக்கமும், ஞா.ஸ்டீபன்.(தொ.ஆ.), பண்பாட்டு வேர்களைத் தேடி, பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

இதழ்களாயின்:
வானமாமலை, நா. 1976. 'முருக வணக்கம் இரு பண்பாடுகளின் இணைப்பே", ஆராய்ச்சி, 6:4

கட்டுரையின் நடுவே மேற்கோளாயின்:
(லூர்து, 2001. 36-37)

தகவலாளிகளாயின்:
ஜீவா. துறைசேர்ந்தமங்கலம். பெண். 24. சைவம்.
இதிலிருக்கும் இறுதி மூன்று அலகுகளும் தகவலாளியின் அனுமதியிருந்தால் மட்டுமே தரவும். தகவலாளியை ப்பற்றிய தரவுகள் தனிமனித உரிமை மீறல்களாகாவண்ணம் பார்க்க.

இணையத்தள முகவரிகளாயின்:
தனிப்பட்டவர்களின் பக்கங்களாயின் அவர்களின் பெயரையோ அல்லது அதிலிருக்கும் ஆக்கங்களை எழுதியவர்களின் பெரையோ தரலாம். நிறுவனங்களாயின் அவற்றின் பெயரைத் தரலாம் . அதன் பின் கீழே காட்டியிருப்பது போல தள முகவரியுடன் அடைப்பிற்குள் நீங்கள் அதைப் பார்த்த, பதிவிறக்கம் செய்த திகதி தரவேண்டும்.

தேவதேவன், புல்லின் குரல்.
http://www.santhi.net/ASHWAMETHA/ASMTA_TevTev.htm (29 oct 2003)
ஒவ்வொரு மாதத்திற்குமுரிய பதிப்பில் வரவேண்டுமாயின் அதற்கு முந்தைய மாதத்தின் 25 திகதிக்கு முன்னர் ஆக்கங்கங்களை அனுப்பி வைக்கவும். ஏதாவது எதிர்பாராத நிகழ்வுகளைப்பற்றிய செய்தியாயின் கணினிவழித் தட்டச்சுச் செய்து உரைமொழிவின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். அல்லது தொலை நகலுக்கு அனுப்பவும்.

திறனாய்வுக்கு நூல்கள், இதழ்கள் அனுப்புவோர் இரு படிகள் அனுப்பவும்.

படிப்பகம்

www.padippakam.com

தொலைக்காட்சி, தொழில்நுட்பம், சிறுவர்கள்: நீல் போஸ்ற்மனின் சிறப்பு எழுப்பும் கேள்விகள்



"உலகப் பரப்பில் இடம்பெறும் பல்வேறு அநியாயங்களையும் அழிவுகளையும் பொழுது போக்காக, களிப்பூட்டும் நிகழ்ச்சிகளாக உருமாற்றம் செய்வதே தொலைக்காட்சித்துறையின் முக்கியமான பணியாகப் போய்விட்டது என்று விமர்சிக்கிறார் நீல் போஸ்ற்மன்."

இலக்கிய விமர்சகரும் அமெரிக்காவின் ஊடகவியல், பண்பாட்டு மேலாதிக்கத்துக்கு எதிராகச் சலிக்காமல் தனது எழுத்துக்களாலும் விரிவுரைகளாலும் போராடி வந்தவருமான நீல் போஸ்ற்மன் (Neil postman) ஒக்டோபர் ஒன்பதாம் நாள் காலமானார். எட்வேட் ஸயீட்டின் இறப்பை அடுத்து, நீல் போஸ்ற்மனின் இறப்பும் ஒரு சோகம்மிக்க அதிர்ச்சி தரும் செய்தியாக வெளியாகி உள்ளது. நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் கல்வித்துறையிலும் ஊடகவியல் துறையிலும் பேராசிரியராகப் பணிபுரிந்து வந்த நீல் போஸ்ற்மனுக்கு வயது 72.
எட்வேட் ஸயீட் அளவுக்குப் பெரும்புகழ் பெற்றவரில்லை எனினும், நீல் போஸ்ற்மனின் எழுத்தும் கருத்துக்களும் கல்வித்துறையிலும் ஊடகவியல்துறையிலும், பண்பாட்டியல் துறையிலும் மிகமுக்கியமான பார்வை மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளன.

நியூயோக்கிலேயே வாழ்ந்து வந்தாலும் கனடியப் பல்கலைக் கழகங்களிலும் அடிக்கடி விரிவுரையாற்றியவர். CBC வானொலியில் முக்கியமான கருத்துரைஞராக இருந்தவர். Morning Side with peter czowski எனும் மிகப் பிரபலமான CBC வானொலியின் காலை ஒலிபரப்புக்களில் நீல் போஸ்ற்மனின் கருத்துக்களைக் கேட்டிருக்கக்கூடிய கனடியர் மில்லியன் கணக்கில் இருப்பார்கள். இன்று பீற்றர் ஸோவ்ஸ்கியும் இல்லை: நீல் போஸ்ற்மனும் இல்லை.

தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் யோர்க் பல்கலைக்கழகத்தில் நீல்போஸ்ற்மனின் விரிவுரைகளில் பங்குகொண்ட பட்டப்பின் படிப்பு மாணவர்கள் பலர் (நான்உட்பட) கற்பித்தல் என்பது அறிவூட்டுதல் மட்டுமல்ல, சமூகநீதிக்கான போராட்டத்திற்கும் மாணவர்களுக்கு வழிகாட்டுவது என்பதை வரித்துக் கொள்வது இன்றியமையாததாக இருந்தது. நீல் போஸ்ற்மனின் ஆரம்பகால நூல்களில் ஒன்றின் தலைப்பே Teaching as a subversive activity (1969) என்பதாகும்.

எட்வேட் ஸயிட்டைப் போலவே பல தளங்களில் என்னுடைய கருத்துக்களையும் சிந்தனைகளையும் பதித்தவர் என்ற வகையிலும் இடையறாத சமூக விமர்சகர் என்ற வகையிலும் "நல்லாசான்" என்ற முறையிலும் நீல் போஸ்ற்மன் பற்றிய ஒரு சிறு அறிமுகத்தைத் தருவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

பொதுசனத் தொடர்பியல் துறையின் அபரிமிதமான வளர்ச்சியும் ஊடகத்துறையில் தொலைக்காட்சியின் மேலாதிக்கமும் குழந்தைகளது அறிவு வளர்ச்சியை மோசமான முறையில் பாதிக்கிறது என்பது நீல் போஸ்ற்மனின் முக்கியமான வாதங்களுள் ஒன்று. தொழில்நுட்பம், நாம் நினைக்கிற அளவுக்கு சாதகமான பயன்பாடுகளைத் தருவதற்குப் பதிலாக எமது விமர்சன ஆளுமையையும் திறனாய்வையும் கேள்வி எழுப்புகிற மனநிலையையும் முடக்கி விடுகிறது என்று நீல் போஸ்ற்மன் வாதிட்டார். அவருடைய மிகவும் சிறப்பு வாய்ந்த நூலான The disappearance of childhood (1982) பெரும் வாதங்களையும் சலசலப்பையும் ஏற்படுத்தியது. நீல் போஸ்ற்மனின் வாதத்தை மிக எளிமையாகப் பின்வருமாறு விளங்கப்படுத்தலாம். குழந்தைகளுக்கும் வளர்ந்தவர்களுக்கும் வேறு வேறான உலகங்களும் ஆசைகளும் உள்ளன. குழந்தைகள் உலகம் தனித்துவமானது. ஆனால் எமது தொலைக்காட்சிகளோ குழந்தைகள் உலகத்தையும் வளர்ந்தவர்கள் உலகத்தையும் ஒன்றாக்கி விட்டன. வளர்ந்தவர்களுக்கெனத் தரரப்படக்கூடிய தகவல்களும், விளம்பரங்களும், சேதிகளும், நிகழ்ச்சிகளும் இப்போது வரன்முறையற்றுக் குழந்தைகளுக்கும் கிடைக்கக்கூடியதாகி விட்டது. இறப்பு, பாலியல்அழிவு நோய்கள் உட்பட ஏராளமான பெரியோர்க்கான இரகசியங்கள், குழந்தைகளுக்குக் கட்டற்ற முறையில் வழங்கப்படுவதைத் தொலைக்காட்சிகள் உறுதி செய்வதால், அவர்களிடம் இருக்கக்கூடிய தேடல், ஆர்வம் என்பன குறைந்து, அவநம்பிக்கையும், முரட்டுத்தனமும் இறுமாப்பும் அகங்காரமும் அக்கறையற்ற தன்மையுமே வளர்கின்றன. இது குழந்தைகளின் அறிவு வளர்ச்சியையும் அறத்தின் வளர்ச்சியையும் பாதிக்கின்றது.

நீல் போஸ்ற்மனின் இந்தக்கருத்து கல்வியியல் துறையிலும் குழந்தைகள் நலன்பேணும் துறையிலும் மெல்ல மெல்ல மாற்றங்களைக் கொண்டு வருகிறது. நீல் போஸ்ற்மனின் கருத்துக்கு மிகுந்த வலுச்சேர்ப்பனவாக அமைவன. தமிழ்த் திரைப்படங்களும் கண்ணீர் இழுப்பித் தொலைக்காட்சிப் பெருந்தொடர்களும் என்பது மிகையான கூற்று ஆகாது. குழந்தைகளும் பெற்றோருமாக இவற்றைக்கூட இருந்து பார்ப்பதுதான் நமது பண்பாட்டின் வாழும் யதார்த்தமாக இருக்கிறது.

தொலைக்காட்சித்துறை பற்றிய நீல் போஸ்ற்மனின் இன்னுமொரு நூலும் குறிப்பிடத்தகுந்தது. Amusing ourselves to death: public discourse in the age of show business (1986). உலகப் பரப்பில் இடம்பெறும் பல்வேறு அநியாயங்களையும் அழிவுகளையும் பொழுது போக்காகக் களிப்பூட்டும் நிகழ்ச்சிகளாக உருமாற்றம் செய்வதே தொலைக்காட்சித்துறையின் முக்கியமான பணியாகப் போய்விட்டது என்று விமர்சிக்கிறார் நீல் போஸ்ற்மன். கொக்கா கோலா அருந்தியபடி ஆஃப்கானிஸ்தானில் அமெரிக்க விமானப்படை ஏற்படுத்துகிற அழிவுகளைப்பார்த்து ரசிக்கவும் வியக்கவும் செய்கிற ஒரு மனோநிலையைத் தொலைக்காட்சி ஏற்படுத்துகிறது. தொலைக்காட்சிகள் செய்தி வழங்கும் முறையே அடிப்படையில் கோளாறுமிக்கது என்பது நீல் போஸ்ற்மனின் கருத்து. செய்திகள் வழங்கப்படும் போது இசைபயன் படுத்தப்படுகிற முறைமை, செய்தியின் முக்கியத்துவத்தில் அல்லாது பார்வையாளரின் கவனத்தை ஈர்ப்பதிலேயே குறியாக இருப்பது, விளம்பரத்திற்குத் தரப்படுகிற மரியாதையும் முக்கியத்துவமும் போன்ற காரணங்களால் செய்தி வழங்கல் என்பதே கேளிக்கையாக மாறிவிட்டது என்கிற நீல்போஸ்ற்மன் ஊடகவியலில் இம்மாற்றம் சிந்தனையை மழுங்கடிப்பதற்கும், பொதுமக்களை மந்தைகளாக மாற்றுவதற்குமே பயன் படும் என்று சுட்டிக்காட்டுகிறார். இத்தகையதொரு சூழலில் ஆர்னோல்ட் ஹீவார்ட்னெகர், ஜோர்ஜ் புஷ், ஜெயலலிதா போன்றவர்கள் ஆட்சித் தலைவர்களாக வருவது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றேதவிர அதிசயம் தரும் ஒன்றல்ல.

பாடத்திட்டங்களில் மாற்றம் செய்யப்படுவதும், பாடசாலை முறைகளில் அடிப்படை மாற்றங்களைச் செய்வதும் குழந்தைகளுக்கு அறிவூட்டும் முறைகளில் புதிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதும் மிகவும் அவசியம் என்று கருதிய நீல் போஸ்ற்மன் தனது மாற்றுத் திட்டங்களையும் கருத்துக்களையும் The end of education: Redefining the value of school(1996) எனும் நூலில் தெளிவாக ஆய்வு செய்கிறார். மானுடவியல், மனிதப்பண்பியல், மொழியியல் போன்ற துறைகள் பாடத் திட்டங்களில் மையமான கூறுகளாக இடம்பெற வேண்டும் என்பது அவருடைய இறுக்கமான கருத்தாக இருந்தது. தொழில்நுட்பத்தின் முரட்டுத்தனமான வளர்ச்சி மனிதத்தைச் சின்னாபின்னப் படுத்துகிறது என்பதில் ஏராளமான விஞ்ஞானிகளுக்கு இப்போது உடன்பாடு உள்ளது. இருநூறு ஆய்வுக் கட்டுரைகளையும் இருபது நூல்களையும் வெளியிட்டுள்ளார் நீல் பொஸ்ற்மன். அவற்றுள் How to watch TV news (penguin1992), Technology: the surrender of culture to technology(Knopf1992), Conscientious objections: stimding up trouble about Language,technology and education (knopt,1983) என்பன ஊடகத்துறையில் இருப்பவர்களுக்கு மிகவும் பயன்படக் கூடியன.

தொழில் நுட்பத்துக்கு (Technology) முற்று முழுதாகவே எதிரானவர் என்று அமெரிக்காவின் வலதுசாரிப் பிரமுகர்களால் குற்றம் சாட்டப்பட்ட நீல்போஸ்ற்மன், தொலைபேசியில் (Voice mail system) ஏற்பாட்டை வெறுத்தவர். நியூயோர்க் பல்கலைக் கழகத்தில் அவருடைய இலக்கத்தை அழைப்பவர்களுக்கு அவர் அங்கு இல்லாவிட்டால் கிடைக்கும் தகவல் சுவாரசியமானது: நியூயோர்க் பல்கலைக் கழகத்தில் Voice mail system இருக்கிறது. ஆனால் பேராசிரியர் அதைப்பயன் படுத்துவதில்லை. தொழில்நுட்பத் துறையில் மாற்றங்களும் முன்னேற்றமும் நன்மைகள் தருவதற்காக மட்டுமே வருகின்றன என எம்மை நம்பவைப்பதே ஊடகங்களின் பணியாகி விட்டது. ஆனால் இந்த மாற்றங்கள் யாருடைய நலன்களைப் பிரதி பலிக்கின்றன? யாருக்கு லாபம் சென்றடைகிறது? இந்த மாற்றங்களுக்கும் தொழில் நுட்ப முன்னேற்றங்களுக்குமான செலவு எவ்வளவு? இந்தச் செலவின் ஒருபகுதியை உலகின் வறுமையை நீக்கப் பயன்படுத்த முடியாதா?ஆகிய கேள்விகளை நாம் எழுப்பியே ஆக வேண்டும்.

இரவிரவாய்த் தொலைக்காட்சியைப் பார்த்து விட்டுக் காலையில் விழித்தெழும்போது எமக்கு நினைவில் இருப்பதெல்லாம் காலநிலை அறிக்கை மட்டும் தான் என்றால் தொலைக்காட்சிகளுக்கு என்ன பயன் என்ற கேள்வியையும் நாம் எழுப்ப வேண்டும். அத்தகைய கேள்விகளைத்தான் ஆயிரக்கணக்கில் தான் பங்குகொண்ட பொதுக்கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் விரிவுரைகளிலும் நீல்போஸ்ற்மன் எழுப்பினார்.

- உ. சேரன்

படிப்பகம்

www.padippakam.com

ஊரும் அடையாளமும்

வேருக்குத் திரும்புதல்

சிவா தாட்சாயணி

கனடாவுக்குப் புலம்பெயர்ந்த தமிழரின் இன்றைய வாழ்க்கையானது தமிழ்ச் சமூகத்தில் சில புதிய சமூக, பண்பாட்டு நிலைமைகளைத் தோற்றுவித்திருக்கிறது. புலம்பெயர் சூழலில் இருப்பு புதிது. அதனால் அது, புதிது, புதிதாகச் சிக்கல்களைத் தோற்றுவிக்கிறது. முன் பட்டறிவும் முன் உதாரணமுமற்ற இவ்வாழ்நிலைக்குத் தொடர்ச்சியாக முகம் கொடுப்பதில் வாழ்க்கையை நகர்த்திச் செல்கிறது தமிழினம். மரபான தாய்நிலத்திலிருந்து விரும்பியோ, விரும்பாமலோ புலம்பெயரும்போது, புலம்பெயர்ந்த இடங்களில் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கலில் முக்கியமானது அடையாளம் பற்றிய சிக்கலாகும். தாய்நிலத்திற்குச் திரும்பிச் செல்லல் என்பது கனவென்றாகிவிட்ட சூழ்நிலையில், புலம்பெயர்ந்த மண்ணில் எந்தச் சிக்கல்களையும் எதிர்கொண்டாகியே தீரவேண்டும் என்ற நிலையாகி விட்டது.

அடையாளம் என்பது உளவியல் சார்ந்தது. தன்னை மற்றவர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது. தனிப்பட்ட ஒருவருக்குத் தன்னை அடையாளப்படுத்துவதற்கு என்ன தேவை இருக்கிறதோ அதுவேதான் ஒரு குழுவுக்கும் அந்தக் குழுவின் விரிந்த அளவில், இனத்திற்கோ, தேசியத்திற்கோ அல்லது ஒரு கூட்டமைப்பில் இருக்கும் நாடுகளின் ஒருமைப்பாட்டுக்கும் இருக்கும். "அடையாளம் அல்லது பேரடையாளம் என்பது ஒரு குறிப்பிட்ட பார்வைச் சட்டகத்தில் இருந்தே (frame of reference) பார்க்கப்படுகிறது. எனவே, அது சார்பியல் தன்மை (relativity) வாய்ந்ததாகவே கண்டறியப்படுகிறது".

ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்த
அனைத்து ஊர் மக்களும் ஏதோ ஒரு
வகையில் தமது ஊர்களின் பெயரில்
சங்கங்கள் வைத்திருக்கிறார்கள்.
பழைய மாணவர் சங்கம் என்றோ,
நலன்புரிச் சங்கம் என்ற பெயரில்
ஏறத்தாழ 50 சங்கங்கள் இருக்கின்றன.
ஊர் சார்ந்த அடையாளங்கள்
பெரும்பாலும் இவை மூலமே
நிலைநாட்டப்படுகின்றன.

புறச்சூழலின் நெருக்கடிகளுக்கு ஒரு தனி-மனிதன் உள்ளாகும் போது அவனது வாழ்வோ, வாழ்வின் இருப்போ கேள்விக்கு உள்ளாக்கப்படுகிறது. அந்த நெருக்கடிகளை எதிர்கொண்டு தனது வாழ்வையும் இருப்பையும் நிலைநிறுத்த வேண்டிய நிலைக்கு அவன் உள்ளாகின்றான். அப்போது அவன் தன்னடையா-ளங்களைத் தேடுவது இயல்பாகின்றது. இதேபோல்தான் ஓர் இனமும் சமூக, அரசியல், பொருளாதார பண்பாட்டு நிலைகளில் நெருக்கடிகளுக்கு உள்ளாகும் போதும் தனது அடையாளங்களைத் தேடுவதும் வேர்களைத் தேடிச் செல்வதும் இயல்பாகின்றது.

ஒருவரின் பண்பாட்டில் அவரின் அடையா-ளம் என்பது இதுதான் என்று ஒன்றை வரையறை செய்தல் கடினமானது. அது பல்வேறு வடிவங்களில் தன்னை வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்தது. ஒருவருடன் பின்னிப்பிணைந்து இருக்கும் பண்பாடானது பல்வேறு அடையாளங்கள் வாயிலாக வெளிப்பட்டு நிற்கும். "இப்பண்பாட்டு அடையாளம் உடை - அணிகலன் போன்ற புழங்கு பொருளாகவோ, கல்வி - தத்துவம் - மருத்துவம் போன்ற அறிவுத் துறையாகவோ அமையலாம். இவற்றோடு மட்டுமின்றிப் பயன்படுத்தும் சொற்கள், சொற்களின் தொனி, முகபாவனைகள், சைகைகள் வாயிலாகவும் கூடப் பண்பாட்டு அடையாளம் வெளிப்படும். மொத்தத்தில் சமயம் - சாதி - மொழி - வழிபாடு - ஆடை - அணிகலன் - உணவு - உணவு உண்ணும் முறை - மக்கட்பெயர் இவையெல்லாம் பண்பாட்டு அடையாளங்கள் ஆகும்".

அடையாளமானது நிரந்தரமானது இல்லை. அது காலந்தோறும் ஏற்படும் நெருக்கடிகளுக்கு உட்பட்டோ அல்லது இயல்பாகவோ மாறக்கூடியது. மிகப்பழைய காலத்தில் இருந்த அடையாளம் இப்போதும் இருக்கலாம், அல்லது மாறியிருக்கலாம். சிலவற்றை இழந்திருக்கலாம்., சிலவற்றைப் பெற்றிருக்கலாம். எடுத்துக்காட்டாக, தமிழர் அரசுகளை எடுத்துக் கொள்வோமானால், தமிழர்க்கென்று அரசுகள் இருந்தன. தம்மைத்தாமே ஆண்ட இனமாய் தமிழினம் இருந்திருக்கிறது. இப்பொழுதோ தமிழர்க்கென்று ஓர் அரசு இல்லை. ஒரு கொற்றம் இல்லை. ஒரு கொடி இல்லை. அவற்றின் வாயிலாக இருந்த பெருமையும் அதிகாரமும் இல்லை. அன்று தமிழகத்தில் இருந்த தமிழ் அரசு(கள்) இன்றைய இந்தியக் கூட்டரசுக்குள் இருக்கின்றன. ஈழத்தில் இருந்த அரசு(கள்) சிங்கள அரசின் கீழ் உள்ளன. அரசு என்ற அடையாளமும் பெருமைகளும் இன்றில்லை. ஆனால் அவை இருந்ததற்கான சான்றுகள் வரலாற்றில் உண்டு. வேறொரு அரசின் கீழ் வாழும் போது, 'நீங்கள் எமது அடிமைகள், எமக்குக் கீழானவர்கள்' என்று அவர்கள் கூறும் போது, 'நாம் யார்?' என்கின்ற கேள்வி உண்டாகும் போது, தமது அடையாளங்களைத் தேட முற்படுவர். "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை "? என்ற தேடல் உண்டாகிறது. இப்படியான புறநெருக்கடிகள் உண்டாகும் போது, அடையாளத்தை அறிந்து கொள்ளும் நிலையும் தேவையும் உருவாகின்றது. இது விரிந்த அளவில், ஓர் இனம் என்ற வகையில் அடையாளம் பற்றிய தேடலை ஏற்படுத்துகிறது என்றால், அந்த விரிந்த அளவிற்குள்ளே, இனத்திற்குள்ளே ஒருவரை ஒருவர் சாதி, வர்க்கம், மதம், நிலம், மொழி என்ற வகையில் தமக்கிடையில் அடையாளத் தேடல்களும் ஏற்படும்.

சமூகங்கள் தம்மைப் பல்வேறாக அடையாளப்படுத்திக் கொள்ளும். மொழி, சமயம், சாதி, நிலம், தேசியம் போன்றன அடையாளங்கள் ஆகின்றன. இத்தகைய அடையாளங்கள் இனத்தின் வாழ்வையும் இருப்பையும் தீர்மானிக்கின்ற அதே வேளையில் கேள்விக்கும் உள்ளாக்குகின்றன. நெருக்கடிகள் வரும்போது தமது அடையாளங்களை தேடுதல் என்பது உலகில் உள்ள ஒவ்வொரு இனங்களுக்கும் உள்ளதான இயல்பாகும் என்பதை மேலே கண்டோம். அந்த வகையில் கனடாவில் தமிழினம் சந்திக்கின்ற அடையாளச் சிக்கல்களில் ஊர் பற்றிய பார்வையை இக்கட்டுரை ஆய்கிறது.

"இந்த மண்
எனது கால்களின் கீழுள்ள
தூசிப்படலம் அல்ல.
உணர்வார்ந்த பிடிப்பின்
தூர்ந்து போகாத
உயிர்த்தளம்".

இவை கவிஞர் சு. வில்வரத்தினத்தின் "காலத்துயர்" என்ற நூலில் காணப்படும் கவிதைவரிகள் ஆகும். (ஈழத்) தமிழரின் மண் மீதான நேசிப்பை மேற்கூறப்பட்ட கவிதை வரிகள் தெரிவித்து நிற்கின்றன. காலங்காலமாக, மரபான தம் மண்ணுக்கும் பண்பாட்டுக்கும் சொந்தக்காரர் என்று வாழ்ந்து, அந்த மண்ணை, அந்த உயிர்த்தளத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் இழந்து புலம்பெயர்ந்த தமிழரின் அடையாளத்தை வரைவதில் ஊர் மற்றும் பிரதேசங்களும் குறிப்பிட்ட பங்கை வகிக்கின்றன. தேசம் மற்றும் தேசியம் எப்படித் தமிழரின் அடையாளத்தை வரையறை செய்கின்றனவோ, அவ்வாறே ஊர்கள் மற்றும் பிரதேசங்களும் தமிழரின் அடையாளத்தைச் செதுக்குகின்றன.

வரலாற்றில் தமிழர் என்ற அடையாளமே ஊர் சார்ந்தும் நிலம் சார்ந்தும்தான் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. "தமிழர்களுடைய வாழ்விலும் தமிழிலும் ஊர் பெறுகிற முக்கியத்துவம் குறிப்பிடப்பட வேண்டியது. "ஊருக்குப் போகவில்லையா?" என்று கேட்பது இப்போதும் பெரு வழக்காக இருக்கிறது. "ஊர் சிரிக்கிறது" அல்லது "ஊருக்குத் தெரிந்துவிட்டால்...." என்பது போன்ற சொற்றொடர்களில் இடம் பெறுகிறது. ஊர் வெறுமனே ஊர் என்ற புவியியல் பரப்பு அல்ல. இங்கு ஊர் என்பது ஆகுபெயராகவும் உருவகமாகவும் ஒரே நேரத்தில் இயங்குகிறது. ஊர் என்பது மக்கள், அவர்களுடைய பண்பாட்டு ஐதீகங்கள், நம்பிக்கைகள், அதிகாரப் படிநிலை எல்லாவற்றையுமே சுட்டுகிறது. தமிழர்களுடைய பழைய இலக்கியங்களிலும் ஊர் பெறுகிற முக்கியத்துவம் பேசற்பாலது. சிலப்பதிகாரத்திலும் கலிங்கத்துப் பரணியிலும் ஊர் பல முறை பேசப்படுகிறது., பாடப்படுகிறது.
சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனுக்கு "யாதும் ஊரே யாவரும் கேளிர்"தான் அவருடைய நிலவியல் எல்லைப்பாட்டின் அலகு ஊர்தான். இவற்றூடாக நாம் பெற்றுக்கொள்கிற ஊர் என்பது ஒரே சமயத்தில் வாழிடமாகவும் பண்பாடாகவும் படிமமாகவும் இருத்தலாகவும் உள்ளது. இந்த அம்சங்கள்தான் எனது - தமிழரது - அடையா-ளத்தை வரலாற்று ரீதியாக வடிவமைத்துள்ளன".

ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்த அனைத்து ஊர் மக்களும் ஏதோ ஒரு வகையில் தமது ஊர்களின் பெயரில் சங்கங்கள் வைத்திருக்கிறார்கள். பழைய மாணவர் சங்கம் என்றோ, நலன்புரிச் சங்கம் என்ற பெயரில் ஏறத்தாழ 50 சங்கங்கள் இருக்கின்றன. ஊர் சார்ந்த அடையாளங்கள் பெரும்பாலும் இவை மூலமே நிலைநாட்டப்படுகின்றன. பெரும்பாலான

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துரை

தை 2004, உரைமொழிவு
"**பொங்கல்**"
சிறப்பிதழாக வருகின்றது.

பொங்கல் குறித்த, அனைத்துப்
பரிமாணங்களையும் தழுவிய
கட்டுரைகள்
வரவேற்கப் படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

சமூகப்போராளி அய்யா வைகுண்டசுவாமி

- சு. செல்வகுமாரன்,
பல்கலைக்கழக கல்லூரி, திருவனந்தபுரம்

"பதினெட்டாம் நூற்றாண்டிலே ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போர்க்குரல் எழுப்பியதோடு, சமபந்தி போஜனம், சமதர்ம காலனி, துவையல் தவசி, பெண்ணுரிமை, வரிகொடா இயக்கம், மூட நம்பிக்கைகளின் முட்டுக்கட்டைகளை உடைத்தெறிதல், பிராமணிய எதிப்ப்பு, தமிழ் மொழியின் பெருமையை பறைசாற்றுதல், அதிகார எதிர்ப்பு மரபை மீறுதல், மாற்றுச் சித்தாந்தங்களை உருவாக்கி அவற்றை செயல்படுத்திக் காட்டுதல் என்று பல தளங்களிலும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர்."

பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் திருதவிதாங்கூர் இராஜ்ஜியத்தின் (அதாவது இன்றைய கேரளப் பகுதியும் தென் தமிழகமும்) சமூக கட்டமைப்பு என்பது மிகவும் இறுக்கமான சூழ்நிலையில் காணப்பட்டது. குறிப்பாக மேல்தட்டு சமூகத்தைச் சேர்ந்தவர்களாலும் நிலவுடைமையாளர்களாலும் அதிகார வர்க்கத்தினராலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் அரசியல், பண்பாடு, பொருளாதாரம், சமயம் என பல்வேறு தளங்களிலும்



இன்னலுக்குள்ளாக்கப்பட்டார்கள். இக் கொடுமையினைக் கண்டு நொந்துபோன சுவாமி விவேகானந்தர் கேரளத்தைப் பார்த்து "பைத்தியக்காரர் விடுதி" (Kerala is luntatic asylum) எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது மட்டுமல்லாது இன்று தென் தமிழகப் பகுதிகளில் பல நிலைகளிலும் தலைமை பொறுப்பேற்றிருக்கும் நாடார் சாதியினர் அன்று மேல் தட்டு சமூகத்தினரால் ஒடுக்கப்பட்டிருந்ததை அகிலத்திரட்டு இவ்வாறு பதிவு செய்துள்ளது.

"பம்பழித்துச் சான்றோரை பலசாதியின்
கீழாய்
தும்பழிந்து வேலை தூறுபடக்
கொண்டனனே
பறையன் புலையன் பகல்வரான்
போகுமிடம்
மறையொத்த சான்றோர் வந்தால்
பிழையெனவே
முக்காலி கட்டி முதுகிலடித்து மிக
மிக்கான பொன் பணங்கள் வேண்டினான்
பிழையெனவே"

இங்கு சான்றோர் என்பது நாடார் சாதியினரை குறிப்பதற்காக வைகுண்டர் அகிலத்திரட்டில் பயன்படுத்தியிருக்கும் சொல்லாடல் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மதுரை வாழ் மக்களிடையே இன்றும் வழங்கப்படும் "பள்ளனையும் பறையனையும் தொட்டாத்தான் தீட்டு நாடானைப் பார்த்தாலே தீட்டு" என்ற நாட்டார் வழக்குச் சொற்கள் மேற்சுட்டிய செய்திகளுக்கு வளம் சேர்ப்பதாக அமைகிறது.

இக்காலச் சூழலில் அரசின் வரிவிதிப்பும் தண்டனை முறைகளும் மிகக் கடுமையாக இருந்தது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட ஆண்களுக்கு தாழ முளைத்தால் முடிவரியும், தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு மார்பு அரும்பினால் முலை வரியும் கட்ட வேண்டியிருந்தது. இதனை 1865ம் ஆண்டைய திருவிதாங்கூர் ஆட்சி அறிக்கை தாழ்த்தப்பட்டவர்களிடம் 110 வரிகளை வசூலித்ததாக தெரிவிக்கிறது. மட்டுமல்லாது தண்டனை முறைகளும் படிநிலை முறையில் கட்டமைக்கப்பட்ட இந்திய சாதீய அடுக்கு நிலையின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளது. ஈழவப் பெண்ணொருத்தி தன் மார்பினை அறுத்து வரிதண்டல்காரரிடம் கொடுத்ததும் பிள்ளையைப் பெற்று கிடந்தவள் வரி கொடுக்காததால் அவளை வெயிலில் நிறுத்தி முதுகில் கல்லேற்றி அதிகாரிகளால் சாகடித்ததும் வரலாற்றின் கறுப்பு அடையாளங்களாகும். அக்கால தண்டனை முறைபற்றி மனுதர்மம் குறிப்பிடுகையில் 'தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்கள் செய்த ஓர் குற்றத்திற்கு உயிர்த்தண்டனை வழங்குவதாக இருந்தால் அதே குற்றத்தை செய்த பிராமணர்கள் மொட்டை அடித்தால் போதுமானதாக கொள்ளப்படுகிறது'.

பொதுவாக சாதீய கட்டமைப்பின் உச்சியிலிருந்து உயர் சாதியினர் தங்களை மேம்படுத்திக் கொள்வதிலும் தாழ்த்தப்பட்ட சாதியினரை ஒடுக்குவதிலும் காலங்காலமாக கவனமாக இருந்து வந்துள்ளனர் என்பது வரலாறு சுட்டும் செய்தியாகும். குறிப்பாக கோவில் பூஜைகளிலும் மன்னர் நடத்திய மதச் சடங்குகளிலும் இவர்களுக்கே முதல் மரியாதை கொடுக்கப்பட்டது. மட்டுமின்றி சட்டத்தை இயற்றுபவர்களாகவும் திட்டத்தை வகுப்பவர்களாகவும் இவர்களே இருந்து வந்துள்ளனர். அந்நாளில் இவர்கள் அனுபவித்த எல்லையற்ற சமூக, பொருளாதார, அரசியல், சமய அதிகாரங்களால் ஏனைய சாதியினரின் முன்னேற்றம் தடைப்படுத்தப்பட்டு மொத்த சமுதாயமும் திக்குத் திசை புரியாமல் தடுமாற்றம் நெருக்குதலுக்குள்ளாக்கப்பட்டது.

இந்நிலைப்பாட்டில் 1809 ம் ஆண்டு (மாசி மாதம் 20ம் நாள்) திருவிதாங்கூரின் ஒரு பகுதியான கோயில்விளையில் ஒடுக்கப்பட்ட சாதியான நாடார் சாதியில் பிறந்த அக் குழந்தைக்கு முடிசூடும் பெருமாள் என பெயரிட்டனர். பின்னர் அதிகார வெறிபிடித்தவர்களின் நெருக்குதல்களால் அப்பெயர் மாற்றப்பட்டு முத்துக்குட்டி என்னும் திருநாமம் சாற்றினர். மட்டுமல்லாது இவரின் புகழ் சிறப்படைவதைக் கண்ட உயர்சாதி மக்கள் இவரை பலவாறு கொடுமை செய்தனர். இந்நிலையில் திருச்செந்தூர் கடலினுள் மூன்று நாள் மறைந்து பின்னர் 1833 மார்ச் மாதம் ஞாயிற்றுக் கிழமை (மாசி-20) ம் நாள் இறை அனுபவம் பெற்று அய்யா வைகுண்டராய் அவதாரம் செய்தார்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

கருத்துரை

Canadian Scholarship Trust Plan (Since 1960)
Exclusively Distributed by the CST Consultants Inc.
FIRST & LARGEST RESP (OVER $1.5 Billion in Deposit) 416.540.6599
• இலாபநோக்கற்ற நிறுவனம் (Non-Profit Organization, No Share holders)
• கனடா அரசு வழங்கும் உயர்கல்விக்கான உதவிப்பணம் (CESG) வருடா வருடம் $400 மொத்தம் $7,200 வரை*
• உங்கள் முதலீடு முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்டு அல்லது அரசு உத்தரவாதம் செய்யப்பட்டு உள்ளது.
Canadian Scholarship Trust Plan

Branch Manager /ED

படிப்பகம்

www.padippakam.com

(5ம் பக்கத் தொடர்ச்சி) "
இதனை அருள் நூல்.

எத்தனையோ முனிவர் பெற்ற வரமுங்கொண்டு
இங்கே வரும்போது சிவனே அய்யா" என்று குறிப்பிடுகிறது. அவதாரம் பெற்ற வைகுண்டர் பின்னர் கோயில் விளைக்குவந்து தவம் மேற்கொண்டு தீராத நோய்களை தீர்த்தருளினார். மட்டுமல்லாது மக்களுக்காய் நல் அறிவுரைகள் பல வழங்கினார். இதனால் ஆத்திரமுற்ற மேல் சாதி மக்கள் மன்னனிடம் கோள் மூட்டினர். மன்னவனும் தாழ்ந்த குலத்தில் இறைவன் தோன்றுவதா இருக்கவே முடியாது என தீர்மானித்து திருவனந்தபுரத்தில் உள்ள சிங்காரத் தோப்பில் சிறை வைக்குமாறு உத்தரவிட்டார். மேலும் மிளகுவற்றலால் புகையிட்டும் காற்றுபுகா அறையுள் அடைத்து வைத்தும் தீயினுள் குளிக்க வைத்தும் சொல்லொணாக் கொடுமைக்குள்ளாக்கினார். இதனை அருள் நூல்

"அடித்த அடியெல்லாம் ஆபரணமாலை
யென்று
அணிந்து கொண்டேன் சிவனே அய்யா"

என்று குறிப்பிடுகிறது.

மேற்கண்ட செயல்களாலும் தளர்வடையாத வைகுண்டரை புலிக்கு பலியிட எண்ணி புலிக் கூண்டினுள் தள்ளிவிட்டார். வைகுண்டரின் மகிமையை உணர்ந்த புலி பதுங்கியது. இதனைக் கண்டு வெறுப்படைந்த நம்பூதிரி பிராமணன் ஒருவன் ஈட்டியின் பின் பகுதியால் புலியை சீண்டினான். புலி ஈட்டியை புறந்தள்ளிவிட ஈட்டி பாய்ந்து நம்பூதிரி இறந்தான். இதனைக் கண்டு அதிர்ச்சியுற்ற மன்னன் வைகுண்டரை விடுதலை செய்தான். பின் ராஜமரியாதையொடு சாமிதோப்பு அழைத்து வரப்பட்டார்.

> மேலும் ஒரு சாதியும் இன்னொரு சாதியும் ஒரு சேர உட்கார முடியாத காலத்தில் பலவீட்டுப் பொருட்களைக் கொண்டு பலசாதி மக்களால் சமைக்கப்பட்டு உண்பானாக மாற்றி பால், ஏழை, பணக்காரன், சாதி மத பேதமின்றி அனைவருக்கும் உணவு இலையில் வழங்கப்பட்டு அய்யா "அன்னம் குடியுங்கள்" என்று சொன்ன பின்பு அனைவரும் சமமாக உணவருந்தும் சமபந்தி போஜனத்தை 18-ம் நூற்றாண்டிலே நடத்தி, சமத்துவ சேவை செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் "தாழக்கிடப்பாரை தற்காப்பதே தருமம்" என்ற அருள்வாக்கோடு சாமிதோப்பில் பதி ஒன்றை ஏற்படுத்தி மரபுகளை உடைத்தெறிந்து மாற்றங்காண விழைந்தார். வைகுண்டரின் சமூகப்பணி மாற்று மரபு சார்ந்த சமய ஃ ஆன்மீக நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது.

ஒடுக்கப்பட்ட மக்கள் சுத்தமில்லாதவர்கள், இறைவனை வணங்க அருகதையற்றவர்கள், அசுத்தமுடையவர்களின் பூஜையை பரிசுத்த இறைவன் ஏற்பதில்லை. என்பன போன்ற பொய் பிரசாரங்களை உயர்சாதி மக்கள் திட்டமிட்டு செய்துவந்த வேளையில் பொதுக் குளத்தில் குளிப்பதற்கும், நீர் எடுப்பதற்கும் தடைபடுத்தப்பட்ட தருணத்தில் ஆலயங்களின் அருகே கூட இவர்கள் அனுமதிக்கப்படாத அந்த கால கட்டத்தில் அம்மக்களை ஒருங்கிணைத்து அவர்களை பதி அருகே தான் தோண்டிய முந்திரி கிணற்றில் சாதி-மத பேதமின்றி ஆண், பெண் வித்தியாசமின்றி அனைவரையும் குளிக்க வைத்து அய்ய சிவசிவ அரகரா அரகரா என்ற நாமத்தை அவர்கள் நாவால் உச்சரிக்க வைத்து பள்ளியறையில் உள்ள நிலைக்கண்ணாடியை ஐந்து முறை சுற்றி வழிபடச் செய்தார். குமரி மாவட்டத்தில் கணவனை இழந்த பெண்கள் பூ, குங்குமம் ஆகியன அணிந்து கொள்வதில்லை. இவர் தாலியறுத்தவள் (அறுதலி) என அழைக்கப்பட்டாள். ஆனால் அய்யாவின் பதிக்கு வழிபட வரும் கணவனை இழந்த பெண்ணுக்கும் அய்யா தொட்டு நாமம் (திருமண்) சாற்றிவிட்டார். மட்டுமன்றி ஆண்டவன் பெயரால் மக்களை ஏமாற்றும் நம்பூதிரி பிராமணர்களின் செயல்களால் வெறுப்படைந்த வைகுண்டர்,

"காணிக்கைப் போடாதுங்கோ
காவடி தூக்காதுங்கோ"

என்று அறிவுறுத்துவதின் மூலம் அவரின் புரட்சி சிந்தனையை நம்மால் உணர முடிகின்றது.

மேலும் ஒரு சாதியும் இன்னொரு சாதியும் ஒரு சேர உட்கார முடியாத காலத்தில் பலவீட்டுப் பொருட்களைக் கொண்டு பலசாதி மக்களால் சமைக்கப்பட்டு உண்பானாக மாற்றி பால், ஏழை, பணக்காரன், சாதி மத பேதமின்றி அனைவருக்கும் உணவு இலையில் வழங்கப்பட்டு அய்யா "அன்னம் குடியுங்கள்" என்று சொன்ன பின்பு அனைவரும் சமமாக உணவருந்தும் சமபந்தி போஜனத்தை 18-ம் நூற்றாண்டிலே நடத்தி, சமத்துவ சேவை செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டுமல்லாது திருவிதாங்கூரில் இருந்த தடையை மீறி ஒடுக்கப்ட்ட மக்கள் வாழ்வதற்கு பல அறைகள், சன்னல்கள், கதவுகள் இவற்றோடு காற்றொட்டாக வீடுகளை ஒரே திசையில் முகப்பு வாசலிட்டு வரிசை வரிசையாகக் கட்டச் சொல்லி தம் அன்புக் கொடி மக்களுக்கு ஒரு முன்மாதிரி குடியிருப்பை (சமதர்ம காலனியை ஃ சமத்துவ புரத்தை) துவயல் தவசியின் போது முட்டப்பதியில் ஏற்படுத்திக் கொடுத்தார். இதனை

"சூழ அணியாய் சுற்றுமதில் போல நீள
அரங்குவைத்து
நெருங்கப் புரைகள் வைத்து ஓர் திசையில் வாயி-
லொன்றாக விட்டு"

என அகிலத்திரட்டு பதிவு செய்துள்ளது.

நாடார் சாதி மக்கள் பனையேறுந் தொழிலுக்கு பயன்படுத்தக்கூடிய அருவாள் முதலான உபகரணங்களுக்கும் கூட அரசுவரி விதித்திருந்தது.

"தாலிக்கு ஆயம் சருகு முதல் ஆயம்
கூலிக்கு ஆயம் கம்பு தடிக்காயம்
தாலமது ஏறும் சான்றோர்க்கு ஆயம்
துாலமுடன் அருவாள் துருவட்டிக்கே ஆயம்"

என்னும் அகிலத்திரட்டு வரிகள் அக்கால வரிக் கொடுமையினை உறுதி செய்கின்றது. மட்டுமின்றி தொடர்ச்சியாக மேல் தட்டு மக்களால் ஒடுக்கப்பட்ட இச்சமூகத்தின் உழைப்பினை சுரண்டும் தன்மையினை அகிலத்திரட்டு

"சில்லுக் கருப்புக் கட்டி சீரகமிட்டே ஊற்றி
கொல்லை தனில் சான்றோரைக் கொண்டு வா
என்றடிப்பான்"

என்று அக்கால நிகழ்வை குறிப்பிடுவதோடு

"அவனவன் தேடும் முதல்
அவனவன் வைத்து ஆண்டிடுங்கோ"

என்று எச்சரிக்கை செய்வதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு அதிகவரியினால் அல்லல் பட்ட மக்களைப் பார்த்து வரிகொடுக்க வேண்டாம் என்று கூறி மக்களுக்கு துணையாக நின்று அரசை எதிர்த்து போராடினார். மட்டுமல்லாது அன்றைய அரசின் தண்டனைகளை நிராகரித்து பெண்கள் இடுப்பில் தண்ணீர் குடம் எடுக்கவும், மார்பில் தோள் சீலை போடவும். தங்க நகைகள் அணியவும் போர்க்குரல்கள் எழுப்பியதோடு நடைமுறைப்படுத்தி காட்டினார். இதனை ஜாய் ஞானதாசன் குறிப்பிடுகையில் "ஒரு இந்துப் பனையேறி நாடாரான கன்னியாகுமரி அருகே உள்ள சாமி தோப்பை சார்ந்த முத்துக்குட்டி (அய்யா வைகுண்டரின் இயற்பெயர்) என்பவரால் ஊக்குவிக்கப்பட்டு அவர்களது பெண்களும் கிருத்துவ சகோதரிகளைப் பின்பற்றி மேலாடை அணியத் தொடங்கினார்கள்." எனப் பதிவு செய்துள்ளார்.

ஒடுக்கப்பட்ட மக்கள் உயர் சாதியினருக்கும் அரசுக்கும் ஏட்டோலை ஊழியம் உப்பு ஊழியம் ஆகியன செய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர். கூலிகள் சரிவர வழங்கப்படவில்லை. மட்டுமன்றி இவர்களின் உற்பத்தி விளை பொருட்களை பாதையோரங்களில் வைத்து விட்டு சாதிபடி நிலையைப் பொறுத்து 36 முதல் 90 எட்டுகளுக்கு அப்பால் நிற்குமாறு அச்சுறுத்தப்பட்டனர். இந் நிலைப்பாட்டில்,

"உபதேசம் செய்யும் கூலி
உடன் கையில் கொடுத்திடுங்கோ"
"சொத்தைக் குறையாதே
குறை மரைக்கால் வையாதே"

என்று முதலாளித்துவத்தை எதிர்த்து கலகக் குரல் எழுப்புவதும் குறிப்பிடத்தக்கதாகும். மக்களின் மேம்பாட்டிற்கு அடிப்படை கல்வி என்பதை உணர்ந்த வைகுண்டர் ஒடுக்கப்பட்ட மக்கள் கல்விக் கூடத்தை கண்கொண்டு கூட பார்க்கமுடியாத அக்காலத்தில்

"ஏடு தந்தேன் உன்கையிலே எழுத்தாணியும்
கூடத்தந்தேன்
மக்களை பட்டயந்தந்தேன் பகை தீர்த்தேன்
பதறாதே என் மகனே"

என்று ஒடுக்கப்பட்ட மக்களின் கல்விக்காக குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாது தமிழ்மொழி உணர்வோடும் அவரது செயல்பாடுகள் இருந்தது. அவரது படைப்பாக்கங்களான அகிலத் திரட்டு, அருள் நூல் என்பன அடித்தளமக்களின் பேச்சு மொழியாகவும், துாய தமிழ்ச் சொல்லாகவும் இருந்தன. அவைகள் உகப்படிப்பு, உச்சிப் படிப்பு, வாழப்படிப்பு, கல்யாண வாழ்த்து என்பனவாக அமைந்திருந்தன.

மேலும் மூடநம்பிக்கையின் உச்சத்தில் இருந்த மக்கள் அம்மை, காலரா, மூளைக் கலக்கம் போன்ற நோய்கள் வந்தவுடன் பேய் பிசாசால் உருவாக்கப்பட்டதாக நம்பினார்கள். அவர்களை அந்நிலையில் இருந்து மீட்டெடுத்து பயத்தைப் போக்கினார். மட்டுமல்லாது பாரம் சுமக்கும் தொழிலாளியை தலையில் துணி கட்டவிடாது வைக்கோல் போர்வையால் செய்யப்பட்ட சும்மாடை மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் தன்னைப் பார்க்க வரும் மக்களைப் பார்த்து தலையில் தலைப்பாகை கட்டி வருமாறு பணித்தார்.

இவ்வாறு பதினெட்டாம் நூற்றாண்டிலே ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போர்க்குரல் எழுப்பியதோடு, சம பந்தி போஜனம், சமதர்ம காலனி, துவையல் தவசி, பெண்ணுரிமை, வரி-கொடா இயக்கம், மூட நம்பிக்கைகளின் முட்டுக்கட்டைகளை உடைத்தெறிதல், பிராமணிய எதிப்ப்பு, தமிழ் மொழியின் பெருமையை பறைசாற்றுதல், அதிகார எதிர்ப்பு மரபை மீறுதல், மாற்றுச் சித்தாந்தங்களை உருவாக்கி அவற்றை செயல்படுத்திக் காட்டுதல் என்று பல தளங்களிலும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர்.

மட்டுமல்லாது பிந்தைய காலங்களில் தோன்றிய நாராயணகுரு, காரல்மார்க்ஸ், லெனின், ஈவேரா.பெர-ியார்இ போன்றோரின் சித்தாந்தங்களுக்கும், செயல்பாடுகளுக்கும் முன் மாதிரியாய் திகழ்ந்தவர். இந்நிலைப்பாட்டில் இவரைப் பற்றி தமிழுலகம் அதிகமாக பேச முன்வருமானால் இன்றைய பெண்ணியம், தலித்தியம் போன்ற அணுகுமுறைகளிலும் அவருடைய கருத்துக்கள் புதிய பார்வைகளைத் தரலாம் என்பதும் நாம் நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

படிப்பகம்

www.padippakam.com

இலங்கை நாட்டுச் சித்தர்கள்

- ஆ. கணேசலிங்கம்

"சித்தர்கள் இலங்கையில் வாழ்ந்தமைக்குச் சில வரலாற்று முகங்களும் கர்ண பரம்பரைக் கதைகளும் மூலமாக அமைகின்றன. இலங்கையில் 18ஆம் 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்த ஒரு சில சித்தர்களின் வாழ்க்கை வரலாறுகள் தான் எமக்குக் கிடைத்துள்ளன. இச் சித்தர்களுடைய வாழ்க்கையானது இலங்கை நாட்டையும் தமிழகத்தையும் ஒன்று படுத்திக் காட்டுகின்றது. இலங்கையில் சித்தர்களுடைய தோற்றத்தினால் இலங்கை மக்களுடைய அகவாழ்விலே பெரியதொரு மாற்றம் ஏற்பட்டதைக் காண முடிகின்றது."

பஉலகியல் வாழ்வை விட்டொதுக்கித் தனித்து வாழ்பவர்கள் என்றும், தன் ஆன்ம விடுதலைக்காக்ப பாடுபடும் தன்னலக்காரர்கள் என்றும் சித்தர் களைப் பற்றிச் சிலர் கூறுவதுண்டு. அறியாமை அகற்றும் ஆசிரியர்களாக நோய் தீர்க்கும் மருத்துவர்களாக அற முறைக்கும் சான்றோர்களாக, அறிவியல் அறிஞர்களாக பொய்மை கலைத்திடும் புரட்சியா-ளர்காளகப் பல் சித்தர்களை வாழ்ந்திருக்கின்றனர் என்பதற்குச் சான்றுகள் உண்டு. தன் ஆன்ம விடுதலையை எண்ணிச் செயல்பட்டாலும், சமுதாயத்திற்கும் தன்னாலியன்ற தொண்டுகளைச் செய்யச் சித்தர்கள் தவறியது இல்லை என்பது உண்மையாகும். சமுதாயத்தோடு போராடியும் உரசியும் அவர்கள் வாழவில்லை என்று குற்றஞ்சாட்டிச் சித்தர்களைச் சமுதாயம் ஒதுக்கிவிட முடியாது. சமுதாயப் பேரரங்கில் சித்தர்கட்கென இடமும் கடமையும் இருந்து வந்துள்ளது.

இறையின்பம் நாடி ஆன்மீக நெறியிற் செல்வோரை மேலை நாட்டினர் புற முக நோக்கர், அகமுக நோக்கர் என வகைப்படுத்துகின்றனர். உடலையும் உலகையும் ஆன்மப் பயணத்தின் படிக-ளாக்கிக் கொண்டு போக ஞான வரிகளில் இறையின்பம் காணும் சித்தர்களை அகமுக நோக்கர்கள் என அழைப்பர்.

என்பனவற்றுள் "சித்"தாகிய நற் பேரறிவு கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள் என்றும் பொருள் கூறப்படுகின்றது. பண்டைக் கல்வெட்டுக்களில் "சித்தி" சித்தம் என்ற சொற்கள் பண்படுத்துவது என்னும் பொருளில் வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. நடை, உடை, பாவணைகளாற் பிற மக்களிடமிருந்து சித்தர்கள் வேறுபட்டிருந்தனர் என்பது வயதுவானதொரு கருத்தாகும். இந்திய, இலங்கை நாட்டுச் சித்தர்கள் பலரும் தலையிற் சடை முடியும் முகத்தில் நீண்ட தாடியும் கழுவாத உடலும் கந்தல் உடையும் தாங்கியவர்களாகவே விளங்கியுள்ளனர்.

சித்தர்களின் வாழ்க்கை பிற மக்களின் உலகியல் வாழ்க்கையிலிருந்து வேறுபட்டிருக்கும் தெளிந்த ஞானம் உடைய இச்சித்தர்கள் உலகியற் பற்றுக்களை விட்டவர்களாக இருப்பர். "சித்தாடல்" என்ற நிகழ்ச்சி சித்தர்களின் வாழ்க்கையில் பரவல-ாகக் காணப்படுகின்றது. சித்தர்கள் அனைவரும் சித்தாடும் திறம் உடையவர்கள். சிலர் அத்திறனை வெளிப்படுத்தி இருக்கின்றனர். சிலர் வெளிப்படுத்தியதில்லை. அல்லது வெளிப்படுத்தியதற்கான குறிப்புகள் கிடைக்கவில்லை. சமய எல்லையைக் கடந்து நின்று இறையின்பம் காண முயன்றவர்கள் எல்லா மதங்களிலும் நாடுகளிலும் உண்டு. நாம் அவர்களைச் சித்தர்கள் என்கிறோம். சமயச் சார்பில்லாமல் சித்தானுபவம் பெற்ற சித்தர்கள் உலகெங்கும் இருந்தனர் என்பதற்கான சான்றுகள் உள்ளன.

இவ்விபரம் பற்றிய முழுமையான ஆய்வு தேவையான ஒன்றாகும்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த சித்தர்கள் பலராவர். இவர்களுள் முன்னோடிகளாக நான்கு சித்தர்கள் விளங்குகின்றார்கள். இந்நான்கு சித்தர்களாக வடக்கே கடையிற் சுவாமிகள் (முக்கியானந்தர்) (?- 1951) ஆகியோர் விளக்குகின்றனர். ஆத்ம ஜோதி நா. முத்தையா தமது ஈழத்துச் சித்தர்கள் என்ற நூலில் கடையிற் சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், குழந்தை வேற் சுவாமிகள் அருளம்பல சுவாமிகள், யோகர் சுவாமிகள், சித்தானைக் குட்டி சுவாமிகள், சடைவரத சுவாமிகள், ஆனந்த சடாட்சர குரு, செல்லாச்சி அம்மையார், தாளையான் சுவாமிகள், மகா தேவ சுவாமிகள், சடையம்மா, நாகநாத சித்தர், நயினா தீவுச் சுவாமிகள் ஆகியோர்கள் பற்றிய வரலாறுகளையும் அவர்கள் நிகழ்த்திய அற்புதங்களையும் தமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் விவரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

பண்பாட்டு மரபிலே எந்தொரு விடயத்தை எடுத்து நோக்குவோமாயின் அவ்விடயம் குரு மூலமாக சீடருக்குப் போதிக்கப்பட்டு குருசீட பாரம்பரியம் வரியாக மேற்கொள்ளப்பட்டு வந்ததை அறிய முடிகின்றது. குறிப்பாக அறிஞர் பெருமக்களது பரம்பரையினை எடுத்து நோக்குமிடத்து தென்னிந்தியாவிலிருந்து வந்த கூழங்கைத் தம்பிரான் வழி வந்த ஆசிரிய மாணாக்கர் பரம்பரை என குரு பரம்பரையினரை அறிய முடிகின்றது. இதே போல இரு நாட்டிலும் சித்தர் பரம்பரையினர் குரு சீட பாரம்பரிய அடிப்படையிலெ வளர்ந்து வந்ததை அறிய முடிகின்றது.

"சித்தர்" என்ற சொல்லுக்குப் பொருள் வரையறை செய்வது கடினமாகத் தோன்றுகின்றது. "உலகியலைத் துறந்தவர்கள், உலகியல் நடப்புக்கு மாறானவர்கள், சித்துக்கள் உடுவதில் வல்லவர்கள், சித்தந்தைச் சிவன்பால் வைத்தவர்கள், அலைபாயும் சித்தத்தை அடக்கியவர்கள், என்பன போன்ற சொற்றொடர்களெல்லாம் சித்தர்களின் ஏதேனும் ஒரு கூறு பற்றிய குறிப்புகளாக இருக்கின்றனவே தவிர ஒரு பொதுவான இலக்கணமாகவோ விளக்கமாகவோ அமையவில்லை. சித்தர்களைச் "சிவன் முத்தர்கள்', என்றும் 'பிறப்பறுத்தவர்கள்" என்றும் குறிப்பிடுகின்றனர். கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள் என்றால் "கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்" என்று சித்தர்களைப் பக்தர்களிலிருந்து வேறுபடுத்தி டாக்டர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் விளக்கம் காண்கிறார். திரு. மு. அருணாசலம் அவர்கள், "பக்தி நெறியன்றி வேறு நெறியால் கடவுளைக் கண்டு தெளிந்து இருவினையொப்ப நிகழுங்காலும் உடலோடு உலாவுவோர் சித்தர்" என்று விளக்குகின்றார்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனப்படும் அந்தக் கரணங்கள் நான்கில் ஒன்றான சித்தத்தை வென்றவர்கள் சித்தர்கள் என்றும், இறைவனின் பண்புகள் எனப்படும் சத்து, சித்து, ஆனந்தம்,

இந்தியாவில் சித்தர் பரம்பரையானது திருமூலர் காலத்திலிருந்தே வளர்ந்து வந்துள்ளது என்பர். இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சிக்கு சித்தர்கள் பெரும் பங்காற்றியுள்ளார்கள். இலங்கையில் சித்தர் பரம்பரையொன்று, பண்பாட்டு மரபுகள் தோன்றி வளர்ந்த காலம் முதல் ஆரம்பித்து வளர்ந்து வந்திருக்கின்றது. இச்சித்தர்களின் முன்னோடியார்? எந்தக் காலத்திலிருந்து இப்பரம்பரை தோன்றி வளர்ந்து வந்தது என்பதைப்பற்றித் திட்டவட்டமாக எதனையும் கூறமுடியாதுள்ளது. சித்தர்கள் இலங்கையில் வாழ்ந்தமைக்குச் சில வரலாற்று முகங்களும் கர்ண பரம்பரைக் கதைகளும் மூலமாக அமைகின்றன. இலங்கையில் 18ஆம் 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்த ஒரு சில சித்தர்களின் வாழ்க்கை வரலாறுகள்தான் எமக்குக் கிடைத்துள்ளன. இச் சித்தர்களுடைய வாழ்க்கையானது இலங்கை நாட்டையும் தமிழகத்தையும் ஒன்று படுத்திக் காட்டுகின்றது. இலங்கையில் சித்தர்களுடைய தோற்றத்தினால் இலங்கை மக்களுடைய அகவாழ்விலே பெரியதொரு மாற்றம் ஏற்பட்டதைக் காண முடிகின்றது.

இலங்கையில் காலத்திற்கு காலம் தோன்றியும் தமிழகத்திலிருந்து அவ்வப்பொழுது வருகை தந்தும், இங்கு வாழ்ந்தும் நடமாடியும் பல அற்புதங்களைச் செய்த சித்தர்கள் பலராவர். இந்தியாவிலிருந்து வருகை தந்த சின்மயானந்த சுவாமிகளின் நேரடிச் சீடராக சார்ஜன் சுவாமிகள் (சின்னத்தம்பி சுவாமிகள்) (?- 1908) விளக்குகின்றார். சார்ஜன் சுவாமிகளது சீடர்களாக கனகரத்தின சுவாமிகள் (?- 1922) பொன்னப்பா சுவாமிகள், மகாதேவ சுவாமிகள் (வைத்திலிங்க சுவாமிகள் (1824-1942)) ஆகியோர் விளக்குகிறார்கள். மகாதேவ சுவாமிகளது நேரடிச் சீடராக இராமலிங்க சுவாமிகள் (?- 1968) வடிவேற்சுவாமிகள் (1906-1990) கோண்டாவில் கந்தையிச் சுவாமிகள் (குடையிற் சுவாமிகள்)(1877- 1978) விளக்குகின்றார்கள். மேலும் இராமலிங்க சுவாமிகளது நேரடிச் சீடராக நமசிவாய

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com

ஈழத்துச் சித்தர்கள்

கஜானி குமார்

நிலவுலகம் ஊழின் காரணமாகத் திரு நிலையாகாவும் தெளிநிலையாகவும் இரு வேறு வகைப்படும். திருநிலை இருளுடையது. தெளிநிலை அருளுடையது. அவ்வொளியுடையவரே நிலவுலகத்தில் வாழவேண்டிய முறையில் வாழ்பவர். அந்த ஒளி வாழ்வின் வளப்பத்தால் அவர்களை நிலவுலகம் வானுறையும் தெய்வமுறையாக வைத்துப் போற்றும். அத்தகைய மாந்தரில் எளிய வாழ்க்கை உயர்ந்த சிந்தனை கொண்டு சித்தம் தெளிந்தவர்களே சித்தர்கள்.சிந்தையை அடக்கிச் சும்மா இருந்து இவ்வுலக வாழ்வில் ரீதியான தன்மைகளிலும் தளங்களிலும் இருந்து விடுபட்டவர்கள் அதாவதுமனம் அடையும் கலக்கம் ஆசைகள், துக்கம் அகியவற்றை அறிவால் வென்று அதன் வழி எட்டு நிலைப்பட்ட சித்திகள் கைவரப் பெற்றவர்கள். அதாவது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம் என்பவற்றை நிலைநிறுத்தி சித்தத்தை இறைபால் வைத்து, இறையோடு இணைந்தவர்கள். இவற்றால் பெறப்பட்ட அணிமா, மகிமா, இலகுமா, கரிமா, பிராப்தி, பிரகா மியம், ஈசத்தவம், வகித்துவம் என்னும் அட்டமாசித்திகளைப் பெற்று உள்ளனர். இவற்றைக் கொண்டு பல சித்துக்களையும் செய்துள்ளனர். இவ்வட்டமா சித்திகளும், சித்துக்களும் சித்து எனப்படும் சிந்தை-அறிவு என்பதில் தெளிந்தவர்கள் என்பதும் “சித்தர்கள்“ என்று அழைக்கப்படும் இப்பெயருக்கான காரணிகளாக அமைகின்றன.

சித்துக்கள் செய்தால் ஆத்மீக முன்னேற்றம் தடைப்படும் என்று கருதிச் சிலர் செய்வதில்லை. இருப்பினும் சிலர் வாழ்வின் ஓரிரு பகுதிகளை மக்களுக்காகச் செலவழித்துமக்கள் வாழ்வும் பயனும் அடையவும் செய்துள்ளார்கள். இவர்களுள் இன்னும் சிலர் உலகியலை வெல்வது பற்றி மக்களோடு மக்களாக இருந்து அநுபவித்துக் காட்டியும் உள்ளனர். அதாவது புகையிலை, கஞ்சா, சாராயம் போன்றன நுகர்வதும் சித்தால்-சித்தத்தால் மாற்றுவதுமான அணுகுமுறைகளினாலும் இதைச் செய்துள்ளனர்.

இவ்வாறாக நீண்டதொரு சித்தர் பரம்பரை இருந்து வந்துள்ளது.அவர்களுள் சிலர் காலத்தால் முந்தியும்-பிற்பட்டும் உள்ளார்கள். வேறு சிலர் தெரிந்தவர்களால் தொகுக்கப்பட்டு வரலாற்று ஏட்டில் இடம்பெற்றும், இவ்வாறன்றி சித்தர் பற்றி அறியப்பட்டவர்களின் மனங்களில் இன்றுவரை நிலைத்தும் உள்ளார்கள். அவ்வகையில் நூல் வடிவில் பதிவுபெற்று வெளித்தெரிபவர்கள் :

1.கடையிற் சுவாமிகள்
11.செல்லாச்சி அம்மையார்
2.குழந்தைவேற் சுவாமிகள்
12.தாளையான் சுவாமிகள்
3.பரம்மகுரு சுவாமிகள்
13.சடையம்மா
4.அருளம்பல சுவாமிகள்
14.நாகநாத சித்தர்
5.யோகர் சுவாமிகள்
15. மகாதேவ சுவாமிகள்.
6.நவநாத சுவாமிகள்
16. நயினாதீவுச் சுவாமிகள்
17.பெரியானைக்குட்டி சுவாமிகள்
17. குடைச்சுவாமிகள்
8.சித்தானைக்குட்டி சுவாமிகள்
18. சற்குசிவாய சுப்பிரமணிய சுவாமி
9.சடைவரத சுவாமிகள்
10.ஆனந்த சடாட்சரகுரு

வாய்மொழியாக அறியப்படுவோர் விபரம் கீழே தரப்படுகின்றது.

1.தாந்தாமலை சுவாமிகள்
12.கனகரத்தினம் சுவாமிகள்
2.இடைக்காட்டு சுவாமிகள்
13.நவநாதசித்தர்
3.முச்சம்புலவுசுவாமி
14.பஞ்சாட்சர அம்மா
4.மயில்வாகனம் சுவாமி
15.கடவள் சவாமி
5.கணேச ஐயா
16.கதிரவேல் ஐயா
6அருளம்பல சுவாமி
17.அறுமுக சுவாமிகள்
7.மகாதேவ சுவாமி
18.வடிவேற்சுவாமி
8.வைரவியார் சவாமி
19.மனோன்மணி அம்மா
9.அப்பாத்துரை சுவாமி
20.கச்சாய்ச்சுவாமி
10.மாம்பழம் சுவாமி
21.முத்துவேற்சுவாமி-மாரிமுத்து
11.திருப்புகழ் சுவாமி
22.வெள்ளை அண்ணை சுவாமி

இவர்கள் எதேச்சையாக வாழ்ந்து பொதுவான சமுகவாழ்க்கையில் இருந்து விலகியிருந்தமையினால் ஏட்டிலும் இலக்கியத்திலும் அதிகம் இடம்பெறாமல் போயினர். பொதுவாக மனத்தில் தோன்றும் சகலவிதமான ஆசைகளையும் நீக்கி ஆன்மாவில் முழுநிறைவு எய்தும் சாதுக்கள் தங்களைப் பற்றிய செய்திகளையும் தகவல்களையும் பிறருக்குக் கூறுவது இல்லை. அதனால் சித்தர்களைப் பற்றிய வரலாறுகள் சரிவரத் தெரியாமல் போயிருக்கலாம். எவ்வாறாயினும் ஈழத்தே இலைமறை காய்மறையாக வாழ்ந்த பாமர மக்களிடம் பக்திமார்க்கத்தைப் பரப்பி முக்திக்கு வழிகாட்டிய சித்தர் பரம்பரையை நோக்கும் போது கடையிற் சுவாமிகள் வரை ஆய்வு செல்கின்றது எனச் சொல்லப்படுகின்றது.

இவ்வெல்லை மிகக்குறுகியதாகக் காணப்படினும் இச்சித்தர் பரம்பரையின் தொடுகை பாரதத்தோடு இணைத்துப் பார்க்கையில் (தமிழகத்தில் இருந்து ஈழம் வந்தது)சங்கம் ஈறாகப் பரிணமித்துள்ளது. அதாவது

“நிலந்தொட்டுப்புகார்:வானமேறார்:
விலங்கிர முந்நீர் காவிற் செல்லார்“

என்னும் குறுந்தொகைப் பாடல் மூன்று வகையான சித்திகளைக் கூறுகின்றது. எனவே இதன் எல்லை மீண்டும் ஆய்வுக்கு உள்ளாக்கப்பட வேண்டியதாகவே தென்படுகின்றது. மனித வாழ்வில் இருவகை நிலைகள் காணப்படுகின்றன.

1.அகவாழ்வு 2.புறவாழ்வு

மிருகங்களைப் போன்று உண்பது, உடுப்பது, உறங்குவது, இனத்தைப் பெருக்குவதுமான புறவாழ்வு சமூகத்தின் சீர்கேடுகளுக்குக் காரணமாக அமைகின்றது. ஏனெனில் சமய வாழ்வு அல்லது இறைவாழ்வு என்பது இன்றி மனித வாழ்வு வாழலாம் என்று மனிதன் நினைப்பதால் தான். இதன் மறுபுறம் பார்ப்பின் புறவாழ்வின், புறச்சூழலின் ஆய்வு உச்சத்தில் இன்னோர் மனிதன் நாஸ்திகம் பேசுகின்றான். இவ்விரு தளத்தாரையும் தமிழர் வரலாற்றில் இணைத்த ஒரேயொரு அறிவாளர்கள் சித்தர்களே. சமய ரீதியில் இறையின் அன்பு, ஞானம், வழிபாடு, நம்பிக்கை என வாழ்ந்தும் சமயப்பொறை, மதச்சமரசம் பேசியும் உள்ளார்கள். இதன் உச்சக்கட்டமாய் எமக்குக் கிடைத்தது தான்

ஒரு பொல்லாப்புமில்லை-
எப்பொழுதோ முடிந்த காரியம்
நாம் அறியோம்-முழுதும் உண்மை
சிவபோதம் நீ-அறிவக்கு அறிவு
செய்பவன்
சச்சிதானந்த சொரூபம்-பிரமம்
நானும் இல்லையடி நாதனும்
இல்லையடி

போன்ற பல மகாவாக்கியங்கள் ஆகும். உளத்தூய்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் வெள்ளை - காவி உடை தரித்ததுடன் மன அடக்கத்திற்காய்க் குறைந்த அளவு உணவையே உட்கொண்டும் வாழ்ந்திருக்கின்றார்கள்.

கருத்துரை

வெறுமனே சுய வாழ்வின்றித் தீண்டாமை ஒழிப்பு-,சாதீய சமத்தவம் என்பன பேணி ”அன்றே”புதுமைப் புரட்சியும் செய்துள்ளார்கள். அத்தோடு உயிர்ப் பலிகொடுக்கும் மூடநம்பிக்கையை மாற்றிக் கொல்லாமைக்கு வித்திட்ட பெருமையும் இவர்களையே சாரும்.

“அற்றார் அழிபசி தீர்த்தல்
அ.தொரவன்
பெற்றான் பொருள்வைப் புழி“’

எனும் வள்ளுவர் வாக்குப்போல மக்களுக்குப் பசிப்பிணி, வறுமை போக்கியும் ஆதரவு வழங்கியும் ஆச்சிரமங்கள் மூலம் கல்வி வசதிகள் கொடுத்தும் மக்களை ஞானச் செல்வர்களாகவும் ஆக்கியுள்ளனர். அதற்கான பொருட்தேவைக்கு உழைத்து (பெரும்பாலும் விவசாயம்) பொருள் சம்பாதித்து அருள்சம்பாதித்து மானிடப் பிறப்பின் கடமையை உணர்த்தினர். இவ்விடத்தில்தான் மார்க்சியர்களின் தொழிலாளர், அடிமை, உழைப்பு, வர்க்கம், சுரண்டல் என்பவற்றின் முழுமையை அல்லது முற்போக்கான தன்மையைக் கொண்டவர்களாய்ப் ”பொதுமைப்பட்டு” நிற்கின்றனர். இதே போன்றே பேசிச் பேசிப் புளித்துப் போன வடமொழி எதிர்ப்பைக் குட்டையைக் குழப்புவது போல் இல்லாமல் மிக லாவவகமாகக் கையாண்டு தேவாரங்களை முன்நிலைப்படுத்தினர். இதற்கான சான்றாகத் தமிழ் மகாவாக்கியங்களைக் கூறலாம்.

அடுத்து வைத்தியம் என்பதன் மூலம் இயற்கைப் பொருட்கள் முன்நிலைப்படுத்தப் பட்டுள்ளது. வெற்றிலை போட்டு வரும் உமிழ்நீர் மூலமும் பூசையில் வைத்த நீர் மூலமும் செடிகளைப் பிழிந்தும் குடிநீர்கள் அவித்தும் பலவாறாக எல்லாம் மருத்துவ சேவை செய்துள்ளார்கள். மிக முக்கியமாக விஞ்ஞானம் எனும் மனிதக் கண்டுபிடிப்புக்களுக்குச் சவால் விடுவதைப் போன்று மெஞ்ஞானத்தை நிலைநிறுத்தும் குறியீட்டாளர்களாக வாழ்ந்துள்ளனர். மேலும் காலா காலமாக வந்து கொண்டிருக்கும் பெண் அடக்கு முறையை நீக்கியும் பெண் சித்தர்கள் உருவாக வழி வகுத்ததும் சித்தர்களின் மற்றொரு சமூக ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

இவ்வாறாகச் சித்தர்கள் உட்சுவர் இருக்க வெளிச்சுவர் பூசுவதா என்ற பழமொழிபோல் ஈழத்தமிழர்களின் வாழ்வு கேள்விக்குறி ஆகாமல் அவர்களுக்காய்ப் பல வழிகளில் உழைத்துள்ளனர். அதுமட்டுமன்றித் தமிழ் மக்களின் பண்பாட்டுத் தளம்பல்கள் சிதைந்த இந்நூற்றாண்டுப் போக்கு படு குழியில் வீழ்ந்து விடாது இருக்க, எல்லா இசங்களையும் ஒருமித்து இணைக்க இன்னொரு சித்தர் பரம்பரை உருவாக வேண்டும் போல் உள்ளது. அதற்கு இவ்வழித்தோன்றல்கள் பற்றித் தெரிந்து கொள்வது மிகமிக அவசியமாகும்.

சான்றுகள்

நா.முத்தையா. ஈழத்துச்சித்தர்கள். ஆத்மஜோதி நிலையம். இலங்கை. 1980.

ம. வைரமுத்து. என்நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியார். சிவதொண்டன்சபை. யாழ்ப்பாணம். 1980.

படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

மரணத்து ஞாபகப் படிவுகளும் ஞாபகப் படிவுகளின் மரணமும்: நாட்டார் தெய்வங்களின் குறிப்பீட்டாக்கம்.

நாட்டார் தெய்வம் என்பது ஒரு மனோபாவம். பல்வேறுவிதமான வழக்காறுகளின் ஊடாட்டத்தில் விளையும் மனோபாவம். தெய்வம் என்கிற சொற்பிரயோகம் மரபான வழிமுறைகளில் உருவத்தை மையப்படுத்தியோ அல்லது நபர்களை மையப்படுத்தியோ யோசிக்கத்தூண்டுகின்றது. செவ்வியப்பண்பாட்டிலும்கூட தெய்வம் எனும் சொல் தனித்தவொரு ஆகிருதியைச் சுட்டுவதாகவே பயன்பாட்டில் உள்ளது. தெய்வத்திற்கான அங்க அடையாளங்கள் வரையறுக்கப்பெற்ற குணநலன்கள் /பாராட்டப்பறும் சிறப்பியல்புகள் என ஏராளமான தரவுகளைக் கொண்டிருக்கக்கூடிய செவ்வியல் சமயத்தின் கருத்துருவச்சிக்கலை அடிப்படையாகக் கொண்ட ஆழ்மனம் /"நாட்டார் தெய்வம்" என யோசிக்கத்துவங்குகையிலும் அத்தெய்வங்களை உருவகமாக /வடிவரீதியாக/ மானிடத்தன்மை கொண்டதாக சில நேரங்களில் அதீத புருஷராக உருவகிக்கும் தவறையே செய்யத் துவங்குகிறது. ஆனால் நாட்டார் வழக்காறுகளின் பின்னணியில் நாட்டார் தெய்வத்தை அணுகத் துவங்குகிற நபர் வெகு எளிதாக நாட்டார் தெய்வம் என்பது மனோபாவம் மட்டுமே உருவமோ / நபரோ அல்ல என்னும் முடிவுக்கு வந்துவிட முடியும்.

'நாட்டார் தெய்வம்' நடைமுறையில் தனித்தவொரு செயல்பாடாகவும் விளங்குவதில்லை. பல்வேறு /செயல்பாடுகளிலிருந்து உருப்பெறகின்ற மனோபாவமாகவே வெளிப்படுகின்றது. தெய்வம் என்பது தன்னளவில் ஒரு வழக்காறெனச் செயல்பட முடியாதது. இது பல வழக்காறுகளின் தொகுதியில் உருவாகியுள்ள கருத்தாக்கம் ஒரே நேரத்தில் இருந்து கொண்டிருப்பது போலவும் இல்லலை என்பது போலவும் தோற்றமளிப்பது. நாட்டார் தெய்வத்தை அறிந்து கொள்வதற்காக நேர்மையாக முயலக்கூடிய ஒரு நபர் எங்கிருந்து தனது தேடலைத் துவங்க முடியும் என்னும் குழப்பத்தில் திகைப்பதை இந்தப் பார்வையிலேயே புரிந்து கொள்ள வேண்டும். நாட்டார் வழக்காற்றியலில் பயிற்சி பெற்ற நபருக்கு "நாட்டார் தெய்வம்" என்பது சேகரிக்கப்படக்கூடிய வழக்காறல்ல என்பது எளிதில் புரிந்து விடுகின்றது. நாட்டார் தெய்வம் என வெளித் தெரியும் படிக்கு சமூகத்தில் எதுவும் செயல்பட்டுக் கொண்டிருக்கவில்லை என்பதும் நாட்டார் தெய்வத்தைச் சேகரித்தல் அல்லது அறிந்து கொள்ளுதல் என்பது அத்தயெ்வம் குறித்த வழக்காறுகளைச் சேகரித்த அல்லது அறிந்து கொள்ளுதலாகவே நடைபெறவும் முடியும் என்பதும் அவருக்கு விளங்கி விடுகின்றது. எல்லா நாட்டார் தெய்வங்களும் தங்களைச்சுற்றி ஏராளமான வழக்காறுகளைக் கொண்டிருக்கின்றன: தெய்வம் தொடர்பான கதைகள் - தெய்வம் மனிதனாக வாழ்ந்த கதை / இறந்த கதை / தெய்வமாக மாறி யகதை / அருள்பாலித்த கதை / சடங்குகள் - தெய்வத்தை மகிழ்விப்பதற்கான செயற்பாடுகள்: /சாந்தப்படுத்துவதற்கான முயற்சிகள் /அருளைப்பெறுவதற்கான முன்னேற்பாடுகள் : வழிபாடுகள் -தெய்வத்தை முன்வைத்துச் செயல்படுத்தப்படுத்தப்படும் சமூக நிகழ்வுகள் : நம்பிக்கைகள் - தெய்வம் தொடர்பான கிடைச்செய்திகள், அதன் அடிப்டையிலான வாழ்வியற் செற்பாடுகள்: தெய்வம் தொடர்பான புழங்கு பொருட்கள் - தெய்வம் குடிகொண்டகோயில் , சிலைகள், ஆயுதங்கள் பூஜைக்கான பொருட்கள் ,இவையனைத்து வழக்காறுகளும் தெய்வம் எனும் ஒற்றைச்சரடின் பின்னணியில் ஒன்றோடொன்று இடையறாத ஊடாட்டத்தை கொண்டுள்ளன. இவ்வகை வழக்காறுகளை கொண்டிராத எதுவும் தெய்வம் எனும் அடையாளத்தைக் கெண்டிருப்பதில்லை. அதுபோல நாட்டார் தெய்வத்தை வழிபடக்கூடிய சமூகம் தனது தெய்வம் தொடர்பான வழக்காறுகளைக் கொண்டிருப்பதனாலேயே சமூகமெனவும் வழங்கப்படுகிறது. மிகத் தெளிவான வகையில், மேற்கூறப்பட்ட எந்தவொரு வழக்காறும் தனித்த நிலையில் நாட்டார் தெய்வமாகச் செயல்ப்படுவதில்லைஃ அதுபோல் பல வழக்காறுகளின் கூட்டுத்தொகையும் தெய்வம் என்பதாகக் கருதப்படுவதில்லை. இதற்கெல்லாம் அப்பால் இவ்வகை வழக்காறுகளெல்லாம் தங்களுக்குள் கொண்டிருக்கக் கூடிய ஒத்திசைவ-ினால் சமூகத்தில் / உருவாக்குகிற மனோபாவம் நாட்டார் தெய்வமென அடையாளப்படுத்தப்படுகிறது.



எந்தவொரு வழக்காறும் தன்னளவில் சுதந்திரமாக செயல்படுவதென்பது அசாத்தியம். தவிர்க்க முடியாத வகையில் அது தன்னையொத்த வழக்காறுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. ஒரு வழக்காறு வழங்கப்படுகையில் ஏராளமான பிற வழக்காறுகள் நினைவுபடுத்தப்படுகின்றன. வழக்காறுகளுக்கிடையிலான தொடர்பும், அவற்றைப் பிணைத்திருக்கும் கண்ணியும் ஞாபகப்படுத்தப்படுகின்றன. எனவே 'வழக்காறு' எனும் பிரயோகம் அதற்கான வகைப்படுத்தலில் மட்டும்தான் சாத்தியமேயொழிய நடைமுறையில் 'வழக்காற்றுத் தொகுதி' என்பதே உண்மை. இவ்வாறு தொகுதிகளாகச் செயல்படக்கூடிய வழக்காறுகள் எதனை வெளிப்படுத்துகின்றன என்கிற கேள்வியை எழுப்புவோமானால், காலம் காலமாகச் சொல்லப்பட்டுவரும் 'வழக்காற்றின்' அர்த்தம், பொருள் எனும் சிந்தனையை மறுக்க வேண்டிய சூழலில் இருந்து கொண்டிருக்கிறோம். வழக்காறு என்பது தனியாக செயல்படுவதில்லை எனும் அடிப்படை உண்மையிலேயே 'வழக்காற்றின் அர்த்தம்' எனும் வாதம் பொருளிழந்து போகிறது வழக்காற்றுத் தொகுதிகளே உண்மை என்றால் அவை வெளிப்படுத்தக்கூடிய மனநிலையே அவற்றின் அர்த்தச் செயல்பாடாகவும் அமைகிறது. அப்படியானவொரு மனநி லையை வெளிப்படுத்துவது மட்டுமே அச்செயல்பாடாக முடியும்.

நாட்டார் தெய்வம் குறித்த தரவுகளென நமக்குக் கிடைப்பதெல்லாம் கதையாடல் (Narrative) வடிவத்திலேயே அமைந்துள்ளன. தெய்வம் என்பது தனித்த வழக்காறல்ல, அதுபோல வழக்காறுகளின் தொகுப்புமல்ல என்று சொல்லுகிறபோது நாட்டார் தெய்வம் தன்னைக் கதையாடல்களாகவே வெளிப்படுத்துகிறது எனும் முடிவிற்கு வந்து சேர்கிறோம். (கதையாடல் எனும் சொல்லை வழக்காற்றுத் தொகுதி எனும் அர்த்தத்திலேயே நான் இங்கு பயன்படுத்த விரும்புகிறேன்.) தெய்வத்தை மையப்படுத்தி வெளிப்படுத்தப்படும் கதையாடல் : தொடர்ச்சியாக ஞாபகப்படுத்தப்படும் கதையாடல். இக்கதையாடலே தெய்வத்தின் இருப்பையும் நிய-ாயப்படுத்திக் கொண்டிருக்கிறது.

கதையாடல் என்று அழைக்கிறபோது, அவ்வழக்காறுகளின் பனுவலையும் கடந்து அப்பனுவல்கள் சமூகத்தில் செயல்படும் நிலையில் நின்று நாம் யோசிக்கத் துவங்குகிறோம். எல்லாக் கதையாடல்களும் தங்களுக்குள் வரையறுக்கபட்ட ஒழுங்கமைப்பொன்றைக் கொண்டுள்ளன. இந்த ஒழுங்கமைப்பு, காலம் மற்றும் வெளி சார்ந்து கட்டமைக்கப்பட்டுள்ளது. கதையாடலில் நிகழ்த்தப்படுகிற காலம், வெளி எனும் எல்லையை மீறி, கதையாடல்களின் கற்பனைத் தளத்தில் செயல்படும் காலமும் வெளியும் அக்கதையாடலின் அர்த்தப்புலத்தை நிர்ணயிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. இவ்வாறு நிகழ்த்துதல் அளவிலும், புனைவு நிலையிலும் வெவ்வேறு கால,

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

லூயிஸ் ஜோசப் தருமராஜ்
விரிவுரையாளர்,
நாட்டார் வழக்காற்றியல் துறை,
தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.

"எந்தவொரு வழக்காறும் தன்னளவில் சுதந்திரமாக செயல்படுவதென்பது அசாத்தியம். தவிர்க்க முடியாத
வகையில் அது தன்னையொத்த வழக்காறுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. ஒரு வழக்காறு
வழங்கப்படுகையில் ஏராளமான பிற வழக்காறுகள் நினைவுபடுத்தப்படுகின்றன. வழக்காறுகளுக்கிடையிலான
தொடர்பும், அவற்றைப் பிணைத்திருக்கும் கண்ணியும் ஞாபகப்படுத்தப்படுகின்றன. எனவே 'வழக்காறு' எனும்
பிரயோகம் அதற்கான வகைப்படுத்தலில் மட்டும்தான் சாத்தியமேயொழிய நடைமுறையில் 'வழக்காற்றுத்
தொகுதி' என்பதே உண்மை."

படிப்பகம்

www.padippakam.com

(9ம் பக்கத் தொடர்ச்சி) **மரணத்து...**

வெளிக்கூறுகளைத் தன்னுள்ளே கொண்டிருக்கும் கதையாடல் ஒரே நேரத்தில் இவ்விருவகை கால வெளிக்குள்ளும் ஊடாடிக் கொண்டிருக்கின்றது. கதையாடலின் நிகழ்த்துதல் சார்ந்த காலம் மற்றும் வெளி போன்ற தகைமைகள் வெளிப்படையானவை என்றால்ஃ புனைவு சார்ந்த காலம் மற்றும் வெளியி-ின் கூறுகள் அக்கதையாடலை நிகழ்த்துகிற மனம் தொடர்பானது. கதையாடலின் புனைவுத் தளத்தில் வெளிப்படும் காலத்தையும் வெளியையும் அறிந்து கொள்ளும் முயற்சி பனுவல் மற்றும் சொல்லாடல் குறித்த அடிப்படை அறிவுகளைச் சார்ந்தது. ஒரு பனுவலின் புனைவுத் தளத்தில் மூன்று விதமான காலங்கள் செயல்பட முடியும்-புராணிய காலம்ஃ வரலாற்றுக் காலம்ஃ தளக்காலம். இக்காலங்களைச் சார்ந்து புனைவுவெளியானது நிர்மாணிக்கப்படுகிறது. இம்மூன்று காலங்களும் தத்தமக்கான தெளிவானதொரு சித்திரத்தை தங்களுக்குள் கொண்டுள்ளன. கதையாடல்இக்காலங்களில் ஏதாவதொன்றைத்தனது புனைவுத்தளத்தில் எழுப்புகையில் மேற்கூறிய சித்திரங்கள் மனப்பிம்பங்களாக உருப்பெறத்துவங்குகின்றன. இப்பிம்பங்களை அடியொற்றி கதையாடலின் நிகழ்வுகள் நிகழத் துவங்குகின்றன. சுருக்கமாகச் சொல்வதானால் கதையாடல் தனது புனைவுத் தளத்தை அது எந்தக் காலத்தில் உறைந்திருக்கிறது எனக் கோடிட்டுக் காட்டும் முறையில் நிர்மாணிக்கத் துவங்குகிறது.

நாட்டார் தெய்வம் எனும் கதையாடலில் இரு வேறு காலங்கள் எப்போதும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்விரு காலங்களும் மிகத் தெளிவான வகையில் ஒன்று மற்றொன்றை வலுவூட்டும் முகமாக மயங்கியுள்ளன. தெய்வம் எனும் கதையாடலில் செயல்படும் இவ்விரு காலங்களும் தமக்கானவெளியையும் உருவாக்கியுள்ளன. இவ்விரு காலங்களையும் வரையறை செய்வதுபோலஃ ஒன்றிலிருந்து மற்றதை வேறுபடுத்திக் காட்டுவது போல, ஒவ்வொன்றின் எல்லையையும் தீர்மானிப்பதுபோல , இவ்விரண்டின் விளைவாக மூன்றாவது காரணியொன்று உருவாகி அவற்றின் இடைவெளியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மரணம் , இறப்பு, அழிவுஃ பிரிவு. மரணம் வரலாற்றுக் காலத்தின் இறுதியாகவும்ஃ தளக்காலத்தின் தொடக்கமாகவும் அமைந்துள்ளது. அழிவை மையப்படுத்தி இரு வெவ்வேறு காலங்கள் வேறு வேறான திசைகளில் கிடைத்துள்ளன. ஒன்று கடந்த காலம் எனும் புனைவினுள்ளும் மற்றொன்று நிகழ் காலம் எனும் புனைவிலும் செயல்படுகையில் இவ்விரு புனைவெளிகளை 'இறப்பு' எனும் நிகழ்வு பிணைத்துக் கொண்டிருக்கிறது.

மரணத்தின் நிழலை உமிழ்ந்திருக்கிற வரலாற்றுக் காலமும்-வெளியும் , மரணத்தின் மூலம் மட்டுமே தங்களை வரலாற்றுத் தகைமை கொண்டதெனவும் வரையறுத்துக் கொண்டுள்ளன. மரணம் என்பதை இறுதியாகப் பெற்றிராத பட்சத்தில் 'வரலாற்றுக் காலம்' வேறு காலமோ எனும் மயக்கத்தைத் தந்துவிடும் சாத்தியங்களும் உள்ளன. இறப்பு என்பது முற்றுப் புள்ளி போல வரலாற்றுக் காலத்திற்கான இறுதி வார்த்தை போல செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆச்சர்யப்படும் வகையில், மரணமே தான் தளக்காலத்தை வெளிப்படுத்தும் கருவியாகவும் செயல்படுகிறது.

நாட்டார் தெய்வம் எனும் கதையாடல் இவ்வகையில் வரலாற்றுக் காலம் மற்றும் வெளியில் புனைபடத் துவங்கி மரணம் எனும் இடைச்செயல்பாட்டின் துணையோடு தனது புனைவுத்தளத்தை தளக்கால வெளியினுள் மாற்றுவதாக அமைந்துள்ளது. தெய்வம் தோன்றிய கதைகள் , நம்பிக்கைகள் எனப் பல்வேறு வழக்காறுகள் வரலாற்றுத் தன்மையை வெளிப்படுத்தும் வேளையில் அத் தெய்வத்தின் மனித மரணம் கதையாடலை நிகழ்காலத்திற்குள் கொண்டு வருகிறது. இவ்விரு புனைவுத்தளங்களும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் கொண்டுள்ள இணைப்பை 'மரணம்' எனும் காரணி தெளிவாக நிகழ்த்திக்கொண்டிருக்கிறது.

தெளிவான வகையில் ஒன்று மற்றொன்றை வலுவூட்டும் என ஓங் குறிப்பிடும் இத்தகைய குணநலம் (கூட்டுத் தனிநிலை) ஒரு வகையில் வாய்மொழியியத்தை விளக்குகின்றது என்றாலும் இன்னொரு வகையில் அப்பண்பாட்டைக் குறுக்கியும் விடுகிறது. 'கூட்டுத்தனிநிலை", 'ஒற்றைச் சிந்தனை' போன்ற கருத்தாக்கங்களும் வாய்மொழிச்சமூகத்தை இயங்காத்தன்மையுடையதென உருவகிக்கும் தவறைச்செய்துவிடுகின்றது. 'கூட்டு' , 'ஒன்றை' என இரண்டுவகைத்தன்நிலைகளையும் ஒரே நேரத்தில் கொண்டிராத சமூகத்துக்கு இயக்கமென்பது இல்லை. வாய்மொழிச் சமூகத்தில்கூட்டுத் தன்னிலையின் பங்கு அதிகமாகக் காணப்படுகிறதென்றால் எழுத்துச சமூகத்தில் ஒற்றைத் தன்னிலை மேலோங்கியுள்ளது. கூட்டு மற்றும் ஒற்றைத் தன்னிலைகளுக்கிடையில-ான பேராட்டத்திலேயே எந்தவொரு சமூகத்தின் சிந்தனைப்போக்கும் வளர்ச்சியுறுகின்றது.

இச்சூழலில் பால் ரிக்கோயர் தன்னிலைகள் குறித்துப் பேசுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இரண்டு வகைத் தன்னிலைகள் எனச்சொல்லும் ரிக்கோயர் அவற்றைப் 'பொதுத்தன்மை' (sameness) எனவும் 'தனித்தன்மை' (selfhood) எனவும் பெயரிடுகிறார் (ரிக்கோயர் , 1992 : 18). இவ்விரு தன்மைகளும் ஒவ்வொரு தனிநபருக் குள்ளும் செயல்படுவதாகக் குறிப்பிடும் ரிக்கோயர் இத்தன்மைகளுக்கிடையிலான வேறுபாட்டை கால எல்லையைக் கொண்டு விளக்குகிறார். குறிப்பிட்ட நேரங்களில் பொதுத்தன்மை மேலாண்மை பெறுகிறதென்றால் வேறு சில சமயங்களில் தனித்தன்மை உச்சம் கொள்கிறது. அதைப்போலவே தனித்தன்மை பொதுத்தன்மையாகவும் மாறக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.

வாய்மொழிச் சமூகம் தனக்குள் இருவிதத் தன்மைகளைக் கொண்டு இயங்குகிறது. அதன் பொதுத்தன்மை மேலாண்மை பெற்றுள்ளது என்றாலும் அதனுள் உருவாகக்கூடிய தனித்தன்மைகள் பொதுத்தன்மை மீது தொடர்ச்சியான போராட்டத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன. இப்போராட்டம் சமூகத்தின் பொதுத்தன்மையை மாற்றியமைக்கும் முயற்சியாக இடையறாது நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. வெவ்வேறு சமூக முரண்களை மையப்படுத்தி தனித்தன்மைகள் மேற்கொள்ளும் இவ்வகைப் போராட்டங்களின் இறுதியில் தனித்தன்மைகள் தங்களை மாற்றிக் கொண்டு தங்களது அடையா-ளங்களை நிலைநிறுத்துகின்றன. தனித்தன்மைகளை வலியுறுத்திய மனிதர்கள் மரணமுறுவதென்பது வாய் மொழிப்பண்பாட்டில் இயல்பான ஒரு நிகழ்வு. சமூக மதிப்பீடுகளை மீறுபவர்கள்,கூட்டுத்தன்மையை உடைப்பவர்கள், பொதுத்தன்மையயைக் கேள்விக்குட்படுத்துபவர்கள் மரணத்தில் முடிந்து போவதென்பது எல்லையற்ற அதிர்ச்சியைச் சமூகத்திற்குள் எழுப்புகிறது. இவ்வதிர்ச்சியை எதிர்கொள்ளும் வகையில் சமூகங்கள் அம்மரணத்தை ஞாபகப்படிவுகளாக உருமாற்றிப் பொருட்களின் மீது படியவிடுகிறது. இவ்வாறு எல்லாச் சமூகங்களிலும் நிகழ்ந்த, நிகழ்கின்ற மரணங்கள் எண்ணிக்கையிலடங்கா அளவில் நிலமெங்கும் பொதிந்து வைக்கப்படுகின்றன. இப்பொருட்களைப் பின்னாளில் எதிர்கொள்கிற சமூகம் அதனைத் தெய்வமாக உருமாற்றித் தனது நிகழ்காலத்தைக் கட்டமைக்கத் துவங்குகிறது. இதுவரையில் விவாதித்த செய்திகளைத் தொகுத்து பார்ப்பதானால் கீழ்கண்டவாறு செய்யமுடியும்.

- நிகழ்காலத்தை மயக்கம் என உணர்ந்து தெளிந்து கொள்ள விரும்பும் சமூகமனம் நாட்டார் தெய்வங்களைப் படைக்கும் செயலை அறிவுச் செயல்பாடாகவே மேற்கொள்கிறது.
- நிகழ்கால மயக்கம் கடந்த காலத்தைக் கட்டமைப்பதன் மூலம் அகற்றப்படுகிறது.
- நிகழ்கால மனம் வரலாற்றுக் காலமனத்தையும் / கட்டமைக்கப்பெற்ற வரலாற்றுக்கால மனம் நிகழ்கால மனத்தையும் வடிவமைக்கின்றன.
- கடந்தகாலம் என்பது மரணங்களின் ஞாபகப்படிவங்களாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன.
- மரணத்தின் ஞாபகப்படிவுகளை கண்டெடுத்தல் என்பது நாட்டார் தெய்வங்களைக் கண்டெடுத்தல்.
- ஞாபங்களை மரணத்தில் பொதிந்து வைக்கும் செயல்பாடு வாய்மொழிப் பண்பாட்டின் உத்தி.
- எழுத்து மொழிப் பண்பாட்டில் மொழியின் காட்சிவடிவம் ஞாபகங்களைச் சுமந்து கொண்டிருக்கின்றன என்றால் வாய்மொழிப் பண்பாட்டில் அதனை மரணம் சுமந்து கொண்டிருக்கிறது.
- மரணத்தின் சாயல் நிகழ்காலத்தின் மீது தவிர்க்கவியலாத வகையில் எழுதப்பட்டிருக்கிறது.

வாய்மொழியை மட்டுமே சார்ந்து வாழக்கூடிய சமூகம் தனது வசதிகளுக்காக உருவாக்கிக் கொண்ட செயல்பாடே 'நாட்டார் தெய்வம்' எனும் கருத்தாக்கம் .சமூகத்தின் ஞாபகங்கள் மரணத்தை அடையா-ளமாகக் கொண்டு பரந்து விரிந்த இயற்கையெங்கும் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன என்பது போன்ற முடிவுகளைக் கையாளுவதில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். வாய்மொழிப் பண்பாடு என்று சொல்லுகையில் வாய்மொழியியம் எனும் கருத்தாக்கத்தைக் குறிப்பிடுகிறேனேயொழிய எந்தவொரு தனித்த பண்பாட்டையும் அல்ல. மொழி துணைபுரியாத சூழலில்ஃ திரும்பத் திரும்பச் சொல்லுவதையே ஞாபக உத்தியாக வாய்மொழிச் சமூகங்கள் கொண்டுள்ளன என்கிறார் வால்டர் ஜே. ஓங்கின் முடிவிற்கு மாறாக அச்சமூகங்கள் மரணம் எனும் காரணியை அடையாளமாகக் கொண்டு தனது ஞாபகப்படிவுகளை நிலமெங்கும் சேமித்து வைக்கின்றன என நான் குறிப்பிடுவது எந்தவொரு தனித்த பண்பாட்டின் குணமாகவும் இல்லாமல் வாய்மொழியியத்தின் குணமாகவே அமைந்துள்ளது.

வாய்மொழியியம் என்பது ஒரு விதமான மொழிச்செயல். வாய்மொழிப் பண்பாடு என்பது வாய்மொழியியத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறை. அதே நேரம் வாய்மொழிப் பண்பாடு தங்களுக்குள் எழுத்து மொழியியத்தின் கூறுகளையும் சொற்ப அளவில் கொண்டுள்ளன. இதற்கு எதிராக எழுத்துமொழிப் பண்பாடு தனது செயல்பாட்டைப் பெரிதும் எழுத்து மொழியியத் தன்மையோடும் குறைந்த அளவில் வாய் மொழியி யத் தன்மையோடும் கட்டமைத்துள்ளது. முழுமையான வாய்மொழியியம் அல்லது முழுமையான எழுத்துமொழியியம் செயல்படக்கூடிய பண்பாடுகள் என்று எவையுமில்லை. இரண்டு தகமைகளின் கலவையாகவே சமூகங்கள் காணப்படுகின்றன. எந்தத் தன்மை மேலோங்கியுள்ளது என்பதைப் பொறுத்து அச்சமூகத்தின் செயல்பாட்டு முறைமை அளக்கப்படுகிறது.

எழுத்து மொழியின் வசீகரத்தில் மயங்கிப்போன ஆய்வாளர்கள் பகுத்தறிவு எனும் போர்வையில் புத்தகங்களைச் சிலாகி க்கிற அளவு கதையாடல்களைக் கவனத்தில் கொள்ளாததும் நமது சூழலிலேயே நடைபெற்றிருக்கிறது.

எழுத்து எனும் கருவி தன்னோடு கூட உற்பத்தி செய்கிற பகுத்தறிவு எனும் கருத்தாக்கம் மரபான ஞாபக உத்திகளை அவை பயன்பாட்டில் கொண்டுள்ள வடிவத்தினை முன்னிட்டு அறிவிற்கு அப்பாற்பட்ட செயல்களென முடிவு செய்யும் போக்கினால் நாம் தவறவிட்டவை ஏராளம். கடந்த காலம் ரகசியப்படுத்தி வைத்துள்ள மரணத்தின் ஞாபகங்களை, நினைவுகளைக் கண்டறிய முயலாத சூழலில் அவற்றிற்கான பதிலிகளாக எழுத்துப் படிவங்களைத் தேடிப்போவதென்பது ஒரு சார்பான வரலாற்றுக் கட்டமைப்பாகவே இருந்து வரும். வரலாற்றைத் திரும்பச் செய்தல் எனும் வாதம் பல்வேறு கோணங்களில் பல்வேறு தளங்களில் எழுப்பப்படும் இன்றைய சூழலில் இயல்பாகவே தத்தமது கடந்த காலங்களை நாட்டார் தெய்வம் எனும் போர்வையில் சமூகங்கள் கட்டமைக்கும் செயல்பாட்டின் அடிப்படைகளை உணர்ந்து கொள்ளுதல் என்பது இன்றைய சமூகத் தேவையாகவும் இருக்கிறது. மரணத்தின் ஞாபகங்கள் நிலமெங்கும் பாதுகாக்கப்படுவதாக நம்புகிற வாய்மொழிச் சமூக மனம் அப்படியான ஞாபகங்களைத் தொடர்ச்சியாகக் கண்டு பிடித்துக் கொண்டும் பாராட்டிக் கொண்டும் வாழுகின்ற சூழலில் இவற்றிற்குப் பின்னால் செயல்படக்கூடிய சமூகத்தேவையைச் சமயம் எனும் சொல்லில் சுருக்கி விடாமல் அவ்வாறு நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் செயல்பாட்டை உணர்ந்து கொள்ள முயலுவதே சரியான ஆய்வாக இருக்கமுடியும். நாட்டார் தெய்வங்களை என்ன காரணங்களுக்காகச் சமூகம் உற்பத்தி செய்கிறது என்று கேட்பதைவிடவும் எவ்வாறு நாட்டார் தெய்வங்கள் உணர்ந்து கொள்ளப்படுகின்றன எனும் கேள்வியே மிகச் சரியானதாக இருக்க முடியும். இக்கட்டுரையிலும் கூட நாம் அப்படியானதொரு குரல் வெளிப்படும் வண்ணமே முயற்சி செய்திருக்கிறேன்.

துணை நூற்பட்டியல்:

Liszka. James Jacob.1989. The Semiotic of Myth. A Critical Study of the Symbol. Indiana University Press. Bloomington.

Lotman. Yuri. M. 1990. Universe of the Mind. A Semiotic Theory of Culture. Indiana University press. Bloomington.

Ong. Walter. J. 1989. Orality and Literacy : The Technologizing of the Word. Routledge. London.

Ricoeur. Paul. 1992. One self as Another translated by Kathleem Blamey. The University of Chicago Press. Chicago

படிப்பகம்

www.padippakam.com

யாழ் நூல்
ஓர் ஆய்வு

பேராசிரியர் நா. சுப்பிரமணியன்

கட்டுரை

ஈழத்தின் மட்டக்களப்புச் சூழலில் காரைதீவிலே 03.05.1892ஆம் ஆண்டில் பிறந்து, கொழும்பு மாநகரில் 19.07.1947ஆம் ஆண்டில் நிறைவெய்திய பண்டிதர் சா. மயில்வாகனன் அவர்கள் இராமகிருட்டினன் மிசன் என்ற நிறுவனச் சார்பால் விபுலானந்தர் என்ற துறவுப் பெயர் பெற்றவர். தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம் என்பவற்றில் நிறுவப்பட்ட தமிழ்த் துறைகளின் முதற்பேராசிரியர் என்ற பதிப் பொறுப்புகளை வகித்தவர். தமிழகத்தின் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு ஊடாக தமிழ்ப் பேராசிரியம் ஏற்படுத்தப் பட்டடிராத சூழ்நிலையில் 1931ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதலில் ஏற்படுத்தப்பட்ட அப்பதவியை அலங்கரித்தவர் என்ற வகையில் "தமிழ்த்துறை முதற் பேராசிரியர்" என்னும் பெருமை பெற்றவராக இவர் திகழ்ந்தார் எனப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறுவார். இத்தகு பெருமை சான்ற விபுலானந்த அடிகளார் இயற்றமிழில் மட்டுமன்றி இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகியவற்றிலும் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார். இவரின் இத்தகைமைக-ளைக் கருத்திற் கொண்ட தமிழாய்வுலகம் இவரை "முத்தமிழ் வித்தகர்" எனவும் "முத்தமிழ் முனிவர்" எனவும் சிறப்புப் பெயர் சூட்டிப் பாராட்டி வந்துள்ளது. இவ்வாறான தகமைகளும் பெருமைகளும் பெற்ற அடிகளாரின் எழுத்தாக்கங்களில் "வாழ்நாட் பணி" எந்த வகையில் விதந்துரைக்கப்படும் வரலாற்றுச் சாதனையாக அமைவது அவரது யாழ் நூல் ஆகும். அவரது பல்லாண்டுகாலத் தொடர் ஆய்வின் பேறாக உருவான இந்த நூல் 05.06.1947 அன்று தமிழகத்தின் திருக்கொள்ளம்புத்தூர் திருக்கோயிலில் புலவரவையில் அரங்கேற்றம் பெற்றது. இந்நூல் அரங்கேறிய பின்னர் சில வாரங்களில் அடிகளார் நிறைவு பெற்றுவிட்டார். இதனை நோக்கும் பொழுது அடிகளார் இந்த ஒரு நூலை நிறைவாக நல்குவதற்காகவே வாழ்ந்திருந்தாரோ என எண்ணத் தோன்றுகிறது.

முத்தமிழின் ஒரு கூறாகிய இசைத்தமிழின் தொன்மை மற்றும் மேன்மை என்பன தொடர்பான ஆய்வுத் தேட்டத்தின் தொகுநிலை வடிவமாக உருவான இந்நூல், தமிழரின் "இசைக்கருவூலம்" எனத்தக்க கணிப்புக்குரியது. பண்டைக் காலத்தில் சிறப்புற்றிருந்து இடைக்காலத்தில் பேணுகையின்றி மறைந்தொழிந்து விட்ட தமிழரின் இசை மரபு தொடர்பான ஒரு "மீள் கண்டுபிடிப்பு" முயற்சியாகும். "மீட்டுருவாக்க" முயற்சியாகவும் இந்நூலாக்கம் திகழ்கின்றது. அவ்வகையில் வரலாற்று முதன்மைமிக்க ஆக்கம் இதுவாகும்.

தமிழரின் இசைமரபு சார்ந்த வரலாற்று முதன்மையுடைய இவ்வாக்கம் 1947, 1974 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தின் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பெற்றது. அதன் பின்னர் 2003ஆம் ஆண்டிலே கனடா நாட்டின் ரொறன்ரோ மாநகரில் உள்ள மறுமொழி ஊடக வலையத்தினரால் திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பு என்ற வெளியீட்டுக் குறிப்புடன் வெளியிடப்பட்டுள்ளது. ஐம்பத்தி ஆறு ஆண்டுகளுக்கிடையில் மூன்றாவது பதிப்புக் கண்டுள்ளமை இந்நூலின் வரலாற்று முக்கியத்துவத்தினை உறுதி செய்கிறது எனலாம். புலம்பெயர் சூழலில் இப்புதிய வெளியீட்டை மேற்கொண்டவர்களது தமிழ்ப் பண்பாட்டுப் பற்றும் ஆர்வமும் பெரிதும் மதித்து வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும். அடிகளாரின் இந்நூலின் வரலாற்று முதன்மையைத் தெளிந்து கொள்வதற்கு முதற்கண் இந்நூல் உருவான காலகட்டத்தில் தமிழகத்தில் நிலவிய பண்பாட்டு வரலாற்றுச் சூழல் நமது கவனத்துக்கு உரியதாகின்றது.

இந்நூலை உருவாக்குவதற்கான எண்ணக்கருக்களை அடிகளார் தம் உள்ளத்தில் வளர்த்துக் கொண்டிருந்த காலகட்டமான 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலே தமிழியலாய்வை இரு வகை உணர்வோட்டங்கள் வழிநடத்தி நின்றன. ஒன்று நாட்டு விடுதலை உணர்வெழுச்சி, மற்றையது பண்பாட்டுக் கூறுகளின் தொன்மை மற்றும் மேன்மைகளை இனங்கண்டு ஆராய்ந்து வெளிக்கொணரும் ஆர்வமாகும். இவ்விரு உணர்வோட்டங்களும் முனைப்பாக வெளிப்படுவதற்குச் சூழல்சார் பொதுநிலை ஏதுவாக அமைந்திருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி ஆகும். இவ்வாட்சிக்கு எதிராக தேசிய உணர்வெழுச்சி முனைப்பாக வெளிப்பட்ட காலப்பகுதி இதுவாகும். தமிழகம் அதைனை உள்ளடக்கிய இந்தியப் பெருநிலம் மற்றும் ஈழம் ஆகிய நாடுகளின் பொதுநிலைச் சூழல் இதுவேயாகும். இப் பொதுநிலைச் சூழலில் மேற்படி நாடுகளின் மொழ-ிசார் இனங்கள் தத்தம் சுய பண்பாட்டுத் தனித்தன்மைகளையும் பேணிக்கொள்ளவும் முனைந்து நின்றன. தமிழினமும் இந்த முனைப்போடு செயற்பட்டது. தமிழரின் தொன்மை மற்றும் மேன்மை தொடர்பான வரலாற்றைக் கட்டமைக்கும் ஆர்வமுனைப்பு தமிழரிடையே பல்வேறு மட்டங்களிலும் பரவலாக வெளிப்பட்டு வந்த காலப்பகுதியாக இக்காலப் பகுதி அமைந்தது. குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்தே இம்முனைப்பு பல் துறைகளிலும் தொழிற்படத் தொடங்கிவிட்டது. தவத்திரு ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, உ.வே. சுவாமிநாதையர் முதலியவர்கள் பண்டைத் தமிழ் நூல்களை அச்சேற்ற முற்பட்ட பொழுதே இந்த ஆர்வ முனைப்பு கருவாகி உருவாகி விட்டது. இவ்வாறான பதிப்பு முயற்சிகளைத் தொடர்ந்து பண்டைத் தமிழரின் வரலாற்றை எழுதும் முயற்சிகள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி விட்டன. மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை அவர்கள் எழுதிய "1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்" என்ற நூல் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெளிவந்தது என்பதும், அது தமிழர் தம் பண்டைய சமூக, பண்பாட்டு நிலைகளை நோக்கி ஆய்வுலகின் கவனத்தை ஈர்த்தது என்பதும் இங்கு சுட்டத்தக்கது.

இவ்வாறு இலக்கியம் மற்றும் வரலாறு என்பன தொடர்பாக 19ஆம் நூற்றாண்டு முதல் கருவாகி உருவாகி வந்த ஆய்வியல் ஆர்வம் இசைத்துறையிலும் ஏற்படத்தொடங்கிய சூழ்நிலையில் 1917ஆம் ஆண்டில் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் "கருணாமிர்த சாகரம்" என்ற பெருநூல் வெளிவந்தது. இதனை அடுத்து 1947ஆம் ஆண்டில் விபுலானந்த அடிகளாரின் யாழ்நூல் வெளிவந்தது. இவ்விரண்டும் தமிழரின் இசைமரபின் வரலாற்றைக் கட்டமைப்பதற்கான அடிப்படைத் தேவைகளை தரவுகளின் களஞ்சியங்களாகத் திகழ்வன என்பது மனங்கொள்ளப்பட வேண்டியதாகும்.

இவற்றின் வரலாற்று முதன்மையை மேலும் நாம் தெரிந்து தெளிந்து கொள்வதற்கு தமிழரின் இசைவரலாறு செழிப்புற்றிருந்து, பின்னர் மங்கி இருள் சூழ்ந்திருந்த கால கட்டங்களை நாம் நினைவிற் கொணர வேண்டும். "சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மற்றும் பக்தி இலக்கியம், பெரியபுராணம் முதலிய பேரிலக்கியங்கள் என்பன எழுந்த காலப்பகுதிகளில் ஏறத்தாழ கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரையான கால கட்டங்களில் தமிழரிடையே நிலவி வந்த இசை மரபின் பெருமைகளை அந்த இலக்கியங்களின் அகச்சான்றுகளில் நாம் நோக்கியறிய முடியும். குறிப்பாக சிலப்பதிகாரத்தின் "அரங்கேற்றுக் காதை, கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, ஆகிய காதைகள்" என்பன காட்டும் இசை மற்றும் கூத்து தொடர்பான காட்சிகள் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழரின் "ஆடல் பாடல்" மரபுகளின் உயிர் நிலையை உணர்த்தி நிற்பன. கி.பி. 6ஆம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டில் உருவான பத்திப் பேரியக்கம் இசை மற்றும் ஆடல் மரபுகளை இறையுணர்வுடன் இணைத்துப் பேணிநின்றது. "திருமுறை - திவ்யப் பிரபந்த" இலக்கியப்பரப்பு இதற்குச் சான்றாதாரங்களாகவுள்ளன. மேலும் அக்காலப் பகுதிசார் சிற்பம் ஓவியம் முதலான கலைச் சின்னங்கள், கல்வெட்டுக்கள் முதலியனவும் மேற்படி காலம் முதலான இசை மற்றும் ஆடல் மரபுகளின் செழிப்பை உணர்த்தி நிற்பன.

இவ்வாறு பண்டைத் தமிழரின் இசை மற்றும் ஆடல் மரபுகள் செழிப்புற்றிருந்த காலப்பகுதியில் அவை தொடர்பான இலக்கண நூல்கள் பல எழுந்தன. சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் உரை எழுதிய காலப்பகுதியில் ஏறத்தாழ 12-13ஆம் நூற்றாண்டுகளில் மேற்படி இசை மற்றும் ஆடல் தொடர்பான இலக்கண ஆக்கங்கள் பல பயில்நிலையில் இருந்தன என்பதை அவ்வுரைத் தரவுகள் உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறு பண்டு வழக்கிலிருந்த இசையிலக்கண நூல்களில் அறிவாளர் என்பாரின் பஞ்சமரபு ஒன்றே பல்வேறு ஐயங்களுக்கிடையே கிடைத்திருக்கும் ஒரே பழந்தமிழ் நூல் ஆகும். ஏனையவை பலவும் முறையான பேணுகையின்றி அழிந்தொழிந்து விட்டன. அதனால் வளமான இசை மரபின் நிறைவான வரலாறு தொடர்ச்சியாக எமக்குக் கிட்டாமற் போய்விட்டது என்பதும் நாம் நினைவிற் கொள்ள வேண்டியவை ஆகின்றன. இந்நிலையிலேயே தான் ஆபிரகாம் பண்டிதர் மற்றும் விபுலானந்த அடிகளார் ஆகியோரின் மேற்படி நூலாக்க முயற்சிகளின் வரலாற்று முக்கியத்துவம் எம்மால் உணரப்படுகின்றது.

மேற்கண்டவாறு பண்டைய தமிழர் இசை மற்றும் ஆடல்சார் மரபுகளின் இலக்கணநிலைச் சான்றுகள் மற்றும் இசைசார் கருவிகளின் தொழில்நுட்பம் என்பன தொடர்பான செய்திகள் என்பன எமக்குக் கிட்டாமற் போய்விட்டமைக்குப் பல்வேறு ஏதுக்களைச் சுட்டமுடியும். இன்றிருப்பது போல்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

முத்தமிழின் ஒரு கூறாகிய இசைத்தமிழின் தொன்மை மற்றும் மேன்மை என்பன தொடர்பான ஆய்வுத் தேட்டத்தின் தொகுநிலை வடிவமாக உருவான இந்நூல், தமிழரின் "இசைக்கருவூலம்" எனத்தக்க கணிப்புக்குரியது. பண்டைக் காலத்தில் சிறப்புற்றிருந்து இடைக்காலத்தில் பேணுகையின்றி மறைந்தொழிந்து விட்ட தமிழரின் இசை மரபு தொடர்பான ஒரு "மீள் கண்டுபிடிப்பு" முயற்சியாகும். "மீட்டுருவாக்க" முயற்சியாகவும் இந்நூலாக்கம் திகழ்கின்றது. அவ்வகையில் வரலாற்று முதன்மைமிக்க ஆக்கம் இதுவாகும்.

படிப்பகம்

www.padippakam.com

(11ம் பக்கத் தொடர்ச்சி) **யாழ் நூல்...**

அச்சு மற்றும் மின்னியல் பதிவுச் சாதனங்கள் இல்லாத பண்டைய சூழலில் ஏடுகள் மட்டும் எழுதப்பட்டன. தொடர்ந்து எழுதப்படாமையால் மறைந்துவிட்டன என்பது பொதுவாக யாவரும் அறிந்த காரணியாகும். இவ்வாறு தொடர்ந்து ஏடுகளில் எழுதப்பட்டமைக்குத் தமிழரிடையே ஆவணங்களைப் பேணிக்காக்கும் மனப்பக்குவம் வலுவாக நிலவாமையும் ஒரு காரணி எனக் கூறலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவற்றுக்கு அடிப்படையான முதன்மையான காரணியாக உணரப்படுவது அயலவர் ஆட்சிச் சூழல் மற்றும் அயலவர் பண்பாட்டின் மேலாண்மை என்பனவாகும். குறிப்பாகத் தமிழகத்திற்கு அயலகமான ஆந்திரப்பிரதேசம் தமிழகப் பண்பாட்டில் செலுத்திய ஆதிக்கம் ஆகும். கி.பி. 14-18 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தெலுங்கு மொழியினராகிய விசய நகர மன்னர்கள் மற்றும் அவர்களின் பேராளர்களான நாயக்கர்கள் என்போர் தமிழகத்தின் பல்வேறு முதன்மைப் புலங்களிலும் ஆட்சி அதிகாரம் செலுத்திய சூழலில் தமிழகம் அவர்களின் பண்பாட்டாதிக்கத்துக்கு உட்பட்டு நின்றதென்பது வரலாறு தரும் செய்தியாகும். இவ்வாறான சூழலில் தெலுங்கு மொழி மற்றும் வடமொழி என்பவற்றுடன் மிக நெருக்கமான உறவு கொண்ட "கருநாடக இசை" மரபு தமிழ் மண்ணில் வேரூன்றி நிலைத்தது.

இவ்வாறான வரலாற்றுச் சூழலில் தமிழர் தமது பண்டைய வளமிக்க மரபுகளைப் பேணும் ஊக்கத்தை இழந்தனர் என ஊகிக்கவேண்டியுள்ளது. இவ்வாறு இழக்கப்பட்ட ஊக்கம் 19-20ஆம் நூற்றாண்டுகளில் மேலைப்புலக் கல்விச் சூழல் கிடைத்த பொழுது உணரப்பட்டது. இவ்வாறு உணரப்பட்ட நிலையை ஆபிரகாம் பண்டிதர் விபுலானந்த அடிகளார் ஆகியோரின் மேற்சுட்டிய நூலாக்க முயற்சிகளுக்குரிய அருட்டுணர்வாக அமைந்தது.

அடிகளாரின் முயற்சிக்கு மேலும் உந்துதலைத் தந்த சமகால வரலாற்றுச் சூழல் பற்றி செய்தி ஒன்றையும் இங்கு சுட்டுவது இன்றியமையாததாகின்றது. அது "தமிழிசை இயக்கம்" என்ற பண்பாட்டியக்கச் சூழல் ஆகும். தமிழ்நாட்டில் வேரூன்றி நிலைத்த கருநாடக இசையின் மிகப் பெரும்பான்மைப் பாடல்கள் வடமொழி மற்றும் தெலுங்கு மொழிகளிலேயே அமைந்திருந்தன. மிகப் பெரும்பான்மையான மக்களுக்குப் புரியாத மொழியிலே ஏன் இசை பாடவேண்டும்? தமிழிலே அத்தகு இசைப்பாடல் வளம் இல்லையா? தமிழகத்தில் அறிவுபூர்வமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள் உள்ளத்தில் இந்த வினாக்கள் எழுந்த பொழுது அதற்கு விடையளிக்கும் வகையில் மக்கள் பேரியக்கமாக உருவானதே தமிழிசை இயக்கம். இந்த இயக்கம் முனைப்பாகச் செயற்படத் தொடங்கிய 1940ஆம் ஆண்டிலேயே தான் அடிகளாரின் யாழ்நூல் உருவானது. அவ்வியக்கம் எந்த நோக்கங்களுக்காகப் போராடியதோ அதற்கு ஆதாரமான வரலாற்று மூலங்களின் தேட்டத்தில் ஈடுபட்டு உழைத்தவர் அடிகளார். இவ்வாறான தேட்டமே யாழ்நூலாக உருப்பெற்றது. எனவே அடிகளாரின் ஆய்வு முயற்சிக்கான சிறப்பு நிலை உந்து சக்தியைத் தந்த பண்பாட்டுச் சூழலாகத் தமிழிசை இயக்கச் சூழலைக் கொள்ளலாம்.

இவ்வாறான ஒரு பெரு நூலை ஆக்குவதற்கு அடிகளார் கொண்டிருந்த தகுதி மற்றும் அவரது ஆய்வுப்பார்வை என்பன நமது கவனத்திற்குரியனவாகுகின்றன. இவற்றை அடிகளாரின் ஆளுமை என்ற துணைத்தலைப்பில் நோக்கலாம்.

அடிகளாரின் ஆளுமை, தமிழ்ப் பண்டிதர் பட்டம் மற்றும் அறிவியல் இளவல் (B.Sc.) பட்டம் என்பன அடிகளார் கல்வியின் மூலம் ஈட்டிக்கொண்டவை. இராமகிருட்டின மிசனுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு அவருக்கு அனைத்துச் சமூகத்தையும் நேசிக்கும் வேதாந்த ஞானத்தைத் தந்தது. தமிழ் மற்றும் ஆங்கிலம் மட்டுமன்றி இலத்தீன், சமசுகிருதம், சிங்களம், பாளி முதலான பல மொழிகளிலும் அவர் கொண்டிருந்த அறிவு அவரிடம் ஒப்பியல் ஆய்வு நோக்கை உருவாக்கியிருந்தது. கல்லூரி ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர் பல்கலைக்கழகங்களின் தமிழ்ப் பேராசிரியர் என்பனவாக அவர் வகித்த ஆசிரியப் பதவிகள் அவருக்குக் கல்வியாளரிடையே ஒரு தனிக்கணிப்பை ஏற்படுத்தியிருந்தன. இவை

அவரது ஆளுமை பற்றிய பொதுச் செய்திகள். தமிழ்ப் பண்டிதர் என்ற வகையில் அவர் ஒரு இயற்றமிழ் அறிஞர். அத்துடன் அமையாமல் இசை, நாடகம் என்பவற்றிலும் புலமையை ஈட்டிக்கொண்டவர் என்பதனால் அவர் முத்தமிழ்ப்

தமிழ்நாட்டில் வேரூன்றி நிலைத்த கருநாடக இசையின் மிகப் பெரும்பான்மைப் பாடல்கள் வடமொழி மற்றும் தெலுங்கு மொழிகளிலேயே அமைந்திருந்தன. மிகப் பெரும்பான்மையான மக்களுக்குப் புரியாத மொழியிலே ஏன் இசை பாடவேண்டும்? தமிழிலே அத்தகு இசைப்பாடல் வளம் இல்லையா? தமிழகத்தில் அறிவுபூர்வமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள் உள்ளத்தில் இந்த வினாக்கள் எழுந்த பொழுது அதற்கு விடையளிக்கும் வகையில் மக்கள் பேரியக்கமாக உருவானதே தமிழிசை இயக்கம். இந்த இயக்கம் முனைப்பாகச் செயற்படத் தொடங்கிய 1940ஆம் ஆண்டிலேயே தான் அடிகளாரின் யாழ்நூல் உருவானது. அவ்வியக்கம் எந்த நோக்கங்களுக்காகப் போராடியதோ அதற்கு ஆதாரமான வரலாற்று மூலங்களின் தேட்டத்தில் ஈடுபட்டு உழைத்தவர் அடிகளார். இவ்வாறான தேட்டமே யாழ்நூலாக உருப்பெற்றது.

புலமையாளராகப் போற்றப்பட்டார் என்பதை முன்னரே நோக்கியுள்ளோம். சமகாலத் தமிழ் அறிஞர்கள் பலரும் இலக்கிய - இலக்கண நூற்பரப்புக்குள் நின்று கால ஆய்வு, பதிப்புப்பணி மற்றும் இலக்கிய நயம் காணல் முதலான துறைகளில் செயற்பட்டுக்கொண்டிருந்த சூழலில் அடிகளார் அவ்வெல்லைகளைத் தாண்டி இசை மற்றும் நாடகம் என்பன தொடர்பான விரிநிலை ஆய்வுகளில் ஈடுபட்டமை அவரது தனித்த ஆளுமையை உணர்த்துவதாகும்.

அடிகளார் இசைத்துறையில் கொண்ட ஈடுபாட்டுக்கு அவர் பிறந்த மட்டக்களப்பு மண்ணின் மீன்பாடும் சூழல் ஒரு தொடக்கநிலை ஏதுவாகக் கருதத் தக்கது. இச்சூழல் சார்ந்ததாக இவர் இயற்றிய "நீரர மகளிர்" என்ற இசைப்பாடல் இதற்குச் சான்றாக அமைவது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவர் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய பொழுது அங்கிருந்த இசைக்கல்லூரியின் பொறுப்புகளையும் மேற்பார்வை செய்தவர். இசைக்கல்லூரியின் ஆசிரியராக விளங்கிய இசைக் கலாநிதி பொன்னையாபிள்ளை என்பாரிடம் கருநாடக இசையின் அமைப்பை அறிந்து கொண்டவர். இவ்வாறான இசையீடுபாடும் அதுபற்றிய வரன்முறையான அறிவும் பெற்றிருந்த அவர் தமது கணிதவியல் அறிவு மற்றும் ஆய்வியல் நோக்கு என்பவற்றைத் தொடர்பு படுத்திய பொழுது மறைந்து போன யாழ்க்கருவிகளை மீட்டுருவாக்கம் செய்யும் திறனைப் பெற்றார். இவ்வாறான இசைக்கருவிசார் தொழில்நுட்ப அறிவுத்திறன் இசையிலக்கண நூலாக்க ஆர்வமாக முழுநிலைப் பரிமாணம் எய்திய நிலையில் அவரது யாழ்நூல் பிறந்தது.

தமிழிசை மரபை மையப்படுத்திய இந்நூலாக்கத்திலே இவர் புலப்படுத்தி நின்ற பார்வை தமிழ் மற்றும் வடமொழிசார் மூலாதாரங்களை உளப்படுத்தி நோக்கும் விரிந்த மனப்பாங்குடன் அமைந்தது. சங்க இலக்கியம், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருமுறைகள், பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலான தமிழ் நூற்பரப்பை மட்டுமன்றி வடமொழி நூல்களான பரதரின் "நாட்டிய சாஸ்திரம்," "சங்கீத ரத்னாகரம்", "சங்கீத மகரந்தம", "சங்கீத பாரிஜாதம்", "சவர்தண்டி பிரகாசிகா" முதலானவற்றையும் இவர் ஆய்வு மூலங்களாகப் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறான பார்வையின் பேறாக தமிழின் பண்ணிசை மரபு வடமொழி சார்புடைய கர்நாடக இசையின் இராகமரபு என்பனவற்றுக்கிடையே புலப்படும் ஒப்புமைகளை இவரால் இனங்காண முடிந்தது. இதனை நோக்கும் போது தமிழரின் இசைமரபை நோக்க முற்பட்ட இவரது பார்வையானது தமிழ்நாடு, தமிழ்மொழி என்ற எல்லைகளுக்குள் நின்றுவிடாது பொதுவான இந்தியப் பண்பாட்டுத்தளம் என்ற விரிநிலை கொண்டிருந்தமை தெரிகிறது. "பரந்த இந்திய இசையின் தனிச்சிறப்புள்ள ஒரு பகுதியாகவே தமிழிசை விளங்குதலை அவர் கவனித்துள்ளார்" என பேராசிரியர் வி. சிவகாமி அவர்கள் தந்துள்ள கணிப்பு இத்தொடர்பில் நமது கவனத்துக்குரியதாகின்றது. இக்கணிப்பு பொருத்தமானதாகவே தெரிகிறது.

அடிகளாருக்கு இப்பரந்த பார்வை அமைந்திருந்தமைக்கு அவர் அனைத்திந்திய தேசிய நிலைப்பட்ட நிறுவனமான இராமகிருட்டின மிசனுடன் கொண்டிருந்த உறவு ஒரு முதன்மைக் காரணி எனலாம். பன்மொழி அறிவால் ஏற்பட்ட ஒப்பு நோக்கு இன்னொரு காரணி எனலாம். இவற்றுக்கு அப்பாலும் சுட்டக்கூடிய ஒரு காரணி அவர் வடமொழி மற்றும் தெலுங்குமொழி சார் மேலாண்மைகளாற் பாதிப்புறாத ஈழநாட்டைச் சேர்ந்தவர் என்பதாகும். இதனால் தமிழ் இசையையும் கருநாடக இசையையும் அவரால் புற நிலையாக நின்று நோக்க முடிந்தது எனலாம்.

யாழ்நூலின் பொருட்பரப்பும் அமைப்பும்:

"சிலப்பதிகாரத்தில், அரங்கேற்று காதையினுள்ளே யாழாசிரியரின் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்கு இ ை ய ந் த ெ த ா ரு விரிவுரையாக இந்நூல் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது" என்பது இந்நூலின் முடிவுரையிலேயே அடிகளார் தந்துள்ள குறிப்பாகும். இந்நூலாக்கத்திற்கான அருட்டுணர்வை வழங்குவதில் சிலப்பதிகாரம் வகித்த பங்கினை மேற்படி அடிகளாரின் கூற்று உணர்த்தி நிற்கின்றது. யாழாசிரியர் அமைதி என்ற அடிப்படையில் சிந்திக்கத் தொடங்கிய அடிகளார் யாழ்க்கருவி தொடர்பான அனைத்துத் தகவல்களையும் நோக்கித் தமது ஆய்வுப் பயணத்தைத் தொடர்ந்தார். தாம் கலந்துகொண்ட ஆய்வரங்குகள் பலவற்றில் இத்தொடர்பில் உரைகள் நிகழ்த்தினார். ஆய்விதழ்களில் கட்டுரைகளும் எழுதினார். இவ்வாறு உரைகள் மற்றும் கட்டுரைகளில் பல ஆண்டுகள் அவர் முன்வைத்து வந்த கருத்துகளின் தொகுநிலை வடிவம் என்ற வகையிலேயே பலநூறு பக்கங்களைக் கொண்ட யாழ்நூல் உருவாகியது. யாழ் என்ற இசைக்கருவியை முன்வைத்துப் பண்டைத்தமிழ் இசை மரபு மற்றும் சமகால அனைத்திந்திய இசைமரபு என்பன சார் பல்வகைப்பட்ட செய்திகளையும் அடிகளார் விரிவாய் பேச முற்பட்டுள்ளார் என்பது நூலமைப்பிலே தெளிவாகத் தெரிகிறது.

இந்நூல் பாயிரவியல், யாழுறுப்பியல், இசைநரம்பியல், பாலைத்திரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒழிபியல் என்னும் ஏழு இயல்களில் அமைந்துள்ளது. பாயிரவியல் முதலில் தெய்வ வணக்கத்துடன் தொடங்கும் அடிகளார் அடுத்து "இசை நரம்புகளின் பெயரும் வரன்முறையும்" எனத் தொடங்கி அத்தொடர்பில் பண், தேவபாணி, பாணர் வரன்முறை, யாழ்க்கருவியின் தெய்வ நலம், அது தமிழ்நாட்டிலிருந்து பிறநாடுகளுக்குப் பரவிய (தொடர்ச்சி 16ம் பக்கம்)

தமிழிசை மரபை மையப்படுத்திய இந்நூலாக்கத்திலே இவர் புலப்படுத்தி நின்ற பார்வை தமிழ் மற்றும் வடமொழிசார் மூலாதாரங்களை உளப்படுத்தி நோக்கும் விரிந்த மனப்பாங்குடன் அமைந்தது. சங்க இலக்கியம், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருமுறைகள், பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலான தமிழ் நூற்பரப்பை மட்டுமன்றி வடமொழி நூல்களான பரதரின் "நாட்டிய சாஸ்திரம்," "சங்கீத ரத்னாகரம்", "சங்கீத மகரந்தம", "சங்கீத பாரிஜாதம்", "சவர்தண்டி பிரகாசிகா" முதலானவற்றையும் இவர் ஆய்வு மூலங்களாகப் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறான பார்வையின் பேறாக தமிழின் பண்ணிசை மரபு வடமொழி சார்புடைய கர்நாடக இசையின் இராகமரபு என்பனவற்றுக்கிடையே புலப்படும் ஒப்புமைகளை இவரால் இனங்காண முடிந்தது. இதனை நோக்கும் போது தமிழரின் இசைமரபை நோக்க முற்பட்ட இவரது பார்வையானது தமிழ்நாடு, தமிழ்மொழி என்ற எல்லைகளுக்குள் நின்றுவிடாது பொதுவான இந்தியப் பண்பாட்டுத்தளம் என்ற விரிநிலை கொண்டிருந்தமை தெரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com

தமிழ்நாட்டில் தண்ணீருக்கான போராட்டத்தில் (1924-2003) அரசும் தீண்டாமையும்

கோ. ரகுபதி

ஆய்வுமாணவர், வரலாற்றுத்துறை, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், தமிழ்நாடு

தண்ணீரும் தீண்டாமையும்

கட்டுரை

வெள்ளையர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றி சுதந்திர இந்திய தேசம் கட்டமைக்க நடந்த போராட்டத்தில் டாக்டர். அம்பேத்கர் பங்கேற்காமல் அவர்களுக்கு ஆதரவாயிருந்தாரென அவர்மீது குற்றம் சுமத்தப்படுகிறது. அவர் வெள்ளையர்களிடமிருந்து விடுதலைபெற விரும்பிய சாதிய இந்துக்களின் தீண்டாமை கோரக்கொடுமையிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களை விடுவிக்க தன் வாழ்வினை அர்ப்பணித்தார். 1923ல் பம்பாய் சட்டமன்றம், பொது நிதிகளிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட அல்லது அரசால்நியமிக்கப் பட்ட அமைப்புகள் நிர்வகித்து வருகின்ற அல்லது சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டு நடைபெற்று வருகின்ற எல்லா பொதுப் பள்ளிக் கூடங்கள்இ பொது நீர் நிலைகள்இ கிணறுகள் போன்றவற்றை பயன்படுத்திக் கொள்ளத் தீண்டத்தகாதவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இத்தீர்மானத்தை எல்லா அரசு அலுவலகங்களின் தலைவருக்கு அனுப்பி அதனைச் செயல்படுத்த வேண்டுமென்று பம்பாய் அரசாங்கம் உத்தரவிட்டது. கொலாபா மாவட்டம் மகத் நகரசபை குளத்தை பயன்படுத்திக் கொள்ள தீண்டத்தகாதவர்களை அனுமதிப்பதில் தங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்று 1924 ஜனவரி 5ஆம் தேதி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய அச்சமயத்தில் கொலாபா மாவட்ட தீண்டத்தகாத-வர்களின் மாநாடு மகத்தில் டாக்டர் அம்பேத்கர் தலைமையில் நடந்தது. மகத் சௌதார் குளத்தில் தீண்டத்தகாதவர்கள் தண்ணீர் எடுக்க அனுமதி மறுக்கப்படுவதால் அவர்கள்படும் சிரமங்களை மாநாடு கமிட்டி கூட்டத்தில் கூறினர். மாநாட்டின் இறுதியில் மகத் குளத்தில் தண்ணீர் எடுக்க முடிவு செய்த போது தீண்டத்தகாதவர்களுக்கு ஆதரவாக பேசிய சாதிய இந்துக்கள் ஓடிவிட்டனர். அங்கு கூடியிருந்த 2500 பேரும் டாக்டர். அம்பேத்கர் தலைமையில் ஊர்வலமாகச் சென்று முதல் தடை-வயாக அந்தக் குளத்தில் நீரை எடுத்துப்பருகினர்.

இவ்வுரிமை போராட்டத்தைக் கண்ட சாதிய இந்துக்கள் தீண்டத்தகாதவர்கள் மீது வெறிகொண்டு தாக்கினர். தீண்டத்தகாத மக்கள் இவ்வுரிமையை நிலைநாட்ட எடுத்த உறுதியினை அறிந்த சாதிய இந்துக்கள் அவர்களுக்கு எதிராக 144 தடை உத்தரவைப் பிறப்பிக்க மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டிடம் மனு செய்தனர். அவர் தடையை பிறப்பிக்க மறுத்து விடவே பல்வேறு சாதியினைச் சேர்ந்த இந்துக்கள் 1927 டிசம்பர் 12ஆம் தேதி மகத் உதவி நீதிபதியின் நீதிமன்றத்தில் ஒரு வழக்கினை தாக்கல் செய்தனர். சௌதர் குளம் தீண்டதக்கவர்களுக்கு மட்டுமே உரிய தனிப்பட்டச் சொத்து. அந்தக் குளத்துக்குச் செல்லவோ அதில் தண்ணீர் எடுக்கவோ கூடாதென்பதே அவ்வழக்கின் சாராம்சம். இவ்வழக்கு முடிவு தெரியும் வரை தீண்டத்தகாத-வர்கள் அக்குளத்திற்கு செல்லாதபடியும் அதில் தண்ணீர் எடுக்காத படியும் இடைக்கால தடை உத்தரவு பிறக்கும்படி வேறொரு மனுவையும் தாக்கல் செய்தனர். நீதிபதி இக்கோரிக்கையினை ஏற்று டாக்டர் அம்பேத்கருக்கும் இதர பிரதிவாதிகளுக்கும் 1927 டிசம்பர் 14ஆம் தேதி தடை உத்தரவு பிறப்பித்தார். பின்னர் நடந்த தீண்டத்தகாதோர் மாநாட்டில் மாவட்ட மாஜிஸ்ட்ரேட், சிவில் நீதிமன்றம் இத்தடை உத்தரவை பிறப்பித்திருக்காவிட்டால் இந்துக்களின் எதிர்ப்பினை மீறி குளத்தில் தண்ணீர் எடுக்க நான் உதவி செய்திருப்பேன். ஆனால் உதவி நீதிபதி ஒரு உத்தரவு பிறப்பித்து விட்டதால் என் நிலைமை மாற-ிவிட்டது. இச்சந்தர்ப்பத்தில் தீண்டத்தகாதவர்கள் குளத்தில் சென்று தண்ணீர் எடுப்பதை நான் அனுமதிக்க முடியாது என்றார். இக்கருத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு வழக்கின் இறுதி முடிவு தெரியும் வரை நீதிபதியின் உத்தரவுக்கு எதிராகச் சட்டமறுப்பில் ஈடுபடுவதை நிறுத்தி வைப்பது என்று மாநாடு தீர்மானித்தது. வழக்கு தீண்டத்தகாதவர்களுக்கு சாதகமாக முடிந்தது. இப்போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமை நிலைநாட்டப்பட்டது. பம்பாய் சட்டமன்றத்தில் பொதுவில் உள்ளவற்றை தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்த தீர்மானம் நிறைவேற்றியது போல் சென்னை சட்டமன்றத்திலும் நிறைவேற்றப்பட்டது. தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தீர்மானத்திற்கிணங்க தண்ணீர் எடுக்க நடத்திய போராட்டத்தையும் அதில் சாதிய இந்துக்களின் எதிர்த்தாக்குதலும் இதில் அரசு எந்திரத்தின் பங்கு குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

> "தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களின் சட்ட ரீதியான உரிமைகளை அடைய முற்படும்போது அவர்களின் வாழ்நிலைக்கே ஆபத்து ஏற்படுகிறது. 1926ம் ஆண்டு செப்படம்பர் மாதம் 15ஆம் தேதி ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த துரைசாமி மற்றும் சிலர் திருப்பத்தூர் மண்டல வருவாய் அலுவலருக்கு ஒரு மனு கொடுத்தனர். பொது கிணற்றை அனைவரும் பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டதும் ஜோலார் பேட்டையில் சாதிய இந்துக்கள் பயன்படுத்தும் பொதுக் கிணற்றில் ஆதி திராவிடர்கள் தண்ணீர் எடுத்ததால் சாதிய இந்துக்கள் அக்கிணற்றில் மனித மலத்தை கலந்தனர்."

1924ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ஆம் தேதி அரசாணை எண்: 2660 பொது அலுவலகம், கிணறு, பொதுவிடுதி, வியாபாரம் நடக்கும் இடங்கள் ஆகியவை சாதிய இந்துக்கள் பயன்படுத்துவது போல் தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்தலாம் என அறிவித்தது. இதன் நகல்கள் அனைத்து மாவட்ட தாலுக்கா மற்றும் ஒன்றிய அலுவலகங்களின் தலைவர்களுக்கு அனுப்பி அதை நடைமுறைப்படுத்த உத்தரவிடப்பட்டது. பல இடங்களில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 1925ல் நஞ்சமகத்துவாழ்க்கை கிராமத்தைச் சேர்ந்த ஆதி-திராவிடர்கள் அவர்கள் சங்கச் செயலாளர் மூலமாக சிதம்பரம் மண்டல வருவாய் அலுவலருக்கு ஒரு புகார் கொடுத்தனர். அதில் அவர்கள் குடிநீரின்றி மிகக் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும்இ ஆதிக்கச்சாதியினர் கிராம குளத்தில் தண்ணீர் எடுக்க அனுமதி மறுப்பதாகவும் கூறினர். இப்புகார் ஸ்டேசனரி சப்-மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பப்பட்டது. அவர் 1925 மார்ச் 20-ஆம் தேதி இது குறித்து விசாரணை செய்தார். பனங்காடு ஆதிக்கச் சாதியினர் அக்குளத்தை பராமரிப்பதாகவும் அதிலிருந்து உற்பத்தியாகும் மீன்களை அவர்களே பயன்படுத்திக் கொள்வதாகவும் ஆதிதிராவிடர்கள் ஒருபோதும் அக்குளத்தில் தண்ணீர் எடுத்ததில்லை என்றும் விசாரணையில் கூறினர். அக்கிராமத்தின் கர்ணம் ஆதி திராவிடர்கள் விவசாயத்திற்காக பயன்படுத்தப்படும் கான்சாகிப் கால்வாயிலிருந்து தண்ணீர் எடுப்பார்கள். தண்ணீர்வராத காலங்களில் சேரியிலிருந்து அரை மைல் தூரம் சென்று வடக்குச்சாவடி குட்டையில் தண்ணீர் எடுப்பார்கள். ஆதி திராவிடப் பெண்கள் தண்ணீர் எடுக்கும் போது ஆதிக்கச் சாதியினரால் தாக்கப்பட்டதாக கூறவில்லை. சப்-மாஜிஸ்ட்ரேட் மற்றும் மாவட்ட தொழிலாளர் அலுவலர் ஆகியோரிடமிருந்து சம்பவங்களை அறிந்து கொண்ட மண்டல வருவாய் அலுவலர், தொழிலாளர் ஆணையர் ஆதி-திராவி டர்களுக்கு தனிக்கிணறு வெட்ட ஒதுக்கீடு செய்திருப்பதாக தெரிவித்தார். ஆதி-திராவிடர்களின் மனுவின் மீது விசாரணையின் முடிவாக ஆதிக்கச் சாதியினர் தண்ணீர் எடுக்கும் குளத்தில் அவர்கள் தண்ணீர் எடுத்ததில்லை எனறும் சாதிய இந்துக்கள் ஆதி-திராவிடர்கள் தண்ணீர் எடுப்பதை தடுக்கவில்லை என்றும் கூறினார். பின்னர் ஏன் ஆதி-திராவிடர்களுக்கு தனிக் கிணறு வெட்ட அரசு ஒதுக்கீடு செய்தது என்பது கேள்வியே.

நஞ்சமகத்துவாழ் மக்கள் மட்டுமல்ல, சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினருக்கும் கிணற்றில் தண்ணீர் எடுக்க அனுமதி மறுக்கப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டம் வெள்ளக்கோயிலில் உள்ளாட்சி நிதியில் கட்டப்பட்ட பயணியர் விடுதியில் இருந்த கிணற்றில் ஆதி-திராவிடர்கள் தண்ணீர் எடுக்கக் கூடாதுஇ மீறினால் தண்டிக்கப்படுவர் என்ற அறிவிப்புப்பலகை தொங்க விடப்பட்டிருந்தது. இது குறித்து சட்டமன்றத்தில் ஆர்.வீரய்யன் வினவியபோதுஇ அரசாங்கம் அக்கிணறு பொதுக்கிணறல்லஇ விடுதியில் தங்குபவர்களின் தேவைக்கானது என பதிலளிக்கப்பட்டது. ஆர். வீரய்யன். தான் அவ்விடுதியில் தங்கியிருந்தசமயத்தில் அவரின் ஆதி-திராவிட உதவியாளர் அக்கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்றபோது தடுக்கப்பட்டதாக தெரிவித்தார். தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களின் சட்ட ரீதியான உரிமைகளை அடைய முற்படும்போது அவர்களின் வாழ்நிலைக்கே ஆபத்து ஏற்படுகிறது. 1926ம் ஆண்டு செப்படம்பர் மாதம் 15ஆம் தேதி ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த துரைசாமி மற்றும் சிலர் திருப்பத்தூர் மண்டல வருவாய் அலுவலருக்கு ஒரு மனு கொடுத்தனர். பொது கிணற்றை அனைவரும் பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டதும் ஜோலார் பேட்டையில் சாதிய இந்துக்கள் பயன்படுத்தும் பொதுக் கிணற்றில் ஆதி திராவிடர்கள் தண்ணீர் எடுதத்ததால் சாதிய இந்துக்கள் அக்கிணற்றில் மனித மலத்தை கலந்தனர். ஆதி-திராவிடர்களை கொலை செய்து விடுவதாகவும் மிரட்டினர். அக்கிணற்றில் விஷத்தை கலந்து விடும் அபாயமும் இருந்தது. இப்பிரச்சனை குறித்து விசாரணை செய்த காவல்துறை சாதிய இந்துக்கள் மீது எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை.

இந்நிலையில் அரசாங்கம் பொதுநிதியில் வெட்டப்பட்ட கிணறுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட இடங்களை பட்டியலிட்டு 1929ல் சென்னை சட்டமன்றத்தில் சமர்ப்பித்தது. இதில் கோயம்புத்தூர் பேரூராட்சியில் 64கிணறுகளில் 47 கிணறுகளிலும் மதுரை பேரூராட்சியில் 7 கிணறுகளிலும் அனுமதி மறுக்கப்பட்டது. கொடைக்கானலில் எந்தக் கிணறும் பேரூராட்சி பொறுப்பில் இல்லாததால் அங்கு தாழ்த்தப்பட்ட மக்கள் குடிநீருக்காக கடுமையான பிரச்சினைகளை சந்தித்திருக்க வேண்டும். சேலம் பகுதியில் சில கிராமங்களில் அனுமதி மறுக்கப்பட்டது. கோயம்புத்தூர் மற்றும் தென்னாற்காடு மாவட்டத்தில் முழுமையான தகவல் கிடைக்கவில்லை. ஸ்ரீரங்கம், தூத்துக்குடி, திருநெல்வேலி, பாளையம்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், மாயாவரம், மன்னார்குடி, கும்பகோணம், சேலம், விருதுநகர், போடிநாயக்கனூர், சைதாப்பேட்டை, காஞ்சிபுரம்,செங்கல்பட்டு, திருப்பத்தூர், குடியாத்தம், விழுப்புரம், கடலூர், சிதம்பரம், வாலாஜாபேட்டை, வேலூர், வாணியம்பாடி, வடஆற்காடு ஆகிய பேரூராட்சி பகுதியில் அனுமதி மறுக்கப்படவில்லை என்று அப்பட்டியலில் கூறப்பட்டுள்ளது. இப்பட்டியலில் அனுமதி மறுக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ள இடங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு பொதுக்கிணற்றில் அனுமதி மறுக்கப்பட்டது மட்டுமன்றி சாதிய இந்துக்கள் கொலை செய்துவிடுவதாக கூறிய சம்பவங்கள் நடந்தன.

தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக கராச்சி காங்கிரசின் பிரஜா உரிமைச் சாசனம் சுதந்திர இந்தியாவில் எல்லா பிரஜைகளுக்கும் சம உரிமை உண்டென்று கூறியது. கிணறுகள், குளங்கள், பள்ளிக்கூடங்கள், கோவில்கள் போன்ற பொதுவான இடங்கள் எல்லோருக்கும் தங்கு தடையின்றி திறந்து வைக்கப்படும் என்று பிரகடனப்படுத்தியது. ஆனால் ஒடுக்கு முறைக்கு எதிராக போராட்டங்கள் எதுவும் நடத்தவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தீண்டாமை இழிவுகள் சாதிய இந்துக்களால் கடை-பிடிக்கப்பட்டே வந்தது. செங்கல்பட்டு மாவட்டம் ஏனத்தூரில் உள்ள பிடாரிக்குளம் என்ற குளத்தில் 1932 ஜுன் மாதம் 16ஆம் தேதி ஆதி-திராவிடர்கள் தங்கள் உரிமையினை நிலைநாட்ட

படிப்பகம்

www.padippakam.com

பொதுக்குளத்தில் தண்ணீர் எடுக்கச் சென்ற போது சாதிய இந்துக்கள் ஆதி-திராவிட பெண்களின் தண்ணீர் குடங்களை சேதப்படுத்தினர். இத்தாக்குதல் குறித்து 22ஆம் தேதி ஜான் மாதம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் செய்தனர். இதில் சாதிய இந்துக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் காஞ்சிபுரம் ஸ்டேசனரி சப்-மாஜிஸ்ட்ரேட் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது 144 தடையுத்தரவை ஜுலை 3ஆம் தேதி பிறப்பித்தார். சாதிய இந்துக்களின் குளத்தில் ஆதி-திராவிடர்கள் தண்ணீர் எடுக்கும் உரிமையினை தடை செய்யும் இவ்வுத்தரவை மாவட்ட மாஜிஸ்ட்ரேட் ரத்து செய்தார். இத்தடையுத்தரவை பிறப்பித்த சப்-மாஜிஸ்ரேட்டிடமோ ஆதி-திராவிடப் பெண்களை தாக்கிய சாதிய இந்துக்கள் மீதோ எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி தாலுகா மேலரசூரில் ஆதி திராவிடர்களுக்கான சின்ன ஏரி மாசடைந்தது. அவர்கள் ஆதிக்கச் சாதியினரின் பெரிய. ஏரியில் தண்ணீர் எடுக்கச் சென்ற போது சாதிய இந்துக்களால் தடுக்கப்பட்டனர். ஆதி திராவிடர்கள் மாவட்ட ஆட்சியருக்கும் சென்னை தொழிலாளர் ஆணையருக்கும் மனுகொடுத்தனர். பெரிய ஏரி பொதுவானதானாலும் சாதிய இந்துக்களால் பராமரிக்கப்படுவதாகக் கூறி அரசாங்கம் ஆதி திராவிடர்களின் பயன்பாட்டிற்கு தனிக்கிணறு தோண்டியது.

தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுக்கிணறு மற்றும் குளங்களில் உள்ள தண்ணீரை தங்கள் தேவைக்கு பயன்படுத்த முயற்சிக்கும் சமயங்களில் சாதிய இந்துக்களால் மட்டும் தடுக்கப்படவில்லை. அவர்களின் சமூக உரிமையினை பாதுகாக்க வேண்டிய காவல்துறையே தீண்டாமையினை கடை-பிடித்தது. சேலம் காவல்துறை அமைந்துள்ள பகுதியில் சாதிய இந்துக்கள், முஸ்லீம்கள், மற்றும் பட்டியலினத்தவர் என முறையே தனித்தனி கிணறுகள் இருந்தன. 1946 மார்ச் மாதத்தில் பட்டியலினத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த கிணற்றில் தண்ணீர் போதுமானதாக இல்லை. இது போன்ற சமயத்தில் சாதிய இந்துக்கள் தங்கள் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து பட்டியலினத்தைச் சேர்ந்த காவலர்களுக்கு வழங்குவது நடைமுறையாக இருந்தது. சாதிய இந்துக்கள் கடைபிடித்து வந்த இத்தீண்டாமை வழக்கத்தை எதிர்த்து பட்டியலினக் காவலர்கள். தாங்களாகவே சாதிய இந்துக்கள் கிணற்றில் நீர் இறைக்க வேண்டுமெனக் கோரினர். சாதிய இந்துக்கள் மறுப்பு தெரிவித்தனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீயணைப்புத் துறை மூலம் பட்டியலினக் காவலர்களுக்கு தண்ணீர் தருவதாக உறுதியளித்தார். ஆனால் அவர்கள் வேண்டாமென மறுத்துவிட்டனர். சாதிய இந்துக் காவலாளிகள் மற்றும் காவல் அதிகாரியின் இத்தகைய தீண்டாமையை எதிர்த்து குரல் கொடுத்த பட்டியலினத்தவரின் போராட்டம் தோல்வியில் முடிந்தது. பின்னர் பட்டியலினக் காவலர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த கிணற்றில் கிடைத்த தண்ணீரை வைத்து தங்கள் தாகத்தை சமாளித்தனர். மாவட்ட முனிசிபல் சட்டப்படி பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுப்பதை தடுப்பவர் மீது ரூ100ஃ- அபராதம் விதிக்க வேண்டுமென விதி இருந்தும் தீண்டாமையினை கடைபிடித்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மீதும் சாதிய இந்துக் காவலர் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் உரிமைக்காக குரல் கொடுத்த பட்டியலினக் காவலர்களை பணிஇடமாற்றம் செய்தார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்.

ஆங்கிலேய எதிர்ப்பு போராட்டம் நடக்கும் அதே சமயத்தில் ஆங்கிலேய எதிர்ப்பாளர்களிடமிருந்தும் அதற்கு ஆதரவானவர்களிடமிருந்தும் தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்கள் உயிர்வாழ அடிப்படை அத்தியாவசியமான தண்ணீரைப் பெறுவதற்கான போராட்டத்தை நடத்த வேண்டிய நிர்பந்தம் இருந்தது. இதற்கான போராட்டங்களையும் தீண்டாமைக்கெதிரான மாநாடுகளை தமிழகத்தில் தந்தை பெரியாரும் வடமாநிலத்தில் அம்பேத்கரும் நடத்தினர். ரெட்டமலை சீனிவாசன், சுவாமி சகஜானந்தா, இம்மானுவேல் சேகரன் போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்களே. டாக்டர் அம்பேத்கர் பெரியார் மற்றும் தாழ்த்தப்படடோர் இயக்கத்தின் மீது சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் கலந்து கொள்ளவில்லையென்று கடுமையான விமர்சனங்கள் சுமத்தப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஜனசக்தி பிரசுராலயம் 1945 பிப்ரவரி மாதத்தில் ஆறுகோடி தீண்டாதவர் (தாழ்த்தப்பட்டோர் விடுதலை) என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் தாழ்த்தப்பட்டோரின் பல கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தனர். தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப்பிரவேசம் என்ற



ஆங்கிலேய எதிர்ப்பு போராட்டம் நடக்கும் அதே சமயத்தில் ஆங்கிலேய எதிர்ப்பாளர்களிடமிருந்தும் அதற்கு ஆதரவானவர்களிடமிருந்தும் தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்கள் உயிர்வாழ அடிப்படை அத்தியாவசி யமான தண்ணீரைப் பெறுவதற்கான போராட்டத்தை நடத்த வேண்டிய நிர்பந்தம் இருந்தது. இதற்கான போராட்டங்களையும் தீண்டாமைக்கெதிரான மாநாடுகளை தமிழகத்தில் தந்தை பெரியாரும் வடமாநிலத்தில் அம்பேத்கரும் நடத்தினர். ரெட்டமலை சீனிவாசன், சுவாமி சகஜானந்தா, இம்மானுவேல் சேகரன் போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்களே.

பால்யப் பருவத்தை தாண்டி அரசியல் அதிகாரத்தில் தங்களுக்கும் பங்கு வேண்டுமென்று கேட்கின்றனர். இந்த அதிகாரத்தை பிரிட்டிஷாரிடமிருந்து கைப்பற்ற வேண்டும். ஆனால் இன்றைக்கு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் கொடியில் பரிபூர்ண சுதந்திரம் என்ற சுலோகம் பொறிக்கப்படாமலிருப்பது மன்னிக்கப்படமுடியாத விஷயம். அப்படிச் செய்யாமலிருப்பதற்கு யாதொரு காரணமும் கிடையாது என்று கூறப்பட்டுள்ளது. இவ்விமர்சனங்கள் ஒரு புறமிருக்க, 1947ல் தாழ்த்தப்பட்டோர் மீது அரசு மற்றும் சாதிய இந்துக்களால் ஒடுக்கு முறையும் தீண்டாமையும் கடைபிடிக்கப்பட்டது. காஞ்சிபுரம் தாலுகா ஊத்துக்காடு கிராமத்தில் உள்ள ஹரிஜனங்கள் பொதுக்குளத்தில் தண்ணீர் எடுப்பதை தடுக்க காஞ்சிபுரம் சப்-மாஜிஸ்ட்ரேட் தடையுத்தரவை (144) பிறப்பித்தார் இதற்காக அவர் மீது எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை. அரசு தடையுத்தரவு பிறப்பித்து தண்ணீர் எடுப்பதை தடுத்தால் சாதிய இந்துக்களோ திருநெல்வேலி மாவட்டம் தென்காசி தாலுகா கடையநல்லூரில் ஹரிஜனங்கள் பயன்படுத்தும் குடிநீர் கிணற்றில் மனித மலத்தை கலந்து அந்நீரை பயன்படுத்தவிடாமல் தடுத்தனர்.

தாழ்த்தப்பட்டோரின் குடிநீர்த்தாகம் தீர்க்கப்படாமலேயே ஆங்கிலேயர்கள் வெளியேற்றப்பட்டு "1947 ஆகஸ்ட் 15" இந்தியா சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. அரசியல் அதிகாரம் ஆங்கிலேயர்களிடமிருந்து சாதிய இந்துக்களின் கைக்கு மாறியது. வெள்ளையர்களை வெளியேற்ற நடந்த போராட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் இளைஞர்கள் என சகல பகுதி மக்களும் தங்களின் எதிர்காலம் பொற்காலமென எண்ணி மகிழ்ந்தனர். அரசு அதிகாரத்திற்கு சென்றோரிடம் ஹரிஜன நலக்குழு 1948ல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாநிலம் முழுவதும் ஐந்து ஆண்டுக்குள் 10இ000 கிணறுகள் தோண்ட வேண்டுமெனக் கூறியது. 1950ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் 119 சேரிகளில் கிணறுகள் இல்லை. 316 சேரிகளில் கிணறுகள் பராமரிக்கப்படவில்லை. அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுகளென திட்டமிட்டு தனிக்கிணறுகளை தோண்டியது. அவ்வப்போது அரசாங்கத்திடம் தாழ்த்தப்பட்ட மக்கள் கொடுக்கும் கோரிக்கை மனுவிற்கு ஏற்பவும் கிணறுகள் தோண்டி கொடுக்கப்பட்டது. அரசாங்கம் அவர்களுக்கு தோண்டிய கிணறுகளின் எண்ணிக்கையினையும் நிதி ஒதுக்கீடுகளையும் அறிவதன் மூலம் அதுவரை தண்ணீருக்காக அனுபவித்த அவலம் தெரியும்.

பட்ஜெட் நிதியிலிருந்து ஹரிஜனங்களுக்கு கிணறு தோண்ட ஒதுக்கப்பட்ட நிதி விபரம்:-

ஒதுக்கப்பட்ட நிதி

மாவட்டங்கள்	1958-59	1959-60
செங்கல்பட்டு	11,000	27,000
தென்னாற்காடு	20,000	24,000
வடஆற்காடு	---	27,000
சேலம்	19,000	24,000
தஞ்சாவூர்	---	24,000
நீலகிரி	--	--
கோயம்புத்தூர்	20,000	27,000
மதுரை	20,000	27,000
ராமநாதபுரம்	20,000	24,000
திருநெல்வேலி	20,000	24,000
கன்னியாகுமரி	20,000	24,000
திருச்சிராப்பள்ளி	20,000	24,000
	1,50,000	2,76,000

சுதந்திர இந்தியாவில் அனைத்து தரப்பு மக்களின் சமத்துவம் பாதுகாக்கப்படும் என்றது காங்கிரஸ். இந்திய அரசியல் சாசனம் தீண்டாமை ஒழிக்கப் பட்டு விட்டதாகவும் அதனை கடைபிடிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறது. நடைமுறையில் தீண்டாமையானது அரசு மற்றும் சாதிய இந்துக்களாலும் கடைபிடிக்கப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் தாலுகாவில் தேரிப்பனை என்ற ஆதிக்கச் சாதியினர் கிராமம் உள்ளது. அங்கு சுமார் 30 குடும்பங்களுக்கு மேல் பறையர் சாதி மக்கள் வசித்தனர். இவர்களுக்கு தனித்தனியாக 100 மீட்டர் இடைவெளியில் இரண்டு கிணறுகள் இருந்தன. சாதிய இந்துக்களின் கிணற்றைக் கடந்து தான் தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் இறைக்கச் செல்ல வேண்டும். சில சமயங்களில் தண்ணீர் இறைக்கும் தோண்டி பட்டையினை (பனை ஓலையால் அரை உருண்டை வடிவத்தில் செய்யப்பட்டது.) எடுக்காமல் சென்றுவிடுவர். அப்போது அங்கு யாரும் இல்லையென்றால் ஆதிக்கச் சாதியினர் கிணற்றில் வந்து அங்கு தண்ணீர் இறைப்பவர்களிடம் மிகவும் பணிவுடன் கேட்டால் அவர்கள் தண்ணீர் கொடுப்பார்கள். அப்போது தாழ்த்தப்பட்ட மக்கள் அக்கிணற்றை தொடக்கூடாது தண்ணீர் குடத்தை சுமார் 4அடி தள்ளி வைக்க வேண்டும். ஆதிக்கச் சாதியினர் சுமார் 2 அடி உயரத்திலிருந்து தண்ணீர் ஊற்றுவார்கள். தாகத்திற்காக தண்ணீர் கேட்டால் மேலே சொல்லப்பட்டுள்ள இடைவெளியில்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் வாயினை ஒட்டி இரண்டு கையினையும் சேர்த்து வைத்த பின்னர் ஆதிக்கச் சாதியினர் தண்ணீர் ஊற்றுவர். இத்தீண்டாமைக் கொடுமையினை எதிர்த்து தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு போராட்டம் நடத்தினர். சுப்புத்தாய், வள்ளி, லீலா, பேச்சியம்மாள் ஆகிய நான்கு இளம் பெண்கள் திட்டமிட்டு தென்னை மரத்திலுள்ள சில்லாட்டையினை எடுத்து அதில் அவர்கள் மலமிருந்து அதை ஆதிக்கச் சாதியினரின் கிணற்றில் ரகசியமாய் போட்டனர். தண்ணீர் இறைக்கச் சென்ற ஆதிக்கச் சாதி பெண்கள் கிணற்றில் மனித மலம் மிதப்பதைக் கண்டு ஊர்பஞ்சாயத்தில் தெரிவித்தனர். பஞ்சாயத்து கூட்டம் நடந்த போது தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் சமூகத்து பெண்கள் தான் இதைச் செய்தனர் என்பதை அறிந்து ஆதிக்கச் சாதியினருக்கு பயந்து உண்மையினை ஒத்துக் கொண்டனர். ஆதிக்கச் சாதியினரின் தீண்டாமைக் கொடுமையினை எதிர்த்து 1955ல் ரகசிய போராட்டம் நடத்திய அந்த நான்கு பெண்களுக்கும் தலா ரூ11- அபராதம் விதித்து ஊர் பஞ்சாயத்து தீர்ப்பளித்த இத்தொகையினை அப்பெண்களின் பெற்றோர்கள் சிரமத்துடன் செலுத்தி விட்டு தங்கள் பிள்ளைகளுக்கு அடியும் கொடுத்தனர். இதன் பின்னர் ஆதிக்கச் சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்களின் வசிப்பிடத்தை நோக்கி இரவு நேரங்களில் கற்கள் எரிவதை ஊர்பஞ்சாயத்தில் முறையிட ஆதிக்கச் சாதியினைச் சேர்ந்த ஒருவர் அங்கு சென்று சோதனையிட்ட போதும் கல் விழுந்தது. இதனால் ஆதிக்கச் சாதி இளைஞர்களால் தங்களுக்கும், இளம் பெண்களுக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என ஊகித்து அவ்வூரை காலிசெய்துவிட்டு சுமார் 1கி.மீ தொலைவில் குடியமர்ந்தனர். இவ்விடம் தற்போது டி. கே. சி. நகர் என்றழைக்கப்படுகிறது. இதில் ஒரு சில குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் அங்கே

படிப்பகம்

இருந்து விட்டனர்.

ஆதிக்கச் சாதியினர் தீண்டாமையினை கடைப்பிடிப்பது போல் தாழ்த்தப்பட்ட மக்களும் தங்களுக்குள் சில பிரிவினர் மீது கடைபிடிக்கின்றனர். தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கட் பிரிவுகளில் சக்கிலியர்இ பறையர்இ பள்ளர் ஆகியோரே எண்ணிக்கையில் அதிகம் உள்ளனர். சக்கிலியர்கள் மீது பறையர்களும் பள்ளர்களும் தீண்டாமையினை கடைபிடித்தே வந்திருக்கின்றனர், இன்றும் கடைபிடிக்கின்றனர். திருநெல்வேலி மாவட்டம் நான்குநேரியில் ஆதிக்கச் சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தீண்டாமையினை கடுமையாக கடைபிடித்தனர் அங்கு குளத்திற்கு உள்ளே இருக்கும் தெப்பக்குளத்தின் புனிதம்கருதி தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கு செல்லாமல் இருக்கவும் தண்ணீரை தொட்டுவிடாமல் பாதுகாக்கவும் ஆதிக்கச் சாதியான தேவர்கள் காவல் காத்தனர். (நேர்காணல்: இ. ராமையா(65) 28-10-03) அவ்வூரில் பறையர் சாதியினர் சக்கிலியர்களை தீண்டத்தகாதவர்களாக நடத்தினர். சட்டப்படி இது தீண்டாமையாக ஏற்றுக் கொள்ளாதது சமூக அநீதியே. இந்த இழிசெயலுக்கு எதிராக சக்கிலியர்களின் போராட்டம் நான்குநேரி பெருந்தெருவில் நடந்தது. அத்தெருவில் சக்கிலியர்கள் எண்ணிக்கையில் குறைவாகவும் பறையர்கள் எண்ணிக்கையில் அதிகமாகவும் வசிக்கின்றனர். 1970கள் வரை சக்கிலியர்கள் உவர்ப்புத்தன்மையுள்ள கிணற்று நீரையே சமைப்பது உட்பட அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்தினர். பறையர்கள், சக்கிலியர்களுடன் ஒப்பிடும் போது நல்ல நீரையே பயன்படுத்தினர். நடைமுறையில் பறையர்கள் பயன்படுத்திய கிணறு சக்கிலியர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. சக்கிலியர்களின் வேண்டுகோளுக்கிணங்க பறையர்கள் தங்கள் கிணற்றிலிருந்து தண்ணீர் கொடுக்க சம்மதித்தனர். சக்கிலியர்கள் தண்ணீர் குடங்களை கிணற்றிலிருந்து சற்று தூரத்தில் வைத்த பின்னர் பறையர்கள் அக்குடத்தில் தண்ணீர் ஊற்றினர். இத்தீண்டாமையினை எதிர்த்து சக்கிலியர் சாதியி னைச் சேர்ந்த இசக்கியம்மாள் (நேர்காணல்: இச்க்கியம்மாள் 28, அக்டோபர் 03) என்பவர் உட்பட 4 பெண்கள் தாங்களாகவே தண்ணீர் இறைக்கச் சென்றபோது பறையர் பெண்கள் தடுத்தனர். இதில் வாக்குவாதம் ஏற்படவே சக்கிலியர் பெண்கள் காலி குடங்களோடு நான்குநேரி காவல் நிலையத்திற்குச் சென்றனர். பசுமாடு அறுத்த ரத்தக் கையோடு சக்கிலியர்கள் கிணற்றில் தண்ணீர் எடுக்க வருவதாக பறையர்கள் குற்றம் சாட்டினர். நாங்கள் அவ்வாறு செய்வதில்லை என்று பறையர்களின் குற்றச்சாட்டை சக்கிலியர்கள் மறுத்தனர். இப்பிரச்சினையில் காவல் துறை பறையர்கள் பயன்படுத்திய கிணற்றில் சக்கிலியர்கள் தண்ணீர் எடுப்பதை தடுக்கக் கூடாது என்று கூறி அவர்கள் அக்கிணற்றில் தண்ணீர் எடுக்க பாதுகாப்பு கொடுத்து அவர்களின் மனித உரிமையினை நிலைநாட்டியது. பின்னர் அவர்கள் மீதான தீண்டாமை வேறொரு வடிவத்தில் மாறியது. அக்கிணற்றில் தண்ணீர் இறைத்து குளிப்பதற்கு சக்கிலியர்களுக்கு உரிமையில்லை, பறையர்கள் குளிக்கின்றனர்.

இந்தக் காலக் கட்டங்களில் அரசு மேல்நிலை குடிநீர்த் தொட்டி மூலம் குடிநீர் குழாய் இணைப்பினை பல இடங்களில் அமைத்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் பெரும்பாலும் ஆதிக்கச் சாதியினர் பகுதியில் கட்டப்படுகிறது. அங்கிருந்தே தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இணைப்பு வழங்கப்படும். சில பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதிக்கச் சாதியினரின் கிராமத்தை விட்டு விலகி தனிக்குடியிருப்பில் வசித்தால் அங்கு தனி குடிநீர்த் தொட்டி கட்டப்படும். தாழ்த்தப்பட்ட மக்கள் வசிப்பிடத்தில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டப்பட்டுஇ அதிலிருந்து ஆதிக்கச் சாதியினரின் பகுதிகளுக்கு குடிநீர்க் குழாய் இணைப்பை காண்பது மிக அரிதே. அங்கிருந்து தண்ணீர் பெற மறுக்கும் ஆதிக்கச் சாதியினரின் தீண்டாமை மனோபாவமே ஆதிக்கச் சாதியினரின் வசிப்பிடத்தில் குடிநீர்த் தொட்டி கட்ட வைத்தது.

1990களில் தமிழகத்தில் தென் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதிக்கச் சாதி வெறியர்களின் தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக மரபுவழி ஆயுதங்களால் போராடினர். இச்சமயத்தில் 31-8-1995ல் காவல்துறை தூத்துக்குடி மாவட்டம் கொடியங்குளம் என்ற தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் கிராமத்திற்குச் சென்று அங்குள்ள மக்களை வன்மையாக அடித்தனர். அவர்களின் குடிநீர்க் கிணற்றில் டீசல் மண்எண்ணெய் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்தைக் கொட்டி அக்கிணற்றை பயன்பாடற்றதாக்கியது காவல்துறை.



மாவட்டங்கள தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை						
	1953-54	1954-55	1955-56	1956-57	1957-58	1958-59
தென்னாற்காடு	80	9	80	113	66	189
சென்னை	--	--	650	1068	1061	---

2000ம் ஆண்டு ஒரு புதிய சகாப்தமாக பல்வேறு அடைமொழிகளோடு வரவேற்கப்பட்டது. ஆனால் அது தாழ்த்தப்பட்ட மக்களுக்கல்ல என்பதை பின்வரும் சம்பவங்கள் விவரிக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிவகங்கை மாவட்டச் செயலாளர் பி. எல். ராமச்சந்திரன் தமிழக முதலமைச்சருக்கு அனுப்பிய மனுவில் மானாமதுரை அருகே சின்னக் கன்னனூர் தலித் மக்கள் தீண்டாமை ஒடுக்கு முறைக்கு ஆளாக்கப்படுகின்றனர். பொது ஊரணியில் குளிக்கவும் விவசாயத்திற்காகவும் தண்ணீர் மறுக்கப்படுகிறது. தலித் பெண்கள் தண்ணீர் எடுக்கச் சென்ற போது சாதிய இந்துப் பெண்களால் தடுக்கப்பட்டனர். 22 அக்டோபர் 2003ல் தலித் பெண்கள் மழை வேண்டி வழிபாட்டுக்குச் சென்ற போது பஞ்சாயத்து தலைவர் ராமகிருஷ்ணன் மற்றும் சாதிய இந்துக்கள் தலித்துகளை மிரட்டினர். மானாமதுரை காவல்துறை வழக்கு பதிவு செய்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. மற்றும் ஒரு சம்பவமானது கொடைக்கானல் புதுப்புத்தூர் கிராமத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களான சக்கிலியர்கள் வேறு வழியின்றி பயன்படுத்தி வந்த சாக்கடை கலக்கும் கிணறு கோடையில் வற்றியது. ஆதிக்க சாதியினரின் தோட்டங்களில் சென்று தண்ணீர் எடுத்த சக்கிலியர்களை தண்ணீர் எடுக்க விடாமல் சாணத்தையும் டீசலையும் கலந்தனர். ஊர்ப் வேறெங்கும் தண்ணீர் கிடைக்காமல் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க பஞ்சாயத்து தலைவரிடம் (தனிப் பஞ்சாயத்து) அனுமதி கோரினர். அவர் மறுக்கவே எ.பி.டி. ஓவிடம் முறையிட அவர் இரு தரப்பினரையும் அழைத்துப் பேசினர். ஆதிக்கச் சாதியினர் சக்கிலியர்களுக்கு தண்ணீர்தர மறுத்தனர். பின்னர் பி.டி.ஓ. வின் கட்டளையினால் அந்த நேரம் மறுப்பு தெரிவிக்கவில்லை. எ.பி.டி.ஓ. வாய்மொழியாக உத்தரவிட்டதை நம்பி 07-04-03 அன்று காலையில் தண்ணீர் எடுக்கச் சென்றனர். அவர்களை நோக்கி வந்த ஆதிக்கச் சாதிப் பெண்கள் சக்கிலியத் தேவடியாக்களா? உங்களுக்கு தண்ணி எடுக்க எங்க கிணறு தான் கிடைச்சுதா என்று இழிவாக பேசி உருட்டுக் கட்டைகளால் அடித்தனர். இதைத் தொடர்ந்து பஞ்சாயத்து துணைத் தலைவர் சக்தி வேல் மற்றும் சாதி வெறிக் கும்பல் சக்கிலியர் பெண்கள் மீது பெட்ரோல் ஊற்றி எரிக்க முயன்றனர். சக்கிலியர் பெண்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள ஓட்டம் பிடித்தனர். மாட்டிக் கொண்ட இருவர் கடுமையாக தாக்கப்படவே கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதில் SC/ST வழக்கு பதிவு செய்யப்பட்டும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. தமிழ்நாடு அருந்ததியர் ஜனநாயக முன்னணியின் தலைவர் S.T. கல்யாண சுந்தரம் மற்றும் அவ்வமைப்பின் சார்பில் புதுப்புதுரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கினர். 18-04-2003ல் 300 பேர் பங்கெடுத்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அப்போதும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. முன்னாள் முதல்வர் O. பன்னீர் செல்வம் 20-04-03ல் S. T. கல்யாணசுந்தரம் மற்றும் சக்கிலியர் சாதி மக்களை சந்தித்து சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்ததோடு குற்றவாளிகளை கைது செய்வதாக தெரிவித்தார். பொது கிணற்றில் இருந்து அவரவர் பகுதிக்கு தண்ணீர் வரும் (பொதுக் கிணற்றுக்கு சென்று சக்கிலியர்கள் தணிணீர் எடுக்கக்கூடாது என்பதே இதன் பொருள்) பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என உறுதியளித்து ஒரு மாதமாகியும் எதுவும் நடக்கவில்லை. ஆகவே 19-05-2003 கலெக்டர் அலுவலகம் முன் சாலை மறியல் செய்யவே 200 பேர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்பட்டனர். இச்சூழலில் ஆதிக்க சாதியினருக்கு ஆதரவாக தமிழ்நாடு அருந்ததியர் ஜனநாயக முன்னணியினைக் கண்டித்து அம்பேத்கர் மக்கள் இயக்கம் 27-05-03ல் கொடைக்கானலில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதனால் தமிழ்நாடு அருந்ததியர் ஜனநாயக முன்னணி அம்பேத்கர் மக்கள் இயக்கத்தைக் கண்டித்தும் குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரியும் 20-06-03ல் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இத்தனை போராட்டங்கள் நடத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அரசு.

தீண்டாமையானது அம்மக்களின் உழைப்பினை சுரண்டுவதற்கான திட்டமிட்ட சதியே. இந்திய சாதியச் சமூகம் முழுவதும் தீண்டாமை கடைபிடிக்கப்படுகிறது. சில சம்பவங்கள் வெளியே தெரிந்துள்ளது, மறைக்கப்பட்டது பல. டாக்டர். அம்பேத்கர் பின்வருமாறு கூறுகிறார:- ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்திலும் இந்துக்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் இடையே ஒரு நிரந்தர யுத்தம் நடைபெற்று வருகிறது. அது வெளியே தெரிவதில்லை. அதனை விளம்பரப்படுத்த இந்துக்களின் பத்திரிகைகள் தயாராக இல்லை உலகக் கண்ணோக்கில் தங்களது சுதந்திர லட்சியத்துக்கு ஊறு விளைவித்து விடுமோ என்று அவற்றுக்கு அச்சம், ஆனால் ஒரு மவுனப் போராட்டம் நடைபெற்று வருகிறது. என்பது மட்டும் உண்மை என்று கூறினார். பொதுக் கிணறுகளை பயன்படுத்த 1924ஆம் ஆண்டு அரசாணை மக்களுக்கு அறிவி த்ததிலிருந்தும் 1947ஆம் ஆண்டு சுதந்திர இந்திய அரசியல் சாசனம் தீண்டாமையினை ஒழித்துவிட்டதாக கூறிய பின்னரும் தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க போராடினர். (தாழ்த்தப்பட்ட மக்களுக்கென ஒதுக்கப்பட்ட தனிக்கிணற்றில் தண்ணீர் வற்றும் கோடைக்காலங்களில் மட்டும் தான் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க முயன்றனர்.) எப்போதெல்லாம் இப்போராட்டத்தை முன்னெடுத்தார்களோ அப்போதெல்லாம் சாதிய இந்துக்களின் வன்முறையால் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இப்போராட்டங்களில் மலம் என்பது ஓர் ஆயுதமாக இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுத்தாலோ அல்லது அக்கிணற்றை தொட்டு விட்டாலோ சாதிய இந்துக்கள் அக்கிணற்றில் மலம் கலந்து விடுகின்றனர். சாதிய இந்துக்கள் பொதுக்கிணற்றை அனுமதிக்க மறுக்கும் தீண்டாமையின் விளைவாக தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிய இந்துக்களின் கிணற்றில் மலம் கலந்தனர். மலம் கலப்பதையும் கடந்து சாதிய இந்துக்கள் மனித உயிர்களைக் கொல்லும் உயிர்க்கொல்லி மருந்தை கிணற்றில் கலக்க முயன்றுள்ளனர். இந்தச் சாதியச் சமூகத்திலிருந்து அரசு எந்திரத்தின் அதிகாரத்தில் அமர்ந்த சாதிய வெறியர்கள் அங்கும் தீண்டாமையினை கடைபிடிக்கின்றனர். கிணற்றில் உயிர்க்கொல்லி மருந்தை கலந்து தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்வுரிமையினை பறிக்கத் துடித்த பயங்கரவாதச் செயலை அரசு எந்திரமான காவல்துறையே செய்தது.

தீண்டாமையினை ஒழிக்க வேண்டிய கடமையும் தாழ்த்தப்பட்ட மக்களின் சட்டப்படியான பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உரிமையினை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு உண்டு. அரசு, தீண்டாமை இருக்கும் இடமான பொதுக்கிணற்றில் அனுமதி மறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அக்கிணற்றில் தண்ணீர் எடுக்க அனுமதியும் பாதுகாப்பும் அளிப்பதே தீண்டாமை ஒழிப்பின் பொருளாகும். ஆனால் அரசு தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிய இந்துக்களால் தண்ணீர் எடுக்க அனுமதி மறுக்கும் சமயங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென அவர்களின் வசிப்பிடத்திலோ அல்லது அவர்களுக்கான பிணம் புதைக்கப்படும் சுடுகாட்டிலோ கிணறு அல்லது ஆழ்குழாய்க்கிணறு ஆகியவற்றை ஏற்படுத்துகிறது. இங்கு தீண்டாமை ஒழிக்கப்படாமல் தக்கவைக்கப்படுகிற அதே சமயத்தில் சாதிய இந்துக்களின் ஆதிக்கத்தை அரசு பாதுகாக்கிறது. 1925ஆம் ஆண்டு நஞ்சமகத்து வாழ்க்கை ஆதி திராவிடர்களிலிருந்து 2003 புதுப்புத்தூர் சக்கிலியர்கள் வரை அரசு சாதிய இந்துக்களின் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான ஆதிக்கத்தை பாதுகாத்தும் தீண்டாமையினை நடைமுறைப்படுத்தும் எந்திரமாக செயல்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

(12ம் பக்கத் தொடர்ச்சி) **யாழ் நூல்....**

வரன்முறை என்பன தொடர்பான பல செய்திகளைத் தொகுத்துத் தருகிறார். ஈற்றில் நூல் தொடங்கிய வரன்முறையையும் சுட்டி அவையடக்கம் நூற்பயன் என்பவற்றையும் கூறுகிறார். இவ்வகையில் இப்பாயிரவியல் நூலுக்குத் தோற்றுவாய் செய்வதுடன் அடிகளாரது மரபறி புலமையின் மாண்பையும் உணர்த்தி நிற்கின்றது.

"யாழுறுப்பியல்" என்ற இரண்டாவது இயலில் அடிகளார் வில்யாழ், பேரியாழ், மகரயாழ், சீறியாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் ஆகிய யாழ் வகைகளைச் சுட்டி, அவை தொடர்பான பண்டைய இலக்கியத் தரவுகளையும் முன்வைத்து, அவ்யாழ்க் கருவிகளின் அமைப்புகளையும் விளக்குகின்றார். இக்கருவிகளின் வரைபடங்களும் இவ்வியலில் இடம்பெற்றுள்ளன.

"இசை நரம்பியல்" என்ற மூன்றாம் இயல் நரம்புகளில் இசை பிறப்பது பற்றிய அறிவியல்சார் விளக்கமாக அமைகி ன்றது. அடிகளார் ஓர் அறிவியற் பட்டதாரி (B.Sc.) என்ற வகையில் அவருக்கு இப்பார்வை இயல்பாகவே அமைந்தது எனலாம். நான்காவதான "பாலைத்திரிபியல்" இந்நூலின் முக்கிய பகுதி எனக் கொள்ளப்படுவது இதிலே யாழில் பிறக்கும் பெரும்பாலை மற்றும் கிளைப்பண் என்பவற்றை விளக்கும் முயற்சி இவ்வியலில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வியலின் ஈற்றில் சிலப்பதிகார அரங்கேற்று காதையின் யாழாசிரியன் இலக்கணம் கூறும் பகுதிக்கு உரைவிளக்கம் தரப்படுகின்றது.

ஐந்தாவது "பண்ணியல்" தமிழரின் பண்மரபு பற்றிய விரிநிலை நோக்கு ஆகும். இதிலே ஒப்புமை நோக்கில் வடநாட்டிசை தொடர்பான செய்திகள் அருகருகே சுட்டிப் பேசப்படுவது ஒரு சிறப்புக் கூறாகும். பழந்தமிழிசை மரபுக்கும் வடநாட்டிசை மரபிற்குமிடையே அமைந்த தொடர்பு என்ற துணைத்தலைப்பில் இந்த ஒப்புமை பேசப்பட்டுள்ளது.

ஆறாவதான "தேவாரவியல்" தேவாரப் பாடல்களின் பண் அமைதி யாப்பமைதி முதலியன தொடர்பான நுண்நோக்காகும். இவ்வியலின் ஈற்றிலே "சங்கீதரத்நாகரத்திற் கண்ட சில தேவாரப் பண்கள்" என்ற துணைத்தலைப்பில் அமைந்துள்ளன. ஒப்பியல்சார் விளக்கமானது கருநாடக இசையின் உருவாக்கத்தில் தமிழரின் பண்ணிசை வகித்துள்ள பங்கை ஆராய விளைவாக்குத் துணை புரியக்கூடியது.

ஏழாவதான "ஒழிபியல்" தமிழர் இசை மரபு கருநாடக இசை மரபு என்பன சார்ந்து முன்னர் கூறாது எஞ்சி நின்ற பல்வேறு விடயங்களைப் பேசுவது, எண்ணளவை, இசைக்கணிதம், ஆயிரம் நரம்பு கொண்ட "பெருங்கலம்" என்னும் பேரியாழ், குடுமியாமலைக் கல்வெட்டு, இசைநூல் வரன்முறை என்பனவாக இவ்வியலின் பொருட்பரப்பு விரிந்து செல்கின்றது. இவ்வியலிலேயே முடிவுரை என்ற நிறைவுரைப் பகுதியும் அமைந்துள்ளது.

ஈற்றில் இறைவணக்கமாக அடிகளாரின் அழகிய நாச்சியார் சேவடி பரவிய முன்னிலைப்பரவல் என்ற பா அமைந்துள்ளது. அதனை அடுத்து "சேர்க்கை" என்ற தலைப்பில் பின்னிணைப்பாக சில விவரங்கள் தரப்பட்டுள்ளன. தேவார இசைத்திரட்டு, இசை, நாடகச் சூத்திரங்கள் மற்றும் 'The Harp with a Thousand Strings' என்ற தலைப்பிலான ஆங்கிலக் கட்டுரை என்பன இச்சேர்க்கையில் அமைந்துள்ளன.

யாழ்நூல் என்ற பெருநூலின் பொருட்மரபு தொடர்பான சுருக்கநிலை அறிமுகமே மேலே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலிலும் பேசப்பட்டுள்ள இசைசார் நுட்பக் கூறுகள் இசைவல்லார்களின் நுனித்த பார்வைக்குரியன வாதலின் அவை பற்றி இக்கட்டுரை விரித்துரைக்க முற்படவில்லை.

இந்நூலின் பொருட்பரப்பின் சிறப்புப் பற்றி இசைவல்லார் பலரும் அவ்வப்பொழுது எடுத்துப் பேசியும் எழுதியும் வந்துள்ளார்கள். குறிப்பாகத் தமிழ்ப் பண்மரபுக்கும் கருநாடக இசையின் இராக மரபுக்கும் சமன்பாடு காட்டும் வகையில் அடிகளார் முன் வைத்த முடிபுகள் தமிழ்கூறும் நல்லுலகில் பெரு மதிப்புடன் வரவேற்கப்பட்டுள்ளன. இவ்வாறான ஒப்புமையை முதலில் கண்டு நிறுவியவர் அடிகளாரே என ஆய்வுலகம் விதந்து போற்றுகின்றது. யாழ்நூலின் மூன்றாம் பதிப்புக்கு நா. மம்மது, (ஆயு. ஆீடைட) அவர்கள் அளித்துள்ள "யாழ்நூல் குறித்து"- என்ற அணிந்துரைக் குறிப்பில் இடம்பெற்றுள்ள பின்வரும் கூற்று இப்பெரு மதிப்பைப் புலப்படுத்தி நிற்பது.

"பண்டைய ஏழ்பெரும் பாலைகளுக்கு இன்றைய வழக்கிலுள்ள இராகம் எது என்று மிகச் சரியாகவே முதன் முதலில் கண்டு நிறுவிய அடிகளாரைத் தமிழ் கூறும் நல்லுலகம் கும்பிட்டுத் தொழ வேண்டும். அடிகளார் • கொண்ட முறையையே பேராசிரியர் சாம்பமூர்த்தியார், இசைப்பேராசான் வ. பா. கா. சுந்தரம் ஆகியோர் கொண்டனர்"

◆◆◆◆◆◆◆◆◆

> யாழ்நூல் தமிழ் இசை உலகில் உரிய கவனிப்பைப் பெறமுடியாது போனமைக்கு அதன் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதில் உள்ள சிக்கல்கள், குறிப்பாக கணிதம் மற்றும் இயற்பியல் சார்ந்த விளக்கம் ஒரு காரணம் எனக் கருதப்படுகின்றது. இன்னொரு காரணம் இசைவல்லார் அந்நூலை முழுநிலையில் வாசித்து அதன் பார்வை, அணுகுமுறை மற்றும் முடிபுகள் என்பன தொடர்பான திறனாய்வுப் பார்வைகளை முன் வைக்க முற்படாமையாகும். அவ்வாறு திறனாய்வுப் பார்வை முன்வைக்கப்படும் பொழுதே நிறை குறை இரண்டையும் சரியாக இனங்காண முடியும். இவ்வாறு இனங்காணப்படும் நிலையிலேயே ஓர் ஆக்கம் சமகால ஆய்வுலகினதும் அடுத்து வரும் தலைமுறையினதும் தீவிர கவனத்திற்கும் கணிப்பிற்கும் உட்படும்.

◆◆◆◆◆◆◆◆◆

இவ்வாறு கூறும் நா. மம்மது அவர்கள் யாழ்நூலின் பொருட்பரப்பின் சிறப்பை, குறிப்பாக அடிகளாரின் ஆய்வுச் சிறப்பைப் பின்வருமாறு பட்டியலிடுகிறார். யாழ்பற்றி மறந்ததை நினைவூட்டி, புதிய ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியது, ஏழ்பெரும் பாலைகளுக்கு ஒப்பான இன்றைய நடைமுறையில் வழங்கும் பண்களைக் கூறியது, குரல் திரிபு முறையில் பண்ணுப்பெயர்ப்பு முறைகளைச் சிலம்பின் வழி நின்று நெறியாகக் கூறியது, தேவார இசை ஆய்வு, இசைக் கணிதம் மற்றும் இசை இயற்பியல் ஆய்வு செய்தது. இவ்வாறான கணிப்புகள் யாழ்நூலின் வரலாற்று முதன்மையைத் தெளிவுறுத்தி நிற்பன என்பது வெளிப்படை.

நிறைவாக முழுநிலை ஆய்வுக்கான ஒரு வேண்டுகோள்:

யாழ்நூல் வெளிவந்து 56 ஆண்டுகள் கடந்து விட்டன. அந்நூல் மூன்றாவது பதிப்பையும் கண்டுள்ளது. ஆனால் அந்நூல் தமிழ் இசையுலகில் உரிய கவனிப்பையும் கணிப்பையும் பெற்றுள்ளதா? என்பது எம்முன் நிற்கும் முக்கிய வினாவாகும். நமது தலைமுறை இசையாளர்கள், குறிப்பாக இசையாசிரியர்கள் யாழ்நூல் பற்றி எந்த அளவுக்குத் தெரிந்து வைத்துள்ளனர் என்ற கணக்கெடுப்பை நடத்தினால் இந்த வினாவுக்கான அடிப்படை புலனாகும். யாழ்நூல் இசைமாணவரிடையே சரியாக எடுத்துச் சொல்லப்படவில்லை. இந்நூலின் நிலை மட்டுமல்ல ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிர்த சாகரம் நூலின் நிலையும் ஏறத்தாழ இதுவாகும்.

யாழ்நூல் தமிழ் இசை உலகில் உரிய கவனிப்பைப் பெறமுடியாது போனமைக்கு அதன் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதில் உள்ள சிக்கல்கள், குறிப்பாக கணிதம் மற்றும் இயற்பியல் சார்ந்த விளக்கம் ஒரு காரணம் எனக் கருதப்படுகின்றது. இன்னொரு காரணம் இசைவல்லார் அந்நூலை முழுநிலையில் வாசித்து அதன் பார்வை, அணுகுமுறை மற்றும் முடிபுகள் என்பன தொடர்பான திறனாய்வுப் பார்வைகளை முன் வைக்க முற்படாமையாகும். அவ்வாறு திறனாய்வுப் பார்வை முன்வைக்கப்படும் பொழுதே நிறை குறை இரண்டையும் சரியாக இனங்காண முடியும். இவ்வாறு இனங்காணப்படும் நிலையிலேயே ஓர் ஆக்கம் சமகால ஆய்வுலகினதும் அடுத்து வரும் தலைமுறையினதும் தீவிர கவனத்திற்கும் கணிப்பிற்கும் உட்படும்.

யாழ்நூல் பற்றி எழுதப்பட்டும் பேசப்பட்டும் வந்தவை பெரிதும் அதன் பெருமை பேசுவனவாகவே அமைந்தன. திறனாய்வு நோக்கில் அந்நூலை அணுகிய முயற்சிகள் மிகக்குறைவேயாகும். மேலே சுட்டிய நா. மம்மது அவர்களது கட்டுரை திறனாய்வு நோக்கில் குறை நிறை இரண்டையும் பேச முற்பட்டது என்பது இங்கு சுட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இந்நூலின் குறைபாடு தொடர்பாக அவர் சுட்டிய கூறு பின்னர் நோக்கப்படும்.

யாழ்நூல் பற்றிய முழுநிலையான புறநிலையான திறனாய்வு தேவை என்பதை எமக்கு உணர்த்தி நிற்கும் முக்கிய கூறுகளில் ஒன்று அதற்கும் கருணாமிர்தசாகரம் நூலுக்கும் இடையில் புலப்படும் சில முரண்பாடுகளாகும். இம்முரண்பாடுகள் யாழ்நூலின் "பாயிரவியல்" மற்றும் "பாலைத்திரிபியல்" செய்திகளிலிருந்து ஆய்வாளர்களால் எடுத்துக் காட்டப்படுகின்றன.

பாயிரவியல் ஏழு சுரங்களின் வரிசை தொடர்பாக அடிகளார் சுட்டிய முறைமை ஆபிரகாம் பண்டிதரின் வரிசை முறைமையிலிருந்து வேறுபட்டுள்ளது என்பதும் ஆபிரகாம் பண்டிதர் தந்துள்ள வைப்பு முறையே சரியானது என்பதும் நா. மம்மது அவர்கள் முன்வைத்துள்ள திறனாய்வுக் குறிப்பாகும்.

பாலைத்திரிபியலில் அடிகளார் அடிப்படைப் பாலையான செம்பாலை என்பது அரிகாம் போதி இராகத்துக்கு நேரானது என்பர். ஆனால் ஆபிரகாம் பண்டிதர் செம்பாலையை தீர சங்கராபரணத்துடன் தொடர்புபடுத்தி நோக்குகின்றார். இவற்றிலே அடிகளாரின் ஒப்பீடே ஏற்புடையது என்பது ஆய்வுலகில் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகின்றது.

இவ்வாறாக ஆபிரகாம் பண்டிதரும் அடிகளாரும் முரண்பாடு கொண்ட ஆய்வு முடிபுகளை முன்வைத்தமைக்குக் காரணிகள் யாவை என்பதை நுனித்து நோக்க முற்படும் பொழுது அவர்களின் ஆய்வு நோக்குகளுக்குப் பின்புலமாக அமைந்திருந்த இசையுலகச் சிந்தனையோட்டங்கள் எவையெவை என்பதை நாம் கவனத்திற் கொள்ளவேண்டியிருக்கும்.

ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிருதசாகரம் வெளிவந்து 30 ஆண்டுகளின் பின்னரே அடிகளாரின் யாழ்நூல் வெளிவந்துள்ளது. அடிகளார் ஆபிரகாம் பண்டிதர் பற்றியோ அல்லது கருணாமிருதசாகரம் பற்றியோ எந்தக் குறிப்பையும் பதிவு செய்ததாகத் தெரியவில்லை. தாம் ஆய்வு செய்ய எடுத்துக் கொண்ட விடயம் தொடர்பாகத் தமக்கு 30 ஆண்டுகளுக்கு முன்னரே வெளிவந்த நூலை அடிகளார் அறியாமல் இருந்திருப்பாரா? விபுலானந்தர் தமது ஆய்வில் ஆபிரகாம் பண்டிதரைக் குறிப்பிடாதது பெரும் வியப்பளிக்கின்றது என்கிறார் ஆய்வாளர் பெ. சு. மணி அவர்கள்.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும் பொழுது நாம் கருணாமிருதசாகரம் எழுந்த காலம் மற்றும் யாழ்நூல் எழுந்த காலம் என்பவற்றை நோக்கி ஆய்வுப் பயணம் மேற்கொள்ள வேண்டியதன் தேவை உணரப்படும். இந்த ஆய்வுப் பயணம் யாழ்நூல் பற்றிய ஆய்வுக்கான பயணமாக, கருணாமிருதசாகரத்தோடு யாழ்நூலை முழுநிலை ஒப்பீடு செய்து தகுதிகாணும் பயணமாக அமையட்டும். அதற்கான உணர்வெழுச்சியை யாழ்நூல் மூன்றாம் பதிப்பின் வெளியீட்டுச் சூழல் உருவாக்குவமாக.

குறிப்புக்கள்:

1. சு.வித்தியானந்தன். "தமிழ்த்துறை முதற் பேராசிரியர்". அடிகளார் படிவ மலர். காரைதீவு, இலங்கை 1969. ப.54
2. இராம. கௌசல்யா. "சங்கீத சந்திரிகை". ஞானகானம் பேராசிரியை ஞானாம்பிகை குலேந்திரன் மணிவிழாமலர். தஞ்சாவூர். 2003. ப.53
3. நீ.கந்தசாமி. 'முகவுரை'. 'யாழ்நூல்' திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பு. மறுமொழி ஊடக வலைய வெளியீடு. ரொரன்ரோ. 2003. ப.2
4. வி.சிவகாமி. 'அடிகளாரின் இசை நடனப் பணிகள்'. ஞானகானம் பேராசிரியை ஞானாம்பிகை குலேந்திரன் மணிவிழாமலர். 2003. பக். 120-121
5. விபுலாநந்தர். 'முடிவுரை'. 'யாழ்நூல்' திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பு. மறுமொழி ஊடக வலைய வெளியீடு. ரொரன்ரோ. 2003. ப.395
6. நா.மம்மது. 'யாழ்நூல் குறித்து...'. 'யாழ்நூல்' திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பு. மறுமொழி ஊடக வலைய வெளியீடு. ரொரன்ரோ. 2003. ப.395
7. நா.மம்மது. மேற்படி
8. நா.மம்மது. மேற்படி
9. எஸ்.கே.சிவபாலன். 'சிலம்பில் சில இசைச் செய்திகள்'. ஞானகானம் பேராசிரியை ஞானாம்பிகை குலேந்திரன் மணிவிழாமலர். 2003. ப.61
10. பெ.சு. மணி. 'விபுலாநந்த அடிகள்'. புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனக் கருத்தரங்க உரை. கணினி அச்சுப்படி. 20-07-2003. ப.19

படிப்பகம்

www.padippakam.com

ஒக்டோபர்

பெண்வரலாற்றில் ஒரு கவனக்குவிப்பு

- கௌசலா

வரலாறு என்பது பொதுவில் உலக இசைவாக்கத்தின் மூலங்களையும் முதன்மைகளையும் பற்றிய தேடலாக அமைகின்றது. போர்கள், உரிமைப் போராட்டங்கள், கண்டுபிடிப்புக்கள் போன்றன வரலாற்றில் முக்கியப்படுத்தப் படுகின்றன. இதில் பெண்ணுக்கான வரலாறு, பெண், சமுதாயத்தில் தனது நிலை பற்றி சிந்திக்கும் தளத்தில் ஆரம்பிக்கிறது. நடமுறைச் செயற்பாடுகளில் பெண் சமமாகப் பார்க்கப்படாது இரண்டாந்தர நிலையில் தள்ளப்பட்டமை அவர்களைப் போராட வேண்டிய அவசியத்திற்கு இட்டுச் சென்றது. இப்போராட்டங்கள் பெண்ணிற்கான வரலாற்று முக்கியத்துவத்தைக் கட்டமைக்கின்றன. பெரும்போக்குத்தனமான வரலாற்றுக் கட்டமைப்பில் முக்கியமான சில நடவடிக்கைகள் அடிபட்டுப்போவது போன்று, பெரும்போக்கான ஆண்நிலைப் பார்வைகளில் பெண்களின் மிக மிக அடிப்படையான மனித உரிமைகள் மறைக்க, மறுக்கப்பட்டிருந்தமையும் வரலாறாகி இருந்துள்ளது. இதில் மொழிசார்ந்த பிரயோகங்கள் வெளிப்படையாக உணராதபடிக்கு பெண்ணுக்கான உரிமை மறுப்பை உறுதிசெய்துள்ளன. இதனடிப்படையில் கனடிய வரலாற்றில் இடம்பெற்ற அரசியல், அதிகாரம் சார்ந்த மொழியாடல்கள் மேலான சில அடிப்படை உரிமைப் போராட்டங்களையும், அடுத்த கட்டத்தில், பெண்களுக்கான மொழி உரிமை எதன் மூலம் சாத்தியமாகும் என்பது பற்றியும் பார்க்கவேண்டியுள்ளது.

ஒக்டோபர், கனடியப் பெண்கள் வரலாற்றுக் கவனக்குவிப்பிற்கான மாதம். மொழி மீதான அதிகாரம் என்பது வீடு முதற்கொண்டு நாடு என்ற பரப்பில் இன்றுவரை பெண்ணுக்கு சரியான வகையில் பகிரப்படவில்லை. எனினும் 1800 களில் பெண்கள் இதற்காகப் போராடியமை அவர்களுக்கான ஒரு வரலாற்று மாதத்தை உருவாக்கியிருக்கின்றது. 1867ல் பிரித்தானிய ஆட்சியாளர்களால் கனடாவுக்கான சட்டங்கள் ஆக்கப்பட்டிருந்தன. வடஅமெரிக்காவுக்கான பிரித்தானியச் சட்டத்தில் 1867ல் உரிமைகளையும் நன்மைகளையும் பெறுவதற்கு பெண்கள் தகுதியில்லாதவர்களாக காட்டப்பட்டிருந்தனர். அதாவது பிரித்தானிய வடஅமெரிக்கச் சட்ட 24ம் பிரிவு ' person' (நபர்அல்லது மனிதர்) என்ற சொல் 'He' (அவன்) என்று குறிப்பதாயும், " 'persons" எனும் பதம் ஒன்றுக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பதாயும் குறிப்பிட்டிருந்தது. பொதுவாக இதில் தாக்கம் ஒன்றும் இல்லை என பலருக்கு மேலோட்டமான பார்வைக்கு தெரியலாம். ஆனால் "அவள்" என்ற சொல் ஆண்பாலரையும் உள்ளடக்கும் வகையில் வழங்கப் பட்டிருந்தால் அது எந்தளவு தூரத்திற்கு ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கும். அது புரிந்து மொழிப்பிழையாகக் கூட கொள்ளப்பட்டிருக்கும். ஏனெனில் மொழியில், பெண்ணைக் குறிக்கும் எந்தச் சொற்களுக்குள்ளும் ஆண்பால் அடங்கவில்லை. எனவே இது முக்கியமாகத் தெரிகிறது. மொழி எல்லையைத் தாண்டி பெண்களின் வாழ்க்கையில் இது பாரதூரமான விளைவை குறிப்பாக, சட்டரீதியாக ஏற்படுத்தியுள்ளது. இதை இந்த ஒக்டோபர் மாதம் வெளிப்படுத்துகிறது. 1927ல் எமிலி மேர்பி (Emily Murphy), பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டிருந்த காலத்தில் கடின உழைப்பால் நீதிபதியாக பதவி-பெற்றிருந்தார். முதல்நாள் நீதிமன்றுக்கு வந்து இருக்கையில் அமர்ந்தபோது ஒரு சட்டத்தரணி அவரைக்கேட்ட முதற்கேள்வி, "சட்டத்தின்படி பெண் "qualified persons" (தகுதியான நபர்) என்ற வரையறைக்குள் இல்லை. எனவே பதவியிலிருக்க (அல்லது இருக்கையிலிருக்க) முடியாது" என்பதாக அமைந்தது. இந்தவகையில்தான் மொழிப்பிரயோகத்தின் தாக்கம் பெண்களால் உணரப்பட்டு அவர்களின் நிலை பற்றிய கேள்வியை கொடுத்தது.

இதனையடுத்து "புகழ்பெற்ற ஐவர்" (Famous Five) என அழைக்கப்படுகின்ற எமிலி மேர்பி(Emily Merphy), ஐரேன் பார்பி (Irene Parlby), நீல் மக்லங் (Nellie Mclung), ஹென்றியெற்றா எட்வேட்ஸ்(Henrietta Edwards), லூயிஸ் மக்கன்னி (Loise Mckenny) போன்றோர் உயர்நீதிமன்றத்திடம் வடஅமெரிக்கச் சட்டம் "24ம் பிரிவு பெண்களை உள்ளடக்குகிறதா?" எனக் கேட்டதற்கு ஐந்து வாரங்களுக்கு மேலான விவாதங்களை அடுத்து கனடிய உயர் நீதிமன்றம் (Suprem Court of Canada) "person" என்னும் சொல்லினுள் பெண்கள் அடங்கவில்லை என தீர்ப்பளித்தது. ஐந்து பெண்களினதும் விடாமுயற்சியால் அன்றய கனடாவின் உச்சநீதிமன்றமாக விளங்கிய இலண்டன் privy Council (அரசப் பேரவைக் குழு) இவ்வழக்கை எடுத்து ஒக்டோபர் 18, 1927ல் இச்சொல்லாடலுக்குள் பெண்ணும் அடங்குவதாக அறிவித்தது. இது, ஆண்மேலாண்மைச் சமூகம், தன்னையொத்த, தன்னோடு கூட வாழும் மனைவி, தாய், சகோதரிகளை சொல்லாடல் மூலம் ஒரு படி குறைத்து வைத்திருந்தமையைக் காட்டியுள்ளது. கனடாவில் இன்று பெண்கள் சார்ந்த சட்ட,அரசியல் உரிமை நலன்கள் இவற்றின் பின்னணியிலும், மனித உரிமைகள் சட்டத்தின் பின்னணியிலுமே பெறப்பட்டு வந்திருக்கின்றன. இந்த வரலாறுகள் தம்மீது பாவிக்கப்படும் சொற்பிரயோகம் குறித்து பெண்களின் கவனத்தை திருப்பின. இந்தநிலை, பெண்களுக்கான விடயங்கள் சமுதாய ஆண்மேலாண்மைப் போக்கால் நிறுவப்பட்டு வந்துள்ளன என்பதை மறுபடியும் நிறுவியுள்ளது.

இதில் முக்கியம் என்னவெனின், பெண்ணியக் கருத்தாக்கங்களும், பெண்ணுரிமைகளும் சுதந்திரமும் மலிந்து விட்டன என்று கூறப்படுகின்ற 2001ம் ஆண்டுகளில் இது விவாதிக்கப்பட்டுள்ளது. பாடல் இயற்றப்பட்டு நூறு ஆண்டுகளாகியும் இடையிடையே கால மாற்றத்திற்கேற்ப பாடலின் பல சொற்பிரயோகங்கள் மாற்றப்பட்டு வந்தும் கூட இந்த ஒரு சொல் மாற்றத்திற்கு எடுக்கப்பட்ட முயற்சியை நோக்குகையில் ஒரு பக்கம் நகைப்பாகவும் மறுபக்கம் கவலைக்குரியதாகவும் உள்ளது. தேசிய கீதத்திலான மாற்றங்களுக்கான கனடாச் சட்டத்தின் படி, பிரேரணை 36ல் இது பற்றிய விவாதம் நடை-பெற்றது. பெண்கள் அமைப்பால் சட்டமன்றத்துக்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையை பார்க்கும் போது பெண்களுக்கான உரிமை எவ்வாறெல்லாம் கேட்டுப்பெறும் நிலையில் உள்ளது என்பது தெளிவாகின்றது.

பெண்கள் இது போன்ற அடிப்படை உரிமைகளைக் கூட போராடியோ, வாதிட்டோ பெறவேண்டியிருக்கின்றது என்பதையும் இவ்வரலாறுகள் விளக்கியுள்ளன. இவ்வாறான சட்டம் சார்ந்த சொற்பதங்களைக் காரணம் காட்டி 1888ல் மேரி கரிஸ் (Marry Harris) என்ற கணித மேதை போன்ற பல பெண்கள் வரலாற்றில் முக்கியமிழந்தும், தன்னளவில் ஆளுமையிழந்தும் போயுள்ளனர்.

இவ்வாறே கனடிய தேசிய கீதத்தில் இடம் பெற்றிருக்கும் சொல்லாடல் குறித்தும் போராட்டம் நடைபெற்றுள்ளது. புகழ்பெற்ற ஐவரின் பெயரால் இயங்கும் அமைப்பே (Famous5 Foundation) இதற்கும் குரல் கொடுத்துள்ளது. 1908ம் ஆண்டு றொபேட் ஸ்ரான்லி வெயர் (Robert Stanly Weir) என்ற மொன்றியலைச் சேர்ந்த நீதிபதியால் கனடிய தேசிய கீதம் இயற்றப்பட்டது. கியூபெக் நகரின் 300 வது ஆண்டுவிழாவுக்காக இயற்றப்பட்டு 1927களில் கனடாவின் ஏனைய ஆங்கில மொழி பேசுபவர்களால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக்கீதத்தின் "tru patriot love in all thy sons command" எனும் வரியில் 'sons command' என்பது ஆண்களை மட்டுமே குறிப்பதால் அதில் sons என்று குறிக்கப்பட்டிருப்பதற்குப் பதிலாக எல்லாப் பாலரையும் உள்ளடக்கும் us எனும் சொல் இடப்படவேண்டும் எனக் கேட்கப்பட்டது. இது கனடிய சட்டமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அங்கு கொடுக்கப்பட்ட விளக்கங்கள், அதில் காட்டிய நெகிழ்ச்சித்தனம் "வளர்ச்சியடைந்த" என்று கூறப்படும் நாடுகளில் பெண் இனத்திற்கான நிலையைக் கேள்விக்கு உள்ளாக்குகிறது.

இதில் முக்கியம் என்னவெனின், பெண்ணியக் கருத்தாக்கங்களும், பெண்ணுரிமைகளும் சுதந்திரமும் மலிந்து விட்டன என்று கூறப்படுகின்ற 2001ம் ஆண்டுகளில் இது விவாதிக்கப்பட்டுள்ளது. பாடல் இயற்றப்பட்டு நூறு ஆண்டுகளாகியும் இடையிடையே கால மாற்றத்திற்கேற்ப பாடலின் பல சொற்பிரயோகங்கள் மாற்றப்பட்டு வந்தும் கூட இந்த ஒரு சொல் மாற்றத்திற்கு எடுக்கப்பட்ட முயற்சியை நோக்குகையில் ஒரு பக்கம் நகைப்பாகவும் மறுபக்கம் கவலைக்குரியதாகவும் உள்ளது. தேசிய கீதத்திலான மாற்றங்களுக்கான கனடாச் சட்டத்தின் படி, பிரேரணை 36ல் இது பற்றிய விவாதம் நடை-பெற்றது. பெண்கள் அமைப்பால் சட்டமன்றத்துக்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையை பார்க்கும் போது பெண்களுக்கான உரிமை எவ்வாறெல்லாம் கேட்டுப்பெறும் நிலையில் உள்ளது என்பது தெளிவாகின்றது. எடுத்துக் காட்டாக "பெண்களினதும் ஏனையவர்கள் பலரினதும் விருப்புக்கிணங்க மொழியியலாளர்கள், இசைவரலாற்று வல்லுனர்கள் போன்றோரிடம் ஆலோசனை பெற்றுள்ளோம் அதன் படிக்கு தேசிய கீதத்தில் ஏற்படும் மாற்றம் அதை இசையளவிலும் கவிதை வடிவிலும் பாதிக்காது"என்று பாராளமன்றுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

14 வயதுப் பெண் ஒருவர் ரொன்றோ ஸ்ரார் பத்திரிகைக்கு இப்பாடல் இசைக்கப்படும் பொழுது தனக்கு ஏற்படும் அதிருப்தியையும் எழுதியிருந்தார் எனவும், 1993ல் பாடசாலை இசை ஆசிரியர் ஒருவர் தனது பிள்ளைகளுக்காக அவர்கள் விருப்பப்படி இவ்வரியை மாற்றி உள்ளார் என்பதையும் குறிப்பிட்டிருந்தார்கள். விவிலியத்தில் செய்யப்பட்டிருந்த சொல் மாற்றங்களையும் சுட்டியிருந்தார்கள். 'மகன்கள்' என்பதற்குப் பதிலாக 'மகள்கள்" என்று போட்டிருந்தால் உங்கள் பார்வை எவ்வாறு இருக்கும் என சட்டமன்றத்தில் உறுப்பினர் விவியன் போய் (Vivienne Poy) என்பவரால் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. அவுஸ்திரேலியாவின் தேசிய கீதத்தில் "Australian sons let us rejoice" என்பதற்குப் பதிலாக "Australian all let us rejoice" என்பதாக 1984லிலேயே மாற்றப்பட்டுவிட்டது எனவும் குறிப்பிட்டதுடன் ஒலிம்பிக் போன்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பலநாடுகளுக்கு முன்னிலையில் இதைக்கேட்கும் வீராங்கனைகளுக்கு அவர்களின் வெற்றி நாட்டுக்குத் தேவையற்றது என்று உணரப்படுகிறதாகவும் குறிப்பிட்டிருந்தனர். நடைமுறையில் இனம், பால், சார்ந்த மற்றவரைத் துன்புறுத்தக் கூடிய சொற்பிரயோகங்கள் யாவும் மாற்றப்பட்டுள்ளமையும் சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால் கனடாவில் 50% த்திற்கு அதிகமான தொகை உடைய ஒரு பகுதியினரின் வேண்டுகோள் பால் பாகுபாடு கருதி கருத்திலெடுக்கப்படவில்லை. பெண்களுக்கான உரிமையும்,சுதந்திரமும் ஒரு வரையறையுடனேயே வழங்கப்பட்டிருக்கிறது

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

படிப்பகம்

(17ம் பக்கத் தொடர்ச்சி) **ஒக்டோபர்...**

என்பது இதனூடு தெளிவாகிறது.

இவ்வாறான உரிமைப் பறிப்புக்கள் தொடரும் வரலாற்றைக் கட்டமைத்தாலும், மிக முக்கியமான விடயம் பற்றி இன்னமும் எந்தப் பெண்ணியவாதிகளும் உணர்ந்ததாகத் தெரியவி ல்லை. தந்தை, கணவன் வழி பெண்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுதல் மிகவும் இயல்பான நடைமுறை யாக உள்ளது. பெண்க ளின் இறுதிப் பெயர்கள் ஆண்பாற் பெயர்களே. வெளியே தேடித்தேடி உரிமைகளைச் சுட்டிக்கா ட்டுபவர்கள் தங்களோடு ஒட்டிவைத்திருக்கும் அடையாளத்தை பற்றி சிந்திப்பதாக இல்லை. மாற்றுவதற்கும் முனைவதா இல்லை. பெண்ணின் அதிகாரம், உரிமைக்கான அடித்தளம் இதுவாக இருந்தும் இது பற்றிய விழிப்புணர்வு என்னும் ஏன் எழவில்லை. ஒருவரின் பரம்பரை, பண்பாடு, இனம், கொடி, வழி, உரிமை போன்றவற்றின் மொத்தக் குறியீடான இறுதிப்பெயர் நாசூக்காக ஆணினுடையதாக வழங்கப்பட்டிருக்கிறது. இது ஆண்வழிச் சொத்துரிமைக்கும் வழிசெய்கிறது. அதைவிட, பெண்ணும் அவள் குழந்தைகளும் தனித்தன்மை அற்றவர்களாக இன்னொருவருக்கு உரித்துடையவர்களாக இதன்வழி எப்போதும் அறிவிக்கப்படுகிறது. குழந்தையின் பிறப்பில், வளர்ப்பில் முற்றுமுழுதான வாழ்க்கையை அர்ப்பணித்த பெண்ணின் பெயர், அக்குழந்தையின் மேலான உரிமைக்காக ஒருபோதும் வழங்கப்படவில்லை. ஆனால் தமிழ்ச் சூழலில் ஒரு குழந்தை "நல்ல" பிள்ளை இல்லாத நிலையில் அவ்வளர்ப்புக் குறித்து தாயின் பெயர் முத்திரை குத்தப்படும். ஆனால் தாயின் பெயர் மூலம் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் குழந்தை பெண்ணுக்கான அதிகாரத்தையும், உரிமையையும், மொழியையும் இயல்பிலேயே உணர்ந்து கொள்ளும். அக்குழந்தையின் பெண், சமுதாயம் பற்றிய பார்வை புதிய பரிமாணத்தை வழங்கும். இந்த நிலையில் திறனாய்வாளர்கள் பலர், இலக்கியங்களில் பெண்மொழியைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இது இவ்வாறு இருக்க, தமிழ்ச் சூழலில் பெண்ணியவாதிக-ளாக தங்களை இலக்கியங்களிலும், வேறு வடிவங்களிலும் அடையாளப்படுத்திக் கொள்பவர்கள் ஒரு சிலர் தவிர்ந்து, எப்போதும் இறுதிப்பெயரை சேர்த்தே தம்மை இனங்காட்டுவதன் நோக்கம் என்ன? ஆணின் வழி அடையாளப் படுத்திக்கொண்டு பெண் விடுதலையும், உரிமைச் சுதந்திரமும் பற்றி எழுதுவது, பெண்கள் தங்களை மீள்பரிசோதனை செய்யவேண்டியிருப்பதைக் காட்டுகிறது.

இந்த வகையில் அரசியலைத் தவிர்த்து ஜெயலலிதாவை பாராட்டலாம். இறுதிப் பெயராக தாயின் பெயரை வழங்குவதற்கான சட்டம் பற்றி குறைந்தளவு கதைத்தமைக்காக என்றாயினும். இந்தவகையான மாற்றங்கள் அரசியல் , சட்டங்களின் வழியே நடைமுறையில் நிலைக்கக் கூடியன. எனவே இவற்றைச் சட்டமாக்குவது அவசியமாகும். தான் பெற்ற குழந்தைக்கு தனது பெயரை இறுதிப் பெயராக இடுவதற்கு என்னென்ன காரணங்கள் உண்டு என ஆண்களின் நீதிசபையில் இன்னுமொரு போராட்டத்திற்கு பெண்கள் தயார்ப்பட வேண்டியதே அடுத்தகட்ட முயற்சியாக வேண்டியுள்ளது. ஒரு பரம்பரையில் தனது பெயரை நிலைநிறுத்தி அதன் தொடர்ச்சியில் இறப்புக்குப் பின்னரும் தனது இருத்தலை நிலை நாட்டும் ஆண் உளவியல் இன்னும் ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் உடன்படுமா என்பது வரலாற்றின் வழி தெளிவு. ஆயினும் எல்லாப் பெண்களும் தன்னை உணர்ந்து சிந்திக்கத் தொடங்கினால் சாத்தியப்பாடு விரைவா-கலாம். இந்த விழிப்புணர்வுகள் ஏற்படாத படிக்கு சுற்றி இடப்பட்டிருக்கும் இவ்வாறான கண்ணாடித் தடைகளை பெண்களை இனங்காண வேண்டும். தம்மைச் சுற்றிய கேள்வியும் சிந்தனையும் கொண்டு பெண்கள் இவற்றை உடைத்தெறிய வேண்டியது அவசியமாகும். இம்மாற்றம் பெண்ணுக்கான அதிகாரத்தையும் வரலாற்றையும் தன்னளவில் கட்டமைக்கும் வல்லமையை கொண்டுள்ளது.

துணை நூல்கள்:

Michealle Falardeau-Ramsay, 1999. Gender equality and the law: from the "famous five" to the new millenium. Candian Women Studies. 19:1&2

Supreme Court of Canada Decision , April 24, 1928, History of the 'Persons' Case 70th Anniversary of 'Persons' Case http://www.famous5.org/famous5/history.html (30 oct 2003)

Vivienne Poy , Inquiry on the National Anthem, (Speaking Notes) http://www.famous5.org/inquiry.html (30 oct 2003)

Your news Oct 03 (amonthly Journal Published in Toronto)

(27ம் பக்கத் தொடர்ச்சி)

கூனியின் சாதனை" என்ற பெயரில் தனலக்குமி புத்தகசாலையார் வெளியிட்ட நூலாகும்.

எனது பேச்சை எழுதத் தூண்டிய முதல் மனிதர் பொன்னுத்துரை அவர்கள் தாம். நான் நிகழ்த்திய பேச்சு ஒன்று முதன் முதலில் புத்தக வடிவம் பெற்றதென்றால் அது கூனியின் சாதனையேயாகும். இவ்வாறு எனது முயற்சிகளுக்கு அவரும் அவரது முயற்சிகளுக்கு நானும் உறுதுணையாக இருந்திருக்கின்றேன். அவரது நாடக நூல்கள் பல நூலுருவம் பெறுவதற்கு வேண்டிய உதவிகளைக் செய்திருக்கின்றேன். அவரது நிறைகுடம் என்ற நாடகத்தைச் சாவகச்சேரியில் இரு இடங்களில் மேடையேற்றுவித்திருக்கின்றேன். "இறுதிப்பரிசு" என்ற நாடகத்தின் பெயரை வள்ளல் குமணன் என மாற்றி அளவெட்டி அருணோதயாவில் கட்டட நிதிக்கு மேடையேற்றியிருக்கின்றேன்.

அவரது நாடகங்கள் பலவற்றில் நானும் நடித்திருக்கின்றேன். அவற்றுள் நிறைகுடத்தில் கதாநாயகன் வேடம். கதாநாயகி ஒரு பெண். பெண்பாத்திரத்துக்கு பெண்ணையே நடிக்க வைத்துப் புரட்சி செய்தவர் பொன்னுத்துரை அவர்கள். பெண் கவர்ச்சியோ என்னவோ நிறைகுடம் பல மேடைகளைக் கண்டு நிகரற்ற புகழையும் பெற்றது.

எனினும் பொன்னுத்துரைக்கு நாடக உலகிற் பொறுப்பான ஓர் இடத்தை-வரலாற்றுப் புகழைப் பெற்றுக்கொடுத்த பெருமை "தாளக்காவடி" என்ற நாடகத்துக்கே உரியது. தாளக்காவடி வானொலியில் முதன்முதலாக ஒலிபரப்பப்பட்ட பொழுது பெரும் வரவேற்பைப் பெற்றது.

தாளக்காவடி முருகப்பெருமானை வழிபடும் ஒரு நேர்த்திக்கடன் முறை பத்திக்கூத்து கந்தபுராணக் கலாச்சாரத்தின் தனித்துவச் சின்னம். இதன் மகத்துவத்தை உணர்ந்து கொண்ட மாவை ஆதீன முதல்வர் திருமுருகு சு.து.சண்முகநாதன் குருக்கள் இதனை மேடைக்குரிய வகையில் பொன்னுத்துரையைக் கொண்டு எழுதுவித்து மாவைக்கந்தன் ஆலய வெளிவீதியில் விசேட அரங்கம் அமைப்பித்து நடித்துக் காட்டச்செய்தார். சண்முகக் குருக்களும் பெரிய கலைஞர் கலாரசிகர். கலைமுயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் பிரம்ம குரு. பொன்னுத்துரையின் நாடகப் பணிகளுக்கும் பேருதவி புரிந்து வந்த பெருமகன். அவரது முயற்சியால் தாளக்காவடியும் பல தடவைகள் மேடையேற்றினார்.

நான் மாத்தளையில் புனித அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியப் பணிபுரிந்த காலத்தில் (1958-64) கவிஞர்கள் சு. சொக்கநாதன், ஈழவாணன் ஆகியோரினதும் எனது மாணவர் சிலரினதும் உதவியோடு "மாத்தளை இலக்கியவட்டம்" என்ற ஓர் அமைப்பை உருவாக்கி அதன்மூலம் பல வகையான இலக்கியப்பணிகளை மேற்கொண்டோம். இடமாற்றம் பெற்று 1965இல் நான் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு வந்த பின்னர் மாத்தளை இலக்கிய வட்டத்தைப் போன்று யாழ்ப்பாணத்திலும் ஓர் இலக்கிய வட்டத்தை அமைக்க முயன்றபோது ஊக்கம் அளித்தவர்களுள் பொன்னுத்துரை அவர்களும் ஒருவர். ஆரம்ப காலத்தலைவராக இரசிகமணி கனக.செந்திநாதனைத் தெரிவு செய்தோம். அவருக்குப் பின் திரு.பொன்னுத்துரை அவர்களின் தலைமையில் யாழ் இலக்கிய வட்டம் இயங்கலாயிற்று. அவருக்குப் பிறகே எனக்குத் தலைமைப்பதவி கிடைத்தது.

1974இல் திரு.பொன்னுத்துரை அவர்களின் 25 ஆண்டுக் கலை இலக்கியச் சேவையைப் பாராட்ட அவர் தொடர்பு கொண்டிருந்த அமைப்புகள் இணைந்து ஒரு விழாக்குழுவை அமைத்தன. குழுவின் தலைவராக அப்போதைய சன்மார்க்க சபைத்தலைவர் திரு.மு.சபாரத்தினம் அவர்களும் செயலாளராக யாழ் இலக்கியவட்டத்தலைவராக இருந்த நானும் தெரிவு செய்யப்பட்டோம். விழா நடேஸ்வராக்கல்லூரி மைதானத்தில் பாராட்டுரைகள். மலர் வெளியீடு. பட்டம் அளிப்பு, கலைநிகழ்ச்சிகள் போன்ற நிகழ்வுகளோடு வெகு சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவிலேயே பொன்னுத்துரை பெரிதும் போற்றும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் "கலைப்பேரரசு" என்ற பட்டத்தையும் பொன்னுத்துரைக்குச் சூட்டினார்கள்.

1976இல் இலங்கைப்பல்கலைக்கழகம் கொழும்பு வளாகத்தில் நாடகக் கல்வி டிப்ளோமா பாடநெற-ியை முதன்முதலாக ஆரம்பித்த பொழுது நானும் அதனைப் படிக்கத் தெரிவாகினேன். வயதெல்லை கலைப்பேரரசை விண்ணப்பிக்க விடவில்லை. பரீட்சையிற் சித்திபெற்றவர்கள் சிலர் சேர்ந்து 1978இல் (குழந்தை) சண்முகலிங்கத்தின் தலைமையில் நாடக அரங்கக் கல்லூரி ஒன்றைத் திருநெல்வேலியில் நடத்தினோம். அதில் கலைப்பேரரசுவும் சேர்ந்து நவீன நாடக உத்திகளைப் பயின்றார். உண்மையில் நாடகத் துறையில் அவர் கொண்டுள்ள ஈடுபாட்டையே இது காட்டுகின்றது. ஏதோ புதிய நாடக உத்திமுறைகளைப் படித்துவிட்டு வந்திருக்கின்றார்கள், என்னதான் சொல்லுகிறார்கள் பார்ப்போமே என்ற மனப்பான்மையுடன் அவர் கல்லூரிக்கு வரவில்லை. தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஓர் ஆசானாகவும் புதியவற்றைக் கற்றுக்கொள்ளும் மாணவனாகவும் முழு ஈடுபாட்டுடன் பயின்றார். தாசீசியஸ், சண்முகலிங்கம், மௌனகுரு ஆகிய நாடகவல்லாளர்களின் நவீன தயாரிப்புகளில் நடித்தும் பெயர் பெற்றிருக்கின்றார்.

நான் 1980இல் நாட்டையும் நண்பர் கூட்டத்தையும் விட்டுப் பிரிய வேண்டிய சூழ்நிலை ஒன்று உருவாகியது. 1981நவம்பரில் எனது மைத்துனர் திரு.இ.அருமைநாயகத்தின் அமரத்துவம் குறித்துத் தாயகம் திரும்பினேன். அப்பொழுது கலைப்பேரரசு யாழ் இலக்கியவட்டத்தின் தலைவராக இருந்தார். மிகக் குறுகிய காலத்திலேயே என்னைப் பேசவைத்துக் கௌரவித்தார்.

எங்கள் உறவு இப்படியான ஒரு தொடர்கதைதான். எனினும் புலப்பெயர்வுகள் தொடர்பினைத் துண்டிக்கவில்லை. தொடர்பு கொள்ள முடியாத நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருந்த போதும் அவரைப்பற்றிய செய்திகள் எனக்கு வந்துகொண்டே இருந்தன. 15.05.2003 இல் அவரது 75ஆவது பிறந்த நாளை அவரது இல்லத்தில் கொண்டாடிய செய்தியைத் தெரிவித்து, "கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அரங்கக் கலையில் ஐம்பதாண்டு" என்ற தலைப்பிலே திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் எழுதிய நூலின் இரு பிரதிகளையும் அனுப்பியிருந்தார் நண்பர் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள்.

அந்த மகிழ்ச்சியை அவரது அமரத்துவச் செய்தி அழித்துவிட்டது. எனினும் நாடகத்துறையில் அவர் பதித்துச் சென்ற தனித்துவ முத்திரையை எவரும் அழிக்க முடியாது.

நண்பனே! தாளக்காவடியில் தாளக்கட்டுகளை வாயொழுகச் சொன்ன உனது கலைத்துவ நா, கூத்தப் பெருமானின் ஆடலை நிசமாகவே காண்கையில் சும்மாவே இருக்கப்போகிறது.? சொல்லு! நடராசரின் ஆடலுக்கேற்ற தாளக்கட்டுகளைச் சொல்லு. சொல்லிக்கொண்டே எல்லாம் வல்ல சிவபுரத்தரசின் திருவடி நீழலில் நியும் துள்ளு!

மார்ச் 2004,
உரைமொழிவு
சிறப்பிதழாக
வெளிவருகின்றது.

"பெண்களும் ஊடகங்களும்"

சிறப்பாசிரியர்:
பெ. சாந்தி,
அன்னை தெரசா மகளிர்
பல்கலைக்கழகம். கோடைக்கானல்.

கட்டுரைகள் கருத்துரைகள்
நூல்திறனாய்வுகள் வரவேற்கப்
படுகின்றன.
25 பெப்ரவரி 2004 இற்கு
முன்னதாக ஆக்கங்களை
அனுப்பிவைக்குமாறு
வேண்டுகின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com

ஜே.எம்.குட்சிய

இலக்கியத்திற்கான நோபல் பரிசு

(ஜே.எம்.குட்சிய - இப்படித்தான் அவர் பெயர் உச்சரிக்கப்படும் - J.M.Coetzee - 2003 இன் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றுள்ளார். இவர் ஓர் தென்னாபிரிக்கர். ஆபிரிக்கான் இனத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலத்தில் எழுதுகிறார். Life & Times of Michael K, Disgrace ஆகியவை மிகவும் உன்னதமான நாவல்கள் என்று பேசப்படுபவை. இவர் காஃப்கா, டோஸ்ரோவெஸ்கி போன்றவர்களின் செல்வாக்குக்கு உட்பட்டவர். இவருடைய The Lives of Animals என்ற நாவல்? - அதுவே சர்ச்சையான வகைமை. ஏனெனில் அது ஒரு விரிவுரை. விரிவுக்குள் விரிவுரை. புனைவும் புலமைசார் விரிவுரைத் தன்மையும் கொண்டது. அவரை பிறின்ஸ்ரன் பல்கலைக் கழகம் விரிவுரை செய்ய அழைத்தபோது இதை வாசித்தார். இதை ஒரு அகடெமிக் நாவல் என்றும் பின்நவீனத்துவ நாவல் என்றும் பலரும் பலமாதிரியாக வகைமைப்படுத்துவார்கள்- இந்நாவலைப் பற்றி நால்வர் தங்கள் பதிலுரைகள் செய்துள்ளனர். அவற்றையும் இந்நாவலையும் இந்நூலுக்கான முன்னுரையையும் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார், **என்.கே.மகாலிங்கம்.** அந்நூல் கடந்த வருடம் மொழிபெயர்க்கப்பட்டது. விரைவில் நூலாக வெளிவரவிருக்கிறது. இங்கே அந்நாவலின் முன்னுரை பிரசுரமாகிறது.)

முன்னுரை - அமி குட்மன்

““ஒருவகைக் கலைஞர்களுக்கு தீவிரம் என்பது அழகியலையும் அறவியலையும் இணைக்கும் தவிர்க்க முடியாத ஒன்று““ என்று ஜோன் குட்சிய தனது Giving Offense: Essays on Censorship என்ற கட்டுரையில் எழுதியுள்ளார். 1997-98 இல் பிறின்ஸ்ரன் பல்கலைக் கழகத்தில் நடந்த ரன்னர் விரிவுரைகளில் ஒன்றான The Lives of Animals இல் ஜோன் குட்சிய அழகியலையும் அறவியலையும் இணைக்கக் கூடிய ஒருவகைத் தீவிரத்தைக் காட்டுகிறார். (Tanner Lectures) ரன்னர் விரிவுரைகளுக்கே உரித்தான மாதிரி, குட்சிய விரிவுரைகளும் அறவியல் பிரச்சினையொன்றை குவிமுனைப்படுத்தியுள்ளன. அதாவது, மனிதர்கள் எவ்வழிகளில் மிருகங்களை நடத்துகிறார்கள் என்று. ஆனால், குட்சியரின் விரிவுரையின் உருவம் ரன்னர் விரிவுரைகளுக்கே உரித்தானதொன்றல்ல. மிக வித்தியாசமானது. ரன்னர் விரிவுரைகள் மெய்யியல் பாங்கானவை. குட்சியவின் விரிவுரைகள், உருவத்தில் புனைவு வகையைச் சார்ந்தவை: இரண்டு விரிவுரைகளுக்குள் மேலும் இரண்டு விரிவுரைகளைக் கொண்டவை அவை. அதில் மிருகங்களின் உரிமைகள் பற்றிய தலைப்பை, மெய்யியல் ரீதியில் அணுகிய விமர்சனம் உள்ளது. அங்கே அவர், ஒரு கல்விசார் நிகழ்வை, எங்களைக் கற்பனை செய்யச் செய்கிறார். (குழப்பமடையச் செய்வதுபோல, ரன்னர் விரிவுரைகளைப் போன்ற ஒன்று தான் அதுவும்) அதில், எலிஸபெத் கொஸ்ரெல்லோ என்ற ஒரு பாத்திரம் -அவர் நாவலாசிரியருங் கூட- வருகிறது. அவரை அப்பிள்ரன் கல்லூரியினர், அவர் விரும்பிய இரு கௌரவ விரிவுரைகளைச் செய்யும்படி கேட்டுக் கொள்கின்றனர். தன் கல்விசார் விசேடத்துவப் பரப்பான இலக்கியத்தையோ இலக்கிய விமர்சனத்தையோ செய்யாமல், அழைத்தவர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்குகிறார் அவர். அதாவது, தன் கல்விசார் சகாக்களும் சக மனிதர்களும் மாறாமல், மனநிறைவோடு இருக்கச் செய்யும் ““திகைக்க வைக்கும் அளவுள்ள குற்றமான““ மிருகங்களைத் துன்புறுத்துவதைப் பற்றி, விரிவாகக் கலந்துரையாடும் சந்தர்ப்பமாக அதை எடுத்துக் கொள்கிறார்.

வயதேறிக் கொண்டிருக்கும் நாவலாசிரியை யான எலிஸபெத் கொஸ்ரெல்லோவுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும், தொழில்சார் சகபாடிகளுக்கும் இடையே, வளர்ந்து செல்லும் சிரமமான உறவுகளை, குட்சிய நாடகீயமாக்குகிறார். எலிஸபெத் படிப்படியாக அவருடைய சக மனிதர்களைக் குற்றவாளிகளாகக் காண்கிறார். மிருகங்களை நடத்துவதில் தீவிரமான மாற்றத்தைத் தங்களிடம் கோருவதாக அவர்களும் நினைக்கிறார்கள். அவர்களிடம் அவர் அதைக் கோருவதற்கு உரிமை இல்லையென்றும், அவர்களும் அதைச் செய்வதற்கோ நடைமுறைப்படுத்துவதற்கோ, கடமையோ விருப்போ இல்லை என்றும் காட்டுகிறார்கள். புனைவின் சட்டகத்துள், குட்சியவின் எலிஸபெத் கொஸ்ரெல்லோ, அப்பிள்ரன் கல்லூரிக்குச் சென்ற கதையில், மிருகங்களை மனிதர்கள் எப்படி நடத்த வேண்டும் என்ற அறவியல் பிரச்சினை சார்ந்த, அனுபூதியானதும் மெய்யியல்ரீதியானதுமான வாதங்கள் உள்ளன. சில மிருகங்களைப் போலல்லாது, மனிதர்கள் இறைச்சியை உண்ண வேண்டிய அவசியமில்லை. நாங்கள் முயன்றால், மிருகங்களை ““புலனுணர்வுள்ள உயிர்““ என்ற வகையில், தேவையான அளவு அனுதாபத்துடன் நடத்தலாம்.. அவருடைய முதல் விரிவுரையில், (குட்சியவின் முதல் விரிவுரையின் பிரதான பகுதி அது) ““இன்னொரு உயிரில் எங்களை வைத்துப் பார்ப்பதில் எந்த எல்லையும் இல்லை. அனுதாபத்துடன் கற்பனை செய்வதற்கும் எல்லைகள் இல்லை““ என்பதினால் மனிதர்கள், மிருகங்களில் அனுதாபம் காட்டாமல் இருப்பது மன்னிக்க முடியாதது என்ற முடிவுக்கு கொஸ்ரெல்லோ வருகிறார். ஆனால், பெரும்பாலான மனிதர்கள், மிருகங்களைப் பொறுத்தவரை, தங்கள் கற்பனைகளை நீட்டிப்பதில்லை. ஏனெனில், நாங்கள் அவற்றைப் பொறுத்தவரை ““எதையும் செய்யலாம்.. செய்து விட்டுத் தப்பித்தும் கொள்ளலாம்.““

எங்கள் நெஞ்சங்களை, மிருகங்களைப் பொறுத்தவரை மூடி வைத்து விட்டோம். எங்கள் மனங்கள், எங்கள் நெஞ்சங்களையே பின்பற்றுகின்றன. (அல்லது, இன்னும் இறுக்கமாகச் சொன்னால், எங்கள் அனுதாபங்களையே பின்பற்றுகின்றன.) என்று கொஸ்ரெல்லோ முடிக்கிறார். மெய்யியல், முன்நடத்தக் கூடிய அதிக வலுவற்றது. அல்லது எந்தக் காலத்திலும் சரியான திசையில் நடத்த வலுவற்றது. ஏனெனில் அவற்றுக்கு எமது அனுதாபங்கள் இல்லை என்று விவாதிக்கிறார். மெய்யியல் சிறப்பாகக் கோரும் ஒன்றை, எங்கள் பகுத்தறிவு, திறனில் அல்லாது வேறெங்கோ பாரத்தைப் போடுகிறது. கவிதையையும் புனைவையும் கோரும் எமது அனுதாப கற்பனைகள், மற்ற மிருகங்களுக்கும் நீட்டப்பட வேண்டும் என்று அவர் விவாதிக்கிறார்.

எங்கள் நெஞ்சங்களை, மிருகங்களைப் பொறுத்தவரை மூடி வைத்து விட்டோம். எங்கள் மனங்கள், எங்கள் நெஞ்சங்களையே பின்பற்றுகின்றன. (அல்லது, இன்னும் இறுக்கமாகச் சொன்னால், எங்கள் அனுதாபங்களையே பின்பற்றுகின்றன.) என்று கொஸ்ரெல்லோ முடிக்கிறார். மெய்யியல், முன்நடத்தக் கூடிய அதிக வலுவற்றது. அல்லது எந்தக் காலத்திலும் சரியான திசையில் நடத்த வலுவற்றது. ஏனெனில் அவற்றுக்கு எமது அனுதாபங்கள் இல்லை என்று விவாதிக்கிறார். மெய்யியல் சிறப்பாகக் கோரும் ஒன்றை, எங்கள் பகுத்தறிவு, திறனில் அல்லாது வேறெங்கோ பாரத்தைப் போடுகிறது. கவிதையையும் புனைவையும் கோரும் எமது அனுதாப கற்பனைகள், மற்ற மிருகங்களுக்கும் நீட்டப்பட வேண்டும் என்று அவர் விவாதிக்கிறார். ஆகவே, குட்சியவின் கையில், புனைவின் உருவம் ஓர் ஒழுக்க நோக்கைக் கொண்டிருப்பது போலவுள்ளது: அதாவது, எங்கள் அனுதாபத்தை மிருகங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். புனைவு எங்கள் அனுதாபங்களை விரிவுபடுத்தாது விட்டால், மெய்யியலும் அதை விரிவுபடுத்தாது. அது அப்படிச் செய்தால், மெய்யியல் அதைப் பின்தொடரும்.

ஆகவே, குட்சியவின் விரிவுரைகளுக்குள் உள்ளே உள்ள கொஸ்ரெல்லோவின் விரிவுரைகள், கேட்குநரை, ““நெஞ்சத்தைத் திறந்து அது சொல்லுவதைக் கேளுங்கள்““ என்று கேட்கின்றன. மிருகங்களுக்கு உரிமைகள் இருக்கின்றனவா? அவைகளுக்கு உரிமைகள் இருக்கின்றனவோ இல்லையோ, மனிதர்கள் அவற்றுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் உள்ளனவா? மிருகங்களிடம் எந்தவகையான ஆன்மாக்கள் உள்ளன? எங்களிடம் எந்தவகையானவை உள்ளன? கொஸ்ரெல்லா தன் விரிவுரைகளில் இந்தக் கேள்விகளுக்கு விடை தரவில்லை. ஏனெனில், கையிலுள்ள உடனடியான பிரச்சினைக்கு அவை அதிக (தொடர்ச்சி 20ம் ப)

அனோஜா சாரதி பயிற்சிப் பாடசாலை

- வாரத்தில் 7 நாட்களும் பயிற்சி
- வீதிப் பரீட்சைக்கு வாகன ஒழுங்கு
- விரைவாக வீதிப்பரீட்சைக்கு நாள் எடுத்தல்
- பொறுமையான கற்பித்தல்
- சிறந்த பயிற்சி
- நீண்டநாள் அனுபவம்

அழையுங்கள்:
கண்ணன் (Kannan)
Tel: 905 • 417 • 3084
Cell: 416 • 894 • 0400

படிப்பகம்

www.padippakam.com

உங்கள் தேவைக்காக அடிக்கடி பாவிக்கும் ஒப்புவமையாக, கொலைசெய்யப்பட்ட ஐரோப்பிய யூதர்களையும் மந்தைகளையும் நீங்கள் எடுத்தீர்கள். யூதர்கள் மந்தைகளைப் போலச் செத்தார்கள். ஆகவே, மந்தைகள் யூதர்களைப் போல சாகின்றன என்று சொல்கிறீர்கள். அது வார்த்தைகளுடனான விளையாட்டு. அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஒப்புவமையின் இயல்பை நீங்கள் தவறாகப் புரிந்துள்ளீர்கள். வேண்டுமென்றே, நிந்தனை செய்வதற்கென்று சொல்லும் அளவுக்கு நீங்கள் தவறா-கப் புரிந்துள்ளீர்கள் என்று நான் சொல்வேன். மனிதன் கடவுளைப் போல உருவாக்கப்பட்டுள்ளான். ஆனால் கடவுள் மனிதனின் உருவத்தைப் போன்றவன் அல்லன். யூதர்கள் மந்தைகளைப் போல நடத்தப்பட்டார்கள் என்று சொல்லும்போது, மந்தைகள் யூதர்களைப் போல நடத்தப்பட்டன என்று தொடராது. அப்படி தலைகீழாக மாற்றுவது இறந்தவர்களின் நினைவுகளை அவமதிப்பதாகும். அத்துடன் அது முகாம்களில் நடந்த கொடுமைகளை மலினப்படுத்துவதுமாகும்.

(19ம் பக்கத் தொடர்ச்சி) **நோபல் பரிசு ...**

மெய்யியல்ரீதியானவை என்றும், மனம் நெஞ்சை முன்னெடுத்துச் செல்லுகின்றது என்றும் கருதுகின்றது. எலிஸபெத் கொஸ்ரெல்லோ மிருகங்களைப் பற்றிய தன் எண்ணங்களை, மற்றவர்களை நம்ப வைப்பதற்கு, தன் நீண்ட வாழ்க்கை முழுவதும் எடுத்த முயற்சியின் பலனா-கக் கிடைத்த அனுபவம், அந்தக் கருதுகோளை ஒதுக்கி விடுகிறது. அது எப்படி இருந்த போதிலும், கொஸ்ரெல்லோ அப்பிள்ரனில் உள்ள கேட்குநருக்குச் சொல்கிறாள்: ""இறக்கும் ஆன்மாக்கள், இறக்காத ஆன்மாக்கள் ஆகியவை பற்றியும், உரிமைகள் கடமைகள் ஆகியன பற்றியும், வேறுபடுத்திப் பார்ப்பதற்கு ஒருவர் உங்களுக்கு இங்கு வந்து சொல்ல வேண்டுமே என்று நீங்கள் நினைத்திருந்தால், ஒரு மெய்யியல்வாதியையே அழைத்திருப்பீர்கள். தற்புனைவுக் கதைகள் எழுதியே, உங்கள் முழுக் கவனத்தையும் எடுத்துக் கொண்ட ஒருவரை இங்கு அழைத்திருக்க மாட்டீர்கள்"" என்று.

தெளிவாகப் பேசுமாற்றலுள்ள, விவேகமுள்ள, வயது முதிர்ந்த, அந்நியமாய்ப் போய்க் கொண்டிருக்கிற, தன் சக மனிதர்களில் எரிச்சலடைகிற நாவலாசிரியை, எங்களுடன் மோதவிட்டு, எங்கள் கற்பனையைத் தூண்டி, எங்களைக் கலக்கி விடுகிறார், குட்சிய. அந்தச் சக மனிதர்களில் பலர் கல்விசார்பினர். அவர்கள் அவச-ியமில்லாமல் மிருகங்களைக் கொடுமைப் படுத்துவார்கள். மேலீடாகப் பார்த்தால் -ஆனால் அனைவரும் ஏற்றுக்கொள்ளாமல்- அனைவரும் கொடுமைப்படுத்துவதில் உறுதியாக நிற்கிறார்கள். இந்தக் கதை, திரும்பவும் பகுத்தறிவைப் உலகப் பொது மதிப்பீடாகக் கருதி, அதில் மீண்டும் எங்களை முழுவதாக ஈடுபடுத்தத் தூண்டுகிறது. பிரபஞ்சம், பகுத்தறிவிலா கட்டியெழுப்பப் பட்டுள்ளது? கடவுள் பகுத்தறிவின் கடவுளா? அப்படியானால், ""மனிதன் கடவுளைப் போன்றவன், மிருகங்கள் பொருட்களைப் போன்றவை."" ஆனால், எலிஸபெத் கொஸ்ரெல்லோ, இந்த மனிதமையப் பார்வையிலிருந்து கடுமையாக மாறுபடுகிறார்: ""பகுத்தறிவு, பிரபஞ்சத்தின் இருப்புமல்ல. கடவுளின் இருப்புமல்ல. மாறாக, சந்தேகமான மனித சிந்தனையின் இருப்புப் போலவே அதைப் பார்க்கிறேன். அதிலும் மோசமாக, மனித சிந்தனையின் சாய்வுப் போக்காகவே அதைப் பார்க்கிறேன்"" என்கிறார்.

கொஸ்ரெல்லோ அதை அதிகம் கண்டிக்கிறாரா? மிருகங்களை அணுகும் மனப்பாங்குகளை ஒழுக்கமாக்கும் ஆற்றலில், மெய்யியல் மொத்தமாகவே வங்குறோத்து அடைந்து விட்டதாக கொஸ்ரெல்லோ விவாதிக்கிறபோதும், சுயப்பிரக்ஞைபூர்வமாகவே, அவர் மெய்யியலையே தன் விரிவுரைகளில் உபயோகிக்கிறார். மிருகங்கள் பகுத்தறிவு குறைந்தவை என்ற காரணத்தால், அவை குறைந்த மதிப்புள்ளவை என்று கருதும் மெய்யியல் வாதங்களின் பலவீனத்தைக் காட்டுவதற்காக, அடிக்கடி அதை உபயோகிக்கிறார். ""மிருகத்தைக் கொல்லுதல் தண்டிக்கப் படாமல் போகும்போது, பிரக்ஞை உள்ளவர், ஒருவரைக் குற்றம் செய்தவராகக் கணிப்பதில் என்ன சிறப்பிருக்கிறது?"" என்று கேட்கிறார். மெய்யியலாளர்களைப் போலல்லாமல், கவிஞர்கள் மிருகங்களின் அனுபவத்தை ""உணரக்"" கூடியவர்களாக ஆரம்பிக்கிறார்கள். இந்த உலகத்தை உணரக்கூடிய அனுபவத்தைப் பெறக்கூடியதான எந்த மிருகத்தையும் கொல்லுதல், குற்றம் என்றதற்கு அது இட்டுச் செல்கிறது. எமது அனுதாபம் மிருகத்திற்கும் முழுவதாகக் கிடைக்க வேண்டும் என்பதை நாம் இனங்காண வேண்டும் என்று கொஸ்ரெல்லோ எங்களைத் தூண்டுகிறார். ""நாம் எமது சாவைப் பற்றிச் சிந்திக்க முடியும் என்றால், நாங்கள் ஏன் ஒரு வெளவாலின் உயிருக்குள் போய் எங்களால் சிந்திக்க முடியாது?"" என்று அவர் கேட்கின்றார்.

ஒழுக்கம் என்பது இல்லாமல், மிருகங்களுக்குள் நாம் போய் சிந்திப்பதற்குரிய உள்நோக்கம் வேறென்ன உள்ளது? எப்படி இருப்பினும், அது அவருடைய சொந்த எண்ணம். கொஸ்ரெல்லோவின் உள்நோக்கத்தின் காரணம் ஒழுக்கப் பற்றுறுதி அல்ல, மாறாக, ""என் ஆன்மாவை காப்பாற்றும் அவா"" தான். அவர் தன்னுடைய ஆன்மாவை காப்பாற்றுவதில் வெற்றி பெற்று விட்டேன் என்று நினைக்கக் கூடிய அளவு, தகாத துணிவுள்ளவரல்ல. தன்னில் விமர்சனம் வைப்பவர்களைக் கூட, தங்கள் ஆன்மாக்களை இழந்து விட்டார்கள் என்று அவர்களை நடத்தவுமில்லை. அப்பிள்ரன் கல்லூரி தலைவர், அந்த நேரத்தில் அதிகரித்து வந்த பதட்ட நிலைமை-யக் குறைக்கும் முயற்சியில், கொஸ்ரெல்லோவின் வாழ்க்கை நெறியை மெச்சுகிறேன் என்று அளித்த பாராட்டுரையைக் கூட அவர் ஏற்க மறுக்கிறார். அவர்களின் கேள்விக்குப் பதிலாக, தானும் மிருகங்களின் தோலில் சப்பாத்துக்களை அணிந்து கொண்டிருப்பதாகவும், தோலில் கைப்பை வைத்திருப்பதாகவும் சொல்கிறார். ""நிச்சயமாக, மாமிசம் சாப்பிடுவதையும் தோலில் பை வைத்திருப்பதையும் வேற்றுமைப் படுத்தலாம் என்று அவரைப் பாதுகாக்க வருகிறார், தலைவர். ""ஆபாசத்தின் அளவு"" என்பது தான் கொஸ்ரெல்லோவின் சமரசப்படுத்த முடியாத பதில்.

அதனால், தலைவரால் பதட்டத்தை இன்னும் கூட்டவே முடிந்தது. மெச்சுவதை பதிலாக அவரால் ஏற்க முடியவில்லை. அவரின் உணர்திறன்களும் செயல்களும், சக மனிதர்களினுடையவற்றிலும் பார்க்க உயர்ந்தவையாக இருக்கலாம். ஆனால், அவை உள்ளார்ந்த அவசியத்தின் ஊற்றாகவே இருக்கிறது.

கொஸ்ரெல்லோ சுய உணர்வுடையவர். ""இப்படிப்பட்ட பேச்சுக்கள் எப்படி ஒருவரை மக்களை துருவப்படுத்தும் என்பதும், ஒருவரிலும் பார்க்க மற்றவர் மலிவான புள்ளிகளைப் பெற்று வெல்வதால், அது இன்னும் கீழிறங்கி விடும்"" என்றும் அவர் சொல்லியதால், அவர் தனக்கு மிக எதிரான விமர்சகர்களையும் எதிர்பார்த்திருக்கிறார் என்று தெரிகிறது. அவர் செய்த பேச்சு ஓர் ஒப்புவமை வகைப்பட்டது. சக மனிதர்கள் மிருகங்களை நடத்துவதையும், மூன்றாவது றைக் (Third Reich) யூதர்களை நடத்தியதையும் காட்ட, அதையே அவர் திரும்பத் திரும்பச் சொல்கிறார். ""கடவுளின் உருவத்தில் உருவாக்கிய மனிதர்களை மிருகங்கங்களைப் போல நடத்தியதால், அவர்களும் மிருகங்களைப் போலானார்கள்"" என்று நாசிகளைப் பற்றி அவர் சொல்கிறார். ""நாங்கள் அவமதிப்புக்கள், கொடுமைகள், கொலைகள் ஆகியவற்றால் சூழப்பட்டிருக்கிறோம். அவை மூன்றாவது றைக் செய்யக் கூடியவற்றுடன் போட்டி போடக் கூடியவை ...."" என்று தொடர்ந்து சொல்கிறார். பெரும்படுகொலைகளுடன் (Holocaust) ஒப்புவமைப்படுத்தியதை கேள்விக்குள்ளாக்காமல் விட முடியாது. உண்மையில், கொஸ்ரெல்லோவுக்குச் சவால் விட்டவர், அவரைப் போலவே, கல்வியில் சமனான, வயதான கவிஞனரான எப்ராஹாம் ஸ்ரேண் என்பவர் தான். அவர் ஒரு மெய்யியல்வாதி அல்ல. ஸ்ரேண், கொஸ்ரெல்லோவிற்கு அளித்த விருந்தில் கலந்து கொள்ள மறுத்து விடுகிறார். காரணம், அவரில் மரியாதை இல்லாமல் இல்லை. மாறாக, அவருடைய முதலாவது விரிவுரையால் அவர் ஆழமாக நேர்முகத்தில் அவமதிக்கப்பட்டு விட்டமைதான். அவருடன் விருந்துண்ண முடியாதது ஏன் என்று ஸ்ரேண், கொஸ்ரெல்லோவிடம் ஒரு கடிதம் கொடுக்கிறார்.

உங்கள் தேவைக்காக அடிக்கடி பாவிக்கும் ஒப்புவமையாக, கொலைசெய்யப்பட்ட ஐரோப்பிய யூதர்களையும் மந்தைகளையும் நீங்கள் எடுத்தீர்கள். யூதர்கள் மந்தைகளைப் போலச் செத்தார்கள். ஆகவே, மந்தைகள் யூதர்களைப் போல சாகின்றன என்று சொல்கிறீர்கள். அது வார்த்தைகளுடனான விளையாட்டு. அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஒப்புவமையின் இயல்பை நீங்கள் தவறா-கப் புரிந்துள்ளீர்கள். வேண்டுமென்றே, நிந்தனை செய்வதற்கென்று சொல்லும் அளவுக்கு நீங்கள் தவறாகப் புரிந்துள்ளீர்கள் என்று நான் சொல்வேன். மனிதன் கடவுளைப் போல உருவாக்கப்பட்டுள்ளான். ஆனால் கடவுள் மனிதனின் உருவத்தைப் போன்றவன் அல்லன். யூதர்கள் மந்தைகளைப் போல நடத்தப்பட்டார்கள் என்று சொல்லும்போது, மந்தைகள் யூதர்களைப் போல நடத்தப்பட்டன என்று தொடராது. அப்படி தலைகீழாக மாற்றுவது இறந்தவர்களின் நினைவுகளை அவமதிப்பதாகும். அத்துடன் அது முகாம்களில் நடந்த கொடுமைகளை மலினப்படுத்துவதுமாகும்.

(தொடர்ச்சி 21ம் பக்கம்)

எலிஸபெத் கொஸ்ரெல்லோவும் அவருடைய குடும்பமும் நண்பர்களும் மிருகங்களை நடத்துவதில் சமரசம் செய்து கொள்ள வேண்டுமா? அல்லது, அவர்களைத் தன் பக்கம் மாற்றி இருக்க வேண்டுமா? அவர் ஆரம்பித்த இடத்திலிருந்து ஆரம்பிக்காத எங்களை, அவர் தன் பக்கம் மாற்றி இருக்க வேண்டுமா? குட்சிய அக்கேள்விக்களுக்கு மறுமொழி கூறவில்லை. ஒழுக்கரீதியான தீவிரமான மக்களிடையே, மிருகங்களை துன்புறுத்துவது பற்றிய துல்லியமான முரண்பாட்டு உணர்வையும், மனிதர்களிடையே நடைபெறும் கடுங்கொடிய குற்றங்களைச் செய்வதை ஒப்புவமைப்படுத்துவதையும் இந்தக் கதை எங்களுக்கு விட்டுச் செல்கிறது. குட்சிய எங்களிடம் விட்டுச் செல்லும் மையக் கேள்வி என்னவென்றால், மெய்யியல்ரீதியானதோ, கவிதைரீதியானதோ, உளவியல்ரீதியானதோ ஏதாவது வழியிருக்கிறதா இந்த அறவியல் முரண்களை தீர்ப்பதற்கு அல்லது போட்டியிடும் உணர்திறன்களை சமரசம் செய்வதற்கு என்பதே ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com

(20 ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரேண், கொஸ்ரெல்லோவின் ஒழுக்க உணர்திறன்களினால் மிகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்டு அவரை நேரில் சந்திக்க விரும்பவில்லையோ, அதேபோல கொஸ்ரெல்லோவும். ஸ்ரேணுடைய விமர்சனத்திற்கு நேரடியாக பதிலளிக்கவில்லை. இருவரும் ஒவ்வொருவரின் உணர்திறனாலும் பாதிக்கப்பட்டு விட்டார்கள். அற, அழகியல் பிரிவுகளை நீக்குவதற்கு, அவர்கள் இருவரிடமும் விருப்பமோ, திறனோ, நேரமோ இருக்கவில்லை.

ஒழுக்க ரீதியான சீரியஸான மக்கள், மற்றவர்களின் பார்வைகளில் அனுதாபம் காட்டுவதோ, அவர்களைப் புரிந்து கொள்ளுவதோ எத்துணை கட்டம் என்பதை மிருகங்களின் வாழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றது. இந்தக் கதையிலுள்ள கொஸ்ரெல்லோ, ஸ்ரேண் என்ற வயதான இரு எழுத்தாளர்களுக்கிடையே இருக்கும் தூரம், ஒருவரை மற்றவர் சீரியஸாக எடுத்துக் கொள்ளுவதால் சுருங்கவில்லை. அதற்கு மாறாக, அப்பிள்ரனுக்கு கொஸ்ரெல்லோ வந்ததன் இறுதியில் (கதையின் முடிவில்), அவர் பெரும் படுகொலைகளின் ஒப்புவமையைத் திரும்பவும் எடுக்கிறார். இந்த உலகத்தில் தான் எப்படித் தடுமாறுகிறேன் என்று தன் மகனுக்கு அவள் சொல்லும்போது, கொஸ்ரெல்லோ தன் நண்பர்களின் குளியலறைக்குச் செல்வதாகவும், அங்கே சவர்க்காரம் சுற்றிய கடதாசியைக் காண்பதாகவும், அக்கடதாசியில், ""றெபிளிங்கா-100 வீதம் மனிதக் கொழுப்பு"" என்று எழுதப்பட்டிருப்பதாகவும் கற்பனை செய்வதாகவும் சொல்கிறார். இதைப்போல மிருகங்களைச் சாப்பிடும் எங்கள் சக மனிதர்களையும், அதே அவர்களின் கண்களில் மனித அன்பு இருப்பதையும் கற்பனை செய்து பாருங்கள் என்றும் ""அதுதான் வாழ்க்கை. மற்றவை அனைத்தும் அதனுடன் சமரசம் செய்து விடுகின்றன. உன்னால் ஏன் முடியாது? உன்னால் ஏன் முடியாது?"""" என்று கொஸ்ரெல்லோ தனக்கே நினைவூட்டிக் கொள்கிறார்.

எலிஸபெத் கொஸ்ரெல்லோவும் அவருடைய குடும்பமும் நண்பர்களும் மிருகங்களை நடத்துவதில் சமரசம் செய்து கொள்ள வேண்டுமா? அல்லது, அவர்களைத் தன் பக்கம் மாற்றி இருக்க வேண்டுமா? அவர் ஆரம்பித்த இடத்திலிருந்து ஆரம்பிக்காத எங்களை, அவர் தன் பக்கம் மாற்றி இருக்க வேண்டுமா? குட்சிய அக்கேள்விக்களுக்கு மறுமொழி கூறவில்லை. ஒழுக்கரீதியான தீவிரமான மக்களிடையே, மிருகங்களை துன்புறுத்துவது பற்றிய துல்லியமான முரண்பாட்டு உணர்வையும், மனிதர்களிடையே நடைபெறும் கடுங்கொடிய குற்றங்களைச் செய்வதை ஒப்புவமைப்படுத்துவதையும் இந்தக் கதை எங்களுக்கு விட்டுச் செல்கிறது. குட்சிய எங்களிடம் விட்டுச் செல்லும் மையக் கேள்வி என்னவென்றால், மெய்யியல்ரீதியானதோ, கவிதைரீதியானதோ, உளவியல்ரீதியானதோ ஏதாவது வழியிருக்கிறதா இந்த அறவியல் முரண்களை தீர்ப்பதற்கு அல்லது போட்டியிடும் உணர்திறன்களை சமரசம் செய்வதற்கு என்பதே ஆகும்..

நாலு முக்கியமான கருத்துரையாளர்கள்- இலக்கியக் கோட்பாட்டாளரான மஜோரி காபர், மெய்யியல்வாதியான பீற்றர் சிங்கர், சமயப் புலமையாளரான வென்டி டொனிகர், பல்குடியாய்வாளரான பாபரா ஸ்மற்ஸ்- குட்சியரின் விரிவுரைகளின் உருவம், உள்ளடக்கம் பற்றி அலசுகின்றனர். பல்கலைக்கழக மையத்தின் மனித விழுமியங்களின் தொடர்களின் முந்திய தொகுதிகளைப் போலவே, மிருகங்களின் வாழ்வுகள் பற்றி, முன்பு அதிகம் கலந்துரையாடாதவர்களின் நுண்ணறிவுத் திறம்களை, பல்வேறான ஒழுக்கங்களின் பார்வைகளை உபயோகித்துள்ளோம். காபர், டொனிகர், சிங்கர், ஸ்மற்ஸ் ஆகியோர் ஒரே கல்விசார் ஒழுக்கத்தை பகிர்ந்தவர்கள் அல்லர். அதுமட்டுமின்றி, அவர்கள் அயல் ஒழுக்கங்களைச் சேர்ந்தவர்களும் அல்லர். ஆனால், அவர்கள் அனைவரின் கருத்துரைகள் அனைத்தும், மனிதர்கள் விலங்குகளுடன் உறவாடுகிறார்கள் என்பதைப் பற்றிய முழுப் புரிதல்களையும் நமக்குத் தருகின்றன.

அதேவேளை மஜோரி காபர், மிருகங்களின் வாழ்வுகளை, கல்விசார் (academic novel) நாவலாக ஒப்புமைப் படுத்துகையில், அதன் தனிமாதிரியையும் துலக்கிக் காட்டுகிறார். கல்விசார் நாவலுக்கேயுரிய துன்பியல் தன்மை இல்லாமல், அது ""இரக்கப்பண்பால் நிரம்பி வழிகிறது."" அதன் ஒப்புவமைகள் எங்கள் காலத்தின் ""சில மிக அவசியமான அற, அரசியல் கேள்விகளை"" எழுப்புகின்றன. புனைவுகளின் பணிகளிலும், இலக்கிய விமர்சனங்களிலும் உள்ள காத்திரமான ஒப்புமைகளை - ஐரோப்பிய யூதர்களின் கொலைகளையும் கொல்லப்படும் மந்தைகளையும் ஒப்புமைப்படுத்துவதை - காபர் கேள்விக்கு உள்ளாக்குகிறார். பெரும்படுகொலைகள் சம்பந்தமான ஒப்புவமை சரியா என்பதைக் காரசாரமாக விவாதித்தபோதிலும், மறைமுகமாகவும் ஓரளவு மறைமுகமாகவும், அதைச் சதா உபயோகித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகிறார். உதாரணமாக, பிரசித்தமான (ஓரளவு கருத்துவேறுபாடற்ற) குழந்தைகள் சினிமாப் படமான Babe இல். இலக்கியத்தில் அநேகமாக உபயோகிக்கும் ஒப்புவமை விவாதங்களின் சாதக, பாதகங்களை, காபர் ஆய்வு செய்கிறார். மெய்யியலிலும் பார்க்கப் புனைவுகள் ""மொழியின் கலை""யை அதிகம் அளிக்கிறது. சிலரின் கவனத்தை அல்லது கற்பனையைத் தொட்டுவிட முடியாத அறப் பிரச்சினைகளை எங்களில் ஏற்படுத்த, அக்கலையைக் குட்சிய மிகத் திறமாக உபயோகிக்கிறார். மிருகங்களின் வாழ்வுகள், இலக்கியத்தின் விழுமங்கள் போல, மிருகங்களின் வாழ்வுகளுந்தான் என்று காபர் குறிக்கின்றார்.

மிருகங்களின் உரிமைகள் பற்றிப் பேசும் மெய்யியலாளராக, ஒரு தகப்பனுக்கும் மகளுக்கும் நடந்த புனைவு உரையாடலாக, மிருகங்களின் உரிமைகளை, மிக்க மாண்புமிக்க மெய்யியல்ரீதியில் தற்பாதுகாப்பவரான பீற்றர் சிங்கர் எழுதிய கருத்துரையில், தன்னிலும் பார்க்க பாரம்பரியக் கருத்துக்களற்ற எலிஸபெத் கொஸ்ரெல்லோ போன்ற ஒருவருடன் தர்க்கித்ததாகக் கற்பனை செய்கிறார். ""அவரின் விரிவுரைகளில் நான் காப்பாற்றத் தயாரில்லாத அளவு, மனிதர்களைப் பற்றியும் மிருகங்களைப் பற்றியும், தீவிரமான சகலருக்கும் சம உரிமை பேணுதலும் இருக்கின்றது."" என்று அந்த மெய்யியல்வாதி தன் மகளுக்குக் கூறுகின்றார். மகள், விவாதத்தில் கொஸ்ரெல்லோவின் பக்கமாகக் கதைத்தபோது, மெய்யியல்வாதி, ""நான் உணர்கிறேன், ஆனால் அதேவேளை நான் உணர்வதைச் சிந்திக்கிறேனுங் கூட"" என்று பதிலளிக்கிறார். மெய்யியல்வாதியின்படி, மனிதன் சிந்திக்கிறான் என்ற உண்மை -வலி பற்றி, எதிர்காலம் பற்றி, இறப்புப் பற்றிச் சிந்திக்கிறான்- அவர்களின் வாழ்க்கைக்கு பெறுமதியைக் கொடுக்கிறது. ""ஒன்றை இல்லாமலாக்கிய பொழுது பெறுமதி அழிந்தது என்பது, அது முழுமையாக இருக்கும் பொழுது, பெறுமதி இருந்ததைப் பொறுத்ததே. வௌவாலின் இருப்பிலும் பார்க்க, மனித இருப்புக்கு அதிகம் பெறுமதி இருக்கின்றது."" ஆகவே, மனிதனைக் கொல்லும்போது இழக்கும் பெறுமதி, வௌவாலைக் கொல்லும்போது இழக்கும் பெறுமதியைப் பார்க்கிலும் அதிகம். அத்துடன், சிங்கரின் மெய்யியலின்படி, மிருகங்களின் ""சுய அறிவு"" இன் படியும், அவற்றின் ""எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையின்படியும் தான்"" ""அவற்றைக் கொல்லுவது உள்ளார்த்தமாகப் பிழையானது என்பதற்கான காரணம் இருக்கும். பூரணமான பிழை அல்ல, ஆனால் சிலவேளை காத்திரமான பிழையாக இருக்கலாம்.""

சிங்கருடைய மெய்யியல்வாதி, மெய்யியலின்மேல் கொஸ்ரெல்லோ செய்த தாக்குதல்களிலிருந்து அதைக் காப்பாற்றுகிறார். ""எங்கள் உணர்ச்சிகளை, பகுத்தறிவின் விமர்சனத்திலிருந்து தடைக்காப்பளிக்கப்பட்ட ஒழுக்கத்தின் தரவுகளாக எடுக்க முடியாது."" என்று மெய்யியல்வாதியான அவர், தன் மகளின் நாயான மக்ஸின் வாழ்வு, உள்ளார்த்தமாக பெறுமதியுடையதல்ல என்று சொன்னபோது, அதற்கு அவள் தன் பயங்கரத்தை வெளிப்படுத்தியதற்குப் பதிலாக அதைக் கூறுகிறார். தங்கள் சாவை எதிர்பார்க்காத மிருகங்களை துன்பப்படுத்தாமல் கொல்லுதல், ஒழுக்கரீதியாக பிழை இல்லை. அல்லது ஆகக் குறைந்தது, தங்கள் சாவைப் பற்றிய அல்லது வாழ்வைப் பற்றிய சுய பிரக்ஞை உள்ள ஒரு மிருகத்தை, துன்பப்படுத்தாமல் கொல்லுதலிலும் பார்க்க, கொடுமையான குற்றமல்ல. சிங்கரின் மெய்யியல் சரியாக இருந்தால், மரக்கறி உண்ணுபவர்களின் ஒழுக்கவியல் சுழலில், துன்புறுத்தாமல் கொல்லப்பட்ட மிருகங்களை உண்டவர்களின் ஒழுக்கவியலையும், மிருகங்களை கருணையுடன் நடத்தும் ஒழுக்கவியலையும் வேறுபடுத்த முடியும்.

வென்டி டொனிகரின் கருத்துரை, மரக்கறி உணவு உண்ணுபவர்களுக்கும் மிருகங்களில் கருணை காட்டுபவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை ஆய்வு செய்கிறது. அந்த வேறுபாடு பல சமய மரபுகளில் உள்ளோடி இருக்கிறது என்று அவர் கருதுகிறார். வேறு வேறான சமயங்களும், முரண்பாடு போல தோற்றமளிக்கும் வழிகளில் எப்படி மிருகங்களை நடத்துகின்றன என்பதை ஆய்வு செய்கின்றன. கடவுள் உருவத்தில் மனிதன் (மிருகங்களல்ல) உருவாக்கப் பட்டான் என்ற வாதத்தை மிருகங்களைத் துன்புறுத்துவதற்காகக் காட்டி, அடிக்கடி மேற்குலகில் நியாயம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் பல புராணவியல்கள், மனிதர்களல்ல மிருகங்கள் தான் கடவுளின் உருவங்கள் என்று கருதுகின்றன. அவற்றைச் சாப்பிடுவதற்கு அதுதான் காரணமாக இருக்கலாம்."" என்று டொனிகர் சுட்டிக் காட்டுகிறார். சில சமயங்களில் மரக்கறி உண்ணுதல், மிருகங்களில் கருணை காட்டுதலுடன் தொடர்புடையது. சில சமயங்கள், சுய அடையாளத்துடனும் மனித விடுதலையின் தேடலுடனும் இறுக்கமாக தொடர்பு கொண்டது. பின்னது தான் எலிஸபெத் கொஸ்ரெல்லோவினுடையதைப் போலத் தோன்றுகிறது.

தன் தொழில்சார் வாழ்வில் அதிக காலத்தை பபூன் குரங்குகளுடன் வாழ்ந்தவரும், அவற்றைப் பற்றிய ஆய்வுகள் செய்தவருமான பாபரா ஸ்மற்ஸ், குட்சியரின் பிரதியில் ""முனைப்பான இடைவெளி"" இருப்பதாகக் காண்கிறார். எலிஸபெத் கொஸ்ரெல்லோ ""மிருகங்களுடன் மனிதர்களுக்கிருக்கும் யதார்த்த வாழ்வை"" மிகக் குறைவாகவே சொல்கிறார். பால்குடியாய்வாளர் என்ற முறையில், மிருகங்களுடன் வாழுதல் எப்படி இருக்கும் என்பது பற்றி ஸ்மற்ஸிற்குத் தெரியும். ஆனால், அவருடைய கருத்துரையில் அவர் ஒரு விஞ்ஞானியாக அல்லாமல் மிருகங்களுடன் வாழ விரும்பும் சாதாரண ஒருத்தியாகவே பேசுகிறார். ""கொஸ்ரெல்லோவே நடக்கப் பயப்படும் (குட்சியவினதாகக் கூட இருக்கலாம்) பிரதேசத்துக்குள் பிரவேசிக்கும்போது, நான் அந்த இடைவெளியை நியமமான விஞ்ஞான கருத்தாடலாக அல்லாமல், எலிஸபெத் கொஸ்ரெல்லோ தூண்டுவதுபோல, நெஞ்சத்திலிருந்து பேசுவது போலவே நிரப்ப முயலுவேன்"" என்கிறார். ஸ்மற்ஸின் கருத்துரையில் வருவது, மனிதர்களை நண்பர்களாக்கும், மிருகங்கள் நண்பர்களாகும் தனித்தன்மையே. மனிதரற்ற உயிர்களை ஆட்களாகவும், மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் இடையே ஏற்படும் நட்பை நம்ப வேண்டும் என்பதற்கும், ஸ்மற்ஸ் தெளிவாக ஒரு கதையாடலை முன்னிலைப் படுத்துகிறார். ""நாங்கள் மற்றதொன்றுள் புகுந்து சிந்திக்க முடியும் என்பதற்கு அளவு கணக்கில்லை"" என்று எலிஸபெத் கொஸ்ரெல்லோ வாதாடுவதை, ஸ்மற்ஸ் மீளாய்வு செய்யும் அதேவேளை, அதை உறுதிப்படுத்தவும் செய்கிறார்.

அதன் பின்னுள்ள பக்கங்கள், இனிவரும் காலங்களில், சந்தேகமில்லாமல், இந்தப் பிரச்சினைகள் மேலும் கொதித்துக் கொண்டிருக்கும், அவர்களிடையே ஆழமான கருத்து வேற்றுமைகள் எழும், மெய்யியல்வாதிகளும் கவிஞர்களும், நாவலாசிரியர்களும் விஞ்ஞானிகளும், திணைக்களத்தவர்களும் தலைவர்களும், பெற்றோர்கள், பிள்ளைகள், நண்பர்கள் ஆகிய அனைவரும், எப்படி மனிதர்கள் மிருகங்களை நடத்த வேண்டும், ஒவ்வொருவரையும் நடத்த வேண்டும் என்று சொல்லுகின்றன. ■

பெரும்படுகொலைகள் சம்பந்தமான ஒப்புவமை சரியா என்பதைக் காரசாரமாக விவாதித்தபோதிலும், மறைமுகமாகவும் ஓரளவு மறைமுகமாகவும், அதைச் சதா உபயோகித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகிறார். உதாரணமாக, பிரசித்தமான (ஓரளவு கருத்துவேறுபாடற்ற) குழந்தைகள் சினிமாப் படமான Babe இல். இலக்கியத்தில் அநேகமாக உபயோகிக்கும் காபர் ஒப்புவமை விவாதங்களின் சாதக, பாதகங்களை, காபர் ஆய்வு செய்கிறார். மெய்யியலிலும் பார்க்கப் புனைவுகள் ""மொழியின் கலை""யை அதிகம் அளிக்கிறது. சிலரின் கவனத்தை அல்லது கற்பனையைத் தொட்டுவிட முடியாத அறப் பிரச்சினைகளை எங்களில் ஏற்படுத்த, அக்கலையைக் குட்சிய மிகத் திறமாக உபயோகிக்கிறார்.

படிப்பகம்

(வாய்மொழி வரலாறுகள் இன்று சமூகங்களைப் படிப்பதற்கான முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்படத் தொடங்கிவிட்டன. இங்கே தொடரவிருக்கும் கட்டுரையில் திரு.பாலா, தான் கேட்டறிந்த, பட்டறிந்த ஓர் உண்மை நிகழ்வைச் சொல்லவிருக்கிறார். இனவரைவியலை முறையாகக் கற்றுக் கோட்பாட்டுத் தன்மைகளுடன் எமது சமூகங்களைப் பற்றி வெளிப்படுத்தும் வெளிநாட்டார்கள் ஒரு புறமும், அதேவேளை மிகுந்த பட்டறிவினால் இயல்பாகவே தகவல் மற்றும் தரவுப் பேழைகளாய் இருக்கும் எம்மக்கள் வெளிப்படுத்தாது வைத்திருக்கும் எமது சமூகம் பண்பாடு பற்றிய தகவல்கள் ஒரு புறமுமாக சமூகம் பற்றிய படிப்பு தேங்கி நிற்கிறது. மேலும் புலம்பெயர்ந்து வந்தவர்களிடம் காணாமல் போகும் வரலாற்றுப் பதிவுகளிற்கு மாற்று, வாய்மொழி வரலாறுகளே என்பதனை இக்கட்டுரை உறுதிசெய்யக்கூடும். விட்டுப்போன வரலாறுகளின், சமூக நிகழ்வுகளின் ஆதாரங்களாக இக்கட்டுரை அமைய விரும்புகின்றோம். ஆ-ர்)

சாதிய ஒடுக்குமுறைபற்றிய வாய்மொழி வரலாற்றுச் சான்று (1)

- பாலா

எமது சமூகத்தில் வாழும் மனிதர்களின் யதார்த்த வாழ்வில் இடம் பெற்ற உண்மையான நிகழ்வுகளையும் சம்பவங்களையும் ஆவணப்படுத்த வேண்டும் என்ற ஆதங்கம் எனக்குள் எப்போதுமே இருந்து கொண்டே இருக்கும். சமூக முரண்பாடு கொண்டவிடயங்களையும் அபூர்வமான விடயங்கைளயும் அறிந்தும் தகவல்கள் திரட்டியும் வைத்துக் கொண்டேன் இவற்றை ஆவணப் படுத்தும் சந்தர்ப்பம் இற்றைவரை கிடைக்கப் பெறவில்லை அவற்றுக்காள தேவையும் இன்னும் எனக்கு ஏற்படாது இருந்ததும் ஒரு காரணம். பல விடயங்கள் ஆவணங்களில் பதியப்பட்டிருந்தாலும் ஒரு விடயம், நிகழ்வை மட்டும் எழுத வேண்டும் என்ற ஒரு உளத்துடிப்பு எப்போதும் இருந்து கொண்டிருந்தது. அதனாலே இச் சம்பவத்தை எழுத வைக்கிறது.

1945ம் ஆண்டு நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தையே இங்கு வைக்கிறேன். இது ஒரு தனிநபரின் கடந்துபோன வாழ்வு தொடர்பான விடயம் என்பதால் அவர்களின் பெயர்களுக்கு பதிவாக மாற்றுப் பெயர்களையும் மாற்றுக் கிராமங்களின் பெயர்களையும் குறிப்பிட்டு சம்பந்தப் பட்டவர்களின் பாத்திரங்களை விபரிக்கிறேன். இது ஒரு கிராமத்தில் நடைபெற்ற சாதிப் பிரச்சினை என்பதால் குறிப்பிட்ட சமூகத்திலிருக்கும் சாதிக் குறியீட்டை இங்கு தவிர்க்கமுடியாது கையாளவேண்டி ஏற்படுகிறது.

இக் கட்டுரையை எழுதுவதற்கான தகவல்களைத் தந்தவர்கள், இப்பிரச்சினையை நன்கு அறிந்தவர்கள், மற்றும் அக்கிராமத்தில் பலகாலம் வாழ்ந்து நேரடியாக இப்பிரச்சினையை அணுகியவருமாகிய தருமன் என்பவருமாகும். இத்தருமன் என்பவருடைய வாழ்க்கை பயணத்தில் ஏற்பட்ட நிகழ்வென்பதால் தருமன் என்பவரை முதன்மைப்படுத்தியே இக்கட்டுரை வரையப்படுகிறது.

தருமன் வன்னிப் பிரதேசத்தை சேர்ந்த மதியாமடுக்குளம் (இவ்வூரின் பெயர் புனைவாகத் தரப்படுகின்றது.) என்னும் கிராமத்தை பிடப்பிடமாக கொண்டவர். அவரின் தந்தையின் பூர்வீக கிராமம் மதியாமடுக்குளம் தாயாரின் பூர்வீக கிராமம் கறிப்பட்டமுறிப்பு. தாய் தந்தையர்களின் திருமணப் பந்த உறவு காரணமாக தேவனுக்கு இரண்டு ஊர்கள் சொந்த ஊர்களாக இருந்தன பிறந்த ஊர் மதியாமடுக்குளம். வளர்ந்த ஊர் கம்பகாமம்ம் ஆகும். இரண்டு ஊர்களும் ஈழத்தில் வன்னிப் பிரதேசத்தில் வடக்குத் தெற்காக அமைந்து காணப்படுகின்றன. பழைய கண்டி றோட்டு வீதியும் முல்லைத்தீவு வீதியும் இணைந்து காணப்படும் சந்தியில் காணப்படுவது கறிப்பட்ட முறிப்பு என்னும் கிராமம்.

மதியாமடுக்குளம் கிராமம் முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்து காணப்படுகிறது. மதியாமடுக்குளம் கிராமம் முழுமையான நவீனத்துவத்தை உள்வாங்கப் பட்டிருக்கும் கிராமமாக காணப்பட்டதோடு நெருக்கமான குடியிருப்புக்கள், தாமும் தமது வேலையும் என்றிருக்கும் மக்கள், படிப்பு படிப்பு என்றலையும் இளைஞர் கூட்டம். இவ்வாறு கூறும் தருமன் இக்கிராமத்தின் வாழ்வுக்கு தான் சலிப்படைந்து விட்டதாக உணரத்தொடங்கிய போது தனது தாயாரின் கிராமத்தில் தங்கியிருந்து படிக்கவும் தனது இளமைக்கால வாழ்வை தனது பேத்தியாரின், அவரது தாயாரின் தாயுடன் கழிப்பதற்கு விரும்பினார். அதன் பொருட்டு தனது விருப்பத்தை பெற்றோருக்கு தெரிவித்தபோது பெற்றோர்களும் சம்மதித்துக் கொண்டார்கள். 1969ம் ஆண்டு ஒரு மார்கழி மாதத்தில் தனது வாழ்வை கம்பகாமம் கிராமத்தில் தொடங்கினார். கறிப்பட்ட முறிப்பு கிராமத்தின் இயற்கை அழகையும் அந்த ஊரின் பாரம்பரியங்களையும் புகழ்ந்து பேசிக் கொள்வார்.

பழந்தமிழரின் வாழ்வை அழியாது 1975ம் ஆண்டு வரை இக்கிராமம் காப்பாற்றி வந்ததாக கூறுகிறார். அந்தக் கிராமத்தின் அமைப்பு முறையை திராவிடமக்கள் வாழ்ந்த கிராம அமைப்பு முறைக்கு ஒப்பிடுகிறார்.



அதாவது குடிகள், அவற்றைச்சுற்றிய புற எல்லையில் கோயில்கள், அவற்றைச்சுற்றிய புற எல்லையில் வயல்கள், அவற்றைச்சுற்றிய குளங்கள் , அவற்றைச்சுற்றிய காடுகள் என்ற அமைப்பில் இக்கிராமம் அமைந்து காணப்படுகிறது என்று கூறுகிறார். இக்கிராமத்தில் சுற்றி சங்கிலித் தொடராக குளங்கள் அமைந்து காணப்படுவதாகவும் நீர் மட்டம் உயர்ந்து குளங்கள் பெருக்கெடுத்துப் பாயும்போது தோன்றும் அழகை சொற்களால் வர்ணிக்க முடியாது என்று கூறுகிறார். மெல்லிய மழைத்தூறல் காற்றடிக்க மெதுவான குளிரில் குளக்கட்டுகளைக் கடந்து திரியும் போது தனது மனதில் தோன்றும் உணர்வுகள் அதனால் ஏற்படும் சுகங்களைச் சுவைத்துக் கொள்வேன் என்கிறார்.

அத்தோடு மதியாமடுக்குளத்தின் உணவுமுறைகள் நான் பிறந்த எனது கிராமத்தின் உணவுமுறைகளிலிருந்து முற்றுலும் வேறு பட்டிருக்கும். எந்த இரசாயனக் கலப்பும் அற்ற, இயற்கையான தமிழரின் பாரம்பரிய உணவுகளையே அக்கிராம மக்கள் சமைத்து உண்பார்கள் .

1975ம் ஆண்டு வரைக்கும் கோதுமை மாவினால் செய்யப்பட்டும் உணவை அறிந்திராத மக்கள் அதை உண்பதற்கு பழக்கப் படவில்லை. கோதுமை மா உணவு பற்றிய தேவையற்ற பயமும் தப்பான அபிப்பிராயமும் ஒரு காரணமாக இருந்திருக்கிறது. கோதுமை மா உணவு சாப்பிட்டவர்கள் பலர் குடல் ஒட்டி இறந்திருக்கிறார்கள் என்று நம்பும் படியான கட்டுக் கதைகள் இக்கிராம மக்களிடையே உலாவ-ித் திரிந்தன. கோதுமை மாவின் உபயோகம் மரணச் சடங்குகளில் இறந்தவரை தூக்கிச் செல்லும் பாடை-யை சோடிப்பதற்கு பட்டுக் கடதாசி ஒட்டுவதற்கு பசையாகவே பாவிப்பார்கள். இதே போன்று கோயில் திருவிழாகள், திருமணச் சடங்குகள் போன்றவற்றுக்கு சோடினைகளுக்கு பசைமாவாக பாவிப்பதற்குமே உபயோகித்தார்கள் என்று கூறுகிறார். நகரமயமான ஊர்களிலிருந்து அவ்வூருக்குச் செல்லும் தருமன் போன்றவர்களை அவ்வூரைச் சேர்ந்தவர்கள், “பார் கொதுமை மாவைத்திண்டு ஆடுதடிபோலப் பெலனில்லாமல் இருக்கிறார்கள். அந்த மாவைத் திண்டு வெளிறிப்போயிருக்கிறார்கள்” என்று சொல்வதுண்டாம். மிசனரிக்காரர்கள் தாதுவருசப் பஞ்சநேரத்தில் கொண்டு வந்து கொடுத்த அந்த மாவை இவர்கள் ‘70களின் கடைசிப் பகுதிவரை தொடவே இல்லை.

பால், தயிர், அரிசி உணவு, பழங்கள், இறைச்சி என்பன நிறையவே அக்கிராமத்தில் இருக்கும். அதனால் எனது கிராமத்தில் பழங்கள் உண்பதற்கு இல்லை என்று நான் கூறவரவில்லை. வன்னிப் பிரதேசத்திலேயே எல்லாவகைப் பழங்களும் நிறைந்த கிராமம் நான் பிறந்த மதியாமடுக்குளம் கிராமம் தான். ஆனால் பழங்கள் மரத்தில் பழுக்க முன்பே பிடுங்கிப் பணமாக்கி விடுவதில் எமது கிராம மக்கள் விண்ணர்கள். பழங்கள் அணில்கள், பறவைகளால் கொந்தப்பட்டு மரங்களில் தொங்கியபடியே கிடக்கும். சில சமயம் நடந்து போகும்போது பல மரங்களில் அணில்கள் கொந்தினால், வழியெங்கும் அந்தப் பகுதியெங்கும் பழமணமாகவே இருக்குமு் நகரத்தின் வாசனை படாத அந்த வாசனைகளதான் இக்கிராமங்களின் அடையாளம். கம்பகாமம் கிராமத்தில் காணப்படும் உணவுகளை எமது கிராமத்தில் காணமுடியாது.

அத்தோடு அக்கிராம மக்கள் பற்றியும் கூற வேண்டும். ஒன்பது குடும்பங்களும் அவர்களின் பிள்ளைகளுமே அக்கிராமத்தில் வசித்தார்கள். அயற்கிராமங்களாக மணவாளன் பட்டமுறிப்பு, கற்கிடங்கு, மரகுத்தி , குருக்கள் ஊர் , ஒலுமடு, கறிப்பட்டமுறிப்பு என்று சிறு ஊர்களே காணப்பட்ட இக்கிராமங்களில் இரண்டு அல்லது மூன்று குடும்பங்களே வசித்து வந்தார்கள்.

கம்பகாமம் கிராம மக்கள் மிக ஒற்றுமைப்பட்ட மக்களாக இருந்தார்கள். அக்கிராமத்தில் யாரும் இறந்து விட்டால் ஊரே அழும். மரணச் சடங்கு முடிக்க ஒரு மாதம் வரைக்கும் மரணச் சடங்கு நடந்த வீட்டிலேயே கூடியிருப்பார்கள்.

அக்கிராமத்தில் ஒரு நல்ல காரியம் நடந்தால் கிராமமே மகிழ்ச்சியடைந்திருக்கும். அயல் கிராமமான கற்கிடங்கில் கம்பகாமம் கிராம மக்களதும் மற்றும் ஏனைய கிராம மக்களதும் குலதெய்வமான அம்மாள், வைரவர் கோயில்கள் காணப்படும் . கற்கிடங்கில் ஒரே ஒரு குடும்பமும் அவர்களின் பிள்ளைகளுமே வசித்து வந்தார்கள் . அம்மக்களே இக்கோயில்களில் பூசை செய்யும் பூசாரி பரம்பரைகள் ஆகும் .

கம்பகாமம் கிராம மக்களின் நெருங்கிய உறவினர்களும் கூட இவ்வூரின் கோயில்களில் வருடாவருடம் வைகாசி மாதத்தில் கற்கிடங்கு பொங்கல் என்று கூறப்படுகின்ற திருவிழாவிற்கு வருவர. மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும் திருவிழாவினால் அயல் கிராமங்கள் களைகட்டிக் காணப்படும். அப்பெயர்கள் வாளில் ஏற்படும் மகிழ்ச்சிகளை சொல்லமுடியாது. அத் திருவிழாவின்போது எங்கள் குடும்பத்தார்கள் அனைவரும் கம்பகாமம் கிராமத்திற்கு வந்து விடுவார்கள்.

அதே போன்று கம்பகாமம் கிராம மக்களின் உறவுகள், திருமணப் உறவு காரணமாக வேறு ஊரில் வாழ்ந்தவர்களாயின் கற்கிடங்கு பொங்கல் நடைபெறும் மாதத்தில் அவ்வூர் வந்து தங்கியிருந்து போவார்கள். உறவுகளால் கற்கிடங்கு கிராமமே நிறைந்திருக்கும் ஒரே ஒரு குறை நல்ல நீர் கிணறுகள் கிடைப்பது மிக அரிது. ஒரே ஒரு கோயில் கிணற்றைத்தவிர மற்றய கிணறுகள் உவர் நீரைக் கொண்டிருக்கும். கோயில் கிணற்றில் குளிப்பதற்கும் நல்ல நீர் எடுப்பதற்கும் அவ்வூர் மக்கள் அக்கோயிலடியை சுற்றிக் குழுமி இருப்பார்கள். அத்தடல்புடலான ஆராவாரத்தை அளவு கடந்து மகிழ்வுடன் தருமன் அனுபவிப்பார் என்று கூறுகிறார். தருமன் சொல்லப் போகும் கதைக்கும் இக்கட்டுரையில் மேற் கூறப்பட்ட விடயங்களுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படும். அதனாலேயே இவைகள் இக்கட்டுரையில் விரிவாகக் கூறப்படும். நான் கூறிய இக் கிராமங்கள் தருமன் கூறப்போகும் உண்மைக் கதையில் பங்கேற்கின்றன. அடுத்த கட்டுரை தருமன் கூறப்போகும் உண்மைக் கதையின் பொழிப்பைத் தொட்டு நிற்கும் என்று கூறி இத்துடன் முடிக்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

உலகமயமாக்கல் பற்றிய முரண் கருத்துக்கள்

நேர்காணல்

(றொபேட் W. காக்ஸ் (**Robert W. Cox**) றொறன்ரோ யோர்க் பல்கலைக்கழகத்தின் முன்னாள் அரசியல் துறைப் பேராசிரியர் ஆவார். முப்பது வருடங்களுக்கு மேலாக நவீன முதலாளித்துவ உலகின் விமர்சன ரீதியான அரசி யல் பொருளாதார அணுகுமுறைப் பாதை யை உருவாக்குவதில் முன்னின்றவர். மிகத்திறன் வாய்ந்த சிந்தனையாளர், அவருடைய ஒவ்வொரு எழுத்துக்களும் பிற சமாந்திரச் சிந்தனைகளுக்கு சவாலாக வந்திருக்கின்றன.

இவருடைய கல்வித்துறை சார் பணி வியப்பான சாதனைகளை உடையது. இவருடைய 45 வயது வரை பல்கலைக்கழக ஆசிரியப் பணிக்கு வரவில்லை. இதற்கு முந்திய 20 வருடங்களும் சர்வதேச தொழிலாளர் ஒருங்கிணைப்பில்(**ILO**) துணைப் பொது இயக்குனராகப் பணியாற்றி வந்தார். உலகப்போருக்குப் பின்னான காலகட்டத்தில் எந்தவொரு அறிவுஜீவி அணியையும் சாராது கோட்பாட்டு ரீதியான திறனுடன் இருந்ததனால் உலகளாவிய அரசியல் பொருளாதாரப் பார்வைகளை இவரால் முன்வைக்க முடிந்தது. இக்காலகட்டத்தில் கல்வியும் பொருளுற்பத்தியும், சர்வதேச மயமயாக்கலும் தேசிய அரசுகளும், பல்லினப்பண்பாடும் உலகளாவிய அரசும், சூழலியல், நாகரிகம் போன்ற துறைகளில் கவனக்குவிப்பு செலுத்தி வந்தார். சர்வதேச அரசியல் உறவுகள் பற்றி புதிய-கிராம்சியப் (**Neo-Gramcian**) பார்வையில் அவர் முன்வைத்த பங்களிப்புகள் இன்றும் கருத்தில் கொள்ளத்தக்கனவாக உள்ளன. இது அவருடைய துறைக்கு மட்டுமல்லாது அவருடைய துறைக்கு வெளியேயும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மிகச் சமீப காலமாக அவர் உலக ஒழுங்கின் மீதான புதிய மீப்பொருளியல் எனும் பார்வையை வளர்த்தெடுத்து வருகிறார். இங்கு புதிய மீப்பொருளியல் (**new-ontology**) என்பது குறிப்பிட்ட வரலாற்று கூடுபுள்ளியில் நிகழும் மாற்றங்களை அறிவதற்காக அதற்குக் காரணமான மெய்மைகளை அடையாளங் காண்பது எனப் பொருள்படும். கீழேவரும் செவ்வி றொறன்ரோவில் 2002 மார்ச் இல் காக்ஸினால் வழங்கப்பட்டதாகும். இந்தச் மொழிபெயர்ப்பின் ஒரு பகுதி இந்த இதழில் இடம்பெறுகிறது இதன் மிகுதி தொடர்ந்து வெளியாகும். இந்தச் செவ்வியில் மேலே குறிப்பிட்ட புதிய கிராம்சியப் (**Neo-Gramcian**), புதிய மீப்பொருளிய(**new ontology**) அடிப்படையில் உரையாடுகிறார்.)

உங்களின் கொள்கை அடிப்படையான சிந்தனை எவ்வாறு? உலகமயமாக்கல், சமூகம். கல்வி ஆகியவற்றிற்கிடையிலான உறவுக்கு பங்களிக்கிறது?

இதற்கு நான் நேரடியாகப் பதில் அளிக்கமுடியாது. அதுபற்றி கூறமுடியும். எனது இது பற்றிய தோற்ற வெளிப்பாடுகள் பல....
மக்கள், நான் 15, 20 வருடங்களுக்கு முன் எழுதியது பற்றிப் பேசுவார்கள், ஆனால் நான் இப்போது அந்நிலையில் இருந்து பலவழிகளில் மாறியுள்ளேன். தற்போது என்னுடைய சிந்தனை, நாகரிகம் எது என்பதும் முழுமையான ஒரே இயல்பாய் இல்லாமல் இருக்கும் போது, ஒருவன் இதன் இடைத்தாக்கங்களை எவ்வாறு ஏற்றுக் கொள்கிறான் என்பது பற்றியதும்தான். உலகமயமாக்கல் இலக்கியங்களில் எடுத்துக்காட்டப்படுவது போல் கொள்கைரீதியில் முன்கூட்டியே கூறப்படும் ஒரு நாகரிகம். ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்தின் நாகரி கம் பற்றிய உரையாடல் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அதன் அதிபர் தன் தொடக்க உரையில் பயன்படுத்திய உவமை என்னால் விளங்கக் கூடியதாயினும் நான் அதை ஏற்கவில்லை. அந்த உவமையானது 'பெரிய ஆறு ஓடுவது போல் உலகத்தில் நாகரிகம் இருக்கிறது, அதனுள் பல கிளைகள் வந்து சேருகின்றன. இவ்வாறு வந்து சேருகின்ற கிளை நாகரிகங்களை ஒன்றாக இணைக்கக் முடிகிறது.' என்பதுதான். வேறுபாடுகள் இருப்பது நன்று. ஆனால் உயிரியல்வேறுபாடுகள் பற்றி விவாதிக்கும் மக்கள் பண்பாட்டு வேறுபாடுகளையும் நாகரிக வேறுபாடுகளையும் இல்லாமல் ஆக்க முடியாது.

என்னைப் பொறுத்தவரையில் உலகில் என்ன நடக்கிறது என்பது ஒரு கேள்வி மட்டுமன்றி, மாற்றமுடியாததுமல்ல. என்ன நடக்கிறது என்பதை தெரிந்திருந்தால் மடடுமே எதிர்காலத்தில் அதற்கு ஆதரவு அளிப்பதா அல்லது மாற்றத்தைக் கொண்டுவருவதா என்று முடிவு எடுக்கமுடியும். நாகரிகத்தை எவ்வாறு முன்னேற்றுவது, பொருளாதாரத்தை எவ்வாறு ஒழுங்கு படுத்துவது, சமூகத்தை எவவாறு ஒழுங்கமைப்பது பற்றி பல்வேறு கருத்துக்களுடன் மக்கள் குழுக்கள் இருக்கின்றன. இவ்வாறான கருத்துக்களுடன் இருப்பது Huntington கூறுவது போல் "முரண்" ஐ ஏற்படுத்த வேண்டும் என்பதல்ல. அவர்கள் மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருப்பதால் தங்களுக்குள் சண்டை பிடிக்காமல் ஒருவரின் கருத்தை மற்றவர் மதித்து ஒன்றாக செயற்பட முன்வரவேண்டும்.

மேலே கூறப்பட்ட பல விடயங்களை (inter subjectivity) இணைக்கும் தொடர்சிந்தையின் மூலம் பெரிய குழுக்களிடையே தொடர்புகளையும் செயற்திட்டங்களை கருத்துள்ளதாக அமைத்து ஒற்றுமையாக செயற்படுத்தலாம். ஒரு பிரதேசத்துக்கான குழுக்களிற்கிடையான செயல்பாடு பெரிய குழுக்களுக்கு ஏற்ற வகையில் அமைவதோடு ஏற்கத்தக்கதாகவும் விளங்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இதனால் இவர்கள் செயற்திட்டங்களை கருத்துள்ள வகையில் அமைக்கலாம். ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளலாம். நான் இப்போது கூறுவது ஒரு காலத்தில் Super inter-subjectivity என அழைத்ததையே. இது பல Inter subjectivity க்கிடையே பொது விளக்கத்தைக் கொண்டிருக்கும். இது ஒரு குறிப்பிட்ட நாகரித்தை பற்றித் தெரிந்தவர் மட்டுமல்லாது எல்லோரும் விளங்கக்கூடியதாக இருக்கவேண்டும். எனது சிந்தனை உலகமயமாக்கல் தொடர்பாக இவ்வாறே அமைந்திருக்கிறது என்பது மட்டுமல்ல உலகமயமாக்கலுக்கு மாற்று விடயங்களும் உண்டு. எதிரானது அல்ல. எவ்வாறு தொடர்பாடல் துறையில் தொழில்நுட்பம் மாற்றம் ஏற்படுத்துகிறதோ அவ்வாறானதே இதுவும்.

எனது சிந்தனையை பின்நோக்கி செலுத்தி ஆரம்ப மூலங்கள் எவ்வாறு வளர்ச்சியடைந்து ஒருவர் ஒருவரோடு தொடர்பு கொண்டு மிகப் பழைய மொழி அமைப்பைக் கண்டு கொண்டனர் என்பதன் அடிப்படையில் ஒரு வரைவிலக்கணத்தை அமைக்க முயன்றேன். குறிப்பிடப்பட்ட சில புராணங்களிலிருந்து மொழி வளர்ந்தது. இவை வெறும் கருத்துக்களேயன்றி உண்மையல்ல. பொதுக் கருத்துக்களிலிருந்து உருவாகிய புராணக் கதைக் கருக்கள் கற்பனைக் கடவுள் போன்றவற்றிலிருந்தும் மொழி வளர்ச்சி பெற்றது. இவை பொருள்சார்ந்தவை. பொருள் சார் நிபந்தனைகள் மக்களுக்கு விளங்க வேண்டும். இதனால் தொடர்ச்சியான உறவு பொருள் சார் நிபந்தனைகளுக்கும் அடிப்படை சிந்தனைகளுக்கும் இடையே உருவாகிறது. இது மார்க்சிய சிந்தனை அல்ல. இது பொருள் சார் நிபந்தனைக்கும் அடிப்படைச் சிந்தனையையும் மக்கள் விளங்கி செயற்படுவதோடு அதில் மாற்றத்தையும் ஏற்படுத்த வழிவகுக்கும். நாகரி கம் பற்றி நான் கூறுவது எதுவெனில் Inter subjectivity க்கும் பொருள் சார் நிபந்தனைக்கும் இடையேயான இருப்பு ஆகும்.

உலகமயமாக்கல் பற்றிய முரண் கருத்துக்கள் அதிகரித்து வருவதை நீங்கள் அறிவீர்களா?

முதலாளித்துவம் பலவகைகளில் வெளிப்பட்டு பல்வேறுபட்ட நாகரி கங்களுடனும், பெண்ணியம், இனத்துவம், முரண் இனத்துவம் ஆகியவையோடு இணைந்த ஒன்றாக செயற்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?

நான் முதலாளித்துவத்தின் பார்வையில் அது சரி என்று நினைக்கிறேன். பலர் நிதி ரீதியாகவும் தொழில் நுட்ப ரீதியாகவும் பார்த்து, முதலாளித்துவம் ஒரேயொரு வகை என்று கூறுகின்றனர். மக்கள் எவ்வாறு முதலாளித்துவத்தை ஒழுங்குபடுத்தி செயற்படுத்துகின்றனர் என்று பார்த்தால் அது பல வகைப்படும். முதலாளித்துவ சந்தையில் நிகழ்கால உற்பத்திக்கும் குறுக்குப்போக்கிலான (diachronic) கொள்கைக்கும் இடையே முரண்பாடுகள் உண்டு. இத்துடன் சேர்த்து ஒரு முதலாளித்துவத்தில் ஒரு ஒவ்வாத தன்மையும் உண்டு. இது தீர்க்கக்கூடடியதாக இருக்கும். முதலாளித்துவத்தை ஒரு நிலையான விடயமாக கணிப்பது கடினமே.

கன்பூசிய முதலாளித்துவக் கருத்தைக் கொண்டது அல்லது கன்பூசியிஸத்தைக் கைக்கொண்டதுதான் கிழக்கு ஆசியாவின் வெற்றிக்கு காரணம் என நினைக்கிறீர்களா? அல்லது இது நாகரீகத்தைக் கருத்துருவாக்குவதில் அடங்குகிறதா?

இது பல பிரச்சினைகளையுடையது. கன்பூசியக் கருத்தின் அமைப்பு மிக உயர் (Supreme) நிலையில் இருந்து கூட்டு நிலை (corporate) வரை மேலிருந்து கீழான ஒழுங்கு முறையில் இருக்கிறது. ஆசியாவில் இருந்த சில எதேச்சாதிகாரிகள், நாங்கள் இவ்வாறு தான் செய்கிறோம், இதை இப்படி விளக்குகிறோம் என்று கூறினர். இதற்கு பல எதிர்க்கருத்துக்கள் ஆசிய மக்களிடமிருந்தே வந்தன. பிரான்ஸ் நாட்டு வரலாற்றாசிரியர் ஜீன் செஸ்னோ (Jean Chesnaux) சீனநாட்டு வரலாறு பற்றி எழுதியதை நான் வாசித்தேன். இரகசியமாக செயற்படும் சமூகங்கள் சீன நாட்டில் 14 ஆவது 19ஆவது நூற்றாண்டுகளிலேயே இருந்திருக்கின்றன என்று அவர் குறிப்பிடுகிறார். வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படும் அளவுக்கு ஒரு அபூர்வ விடயமாகவே இது இருந்திருக்கிறது. கன்பூசியக் கொள்கையின் ஒழுங்கமைந்த சமூகத்திற்கு எதிராக எழுந்த சமூகமாக இது இருந்திருக்கலாம். தாவோயிஸக் கூறுகளின் முக்கியத்துவம் இந்த முரண், சமூகத்தில் இருந்து வந்தது. இது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே சம உரிமையை வழங்கியது. கன்பூசியச் சமூகத்தோடு இந்த இரகசிய சமூகங்கள் ஒன்றிணையவி ல்லை. இந்த இரகசிய சமூகங்கள் ஒரு கிராமிய மட்டத்தில் இயங்கினவேயன்றி இவை அரசை தூக்கியெறியும் அளவுக்கு சக்தி வாய்ந்ததாக இருக்கவில்லை. எதேச்சாதிகாரம் தேடியவர்கள் பழைய அமைப்பு முறைகளை தூக்கியெறிந்து செயற்பட இவ்விரகசிய சமூகங்களின் ஒத்துழைப்பை நாடி நின்றன. ஆசிய முதலாளித்துவத்தின் வெற்றிக்கு கன்பூசியனிஸம் ஒரு நிரந்தரமான விடயமாக இருக்கவில்லை ஆயினும் மாற்று நிகழ்வுகளில் ஒரு பங்களிப்பைச் செய்தன.

வணிக மயமான ஒரு வடிவமா கன்பூசியனிஸம் ?

அது அவ்வாறு மாறியது என்றே நினைக்கிறேன். உதாரணமாக சிங்கப்பூரை எடுத்தால், அந்தத் தலைவர்களின் மொழியி ல் சொன்னால், அவர்கள் தங்களைத் தங்கள் வழியிலேயே விடச் சொல்கிறார்கள். ஏனெனில் தாங்கள் அற ரீதியில் கீழ் நிலைக்கு வரவில்லை என்கின்றனர். எனவே அதிகாரத்துக்கு ஆதரவான அரசியல் பொருளாதார ஒழுங்கமைவிற்கு கன்பூசியனிஸம் சாதகமான நிலையில் இருந்தே செயற்படுகிறது எனலாம்.

படிப்பகம்

www.padippakam.com

'In the Name of the Buddha': the movie and ideology.

- Kanniga

The newly talked about movie "In the name of Buddha" which was banned in countries like India and Sri Lanka, addresses the tortures faced by the Sri Lankan Tamils. Many Tamils feel that this movie is an in-depth analysis of what actually happened in Sri Lanka in the 1980's. In fact, many of the things shown were done by the Sri Lankan and Indian government; however I feel that there are more than a few holes in the plot making the movie unrealistic, biased and propagated.

The question is how true and relevant is the movie. Well to start of with, everyone that watched the movie after the first show in Canada didn't get a catch of the original version, since our local politicians had to get into this and re-edit the movie for us since maybe they thought we weren't mature enough for it. So, basically we're all bragging about something that's not even completely true. Secondly the movie is at the same level as the Maniratnam film 'Kannathil Muthamittal', actually Maniratnam's film is better at times. When 'Kannathil Muthamittal' came out we were all fussing about how Maniratnam didn't even show the true Sri Lankan problem and how out of place the movie was. However, I believe that Maniratnam did a better job than the director and producers of "In the name of Buddha," one of the producers being a Sri Lankan Tamil.

If Maniratnam didn't show that actual Sri Lankan, where in the movie "In the Name Buddha" did they show the actual war-torn island. Maniratnam showed Sri Lankan, the Vanni area, with a lot of mountains and Sri Lanka being really green, and the director of "In the Name of Buddha" showed it a little greener and added a pinch of a little more mountains. And they just didn't leave it there; they went further to show that it always rained in Sri Lanka, since they didn't leave a scene in the movie without water, rivers and puddles. And while watching the movie, I just wondered how the movie became a big hit with many black spots.

The director couldn't even portray a Sri Lankan from the 1980's probably. It seemed as if Sri Lanka was more modern than India, since the main character was wearing a silver bracelet and a sliver ring on his pinky finger. As far as I know, I didn't hear of anyone dressing like that back then. And I guess the film makers didn't like stopping anything from dragging it on further. In this case, the main character is a refugee coming from Sri Lanka and he is such a cubby guy with cubby cheeks and fully healthy. I wonder how many refugees left Sri Lankan that healthy.

I don't know about the other Tamils living in Toronto but I, sure, didn't know if it was that easy to go meet the LTTE leader Mr. Prabaharan, since the main character just walks in and there the LTTE leader Mr. Prabaharan is to welcome and sooth him. I didn't know how possible this was. If it was that easy to go meet him and get help, may be we could have easily saved thousands of lives and stopped many from fleeing their mother land.

Was it Tamil they spoke in the film? I just didn't know what language it was. We complained about movies such as Nantha, Nala Dhamaiyanthi, Thennali, and Kannathil Muthamittal for the Sri Lankan Tamil that was spoken in these films, saying that it was a form of insulting us. But, in this film it was as if the director and producers invented a totally new language. The characters were given dialogues that a normal Tamil refugee or citizen will never say. The Tamil they spoke was very unrealistic and artificial. "In the Name of Buddha" insulted the language Tamil more than the other commercial films such as Kannathil Muthamittal. Actually, Kannathil Muthamittal related the language to reality more than 'In the Name of Buddha'.

Also, I was just wondering which ideology the producers were trying to promote. There was a scene in the movie where the people are saying, "Weapons won't bring silence, hatred won't bring peace" and the following scenes were relevant at any point.

So, basically they are confused, because basically everything they said was contradicted by them and their filmmaking. For example they have a character saying that the Sinhalese are killing all their babies, and the next thing you see is a small boy with a gun, and the gun is probably taller than him. In one way it is a misinterpretation of their ideology. So isn't that like we are killing our own children. Is this how the producers wanted to educate the outer world about what exactly is happening in Sri Lanka.

An interview with the producers and the people involved in the movie was telecasted on Tamil Vision Inc. When the producer was asked why the film was named "In the Name of Buddha" he stated that Buddha was a unique person and he portrayed peace through silence and was against violence. However the producers painted a black spot on themselves by stating that since they didn't show the uniqueness and beauty of silence in the movie. They harvested all sorts of noise such as fighting, crying and screaming. Even when they showed Buddha, they only showed him with a dead body on his head and the Sinhalese army at the bottom. Now, they may say that they were trying to show that Sinhalese army wasn't following their religion?

They showed all the torture the Tamil people faced, but why aren't we looking at the other side. Are we just drawing a circle around us and telling our selves to thing in a certain way or are we just afraid to face the truth. It's true we were tortured, no one could argue.

But were we just tortured only by the Sri Lankan and Indian government? Were we not tortured by ourselves? We killed our own people, how come we don't talk about that. They are one of the reasons for us to leave our motherland and be here, how come we don't talk about that? Many more such as giving our own people less than 24 hours to evacuate the peninsula and didn't care about what will happen to them and what did happen to them. As we could see there's more than one side to a story, which this didn't portray.

The movie was very biased and a form propaganda, which was not that effective. Due to the biasness of the film, the outer world is going to get the wrong idea of the truth behind the Sri Lankan war. So the director and producer of the movie "In the Name of the Buddha" may want to think twice before making the sequel.

Neither it's a film of worthwhile to see and get any historic truthfulness or any kind of excellence in film making. Very poor settings and presentation of scenes were all along the film. They do not, even study the geo-political situation of people of Sri Lanka. The same experience of the films of Torontonian Tamils, thundering noise with hand full of crying and fighting, were given 'In the Name of the Buddha'.

(From Page 25)

arms. When the military surrounded the neighboring community of Kanawake it was agreed that the old people, women and children would be given safe passage out of the siege. Yet the police and military looked on as the convoy of women, children and old people was stoned by local townspeople at Oka. An older man died in this incident.

At Esgenoopetij (Burnt Church, NB) during a dispute over treaty rights and federal fishing quotas, authorities rammed the boats of fishers, assaulted community members and committed other human rights violations that are still under investigation. The community and the feds finally reached an agreement on fishing quotas. But some non Aboriginal fishers were still not happy and set fire to the boats of the Mik'maq while authorities looked on and did nothing.

There are over 500 unsolved cases of women murdered or missing from our communities where neglect by authorities is a significant factor. Hundreds of investigations involving police excesses against our people living in Canadian cities are pending. These are just some of the struggles being waged by our people across the country.

This is the context in which the government of Canada has introduced amendments to the Indian Act, again with only token or no consultations with Aboriginal communities. Opposition to the First Nations Governance Act climaxed last year when the Standing Committee on Aboriginal Affairs, which incidentally does not contain a single Aboriginal representative, passed the act on to Parliament for its approval.

The provisions of the act are complex and divisive for our people. Suffice it to say that the FNGA and other pending legislation will threaten our treaty rights by making it possible for non-Aboriginal businesses to locate on reserve lands and continue to exploit our resources. It will tax our people - the poorest in the country according to Canada's own statistics. And it will limit our financial resources to dispute treaty violations and pursue land claims. It will set the stage for the loss of our remaining territories.

Needless to say, the more responsible among our leadership want the Indian Act gone, not amended. We want our treaties respected. We want our resources and our lands respected. And we want our people to enjoy the same standard of living, the same rights as Canadians.

Over the last year, the Coalition to stop FNGA has been raising awareness about Native struggles across Turtle Island and building relationships with other communities who understand colonialism and are opposed to racism. We ask that you support our struggles whenever and wherever you get the opportunity. If the FNGA returns when Parliament reconvenes, we will be mobilizing against it and any support you can provide will be appreciated.

Our Elders have always told us that we are all connected. One person's pain is everyone's pain. One person's joy is everyone's joy. It is in this spirit that I thank you for your time and wish you all well in your own struggles and movements.

படிப்பகம்

www.padippakam.com

This was the talk given by Zainab Amadahy, at the Daniel Memorial meeting in Toronto. She is an activist of the native community and working in tronto area. She is a musician also and published many albums on native music.

In this talk I'm going to give you a much-abridged overview of the struggles that are currently being waged by indigenous people on Turtle Island. Much information will be sketchy and brief, but I hope it will give you a sense of where we are today and how we got here.

When Europeans first arrived to what our people refer to as Turtle Island, we had a variety of nations already living here. We spoke hundreds of languages, had a variety of spiritual practices, economic systems and governments.

There are a variety of ways in which different European groups interacted with our people. In some cases conflict characterized our relationships at the outset as Europeans attempted to enslave our people to work on their farms and plantations. In other cases, Europeans came to realize that their ability to live and thrive on Turtle Island was dependant on their ability to find ways of learning from our people -- or at least co-existing with us. As Europeans increasingly saw this land as an opportunity to enrich themselves, our people served as guides and translators. We developed trade relationships, friendships and in many cases intermarried with Europeans since we were not encumbered with a racist worldview.

Many academics today theorize that the diseases the Europeans brought with them, diseases that were responsible for the deaths of over half the indigenous population of Turtle Island, had a greater impact on the decimation of our communities than the acts of war & genocide that followed. Nevertheless our acts of friendship were often rewarded by biological warfare (through smallpox infected blankets traded to our people), violence and threats of violence.

By 1857 Canada was in the process of negotiating treaties with most indigenous nations. While some treaties had already been signed and others were being negotiated, legislators in Ottawa were busy drafting up The Indian Act. None of the Act's authors ever once bothered to consult with the leadership of Aboriginal nations as to whether they needed, wanted or would benefit from such a law. More importantly, no one ever questioned whether the Canadian government, in all its wisdom, had a right to enact legislation over people who already had fully functioning governments of their own. The passing of the Indian Act is akin to the US government passing a law to determine who could call themselves Canadians, where Canadians could live and what type of government they must have. But I should not have to tell the Tamil people about the legacy of colonialism, racism and injustice.

In addition, the Indian Act has always discriminated against women. It stripped many Native women of their status, particularly if they married non-Aboriginals. The Act set up a band council system that disempowered the traditional political and roles women had in all of our nations. The most well known of these roles was among the Rotinosoni (Iroquois) where women appointed the Royaneh (male leadership) and held them accountable. The Act changed all that and more.

While some treaties were signed under coercion, it is to the credit of our leadership that they never surrendered any nation's right to self-government. Yet, when the Indian Act became law it assumed that "Indians" were wards of the Canadian state, which had a right to determine every aspect of our lives; from cradle to grave. The Act determined where we could live, what form of government we could have and what type of educational system our children would endure. In fact, the Indian Act even determined who was and who was not an "Indian".

By this time, there were many mixed race Aboriginals and the government employed such "scientific" methods as measuring the size of people's heads, hands and feet in order to determine who qualified as "Indian". The intent of course was to eliminate as many people as possible from the band roles so that the government could deny its treaty responsibilities and access resources on the lands on which our people lived.

I think most people who come to Canada soon learn about the Residential Schools, where our children were literally kidnapped from the arms of their parents, taken hundreds of miles away from their communities and forced to attend schools run by Christian churches whose mission was to "civilize" and assimilate our people. These so-called schools were the site of all manner of physical, sexual and emotional abuse. In fact, the abuse was so severe that many of our children died and were buried in secret graves, disappeared forever from their communities. Even their parents were never told what had become of them.

For children who survived the experience, they would return to their communities as young adults unable to speak their own languages or relate at all to their own families. They would have none of the skills necessary to survive in their communities; they would not know how to fish or hunt or rear children. But they could speak English and read the bible. Many of them, unaware of their history and culture, learned to be ashamed of who they were and denied their heritage.

Today in cities, people spit on our people or pity them because many are homeless, alcoholics, prostitutes and drug addicts. This is a stereotype born out of a measure of truth as our people are still recovering from the residential school experience. The last residential school in this country closed as recently as 1984. But of course many people fail to acknowledge our spirit of survival. Many people are unaware, for example, that recent studies reveal that over half of the Aboriginal people in country do not drink alcohol or touch drugs.

Many more people deny or ignore our struggles as they are waged across this land. I'm going to take you on a cross country journey for just a few moments to give you some examples of how our people are still resisting colonialism.

The community of Secwepemc, BC has had a sweat lodge and a home bulldozed over in the interest of expanding the Sun Peaks ski resort onto territories whose ownership is in dispute. The Secwepemc people are involved in a court case, but are also asking people to boycott Sun Peaks resort and are pursuing a court case to get their title to their own land recognized.

The Lubicon were overlooked in the treaty-signing process because of their remote location in northern Alberta. Consequently, the provincial and federal government have awarded resource extraction companies the right to drill for oil, clear cut and otherwise pollute the land, air and water that the Lubicon people have relied on to survive for centuries. The result has been poverty, disease, high rates of suicide and birth defects for the Lubicon people. Several international judgments since the 1980s have concluded that the federal and provincial governments are violating the human rights of the Lubicon people, yet the resource extraction continues.

In Manitoba, warrior societies have been targeted under anti-gang legislation for harassment, threats and arrest. Although motorcycle gangs were supposed to be the targets of the new laws, authorities instead used these anti-gang laws to target warriors and warrior societies in a bid to quash Indigenous struggles.

In northern Ontario, just outside a town called Kenora, the people of Grassy Narrows are suffering serious health concerns as a result of the clear-cutting and the pollution of their air and water by corporate interests.

In 1995 unarmed Native activist Dudley George was shot and killed by the OPP at Ipperwash Provincial Park. Questions concerning his murder remain unanswered yet the Ontario government refuses to hold a public inquiry. In 1990 at the Siege of Kanawake and Kanesetake, just outside of Montreal (the "Oka Crisis") the military raided the longhouse (a place of worship) at Kanesetake, destroying medicine items and assaulting community members. In that incident, a teenaged girl was bayoneted in the chest while she held her 5-year old sister in her

(Cont... Page 24)



- Zainab Amadahy

Many academics today theorize that the diseases the Europeans brought with them, diseases that were responsible for the deaths of over half the indigenous population of Turtle Island, had a greater impact on the decimation of our communities than the acts of war & genocide that followed. Nevertheless our acts of friendship were often rewarded by biological warfare (through smallpox infected blankets traded to our people), violence and threats of violence.

படிப்பகம்

www.padippakam.com

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கங்களில், பெரும்பாலான பதவிகள், பெரும்பாலானவர்கள் பெயர்களையே தாங்கி நிற்கின்றன. ஊரில், விளிம்பில் வாழ்ந்தவர்கள் இன்று உலகின் விளிம்பில் வாழ்கிறார்கள்.

சங்கப் புலவர்களின் அடைமொழிப் பெயர்களாக ஊர்ப்பெயர்கள் வருவதுபோல், தங்கள் பெயர்களின் முன்னால் ஊரின் பெயர்களைப் பொறிப்பதும் இன்று நம் கண்ணுக்கு முன்னரே நடக்கின்றது. எடுத்துக்காட்டாக, புங்கையூர் ஏகாந்தப்பிரியா, உரும்பையூர் செம்பாட்டு வள்ளி, காவலூர் யோகநாதன், நயினையூர் சுபாஸ் போன்ற பெயர்களைப் பார்க்கும் போது ஊரின் பெயரை தங்கள் பெயருக்கு முன்னால் போட்டு ஊரோடு தம்மை அடையாளப்படுத்தும் வழக்கத்தை நாம் காணலாம்.

இன்ன ஊரைச் சேர்ந்தவர்கள் தாங்கள் என்று தம்மைத் தமது ஊருடன் அடையாளம் காண்பிக்க முனைகின்ற மக்களும், நீங்கள் எந்த ஊர்? என்று கேட்டு, ஊரை வைத்து மற்றவரை அடையாளம் காண விளைகின்ற மக்களுமாய் வாழ்கின்றது தமிழ்ச் சமூகம்.

"நீங்கள் எந்த ஊர்"? என்ற வினா, மேலெழுந்தமாகப் பொதுவாகத் தோன்றினாலும் அதற்கு அடுத்து வரும் வினாவானது, "ஊரில எவ்விடம்"? என இருக்குமானால், கேட்பவர் எதனை மனதில் வைத்துக் கேட்கிறார் என்பது தெளிவாகும். ஈழத்தில் மக்கள் "இரண்டறக்" கலந்து வாழ்தல் சில ஊர்களில் மாத்திரம் சாத்தியமாயிற்று. ஈழவிடுதலைப் போர் தமிழ் மக்களில் ஊரைச் சார்ந்தவர்கள் என்றோ, குறிக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர் என்றோ பாதிக்கவில்லை. அது ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்தையே பாதித்தது. அதன் விளைவாக, புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்திலும் அதன் பாதிப்பு இருக்கிறது. புலம்பெயர்ந்த சூழலில் இரண்டறக் கலந்து வாழவேண்டிய நிலையில், "ஊர்" அவர்களை அடையாளம் காணுகின்ற அடையாளமாகின்றது. ஊர் சார்ந்து குறிச்சி, வட்டாரம், தெரு, திசை என்பனவும் மக்களைப் பிரித்து அடையாளம் காணுகின்ற அடையாளங்கள் ஆகின்றன.

கனடாவைப் பொறுத்தவரை, திருமணம் என வரும்போது சாதகம் பார்க்க முதல் "ஊர் பார்த்தல்" நடைபெறும். மக்கள் பெரும்பாலும் தமது ஊருக்குள்ளேயே திருமணம் செய்ய விரும்புகிறார்கள். இது பல சிக்கல்களைப் போக்குகிறது. அதாவது, மணமகனோ, மணமகளோ "இன்னார்" என்பதை இலகுவாக அறிய முடிகிறது. "இன்னார்" என்று அறிவதுதான் பெரும் சிக்கல். அது ஊருக்குள்ளே எனும்போது இலகுவாக அறிந்து கொள்ள இயலும். இப்பெரும் சிக்கல் அவிழ்ந்தால், ஏனைய சிக்கல்களை இலகுவாக அவிழ்த்துவிடலாம். ஊருக்குள் முடியாவிட்டால் அயலூருக்கு முதலிடம். அங்கும் முடியாவிட்டால் வன்னி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், தீவுப்பகுதி என்ற பிரதேச அலகுகள் வருகின்றன. விரும்பிய பிரதேசத்திற்குள் உள்ளடங்குகின்ற ஊர்களைத் தெரிவு செய்து "இன்னாரைத்" தேடுவார்கள்.

ஊரின் எல்லை கடக்கும்போதுதான், எந்த ஊர்? அவ்வூரில் எவ்விடம்? என்று "ஊர் பார்க்கும்" படலம் நடைபெறும். இந்த "ஊர் பார்க்கும்" படலம், திருமணச் சடங்கின் மிக முக்கிய கிளைச் சடங்காகவே மாறிவிட்டது. திருமணத்திற்காய் செலவழிக்கும் நேரம், காலம் என்பவற்றைவிட "ஊர் பார்க்கும்" இக்கிளைச் சடங்கிற்கே அதிகம் செலவழிக்கிறார்கள்.

இவை எழுத்தில் எழுதி வைத்துவிட்டுச் செய்யப்படுபவை இல்லை. காலம் காலமாய் மக்களின் மனதில் பதிந்து விட்டவையாகும். ஈழத்தில் பெருமளவிற் குறைந்து போய்விட்ட நிலையில், இளையோரும் நாட்டம் காட்டும் காரணத்தினால், இளம் குருதியுடன், "ஊர் பார்க்கும்" நிலை கனடாவில் வீறுடன் நடைபெறுகிறது.

துணை நூல்கள்:

ஞா. ஸ்டீபன், பண்பாட்டு வேர்களைத் தேடி, 1999
தி.சு.நடராசன், தமிழின் அடையாளம், 1999
சேரன், காலச்சுவடு இதழ் 30
சு.வில்வரத்தினம், காலத்துயர், 1995

(7ம் பக்கத் தொடர்ச்சி) **இலங்கை நாட்டுச் சித்தர்கள்.....**

சுவாமகளும் (?-1977) வடிவேற் சுவாமிகளது நேரடிச் சீடராக கதிர்வேலு சுவாமிகளும் (குருகுலம் அப்பு) (1917-1987) விளக்குகின்றார்கள்.

நிரஞ்சனாந்த சுவாமிகளது (பரம குரு சுவாமிகள்) நேரடிச் சீடர்களாக குழந்தை வேல் சுவாமிகள் (- 1908) சடை வரத சுவாமிகள், சடையம்மா (1865-1925) ஆகியோர் விளங்குகின்றனர். கடையிற் சுவாமிகளது நேரடிச் சீடர்களாக சார்ஜன் சுவாமிகள் (சின்னத்தம்பி சுவாமிகள்), குழந்தை வேற் சுவாமிகள், சடை வரத சுவாமிகள், சடையம்மா, தண்டேல் சுவாமிகள் சின்னச் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், (?-1915) ஆகிய சித்தர்கள் விளங்குகின்றார்கள். செல்லப்பா சுவாமிகளது நேரடிச் சீடராக யோக சுவாமிகள் (1872-1964) விளங்குகின்றார். இவரது சீடராக மார்க்கண்டு சுவாமிகள் (1899-1984) விளக்குகின்றார். இந்தியாவிலிருந்து வந்து கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் நடமாடிய பெரிய யானைக் குட்டிச் சுவாமிகளது நேரடிச் சீடராக நயினாதீவுச் சுவாமிகள் (?-1949) விளங்குகின்றார்.

இலங்கையில் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து சித்தர்கள் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்து வந்துமை பற்றி ஓரளவு அறிய முடிகின்றது. இலங்கை - யாழ்ப்பாணப் பிரதேசத்தினை மையப்படுத்தி சித்தர் பரம்பரை தோன்றி வளர்ச்சி பெற்றதை அறிய முடிகின்றது. இப்பிரதேசத்தினை மையப்படுத்தியே ஏனைய பிரதேசங்களிலும் சித்தர் பரம்பரை உருவாகியுள்ளதை அறிய முடிகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசம் பண்பாட்டின் கேந்திர நிலையமாக இருந்தமையால், தென்னிந்தியாவிலிருந்த கடையிற் சுவாமிகளைப் பெரிதும் கவர்ந்திருக்கலாம் என்பதில் எதுவித சந்தேகமில்லை. இலங்கையிலே ஊர்கள் தோறும் தேவாலயங்கள் வித்தியாலயங்கள் சமாதி ஆலயங்கள் ஆகியன அமைந்து விளங்குகின்றன. இப்பகுதிகளிலே சித்தர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு இங்குள்ள சமாதி ஆலயங்களே சான்று பகருகின்றன. சித்தர்களது சமாதிகளோடு அவர்களின் வழியில் உருவாகிய நிலையங்கள், பீடங்கள், சத்திரங்கள்இ மடங்கள் என்பன இதற்குச் சான்று பகருகின்றன.

இலங்கையில் வாழ்ந்த சித்தர் பரம்பரையினர் பண்பாட்டு வளர்ச்சியிற் பெரும்பங்கு வகித்திருக்கிறார்கள். சித்தர்களின் செயற்பாடானது இப்பிரதேசத்திலே ஒரு சமுதாய சமய மறுமலர்ச்சியினை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தில் நடமாடும் தெய்வங்களாகச் சித்தர்கள் வாழ்ந்தர்கள். இவர்கள் அக்காலச் சமுதாயத்து மக்களிடையே நிலவிய நாஸ்தீகக் கொள்கையை நீக்குவதற்கும், மக்களை சைவப் பற்றுள்ளவர்களாகவும் வாழ்வதற்கும், நம்பிக்கையுள்ளவர்களாக அவர்கள் விளங்குவதற்கும் பல்வேறு வகையான அற்புதங்களை அவ்வப்பொழுது நிகழ்த்திக் காட்டியதுண்டு. அக்கால மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள், துன்பங்கள் நோய்கள் போன்றவற்றை இலகுவிலே நீக்கி வைக்கின்ற நடமாடும் வைத்தியர்களாகவும் சித்தர்கள் விளங்கினார்கள்.

சித்தர்கள் மறைஞான அனுபவம் வாய்க்கப் பெற்றவர்கள். அவர்களது திருவாக்கிலிருந்து எழும் சொற்கள், உபதேசங்கள் ஒவ்வொன்றும் மறைஞானக் கருத்துக்கள் நிறைந்தவை. சித்தர்களின் உபதேசங்கள் அக்காலத்து மக்களாலும் இக்காலத்து மக்களாலும் தாரக மந்திரங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. இச்சித்தர்கள் இவ்வுலகியல் வாழ்க்கையில் பற்றற்றவர்களாகவும் பித்தர், பேயர், விசரர் போலவும் வாழ்ந்து காட்டினார்கள். இறைவனை அடைவதற்குரிய வழிகளான செபம், தவம், தியானம் என்பனவற்றைத் தங்கள் வாழ்க்கையிலே கடைப்பிடித்து வாழ்ந்து காட்டினர். சித்தர்கள் ஆன்மீக மேம்பாட்டுக்குப் பல்வேறு அற்புதங்களைச் செய்து காட்டியதன் மூலம் அக்காலச் சமுதாய மக்களுக்குச் சமய நம்பிக்கையை ஊட்டினார்கள். தமது ஞான அனுபவங்களை இவர்களிற் பலர் எளிமையான முறையிற் பாடிச் சென்றிருக்கின்றார்கள். இவர்களின் பாடல்களிலே சொல் எளிமையாயிருப்பினும் பொருள் விளங்கிக் கொள்வது அவ்வளவு எளிதன்று. அவை தத்துவ ஞானச் செல்வங்களால் அமைந்துள்ளன.

சித்தர் பரம்பரையினர் மூலமாக இப்பிரதேசத்திலே சமய நம்பிக்கைகள், கடவுள் பக்தி மேலோங்கின. இவர்களின் திருவாக்கெல்லாம் மக்களால் அருள்வாக்கால் போற்றப்பட்டன. சித்தர்கள் சமாதியான பின்னர் அவர்களது உடலினைச் சமாதி வைத்து அதற்கு மேல் சிவலிங்கத்தினை பிரதிஷ்டை செய்து, கோயில் அமைத்து அல்லது அவரது திருவடிகளையோ அஸ்தியையோ, திருவுருவங்களையோ வைத்து வழிபடுகின்ற மரபானது இப்பிரதேசத்திலுள்ள மக்களுக்குச் சித்தர்களின் மேல் இருந்த ஈடுபாட்டினையும் பெருவிருப்பினையும் காட்டி நிற்கின்றது. சித்தர்களது சமாதி யின்மேல் கோயில் அமைத்து, அச்சித்தர்களின் ஜனனமான அல்லது மகா சமாதியடைந்த தினங்களிலே விசேட பூசை, அபிஷேகம், அன்னதானம் வழங்கல், வழிபாடு போன்ற கைங்கரியங்களை இப்பிரதேசத்திலுள்ள சமாதி ஆலயங்களில் நடாத்தப் பெற்று வருகின்றமை கண்கூடு.

சித்தர்கள் வாழ்ந்த காலப்பகுதிகளில் அவர்களது நினைவுகளைப் பேணுகின்ற வகையில் குரு பூசை நிகழ்வுகள் முக்கிய இடம் பெற்றதை அறிய முடிகின்றது. கடையிற் சுவாமிகள் வாழ்ந்த காலத்திலும் பார்க்க குழந்தைவேல் சுவாமிகள் வாழ்ந்த காலப் பகுதியில் இக்குரு பூசை நிகழ்ச்சிகள் மிகப் பிரபல்யமுற்றன. இக்குரு பூசைகளினால் மக்கட் சமுதாயம் நன்கு பண்பாட்டு வந்ததென்றே கூற வேண்டும். பொதுவாக யாழ்ப்பாணம் சாதிக் கொள்கையைக் கடைப்பிடித்த இடம் எனக் கூறப்படுகின்றது. அந்நாளில் இப்போதுள்ளதிலும் பார்க்கச் சாதி மரபு மிக அதிகமாயிருந்திருக்கும். சமூகத்தில் ஒருவரோடொருவர் உடனிருத்தல், உடனுண்ணல் என்ற விஷயங்களில் எவ்வளவோ நுணுக்கம் பார்ப்பவர்கள் மிக அதிகமாயிருந்திருப்பார்கள். குறித்த குருபூசை நிகழ்ச்சிகள் அந்நிலையை ஓரளவுக்கு மாற்றிவிட்டன. சாதி மரபும் பேதம் பாராட்டாது பெருமை சிறுமை பாராட்டாது குலங்கோத்திரங்களைக் கவனியாது அன்பர்கள், அடியார்கள் என்ற முறையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ளவர்கள் ஆங்காங்கு ஒன்றித்துக் கூட்டுத் தன்மையாற் சமுதாய வாழ்வில் உண்மையான ஒரு திருப்பம் ஏற்பட்டதென்று கூறலாம். குழந்தை வேற் சுவாமிகளது அடியார் திருக் கூட்டத்தில் பிராமணர், பொற்கொல்லர் என்றிங்ஙனம் பல்வேறினத்தவரும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மற்றெக்காரணமும் நோக்காது உயிரின் பெருமைக்காக ஒருவர் மற்றொன்றை நேசிக்கும் ஆன்ம நேயம் அடியார் கூட்டங்களில் மட்டுமே சிறப்படைந்தது. பரஸ்பர உறவும் வஞ்சகமில்லாத உள்ளக் கலப்பும் அக்கூட்டத்திலேயே ஏற்பட்டன. இவ்வகையில், குறிப்பிடத்தக்க அளவுக்கு அந்நாளைய மக்களின் உள்ளப்பண்பாடுஞ் சீருற்றதென்றே கொள்ள வேண்டும்.

சாதாரண வாழ்க்கைத் தேவையோடொட்டிய மற்றைய அலுவல்களை இயன்றமட்டில் குறைத்துக் கொண்டு ஆன்மலாபம் ஒன்றையே முன்னிட்டு இவ்வடியார் கூட்ட நிகழ்ச்சிகளில் பெரும்பாலோர் தமது நேரத்தைச் செலவிட்டு வந்தனர். குரு என்ற முதல்வனைத் தலைவனாகக் கொண்டு எல்லா வகையிலும் அவரைப் பின்பற்றித் தம்மையடக்கியொழுகுஞ் சீரிய ஒழுக்க நெறி இவர்களாலேயே சமுதாயத்தில் இடம் பெறுவதாயிற்று. அன்பு, அடக்கம், பொறுமை முதலிய உயர் குணப் பண்புகளும் தூய்மை, எளிமை, ஆசாரம், முதலிய நல்வாழ்க்கைப் பண்புகளும் இவ்வடியார் கூட்டங்களாற் சமூகம் பெற்ற பேறுகளாகும்.

இலங்கையின் பல்வேறு இடங்களின் வாழ்ந்த சித்தர்ப் பெருமக்கள் பண்பாட்டு வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புக்களைச் செய்துள்ளதை அறிய முடிகின்றது. அவர்களது அரிய பணிகளாக நடமாடும் தெய்வங்களாக விளங்குதல் அடியவர்களது இன்னல்கள், துன்பங்களைப் போக்குதல், கடவுளர்களது அருளைப் பெற்று அவ்வப் டிபாபுது பல அற்புதங்களை நிகழ்த்தி தம் சமயமே மெய்ச்சமயம் என நிலை நிறுத்தியமை சித்தர்கள் பல்வேறு அரிய வாழ்க்கைத் தத்துவங்களைப் போதித்ததோடு தமது வாழ்விலே வாழ்ந்து காட்டினார்கள். சித்தர்கள் சமயம் சார்ந்த சமய தத்துவக் கருத்துக்களை உபதேசங்களாகவும் பல சந்தங்கள் நிறைந்த அருட் பாடல்களாகவும் அகவழிபாடே மிகச் சிறந்தது என வற்புறுத்தியமை, சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகள் காட்டாது அதற்கு அப்பால் வாழ்ந்தமை, சமயங்களுக்கிடையே சமரசம் ஐக்கியத்தினை வலியுறுத்தியமை சமூக மேம்பாட்டிற்காகப் பல நிலைகளிலும் உதவி யமை, மடங்கள், நினைவாலயங்கள், அமைத்து பண்பாட்டு மரபுகளைப் பேணியமை அகியவற்றைக் குறிப்பிடலாம்.

படிப்பகம்

www.padippakam.com

போடவேண்டும்" என்பார். "இன்னாரோடு அவதானமாகக் கதையுங்கள். சொல்லுக்குச் சொல் 'முகாமையாளருக்குப் போகிறது" என்பார். அவருடன் நாடகம் நடித்த அல்லது பழகிய, கற்பித்த பெண்கள் எல்லாருமே அவர் ஓர் உத்தமர் என்றே சொல்வர். அத்தனை கல்மிஷமற்ற பார்வையும் பேச்சும். "கற்புக்கனல்" பயிற்சியின் பொழுது தேவனும் நாங்களும் ஏதேதோ பேசிச் சிரித்து மகிழும் பொழுது இவர் ஒதுங்கி இருப்பார். நாங்களெல்லாம் பிள்ளை குட்டிக்காரர் தானே வாங்கோ வாங்கோ என்றால் மெலிதாகச் சிரித்து விட்டு உங்கள் பகிடிகளை நான் ஆழமாகச் சிந்தித்து மகிழ்கிறேன் என்பார். தேவன் இவருக்கு "கற்புக்கனல்" என்று பட்டம் சூட்டிவிட்டார். அப்படி 'வழிஞ்சு வழிஞ்சு' கதையாத நாடகக்காரன் இவரொருவராகத்தான் இருக்கமுடியும்.

மிதிவண்டியில் குரும்ப சிட்டியிலிருந்து புறப்பட்டாரானால் தேவாரமும் திருவாசகமும் முணுமுணுப்பாய் பாடிக்கொண்டே மாவைக்கந்தன் வரை வந்து இறங்கிச் சேவித்து, தொடர்ந்து மிதித்து நடேஸ்வராக்கல்லூரிக்கு வந்து புவனேஸ்வரி அம்மனைத் தொழுது, பின்னர் தேனீர் கடைக்கு நடந்து சென்று தேனீர் அருந்தி வந்த பின்னர் தான் பாடசாலையே அருளும். திரும்பிப் போகும் பொழுது மாவிட்டபுரம் கந்தசாமிக் கோவில் ஐயருடன் இலக்கியங்கள் வரலாறுகள் பற்றி ஆராய்ந்து பேசிச் செல்வார். அந்த நேரத்தில் இவர் இயல்பாகச் சிரித்துப் பேசி மகிழ்வார்.

வீட்டில் அவருக்குப் பரிபூரண சுதந்திரம். பிள்ளைகள் பற்றியோ வளவு வாய்க்கால் பற்றியோ எதுவித எதிர்பார்ப்பும் அவரிடமிருந்து இருக்காது. அவ்வளவு தங்கமான மனைவி. சுறுசுறுப்பும் விருந்தோம்பும் பண்பும் நீதி நியாயங்களும், சமூகத்தோடு அனுசரித்துப் போதல் எல்லாமே பரபரப்பாக செய்து முடித்துவிடுவார் இவரது மனையாள். இவரது சகலரான திரு.சபாரத்தினம்(ஈழகேசரி) அங்கேதான். இருவரும் ஆக்க பூர்வமான விடயங்களைப் பேசிக் கொள்வார்கள். தம் இளஞ் சமுதாயத்திற்கு இலட்சியங்களைக் காட்டுவர். தாராளமான பணப் புழக்கம். அதனால் செலவு வரவு பற்றிய கேள்வியுமில்லை. அவரது கலை வளர்ச்சிக்கு மனைவியின் அனுசரணை விலைமதிப்பற்றது.

தெல்லிப்பளை கலை இலக்கியக் களத்தின் அங்கத்தவர்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்வர். கலைப்பேரரசின் எழுபத்தைந்தாவது பிறந்த தினத்திற்கு செல்லத்துரை ஆசிரியர், கோகிலா மகேந்திரன் முதலியோர் அவரைப் பற்றிய கட்டுரைகளைத் தொகுத்து ஒரு மலராக வெளியிட்டு படுக்கையில் இருக்கும் அவரைச் சந்தித்து வீட்டிலேயே அவரது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்களாம் என அறிகிறோம். மகிழ்ச்சியான அச்செயல் ஏதோ ஒரு காரணத்தால் சமூகத்திலிருந்தும் ஒதுங்கி வாழ்ந்த ஒருவரை கலையுலகம் இன்னும் மறந்துவிடவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

ஊரிலிருந்து இடம் பெயர்ந்த பின் இணுவிலில் அவர் இருக்கும்போது, தெல்லிப்பளை கலை இலக்கியக்களம் கூடப்படுவதாக அறிந்தேன். வீட்டுநிலைமை, நீர்வேலியில் மோசமாக இருந்தமையால் போகமுடியவில்லை. அவரது ஆழ்ந்து அடங்கிய சுபாவமும் எவரையும் உயர்த்தி மதிக்கும் பண்பும் அளவிடமுடியாதவை. 'இறுதி மூச்சு' (நாடகம்) போன்ற நூல்களோடு 'அரங்கக் கலைஞர் ஐவர்" எனும் நூலும் கலை இலக்கியக் களத்தின் வெளியீடாக அச்சுவாகனம் ஏறியது. 'பொறுத்தது போதும்', 'சங்காரம்', 'கோடை' என்னும் அரங்கக் கல்லூரி நாடகங்களிலும் நடித்திருந்தார். இவர் புகழ்பாட இறுதிவரை தோழமையுடன் இருந்த பற்பல கலைஞர் அறிஞர் மத்தியில் எமது வார்த்தைகள் ஒரு வீதமாகத் தான் இருக்கும். இவர் பிரிவால் வாடும் பதிவிரதையாம் நமது நண்பி பாலாம்பிகை அவர்களுக்கும் மகன் பாலகுமார் குடும்பத்திற்கும் தயாபரன் சகிதேவி குடும்பத்திற்கும் இறைவன் ஆறுதலைத் தந்து ஆசீர்வதிக்கட்டும். கண்ணியம் மிக்க கனவானாக மதித்து ஆழ்ந்த அன்பையும் மரியாதையையும் கொடுத்துப் பழகிய கலைப்பேரரசின் மறைவு எமது இயலாமையும் இவ்வளவு காலத்துத் தொடர்பின்மையையும் குறித்து அல்லற்படுகிறது. அவரது ஆத்மா, ஆடலரசனின் நடிப்பில் இயற்கையின் அசைவுகளில் ஆனந்தம் பெறட்டும்.

அடுத்த இதழ் தமிழர் வாழ் பகுதியில் உள்ள **பனை வளம்** குறித்த சிறப்பு இதழ். இது தொடர்பாக பொருளாதார பண்பாட்டு, சமூக நோக்கிலான கட்டுரைகளும் கண்ணோட்டங்களும் கருத்துரைகளும் செய்தி ஆய்வுகள், நூல் திறனாய்வுகளும் வரவேற்கப்படுகின்றன.

ஏ.ரி. பொன்னுத்துரையும் நானும்

கவிஞர் கந்தவனம்

திரு ஏ.ரி பொன்னுத்துரை அவர்களை நான் முதன்முதலிற் சந்தித்தது சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியில். அவர் அங்கு 1951லிருந்து டீ.யு. படிப்பை மேற்கொண்டிருந்தார். நான் அங்கு படிக்கச் சேர்ந்தது 1954ல். அவர் தங்கி இருந்தது செசன் தோமஸ் விடுதியில். நான் இருந்தது செலையூர் விடுதியில். 1954லிலேயே செசன் தோமஸ் விடுதிக் கலைவிழா ஒன்றில் அவர் நடித்த "ராகி மை டியர்" என்ற இன்பியல் நாடகத்தைக் பார்க்க நேர்ந்தது. விழா முடிவில் அவரைச் சந்தித்துப் பாராட்டினேன். தனது அறைக்கு வரும்படி அழைத்தார். நேரம் நள்ளிரவைத் அண்டிக் கொண்டிருந்ததால் அடுத்த நாள் சந்திப்பதாகச் சொல்லிப் பிரிந்துவிட்டேன்.

அடுத்தநாட் சந்திப்பு அவரைப்பற்றி அதிகம் அறிந்து கொள்ள வைத்தது. ஒளிவு மறைவில்லாத பேச்சு அவரது கலையுள்ளத்தை உணர வைத்தது. நாடகம் பற்றிப் பேசுகையில் தன்னையே மறந்துவிடுவார். குவேனி, முதலாளி தொழிலாளி போன்ற நாடகங்களைத் தயாரித்துக் கிறிஸ்துவக் கல்லூரியில் தான் மேடையேற்றிய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். அவர் அப்பொழுது இறுதி வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அடுத்த ஆண்டு (1955) பட்டப் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறிவிட்டார்.

பொன்னுத்துரை அவர்கள் யாழ்மாவட்டத்தில் உள்ள தெல்லிப்பழையின் கீழைக் கிராமமாகிய குரும்பசிட்டியில் 1928ஆம் ஆண்டு பிறந்தவர். குரும்பசிட்டி நாடகக் கலைஞரும் பிரபல ஓவியருமான திரு.கே.கே.வி.செல்லையா அவர்கள் 1924இல் மேடையேற்றிய "நாட்டாமை நாகமணி" என்ற சமூக நாடகத்திலேயே இவர் முதன்முதலாக நடித்தார். அதனைத் தொடர்ந்து தாம் கற்ற பாடசாலைகளிலும் பல நாடகங்களில் நடித்தார். குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலையில் (திரு.பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயம்) "அல்லி அருச்சுனா" என்ற இசை நாடகத்திலும் வயாவிளான் மத்திய கல்லூரியில் "பக்த துருவன்" என்ற நாடகத்திலும் நடித்துள்ளார். எனினும் பரமேஸ்வராக்கல்லூரியில் படித்த காலத்தில் 1950ஆம் ஆண்டு பிரெஞ்சு நாடக ஆசிரியர் மோலியரின் "உலோபியின் காதல்" என்ற நாடகத்தில் உலோபியாக நடித்துப் புகழ்பெற்ற அனுபவத்தையே என்னுடன் பெருமையோடு பகிர்ந்து கொள்வதுண்டு. தனது நாடக அனுபவம் பற்றிப் பேசும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் "உலோபியின் காதல்" என்ற நாடகத்துடனேயே தனது நாடக உலகம் பிரவேசம் தொடங்கியது என்று குறிப்பிடுவார்.

'விதியின் சதி" என்ற நாடகமே இவர் எழுதித் தயாரித்து நடித்த முதல் நாடகமாகும். இது 1951 இல் குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் மேடையேற்றப்பட்டது. சன்மார்க்கசபை இவரது ஆரம்பகால நாடக முயற்சிகளுக்கு நல்ல களம் அமைத்துக் கொடுத்தது. தங்கம், இருமனம், நிறைகுடம் ஆகிய நாடகங்கள் இங்கேயே முதன் முதலாக மேடையேற்றப்பட்டன. சன்மார்க்க சபையின் பொதுச் செயலாளர்- செயல்வீரர் திரு.த.இராசரத்தினம் அவர்கள் பொன்னுத்துரையின் கலைப்பணிகளுக்கு ஓர் உந்துசத்தியாகவே விளங்கினார். இவர் எது கேட்டாலும் அவர் மறுப்பதில்லை. அவர் ஆலோசனைகளை இவர் மீறுவதில்லை. அத்துடன் பிற்காலத்தில் சன்மார்க்க சபைத்தலைவராக இருந்த திரு.மு.சபாரத்தினம், இரகசிகமணி கனக.செந்திநாதன் ஆகியோரும் கலைத்துறையின் பொன்னுத்துரையை வழி நடத்திய பெருமக்களாவர்.

நான் 1964இல் குரும்பசிட்டி திரு.பொ.இளையப்பாவின் மகள் தவமணியைத் திருமணஞ் செய்து அங்கு வாழத் தொடங்கியதையடுத்து பொன்னுத்துரைக்கும் எனக்கும் இடையிலான தொடர்பு நெருக்கமாயிற்று. சன்மார்க்க சபைப் பணிகளில் அவர் என்னை ஈடுபடுத்தினார். தனது நாடகங்களிலும் என்னை நடிக்க வைத்தார். அவர் நடேஸ்வராக் கல்லூரியிற் படிப்பித்த காலத்தில் பல தடவைகள் என்னை அழைத்து அங்கு பேச வைத்திருக்கின்றார். அவற்றில் ஒரு பேச்சு கூனியைப் பற்றியது. மந்தரை சூழ்ச்சிப்படலம் அப்பொழுது மேல்வகுப்பு மாணவருக்குப் பாடநூலாகி இருந்தது. கூனியை எல்லோரும் கொடுமைக்காரி என்று சொல்வது தான் வழக்கம். நான் சற்று வித்தியாசமான கோணத்தில் கூனியின் விவேகம், பேச்சு வன்மை முதலியவற்றை எடுத்துக்கூறி நினைத்ததைச் சாதித்துவிட்ட ஒரு கெட்டிக்காரி என்று பேசினேன். அடுத்தநாள் பொன்னுத்துரை மாஸ்டர் எனது வீட்டுக்கு வந்து எனது பேச்சைப்பாராட்டி, நடேஸ்வராவில் கேட்டுக்கொண்டிருந்த எல்லோருமே நன்கு இரசித்தார்கள் என்றும் கூறி அந்தப் பேச்சை எழுத்தில் வடிக்கும்படி தூண்டினார். அதுவே

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

மண்ணையும் மனங்களையும் நேசிப்போம் ....

T: 416 • 264 • 8798 F: 416 • 264 9500 www.ctr24.com

படிப்பகம்

கலைப்பேரரசு

ஏ. ரீ. பொன்னுத்துரை

ஒரு புண்ணிய ஆத்மா பற்றிச் சிறிது எழுதக்கிடைத்தமை எமது பெரும் பேறாகும். அவர் எப்படிக் கலைப்பேரரசு எனும் பட்டத்தைப் பெற்றார் என்பதிலிருந்து ஆய்வு செய்யலாம் எனத் தோன்றுகின்றது.

நாடகங்களை எழுதுதல், நெறிப்படுத்துதல், நடித்தல், ஒப்பனைத்திறன், சிறுவர் நாடகம், நாடகங்களை நூலுருவாக்கல் எனப்பல முகங்களிலும் சேவை செய்தவர். அவருடைய வெள்ளிவிழாவின் போது- மாவை ஆதீன கர்த்தர் பிரம்மஸ்ரீ சண்முகநாதக்குருக்கள் ஆதரவில்- ஒரு முத்தமிழ் மன்றமும், ஒரு சுவடிச்சாலையும் இயங்கி வந்தன. அவர்கள் ஏ.ரி.பி. க்கு பட்டம் கொடுப்பதற்காக ஐந்து பெயர்களை எழுதி முருகன் பாதங்களில் வைத்து ஒன்றை எடுத்தபோது "கலைப்பேரரசு" வந்தது. ஏ.ரி.பி. பதறிப்போனார். எனது குரு சொர்ணலிங்கம். அவர்களுக்கே "கலையரசு" என ஒப்புக்கொள்ளமுடியாது என்றார். ஆனால் சொர்ணலிங்கம் அவர்களே மேடையில் அவரைப்புகழ்ந்து, பட்டமும் தகுதியானது எனக்கூறி தானே அதனை வழங்கினார். நெகிழ்ந்து போன ஏ.ரி.பி., நெடுஞ்சாண் கிடையான விழுந்து சொர்ணலிங்கத்தை வணங்கியமை மேடைக்குப் புது அனுபவமாகவும் தற்காலத்தில் ஒரு சம்பிரதாயமாகவும் மாறிவிட்டது.

குரும்பசிட்டி மண்ணிலே பிறந்து அந்த மண்ணுக்கேயுரிய கிராமிய பண்பாட்டுப் பழக்க வழக்கங்களோடு வளர்ந்து, அந்த மண்ணின் மங்கையையே மணந்து அம்மண்ணுக்குப் பெருமை செய்ய ஒரு மகனையும் ஒரு மகளையும் தந்து வாழ்ந்தவர். ஈற்றில் இராணுவம் துரத்தியடித்தபோது யாழ்நகர் சென்று நடைப்பிணமாக வாழ்ந்து இறைவன் அடி சேர்ந்தவர்.

1958ஆம் ஆண்டு பட்டதாரிப் பட்டத்துடன் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தனது முதலாவது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்த காலம் தொடக்கம் எமக்கும் அறிமுகமானவர். ஏற்கனவே சன்மார்க்க சபையுடன் எமக்கிருந்த தொடர்பினால், அவர் அறிந்து வைத்திருந்து தம்மை எமக்கு அறிமுகம் செய்துவைத்தார். ஆசிரியத் தொழிலில் பதவியுயர்வுகளும் இடமாற்றல்களும் பெற்று ஈற்றில் அதிபராகவும் கடமை ஆற்றினார்.

பாடசாலைகளில் நாடகக்கல்வி பற்றி அரசு சிந்திக்காத காலத்திலேயே, பாடப் புத்தகங்களிலுள்ள கதைகளுக்கு நாடகம் எழுதி வகுப்புக்குக் கொடுத்து நடிப்பிப்பார். அதையே உடை, ஒப்பனை செய்து தவணை முடிவில் மேடையேற்றுவார். மாணவர்களுக்கு நாடகப்போட்டிகள் வைத்த காலத்தும் கல்லூரி சார்பில் நாடகங்களை அனுப்பி வைப்பார். பொது மக்களுக்கான நாடகங்களில் தானும் தசரதனாகவோ, கர்ணனாகவோ, பிச்சைக்கார வேடம் பூண்ட நாயன்மார்களாகவோ திறமையாக நடிப்பார். இரவிரவாக எழுதிய நாடகப் பிரதிகளைப் பார்வையிட்டுத் திருத்தும் வேலை கிடைக்கும். இவரிடம் நாடகம் கற்ற மாணவ மாணவிகள் அநேகர் கனடாவி ல் உளர். கோதை அமுதன், பூங்கொடி, முரளி, சுசீலா இன்னும் பலர். நாடகங்களின் பெயர்களை விரிவஞ்சி விடுகிறோம்.

பெரியவர்களின் நாடகமாக "இறுதிப்பரிசு" எனும் குமணன் நாடகம், நிறைகுடம், தாளக்காவடி, ராமாயண சோகங்கள், பத்தாயிரம் எனப்பல சமூக இதிகாச நாடகங்கள். எந்த ஒரு பாத்திரத்தையும் ஏற்று சிறப்பாக நடித்தலில் பின்னிற்க மாட்டார். நடேஸ்வராக்கல்லூரி பெண் ஆசிரியர்கள், "கற்புக்கனல்" எனும் நாடகத்தை "யாழ்ப்பாணத்தேவன்" எனும் மகாதேவனின் இயக்கத்தில் பயின்று கொண்டிருந்தனர். இராமநாதன் கல்லூரி அதிபராயிருந்த புவனேஸ் சச்சிதானந்தன் கண்ணகியாக நடித்தார். வஞ்சிப்பத்தன் வேடத்தை இழிவு எனக் கருதி ஒருவருமே ஏற்கவில்லை. அதனை இவர் ஏற்றுக்கொண்டு மிகத் திறமையாக நடித்துப்பின் கொழும்பில் அரங்கேற்றிய போது கூட பத்திரிகை விமர்சனங்களில் வஞ்சிப்பத்தனுக்கு ஒரு நல்ல இடம் கொடுக்கப்பட்டிருந்தது.

இசையும் நடனமும் கூடிய "தாளக்காவடி" நாடகத்தில் அண்ணாவியாராக வந்து இலங்கை பூராக மேடை ஏற்றப்பட்டு பெரும் வெற்றியை நிலை நாட்டியது. தனியொருவனாகச் செயற்படுவதையே விரும்புவார். கூட்டுச்சேர்ந்தால் குட்டையைக் கலக்கிக் குழப்பும் வேலை தான் நடைபெறும் என்பார்.

நாடக டிப்ளோமா பயிற்சிக்கு வர்த்தமானி அறிவித்தலைப் பார்த்து விண்ணப்பப்படிவம் எடுப்பித்து ஒரு சில மாதங்களால் வயது கூடியமையால், அதை என்னிடம் தந்து நீங்கள் ஒரு நாடகப் பைத்தியம் தானே விண்ணப்பியுங்கள் என ஊக்குவித்தார். நண்பர்கள் பலர் விண்ணப்பித்திருந்தும் எமக்கு ஒருவரும் அறியத் தரவில்லை. விண்ணப்பித்தோம். இப்படி ஒரு பரந்த உள்ளம் யாருக்கும் இருக்க முடியாது. 'வைக்கல்பட்டடை நாயாகத்தான்' நடந்து கொள்வார்கள்.

சிறு பாத்திரத்தையும் கனகச்சிதமாகச் செய்யக்கூடிய இன்னொரு சம்பவம். குழந்தை சண்முகலிங்கம் எங்களில் ஒரு சிலரின் உதவியோடு திருநெல்வேலிச் சந்தியடியில் ஒரு நாடகப்பட்டறைப்பயிற்சி தொடங்கினார். ஏ.ரி.பி. அதிலே வந்து மாணவனாகச் சேர்ந்து கொண்டார். அநேகமாக க.பொ.த உயர்வகுப்பு மாணவர்களே

"குறமகள்" வள்ளிநாயகி இராமலிங்கம்

கலந்து கொண்ட அப்பட்டறையில் அமைதியான ஒழுங்கான மாணவனாக இரு என இருந்தும் எழு என எழுந்தும், தன் வயதேயான நடத்துநர்களோடு அநாவசிய கதைகள் ஒன்றும் இல்லாமலும் நடந்து பயிற்சியை முடித்தார். நடத்துனர்களிடம் சிறிது காழ்ப்புணர்ச்சி இருக்குமோ, அசட்டையாக நடத்துகின்றார்களோ, தைரியமிழக்கச் செய்கின்றார்களோ என எமக்குத் தோன்றும். எனினும் ஏ.ரி.பிக்குக் கலையிலுள்ள விசுவாசத்தைக் கண்டு கொண்டனர்.

அரங்கக் கல்லூரி நடாத்திய நாடகங்கள் பல முதலாவதில் இவருக்கு ஒரு சிறு பாத்திரம். சில நிமிடங்களே வந்துபோகும் சலவைத் தொழிலாளி, இடுப்பில் துண்டு, கழுத்தில் ஒரு காய் கட்டிய கயிறு, தொங்கு கொண்டை, கையில் ஒரு சிறு துண்டு, மிகப்பவ்வியமாக நின்று பயந்து பயந்து பேசியது, ஸ்பொட் வெளிச்சத்தில் அவர் நிற்கும் பாவம் முதுகு வழியாகப் புலப்படுகிறது. முத்துமுத்தாய் வேர்வைத் தொப்புளங்கள் துளிர்க்கின்றன. உணர்ச்சி பிரதிபலிக்கின்றது. பாராட்ட வந்த பெரிய பெரிய அறிஞர்கள், கலைஞர்கள் சலவைத்தொழிலாளியின் நடிப்பை மிகச்சிலாகித்து, ஒரு சிறு பாத்திரத்திற்கும் மிகப்பெரும் வலுச்சேர்த்த பெருமை கலைப் பேரரசினுடையது என்றனர். அதனால் இக்கலைஞர் பற்றிய புனிதமான உயர் மதிப்பொன்று பரவியது. தொடர்ந்தும் அவர்களின் நாடகங்களில் நடித்துள்ளார்.

ஈழகேசரிப் பொன்னையா அவர்களின் ஞாபகமாக விளங்குவது சன்மார்க்க சபையும் அதன் கட்டடமும், அங்கே பல அரிய நூல்களும் அந்தக்கால கட்டத்திலும் அதற்கு முன்னரும் வெளிவந்த பத்திரிகைக் கட்டுகள் இவை எல்லாவற்றிற்கும் பாதுகாவலராக இருந்தவர்கள் ஏ.ரி.பி குடும்பத்தினர். இச்சபை மூலமாக இந்திய இலங்கை அறிஞர் பலர் சொற்பொழிவாற்ற வருவர். இவற்றுள் ஈடுபட்டுப் பல சேவைகளைச் சமூகத்திற்கு ஆற்றியுள்ளார்.

யாழ் இலக்கிய வட்டத்தின் தொடக்க நிலை அங்கத்தவராக இருந்து ஒழுங்காக சமூகம் அளிப்பதோடு அவ்வப்போது செயலாளர் பொருளாளர் உபதலைவர் தலைவர் பதவிகளையும் அலங்கரித்துவந்தார். நகரத்திலேயே எப்போதும் கூட்டமா? கிராமப்புறங்களிலும் சந்தித்துக்கொள்வோமென தெல்லிப்பளையிலும் சில சமயங்களில் கூட்டங்களை நடாத்த முன்னின்றார். பஸ் எரிப்புகளும் பிரயாணக் கஷ்டங்களும் ஏற்பட்ட காலத்தில் ஓய்ந்து போக இருந்த யாழ் இலக்கிய வட்டத்தைத் தட்டி எழுப்ப முயன்று பாடசாலைகளில் சில விழாக்கள் வட்டத்தின் அனுசரணையோடு நடாத்தப்பட்டது. அந்தப் பிரதேசத்திலுள்ள வட்டத்தவர் சிலர் அங்கே போய் உரையாற்றியும் நாடகம் பயிற்றியும் எமது சொந்தச் செலவில் இனிப்புகள் வழங்கியும் வருவதோடு யாழ் இலக்கிய வட்டம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறதைப் பத்திரிகை வாயிலாகத் தெரியப்படுத்துவார். தலைமை மாறியவுடன் சில செயற்பாடுகளில் மீண்டும் தளர்ச்சி ஏற்பட்டது.

கலாநிதி நா. சுப்பிரமணியம் ஐயரால் "தெல்லிப்பளை கலை இலக்கியக்களம்" எனும் அமைப்பு தொடங்கப்பட்டது. அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வலிகாமம் வடக்கின் இலக்கிய ஆர்வலர்கள் வந்திருந்தனர். ஏ.ரி.பொன்னுத்துரை கோகிலா மகேந்திரன், நாகராஜன், செல்லத்துரை, குறமகள், கௌசல்யா, அப்புத்துரை, மயிலங்கூடலூர் நடராஜன் முதலியோர் நிர்வாக அங்கத்தவர் குழவில் இடம் பெற்றனர். காலத்துக்காலம் தலைமைப்பதவி மாறும். ஏ.ரி.பொன்னுத்துரை தலைமை வகித்தபோது நிறைய நிகழ்ச்சிகள் செய்யப்பட்டன. பிரதேச வாரியான இச்சங்கம் நல்ல பயனைக் கொடுத்தது. ஓடியோடி உழைக்கும் ஏ.ரி.பியும் செயலாளர் கோகிலா மகேந்திரனும் உச்சமான செயற்பாடுகளைத் தந்து கொண்டிருந்தனர்.

சொற்பொழிவாற்றல், நாடகப்போட்டி, பேச்சுப்போட்டி முதலியவற்றிற்கு நடுவு நிலைமை முதலியவற்றுள் ஈடுபடுவார். எஸ்.பொ.வினால் முன்வைக்கப்பட்ட சுவையான பரிசோதனைக்களம் ஒன்றில் உருவகக்கதை, சிறுகதை, ஓரங்க நாடகம், கவிதை, குறுநாவல் எனும் ஐந்து இலக்கிய உருவங்களும். "புதியன புகுதல்" எனும் பொருளில் அமைக்கப் பெற்று சில எழுத்தாளர்களைக் கொண்டு விமர்சனம் கூறப்பட்டது. அமரர் சிவகுருநாதன் (தினகரன்) களம் அமைத்துக்கொடுக்க ஓர் உயர் தரத்திலான விமர்சன அரங்கு நடந்தது. அறிவியல் சார்ந்த நல்லதொரு விமர்சனம் கலைப்பேரரசால் முன்வைக்கப்பட்டது.

வானொலி நாடகங்கள் பல எழுதியும் நடித்தும் இருக்கிறார். கலையரசு சொர்ணலிங்கம், குழந்தை சண்முகலிங்கம், குறமகள், விமலா சின்னத்தம்பி, ஏ.ரி.பொன்னுத்துரை எனப் பலர் 'சானா" வின் ஏற்பாட்டில் 5,6 நாடகங்களை யாழ்ப்பாணத்தில் வானொலிக்காகப் பதிவு செய்தனர். எல்லாவற்றிலுமே ஏ.ரி.பொன்னுத்துரை பங்கெடுத்திருக்கிறார்.

ஏ.ரி பொன்னுத்துரை B.A. என்று எப்பொழுதும் தன்பெயரை எழுதிக்கொள்வார். ஆரம்ப காலங்களில் ஆசிரியர் சிலர் பரிகாசமாகவும், ஏளனமாகவும் குத்திக் கதைப்பர். அதற்கு அவர் நிதானமாகவே பதில் சொல்வார். "ஐம்பதுகளில் கிராமமட்டங்களில் பல்கலைக்கழக மட்டத்துக்குச் செல்பவர்கள் மிகமிகக் குறைவு. இந்தியாவில் படிக்கும் வாய்ப்பு கிட்டியதும் நம்மவர் பலர் அங்கே சென்று பட்டதாரிகள் ஆயினர். என் பெற்றோரும் அண்ணரும் என்னைப் பட்டதாரி ஆக்க வேண்டுமென்று அல்லும் பகலும் தோட்டங்கொத்தி மெய்வருந்திப் பணம் சேர்த்தனுப்பினர். சராசரி மாணவனாகவே இருந்த நான் இவர்களது ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக சகமாணவரோடு அரட்டை அடிக்காமல் கேளிக்கைகளுக்குச் செல்லாமல், நாடகக்கலை தவிர்ந்த மிகுந்த நேரமெல்லாம் கஷ்டப்பட்டுப் படித்துப் படித்து உருப்போட்டு மனனம் செய்து தட்டுத்தடங்காமல் சித்தியடைந்தேன். இந்த இரு எழுத்துகளுக்காக வீட்டில் பட்ட கஷ்டமும் நான் பட்ட கஷ்டமும் அதற்காக நான் எனது பெயருடன் டீ.யு எனச் சேர்த்து எழுதுகிறேன். இவர்களுக்கு என்ன நட்டம்: நானா படிக்க வேண்டாம் என்று சொன்னேன் அவன் போடவில்லை, இவன் போடவில்லை, என உதாரணங்காட்டாமல் நான் போடவில்லை என ஏன் சொல்லமுடியவில்லை" எனப்பதில் சொல்வார்.

தானுண்டு தன்பாடுண்டு எனத்தான் ஆசிரியர் அறைகளில் நடந்து கொள்வார். எந்தவொரு வாதப் பிரதிவாதங்களிலும் கலந்து கொள்ள மாட்டார். எழுந்து போய்விடுவார். நிர்ப்பந்திக்கப்பட்டால் இருந்து கேட்டுக் கொண்டிருப்பார். பொதுப் பிரச்சினை என்றாலும் தன் உள்ளத்தை வெளிவிடமாட்டார். நடப்பது நடக்கட்டும் எனக்கூறி சிந்தனைக்கு இடங்கொடார். பெண்களை மிகவும் மதிப்பார். அநாவசியச் சொல்லாடல்களை வைத்துக் கொள்ள மாட்டார். தகுதி கண்டு தான் புகழ்வார். அதுவும் ஓரிரு வார்த்தைகள் தான். தன் அறிவுரையை ஏற்பார்களாயின் மட்டும் சில திருத்தங்களைச் சொல்வார். "நீங்கள் பெண்ணாக இருப்பதால்

(தொடர்ச்சி 27ம் பக்கம்)

(28ம் பக்கத் தொடர்ச்சி) **கலைப்பேரரசு...**

உங்கள் கல்வித் தகுதிகளைக் கட்டாயம்

படிப்பகம்

www.padippakam.com

நெல்லை மாவட்ட தட்டார்களின் வாழ்வியலும் நகைத் தொழில் நுணுக்கங்களும்

- பெ. சாந்தி

பொற்கொல்லர், ஆச்சாரி, தட்டார், விஸ்வகர்மா என்று அழைக்கப்படும் இவர்கள் பரம்பரை பரம்பரையாக பொன்னால் ஆபரணங்கள் செய்யும் கலையைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருபவர்கள். தங்களுடைய வரலாறு உலகின் படைப்பு தோன்றிய நாளிலிருந்து தொடங்குவதாகப் பெருமிதம் கொள்கின்றனர். தங்களுடைய சமூகப் பாரம்பரியம், சமூகப் பெருமை ஆகியவை குறித்து தட்டார்களிடம் பெருமையான கருத்துக்கள் வழங்குகின்றன.

இந்தக் கட்டுரை விஸ்வகர்மர்களின் புராண வரலாறு, இன்றைய பிரிவுகள், சாதீய உரிமைப் போராட்டங்கள் குறித்த தகவல்களை முதல் பகுதியாகவும், விஸ்வகர்ம தட்டார்களின் சமூக வாழ்வியல் குறித்த தகவல்களை இரண்டாம் பகுதியாகவும், தட்டார்களின் தொழில் நுட்பங்கள், அவர்கள் தொழில் சார்ந்து எதிர் கொள்ளும் பிரச்சனைகள் ஆகியவற்றை மூன்றாவது பகுதியாகவும் எடுத்துரைக்கின்றது. இறுதியாக நாட்டார் கைவினைக் கலையாக தட்டார் தொழில் எவ்வாறு பொருந்துகிறது என்பதை குறித்துப் பேசுகின்றது.

விஸ்வகர்மர்கள் புராண வரலாறு.

உலக வரலாற்றில் முக்கிய தொழில்களான, கொல்லர், தச்சர், கன்னர், சிற்பி, தட்டார் என்னும் ஐந்து தொழில்களையும் கம்மாளர் தொழில் என்றும், இத்தொழில் செய்பவர்கள் விஸ்வகர்மர்கள் எனவும் அழைக்கின்றனர். இவர்களை ஜான் பிரௌன் (John Brown) என்ற அறிஞர் Makers of the World என்று அழைக்கின்றார்.

விஸ்வகர்மர்கள் தங்கள் சாதியினைப் பார்ப்பனர்களின் மனுதர்ம வர்ணாஸ்ரம அடிப்படையில் அணுகாமல் தொழிலின் அடிப்படையில் தங்களை அச்சாதியினராக அறிவி த்துக் கொள்கின்றனர். முதல் சிருஷ்டிகர்த்தரான ஸ்ரீ விராட் விஸ்வப் பரப்பிரம்மத்தின் வம்சத்தில் வந்தவர்களாகக் கூறிக் கொள்வதுடன் தங்களையும் விஸ்வப் பிராமணாள் என்றே குறிப்பிடுகின்றனர். உலகத்தின் பரப்பிரம்மம் (பரப்பிரம்மம் என்பது ஆணும், பெண்ணும் இணைந்தது.) முதல்வன், ஆதிதேவன், வழிபாட்டுக்குரியவன், ஸ்ரீ விராட் விஸ்வப் பரப்பிரம்மம். இது ஓங்கார வடிவிலானது. அதனுடைய வம்சமாகவும், சிருஷ்டிக்கு, பிரதி சிருஷ்டி உருவாக்கும் வாரிசாகவும் திகழ்பவனே விஸ்வகர்மா என்ற விஸ்வப் பிராமணர்.

கோத்திரம்

இன்று கோவை, சேலம், திருச்சிப் பகுதியிலுள்ள விஸ்வகர்மர்களிடம் கோத்திரம் தெளிவாகப் பின்பற்றப்படுகிறது. திருமணங்கள் குலம், கோத்திரம், தெய்வம் பார்த்து முடிவு செய்யப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கோத்திரப் பிரிவுகள் திருமணத்தின் பொழுது பார்க்கப்படுகின்றன ஐந்து பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் தங்களுக்குள் கல்யாண உறவுகளை செய்து கொள்வதோடு, ஐந்து பிரிவுகளுக்கிடையிலும் பேதமின்றி கல்யாண உறவுகளை ஏற்படுத்தி கொள்கின்றனர் மேலும் அவர்களுடைய சமூக பெரியோர்களும், ஐந்து பிரிவுகளும் பேதமின்றி ஒற்றுமையாக இருக்க வேண்டியதை வலிமையாக அறிவுறுத்துகின்றனர்.

இவர்கள் தங்களை விஸ்வ பிராமணர்கள் என்று அழைத்துக் கொள்வதால் பார்ப்பனர்களுக்கும் இவர்களுக்குமிடையில் தொடர்ந்து போராட்டம் நடந்து வந்ததாகத் தெரிவிக்கின்றனர். ஒரு கால கட்டத்தில் (19-ம் நூற்றாண்டு) இரு பிரிவினருக்குமிடையில் வாக்குவாதம் முற்றி பார்ப்பனர்கள் விஸ்வ பிராமணர்களைத் தாக்கினராம். அதற்கு ஆதாரமாக சில நீதி மன்ற நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

சித்தூர் ஜில்லாத் தீர்ப்பு

மார்க்க சகாய ஆச்சாரியார் என்பவர் சித்தூர் ஜில்லா சதூர்பேரி கிராமத்தில் விஸ்வ பிராமணக் குலத்தில் சுபர்ணஸரிஷி கோத்திரத்தில் பிறந்து பொற்பணி செய்தும் வேத விற்பன்னராகத் திகழ்ந்தார். 1814ஆம் ஆண்டு ஒரு திருமணத்தில் புரோகிதராகக் கலந்து கொண்ட பஞ்சாங்கக் குண்டையன் என்ற பார்ப்பனர், வேறு சிலருடன் சேர்ந்து வந்து "நீங்கள் புரோகிதம் செய்யத் தகுதியில்லாதவர்கள்" என்று கூறிக் கலகம் செய்தனர். அதன் பேரில் கிராமப்பஞ்சாயத்து, படித்த பெரியோர், காவல் நிலையம், கீழ்க்கோட்டு, மேற்கோட்டு என்று ஐந்துவித பஞ்சாயத்துக்களிலும் தன் குலத்திற்கே வேத, இதிகாச, புராண ஆதாரங்களை விளக்கியும் பார்ப்பனர்களுக்கு இருக்கும் இழிநிலைகளைத் தன் வாதத் திறமையால் விளக்க, அதனை விசாரித்த நீதிபதிகள், தம் தீர்ப்பில் இதில் தலையிட பார்ப்பனர்களுக்கு எந்த உரிமையும் இல்லை எனவும், மார்க்கசாகாய ஆச்சாரியாரின் கூற்றில் எல்லாம் உண்மை, அவர்களுக்கே எல்லா உரிமையும் உண்டு என்று தீர்ப்புக் கூறி பஞ்சாங்கக் குண்டையனிடமிருந்து அபராதம் வசூலிக்க உத்தரவிட்டனர்.2

சேலம் ஜில்லா நீதிமன்றத் தீர்ப்பு

கி.பி. 1843ஆம் ஆண்டு இராமலிங்க ஆச்சாரி என்ற விஸ்வபிராமணரைச் சுப்புராய ரெட்டி, நாராயண ரெட்டி, மாராடி ரெட்டி, பள்ளித்தாண்டவ படையாச்சி, இராமலிங்க படையாச்சி ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து, தோட்டி, மொட்டையன் என்றும், தாழ்த்தப்பட்டோரை வைத்து அடித்தும் பூணூலை அறுக்கச் செய்தனர். இதனால் பாதிக்கப்பட்ட அவர் மான நஷ்ட வழக்குத் தொடுத்து தன் குலப் பெருமைகளை விளக்கி தான் மீண்டும் பூணூல் அணிவதற்கு உண்டான செலவுகளை அபராதமாகப் பெற்று தன் குலமேன்மையை நிலைநாட்டினார்.3

சென்னை மாகாண அரசு ஆணை

1936ஆம் ஆண்டு இராஜகோபாலாச்சாரி சென்னை மாகாண முதலமைச்சராக பதவி வகிக்கும்பொழுது, விஸ்வகர்மா பிராமணர்கள் தங்கள் பெயருக்கு பின்னால் ஆச்சாரியார் என்று போடக்கூடாது என்று தடை விதித்தார். தொடர்ந்து விஸ்வகர்ம பிராமணர்கள் போராட்டம் நடத்தி நீதிமன்றம் சென்று இந்த அரசாணையை விலக்கிக் கொள்ள வைத்தனர்.

நமது பழங்கால இலக்கியங்களிலும் பண்டைய அரசர்கள் அளித்த செப்பேடுகளிலும் விஸ்வகர்மர்கள் ஆச்சாரியார்கள் என்று குறிக்கப்பட்டுள்ளனர். வெள்ளைக்கார பாதிரிகள் துரைகள் எழுதிய நிகண்டுகள், குறிப்பேடுகள், பத்திரங்களில் விஸ்வகர்மர்கள் ஆச்சாரியார்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர். 4 சித்தூர் ஜில்லா தீர்ப்பிற்குப் பின்பு விஸ்வ பிராமணர்கள் தங்களது எந்த ஒரு வைபவத்திற்கும் பார்ப்பனர்களை அழைப்பதில்லை என்று முடிவு செய்து தங்கள் இனத்தவர்களுக்கு வேத சாஸ்திரம் கற்பிக்க பாடசாலைகளை ஆரம்பித்தனர். அதில் தேர்ச்சி பெற்றவர்களே இன்று கோயில் பணி முதல் (அர்ச்சகராக அன்றாட கோவில் பூஜை செய்வது முதல் கும்பாபிஷேகப் பணி வரை) குறைந்த அளவிலேயே உள்ளது. அத்துடன் சேமிக்கும் வழக்கம் மிகவும் குறைவு. எனவே தொழிலும் இல்லாது சேமிப்பும் இல்லாது வறுமையில் வாடுகின்றனர்.

கிராமப்புறங்களில் வசிக்கும் தட்டாரைப் பொறுத்தவரையில் 90 சதவிகிதத்தினர் சொந்த வீட்டில் வாழ்ந்து வருகின்றனர். நகர்ப்புறங்களில் ஐந்து சதவிகிதத்தினரே வீடு, நிலங்கள் என்று வசதியுடன் இருக்கின்றனர். தட்டார்கள் தங்களிடம் சேமிக்கும் வழக்கம் இல்லாதது, கல்வியறிவு குறைந்தளவில் இருப்பது, ஆடம்பரமோகம் இருப்பது குறித்து கவலை கொண்டிருக்கின்றனர். இருப்பினும் அவர்களின் வாழ்வியல் சூழல் திரும்பத் திரும்ப அவர்களைப் பழைய நிலையிலேயே வைத்திருக்கின்றது.

கல்விநிலை

பொதுவாகவே தட்டார்களின் கல்வியறிவு மிகக் குறைவு கல்வியறிவு இல்லாவிட்டாலும் தங்களது தொழில் அறிவில் வளமாக இருக்கின்றனர். மிகுந்த நுட்பமும் தேர்ச்சியும் பெற்றுத் திகழ்கின்றனர். கல்வியைப் பெறுவதற்கு வசதியற்ற சூழலும் சுயதொழில் கற்று, அதில் சிறந்து விடலாம் என்ற நம்பிக்கையுமே இவர்களது கல்வியறிவ-ிற்கு இடையூறாக உள்ளது. இக்குலப் பெரியோர்கள் தாங்கள் கல்வியறிவு பெறவில்லையே என்பதனைப் பெருங்குறையாகக் கருதித் தங்கள் சந்ததியினர் படிப்பில் முன்னேற்றம் காண வேண்டும் என்று முயற்சி செய்தாலும் இளைஞர்கள் மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவதில்லை. "படிப்பு ஏறலை தொழிலுக்கு வந்துவிட்டேன்" என்பதே பலரின் கூற்று. மாணவ பருவத்தில் உள்ளவர்கள் தொழிலில் பெறும் ஊதியம் பிற மாணவரையும் படிப்பில் நாட்டமிழக்கச் செய்துவிடுகின்றன. ஆனால் அனைவருமே ஒரு காலகட்டத்தில் படிக்கவில்லை என்றே வருத்தம் அடைகின்றனர்.

கல்வியில் சமூகத்தில் பின்தங்கிய சமூகம் என்று கல்வி உதவித்தொகை இருந்தும் மாணவர்கள் படிக்க மறுக்கின்றனரே என்ற ஆதங்கம் பெரியவர்களிடம் மிக அதிகமாக இருக்கிறது. தெலுங்கு பேசும் தட்டார்கள், தமிழ் பேசும் தட்டாரை விட உயர்கல்வி பெற்றுள்ளனர்.

பெண்களின் நிலை

தட்டார்களின் சமூகத்தில் பெண்களின் நிலை பிற சமூக பெண்களின் நிலையை ஏறத்தாழ ஒத்தே உள்ளது. குலநலச் சுவடி பெண்களைத் தட்டார் குலப்பெண்ணாக பார்ப்பவர் உடனே கண்டு கொள்ளும் வகையில் பின்வருமாறு இருக்க வேண்டுமெனப் பணிக்கிறது. 'பெண்கள் வலப்புறம் மேலாக்கு தரித்து, நத்து, புல்லாக்கு,தண்டை, பாடகம், வயிரமணி, பவளமாலை முதலியவைகளை அணிந்து நெற்றியில் குங்குமம், சந்தனம் பொட்டிட்டு வருவார்களாயின் அவர்களைப் பிற மக்கள் அனைவரும் யாரிடமும் கேட்காமலே அவர்கள் விஸ்வகர்ம வகுப்பார் என்று அறிந்து கொள்வர். இன்றும் சில கிராமப்புறங்களிலும், நகரில் சிலரிடமும், முக்கிய பண்டிகைகள்,திருக்கார்த்திகை, விரதநாட்களிலும் வலப்புற மேலாக்கு அணிந்து மடி கட்டிக் கொள்ளும் பாங்கு நிலவுகிறது.

கல்வி

ஆண்களோடு ஒப்பிடும்பொழுது பெண் கல்வி முன்னேறியுள்ளது. பூப்படைந்த பெண்களைப் பள்ளியிலிருந்து நிறுத்திய வழமை வெகுவாக மாறியுள்ளது. உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக்கல்வி பெறும் வாய்ப்பை இன்று பெண்கள் அடைந்து வருகின்றனர். சிறிய வயதில் 15 ,16 வயதுகளில் பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பது இன்று குறைந்துள்ளதும், பெண்கள் மேல்நிலைக் கல்வி பெறும் வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. சகோதரன் பத்தாவது முடிந்திருக்கும் நிலையில், சகோதரி, இளங்கலைப் பட்டம் பெறுவதும் இன்று காணக் கிடைக்கிறது.

குலநலச்சுவடி என்னும் நூல், பெண்களுக்குக் கல்வியறிவைக் கொடுத்து அருமையாக வளர்க்கும்படி பெற்றோரை அறிவுறுத்துவதுடன், குடும்பச் சூழல் இடம் கொடுப்பின், சங்கீதம், வீணை போன்ற வாத்தியப் பயிற்சிகள் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அத்துடன் கல்வி, கேள்வியில் சிறந்த பெண்ணை ஏற்ற மணவாளனுக்குச் சங்கீதத்தை அனுபவிக்கும் ஆற்றல் கொண்ட மணவாளனைத் தேடி பெண்ணைக் கொடுக்கவும் பெற்றோரை அறிவுறுத்துகிறது.

திருமணம்

இன்றைய வாழ்க்கைச் சூழலில் அருமையாக வளர்க்கப்படும் பெண்ணுக்குத் தகுந்த மணவாளன் கிடைப்பது குதிரைக் கொம்பாகிவிட்டது. மணமகனைத் தேடி மணமகள் வீட்டார் அலைவது சாதாரண நிகழ்வினம். ஓரளவு படித்த பெண்ணிற்கு நகைத் தொழில் செய்யும் மணமகனின் வருவாய் நிலையானதல்ல என்பதால் வருமானம் சுமாராக இருப்பினும் நிரந்தரமான அரசுப்பணி செய்யும் மணமகனையே தேடுகின்றனர். அரசுப் பணியில் உள்ளவர் விகிதாச்சாரம் 1 விழுக்காடு தான் உள்ளது. எனவே பெண்கள் திருமண வயதும் தகுந்த மணமகனுக்காக ஏறிக் கொண்டே இருப்பது இன்றைய நிதர்சனம்.

பெண்கள் சிறுவயதில் கணவனை இழந்துவிட்டால், மறுமணம் ஊக்குவிக்கப்படுகிறது. வெள்ளை ஆடை வயதான விதவைகளுக்குக் கூட கிடையாது. கணவன் கொடுத்த தாலி, மெட்டியைக்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com

கடிதம்

உரைமொழிவுக்கு ஓர் உரை

முதலாவது இதழாக ஒக்ரோபர் மாதத்தின் "உரை மொழிவு" மிகநல்லதொரு முயற்சியாக இருந்தது. குறிப்பாக வடிவ அமைப்பிலேயே தாம் தனித்துவமாய்த் தனியே போகின்றவர்கள் என்பதைக் குறியீடாக வெளியிடுவதற்காக, ஏனைய கனடியப் பத்திரிகைகளைவிட மாறுபட்டு முதல் பக்கத்தைக்கூடக் கறுப்பு வெள்ளையில் போட்டுள்ளார்கள். எனினும் பத்திரிகை தரமாகவே உள்ளது.

நாம் வாழும் சமூகத்தில் பேசப்படு பொருட்களாக வெளிக் கொண்டுவர வேண்டிய விடயங்கள் ஏராளம் உள்ளன என்றாலும் உலகளாவிய ரீதியில் அறியப்பட வேண்டியனவாக "நோம்சோம்ஸ்கியுடனான செவ்வியும்" Indigenism:the ideology யும் அமைந்தது. இலக்கிய அறிவு என்பது குறுகியளவில் நிற்காது பரந்திருக்கவேண்டும் என்னும் போது J.M கோயற்சிக்கான இலக்கிய நோபல் பரிசு பற்றிய செய்தியும் எட்வெட் செயிற் பற்றிய செய்தியும் வரவேற்கத்தக்கது.

அடுத்துத் தமிழ்சார் செய்திகளுக்கு வந்தால் தொ.பரமசிவனின் "சாதீய ஆய்வுகள்" நேற்றும் இன்றும் என்னும் கட்டுரை சற்று வன்மமாக இருப்பினும் சாதீயத் தோற்றுவாய் என்ன என்பதில் தேவைப்படுகின்றது. ஆனால் "கனடியச் சூழலில் தமிழ்ச்சாதி" என்பது மீண்டும் மீண்டும் அரைத்தமா அரைப்பதாக உள்ளது. அதேவேளை அக்கட்டுரைக்குத் தேவையற்ற தமிழ் அறிஞர்கள் பற்றிய தனிப்பட்ட விமர்சனம் விளக்கக் குறைவாகவும் அவதானிப்பு அற்றதாகவும் பத்திரிகை யின் தரத்தைக் குறைப்பதாகவும் உள்ளது. அத்தோடு கனடியச் சூழலில் கோயில்களின் பெருக்கம் இருப்பது என்னவோ உண்மை எனினும் இன்று தமிழ்ப் பண்பாட்டை நிரப்பும் மிகமுக்கிய காரணியாக இருப்பதால் அவ்விமர்சனத்தைத் தவிர்த்துக் கோயில்களுக்கான புதிய செயற்பாடுகளை அறிமுகம் செய்து வைத்திருக்கலாம்.

இதே போன்று "டானியல் நினைவு மலர் ஒருசிறு கண்ணோட்டம்" என்னும் கட்டுரை நன்கு விமர்சிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்நூல் பற்றிய மேலதிக விளக்கத்திற்குப் போகும்போது, இந்நூல் விழா நினைவுக்கு வருகின்றது. அவ்விழா வின் செயற்பாடுகளும் - நகர்த்தல்களும் - பேச்சுக்களும் இப்புத்தகத்தின் மதிப்பைக் குறைப்பதாக இருந்தது. எப்படியாயினும் இன்றை சூழலில் உதவாதனவற்றைக் காலத்தேவை கருதித் தவிர்ப்பதே நல்லது. (இரண்டு பக்கம் உள்ளது) இல்லாவிடில் பல சாதிப் பெயர்களால் புதியஇசங்கள் பல உருவாகும் அபாயம் வெகுவிரைவில் வரும். அவ்வரிசையில் பெண்ணியம் என்பது கோட்பாட்டு ரீதியில் அறியக்கூடிய தகவல்களாக உள்ளது. இன்று பெண்ணியம் பல கோலம் கொள்வதால் அது பற்றிய மேலதிக தகவல்களை அடுத்த இதழில் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இங்கே குறிப்பிடாத ஏனைய கட்டுரைகள் "குடும்பம் - சீர்வரிசை - நிகழ்த்துதல்", "தமிழ் நாட்டில் இலங்கை அறிஞர்கள்", "காந்தி - தலித்துக்கள், நிலம்பெயராக்கூத்துக்கள்", "தமிழ் வேரில் வெந்நீர்", "மானிடத் தோற்றம் பற்றிய ஆய்வு" என்பன பல தளங்களைக் சுட்டுகின்றன. அதேபோல் அழிந்து போகும் நிலையில் உள்ள நாட்டார் செய்திகள் ஒரு பதிவாக அமைகி ன்றன. சமூகச்சீர் திருத்தங்களை இடதுசாரி வலிந்து எடுத்துக் கொண்டாலும் இதன் தொடர்ச்சிக்கு இறைவன் ஆசி கிடைக்கட்டும். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

க.குமார்
விக்ரோரியாபார்க், ரொரன்ரோ.

அன்றும் இன்றும் மனிதனை மயக்கப் பயன்படும் மாபெரும் ஆயுதம் மதம்.

ஆதி மனிதன் இயற்கையை வணங்கினான். இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் அவனைப் பீதிக்கு உள்படுத்தியது. அந்தக் கிலி வழிபாடாக மாறியது. அவனது சிந்தனையின் வளர்ச்சியால் வழிபாடு உருவம் பெறத் தொடங்கியது.

இயற்கைக்கு மனித உருவங் கொடுத்து வழிபட ஆரம்பித்தபோது அதிகாரத்தில் இருந்தவன் கடவுளையே தன்வசப் படுத்தத் தொடங்கினான். அதன் வழிநின்று மக்களுக்கு முன் மாய ஜாலவித்தைகளைக் காட்டி மக்களை தன் ஆளுமைக்குள் மயக்க நிலையில் வைத்திருந்தான். இவன் காலப்போக்கில் ஆட்சியாளர்களையும் தன்வசப்படுத்தி அரச சட்டங்களினூடாகவும் மக்களை மதநிலைப்படுத்தினார்கள்

இது கீழைத்தேச நாடுகளில் மட்டுமல்ல உலகெங்கும் நடந்தது. ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவ மதம் பல்வேறுபட்ட சடங்குகளையும் சட்டங்களையும் பயன்படுத்தி மக்களையும் மன்னனையும் தம் வசப்படுத்தி வந்தார்கள். உலகம் தட்டையென்ற கருத்தை மறுத்து உலகம் உருண்டை என்று வலியுறுத்திய கலிலியோவுக்கு மரணதண்டனை விதிக்கும்கும்படியும் அவரது கருத்துக்கள் தெய்வநிந்தனை என்றும் இறைவனுக்கு எதிரானவர் என்றும் மத நிலை நின்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஆரியர்களின் ஆக்கிரமிப்பினால் எத்தனையோ மூடநம்பிக்கைகளும் புதிய பல சடங்குகளும் தமிழ்மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அந்நியர் ஆட்சியுடன் இன்னும்பல மதங்கள் தமிழர்களுக்குள் புகுந்தன.

சமணம் வந்து துறவு நிலையையும், இந்துக்கள் லௌகீகம் பற்றியும் பல்வேறு நம்பிக்கைகளையும் பரப்புரைகளையும் செய்தனர். இவ்வாறே இஸ்லாம், யூதம், கிறீஸ்தவம், பௌத்தம் போன்ற பல நிறுவனப்படுத்தப்பட்ட மதங்கள் மக்களை வசப்படுத்தி தம் ஆளுகைக்குள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு இருக்கின்றன.

இவ்வாறு அந்நியராட்சியுடன், மதம் சார்ந்த அரசியல் ஆளுமையே உலகம் எங்கும் வியாபித்து இருந்தது. கிறிஸ்தவ மதச் சார்புடையவர்களின் ஆட்சிக்காலத்தில் மதம் மாறுபவர்களுக்குப் பதவியும் பரிசில்களும் ஏன் கல்வியும் வழங்கப்பட்டது. அதனாலேயே பல மக்கள் மதம் மாறினார்கள். வியாபாரத்திற்கென வந்த ஐரோப்பியர்களே இறுதியில் மதநிலை நின்று தமது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்களை வசப்படுத்தினார்கள்.

உலகப் போரின் முடிவில் பல நாடுகள் சுதந்திரம் பெற்றன. சுதந்திரத்தின் பின் அதிகாரத்திற்கு வந்த அரசுகளும் கட்சிகளும் தாம் நிலை நின்ற மதத்தையே அடிப்படையாக கொண்டு இயங்கின. இந்தியாவில் இந்துத்துவ கோட்பாடுகளும் வழிபாடுகளும் முதன்மைப் படுத்தப்பட்டன. அதனாலேயே பாபர் மசூதி உடைப்பு, கிறிஸ்த்துவ மதக் கலவரங்கள் எனப் பல அரசுகளின் ஆணைகளாலும் அவமதிப்புகளினாலும் பல அழிவுகள் மரணங்கள் ஏற்பட்டன.

இலங்கையில் பௌத்தம் ஆட்சியாளரையும், சட்டங்களையும் அரசியல் கொள்கைகளையும் தீர்மானிக்கும் அலகாக வளர்ந்து விருட்சமாகிவிட்டது. மக்கள் அதன் ஆளுகைக்குள்ளேயே வாழ்ந்து வருகிறார்கள். பௌத்த பிக்குகளின் கருத்துக்களே அரசியலை தீர்மானிக்கின்றது. இதை சிங்களத்தலைமைகள் மதத்தின் வழியிலேயே போரை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்று நம்பின. ஏனெனில் மதம் ஒரு ஜனரஞ்சகப் படுத்தப்பட்ட சமூக அமைபப்பு. அதன் வழிநின்று மக்களை ஒரு மயக்க நிலையில் வைத்திருப்பது இலகு. மக்கள் மதத்திற்கு மேல், கடவுளிற்கு மேல் முன்னோக்கிய சிந்தனை பரி-மாணத்திற்குச் செல்வதில் தயக்கம் காட்டுவர். இது ஆளும் வர்க்கத்திற்கு சாதகமாகவே அமைந்து விடுகிறது.

இந்த வகையிலேயே வடக்கு கிழக்கு மக்களையும் மதங்களினூடாக தம்வசப்படுத்தலாம் என்று ஆளும் அரசுகள் எண்ணியது. போரின் கோரத்தால் நொந்து நொடிந்து போய் இருக்கும் தாயக மக்களை மதத்தினூடாக மயக்கலாம் என எண்ணியது. அதனாலேயே சந்திரிக்கா அரசு புனர்வாழ்வு அளிப்பதாக கூறிக்கொண்டு டக்கிளஸ் தேவானந்தா அவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு பதவியை வழங்கியது. புனர்வு வாழ்வு அமைச்சீர் வடக்குக் கிழக்கில் இருந்த பேர் தெரியாத ஆலயங்களுக்கெல்லாம் நிதிகளை வழங்கினார். கோயில்கள் புனர் பெற்றன. பெயர்தெரியாத கோயில்களுக்கெல்லாம் வரலாறு தேடப்பட்டன. ஆலயங்கள் புதுப் பொலிவு பெற்றன. அரச மரங்களும் சீமெந்து அரண் அமைத்து நிறந்தீட்டப்பெற்று புனிதமாகியது. ஆலய நலன் பேணும் அரசியல் வாதியின்பால் மக்களுக்கு அபி-மானம் அதிகரித்தது. "கோயில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்" என்றனர். கோயில் வளர்ப்பவன் கடவுளைப் போல் மதிக்கப்படுவான் என்ற நிலை. கள்ளவாக்கில் மீண்டும் தெரிவானார்.

இதையே இன்றைய சமாதான நாயகன் ரணி விக்கிரமசிங்கா அவர்களும் மேற்கொண்டார். இந் விவகார அமைச்சினை மகேஸ்வரனுக்கு தர ஆல பரிபாலனச் சிறப்பிற்காக பணி செய்வதில் மு நிற்கின்றார். மக்கள் கலவரங்களில் கதி கலங் நின்றாலும் அவர்களை மயக்க நிலையி வைத்திருப்பதற்கு மதங்கள் ஆயுதமாக பாவிக் முனைகிறார்கள். தந்திரம் மிக்க . அரசிய தலைவர்கள் கையாளும் வழிவகைதான் இதன்மூலம் மக்களின் சிந்தனையை மட்டுப்படுத் மாயைக்குள் வைத்திருக்க முடியும்.

மதம் ஒரு பலமிகு ஆயுதமே. எனவே தமிழ் மக்களே மாயைக்குள் மாண்டு மயங்கி விடாதீர்கள் விழித்திருங்கள்.

தமிழ்நாடு அரசு மதம் மாறுவதற்கு தடை விதிக்கும் சட்டமூலத்த்தை உருவாக்கியுள்ளது இச்சட்டம் ஒரு மனிதனின் சுய சிந்தனையைச் கட்டுப்படுத்தும் ஒன்று. இது தனிமனித சுதந்திர உரிமைகளை அதிகாரத்தனால் கட்டுப்படுத்துவது இது கண்டிக்கப்படுவதே. இதை உலக ஊடகங்கள் மனித நேய அமைப்புகள் அனைத்தும் கண்டிக்கவேண்டும்.

எனவே மதம் இனம் மொழி எனப் பிரித்து அடையாளப் படுத்தப்படும்போது மனித ஒற்றுமை சிதைவுறுகிறது. வெளிப்படையாக மனிதன் ஏதோ ஒன்றில் சார்ந்து நிற்கும்போது அவன் சார்ந்து நிற்கும் ஒன்றிற்காகவே வாழும் மனப்பாங்கைக் கொள்கையாக கொள்கிறான். அவன் சாராத விடயங்களை விலத்தி பாாக்கிறான். தான் சாராத விடயத்தை தனக்கு எதிரானதாகவே பார்க்கிறான். இவை இன்றும் என்றும் பாரதூரமான விளைவுகளையே தரும்.

எனவே எதிலும் சாராது தனித்து நின்று நியாயமான நோக்குடையவன் மதம் என்ற ஆயுதத்துள் மடிந்து விடமாட்டான்.

வாழ்க மனிதம்.
மாவலன், ரொரன்ரோ

வணக்கம் !

உரை மொழிவு முதற்பிரதி வாசிக்கக் கிடைத்தது. அது பற்றிய எனது எண்ணப்பாடுகள் சிலவற்றை எழுதுகிறேன்.

முதற்கண் மாறுபட்ட வகையில் ஒரு இதழை கனடிய மண்ணில் அறிமுகப்படுத்தியமைக்கு நன்றி. இலக்கியப் பத்திரிகைகளும் செய்தி என்ற பெயரில் விளம்பரங்களை கொண்ட பத்திரிகைகளும் மலிந்து விட்ட சூழலில் இதன் வரவு மகிழ்ச்சியாய் உள்ளது. ஆனாலும் செய்திப் பத்திரிகை வடிவில் கட்டுரைகளைப் படிக்க நாங்கள் பழக்கப்படாததால், இதழின் வடிவத்தை கவனத்தில் எடுக்கவும். அத்துடன் புத்தக வடிவில் தந்தால் வாசிக்க, பாதுகாக்க இலகுவாக இருக்கும். உள்ளடக்கங்களைப் பொறுத்தவரையில் வேறுபட்ட பார்வையில் கட்டுரைகள் நன்றாக உள்ளன. நிறைய தகவல்களைப் பெறக்கூடியதாக உள்ளதுபோலவே நிறைய எழுத்துப் பிழைகளும் உள்ளன. பெண் விடுதலை பற்றிய கட்டுரை மிகவும் அடித்தள அறிமுகமாக உள்ளது. எனினும் "கனடிய தமிழர்களை"ப் பொறுத்தவரையில் 90 வீதமானோருக்கு பெண்விடுதலை பேசக்கூடாத பேச்சாகவும், குழப்பத்தைக் கொடுக்கும் சொல்லாகவும் இருக்கிறது. பெண்களின் பிரச்சினைகள், உரிமைகள் பற்றிய வெளிப்பாடுகள் வேறு இதழ்களில் வாசிக்கக் கிடைத்தாலும் பெண்விடுதலை பற்றிய அடிப்படைக் கருத்தாக்கங்கள் எதுவும் தெரியாதநிலையில் அடிப்படையிலிருந்து கற்பிப்பதுவும் நல்ல முயற்சியாகவே தெரிகிறது. பத்திரிகை தொடர்ந்து வரும் என்ற நம்பிக்கையை ஆசிரியம் அளிக்கிறது. அதற்காக எதையாவது நிரப்பி வெளியிடவேண்டாம் என்று உங்களைக் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவு காலம், எத்தனை பத்திரிகை என்றில்லாமல் எத்தகைய தரமுடையது என்பதைக் கவனத்தில் எடுக்கவும். ஏனென்றால் இதன் முதல் வாசிப்பிலேயே ஒரு வாசகியாக என்னை ஈர்த்துள்ளது. மீண்டும் பழைய வாசகத்தரத்திற்கு உரை மொழிவு என்போன்றவர்களை இட்டுச் செல்லாது என நினைக்கிறேன். ஒரு இதழ் மூலமாக உலகப் பரப்பில் எல்லா நாட்டுத் தமிழ் அறிஞர்கள் கருத்துக்களையும் வாசிக்கத் தந்தமைக்கு எனது பாராட்டுக்கள்.

நன்றி,

செல்லக்கிளி
வவுனியா.

படிப்பகம்

www.padippakam.com

(29ம் பக்கத் தொடர்ச்சி) நகை ...

கழற்றி விட்டு பெண்கள் கலர் புடவைகள் கட்டலாம். இவ்வழக்கம் முன்னேறிய இன்றைய நாளில் வந்தது இல்லை. முன்பிருந்தே இவ்வழக்கம் நிலவி வருகிறது. முற்காலத்தில் பெண்கள், தாலி, மெட்டியுடன் மூக்குத்தியைக் கழட்டி விடுவர். இன்று மிகக் குறைந்த வயதினர் மூக்குத்தியைக் கழற்றுவதில்லை.

தொழிலில் ஈடுபாடு - கைத்தொழிலில் பெண்கள்

இன்றைய நாளில் பெண்களும் ஆங்காங்கே பெற்றோருக்கு, கணவருக்கு உதவியாக நகைத்தொழிலில் ஈடுபடுகின்றனர். கோவை, திருச்சி நகரங்களைப் போன்று அதிகளவில் திருநெல்வேலி வட்டாரத்தில் பெண்கள் நகைத் தொழிலில் ஈடுபடாவிட்டாலும் துணை வேலைகள் தங்கக் கம்பி கொண்டு முத்து பவள மாலைகள் பின்னுதல், முறுக்குச் செயின் முறுக்குதல், நகைக-ளை வடிவமைத்தல் போன்ற செயல்களைச் செய்கின்றனர்.

தொழிலில் ஆரம்பக் காலங்களில் இருந்தே பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆபரணங்களில் தங்கக் கம்பிகளைக் கொண்டு பின்னுவது, திரிப்பது, கண்ணி கோர்த்தல், மாலை கட்டுதல் போன்ற வேலைகள் இருக்கும். இவ்வேலைகளைப் பெண்கள் அதிகம் செய்கின்றனர். இன்று ஆபரணங்களில் கல் வைக்கும் வேலையை அதிகமாக பெண்களே செய்கின்றனர். கோவை, சென்னை போன்ற நகரங்களில் பெண்கள் ஆபரணங்களில் கல்வைக்கும் வேலை, பட்டை தீட்டும் வேலைகளை செய்கின்றனர். சிலர் முழு வேலையைச் செய்வதில் வல்லவர்களாக உள்ளனர். இயல்பாகவே இத்தொழில் கலைநயமும் நுட்பமும் கொண்டதால் பெண்கள் சிறப்பாக செய்கிறார்கள்.

வராகன் (வர)தட்சணை

இந்தச் சமூகத்தில் பெண்களுக்கு வரதட்சணை கொடுக்கும் வழக்கம் இருந்தது கிடையாது. மாறாக ஒரு பெண்ணைப் பெற்று வளர்த்து மணமகன் வீட்டிற்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் மணப்பெண்ணின் தாயாருக்குக் காணிக்கையாகக் கொடுக்கும் வகையில் வராகன் (காட்டுப்பன்றி) உருவம் பொறித்த தங்கக் காசினைத் தட்சணையாகக் கொடுத்தனர் மணமகன் வீட்டார். பின்னர் வராகனுக்குப் பதில் அதன் மதிப்பான 3 1/2 ரூபாயைக் கொடுத்தனர். நிச்சயதாம்பூலத்தின் போது முலைப்பால் பணம் என 3 1 / 2 ரூபாயை மஞ்சள் துணியில் முடிந்து முதல் மரியாதையாக இன்றும் வழங்கப்படுகிறது. இப்படி வழங்கப்பட்ட வராகன் தட்சணையே இன்று திருமணத்தில் வரன் (ஆண் மகன்) தட்சணையாக மருவி வரதட்சணை என அழைக்கப்படுகின்றது. பிற சமூகத்தினரைப் பார்த்து இன்று சில இடங்களில் மணமகன் வீட்டார் வரதட்சணை கேட்பது மெதுவாக அதிகமாகிக் கொண்டு வருகிறது.

சமயம்

தட்டார்கள் வாழ்வில் பல தெய்வங்களை வழிபட்டாலும் அம்மனை குறிப்பாக காமாட்சி அம்மனை முக்கிய தெய்வமாக வழிபடுகின்றனர். முத்தாரம்மன், அங்காளம்மன் ஆகியவர்களும் முக்கிய தெய்வங்களே. பிள்ளையார் வழிபாடும் இவர்களிடம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஒவ்வொரு தெருவிற்கும் ஓர் அம்மன் கோயில் காணப்படுகிறது. தெருவில் வரி வசூல் செய்து அம்மன் கோவில் கொடைகளைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். தெருவில் உள்ள அம்மன் கோவில் விழாவின் பொழுது பிற சமூக மக்கள் வழங்கும் தொகைகளையும் பெற்றுக் கொள்கின்றனர். இதற்கு தட்டார்களிடம் செல்வ வளம் குறைந்திருப்பதும் முற்காலத்தில் ஒரே சாதி யினர் ஒரு தெருவில் இருந்தது மாறி பல சாதியினர் கலந்து வசிப்பதும் காரணம்.

இவர்கள் ஆயுதங்களைக் கொண்டு தொழில் செய்வதால் ஆயுத பூஜையை (சரஸ்வதி பூஜை) மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். விஜயதசமி அன்று புதிதாக தொழில் படிக்க வருபவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். கார்த்திகை தீபம், தீபாவளி, பொங்கல், தமிழ் புத்தாண்டு பிறப்பு போன்ற பண்டிகைகளும் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. அத்துடன் தமிழ் மாதங்களில் வரும் அமாவாசை, பௌர்ணமி, திருவிழாக்கள், கார்த்திகை மற்ற விரத நாட்களும் சிறப்பானவையாக கருதப்படுகின்றன.

தட்டார்களில் பெரும்பாலோனார் இந்துக்களாக இருப்பினும் குறைந்த எண்ணிக்கையில் கிறித்துவ மதத்தைத் தழுவியும் இருக்கின்றனர். இவர்களுக்கும் அமாவாசை, பௌர்ணமி விரத நாட்களும் சிறப்பானவையாக கருதப்படுகின்றன.

சமூக பொருளாதார நிலை

தட்டார்கள் சமூக, பொருளாதார நிலையிலும், கல்வியிலும் பின்தங்கியே இருக்கின்றனர். இன்றைய நவீன உலகின் விரைவான போக்கிற்கு ஈடுகொடுக்க இயலாமல், விலகிப் பின்தங்கிக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். இதற்குப் பொருளாதாரம் ஒரு காரணம் என்றாலும், நகைத் தொழில் தவிர்த்து பிற தொழில்கள் பிற நடவடிக்கைகளிலும் ஈடுபடாததும் முக்கிய காரணமாக அமைகின்றது. கல்வி கற்று முன்னேறியவர்கள் தங்கள் சமூகத்தினரை முன்னேற்றி விட எதுவும் செய்வதில்லை என்பது இவர்களுடைய ஆதங்கமாக உள்ளது. கல்வியறிவு குறைந்த இவர்கள், தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள அரசின் உதவிகள், திட்டங்கள் குறித்து அறியாமையுடன் இருக்கிறார்கள். படித்தவர்கள் உதவினால், படிக்காதவர்கள் புரிந்து கொண்டு முன்னேற வழி பிறக்கும், கல்வி கற்று அரசு வேலையில் இருப்பவர்கள் நகைத் தொழிலில் ஈடுபட்ட மக்களுடன் கலக்காமல் ஒதுங்கி இருப்பதால், இவர்களுக்கு பயன் இல்லை. கல்வியறிவு குறைந்த இம்மக்களுக்கு அரசு நிறுவனங்கள், அரசு நிதி உதவி செய்யும் நிறுவனங்களை அணுகக் கூட தயங்குகிறார்கள். இவை போன்ற காரணங்களால் சமூக பொருளாதார நிலையில் பின்னடைந்து இருக்கின்றனர்.

பொதுவாக, தட்டார்களைக் குறித்துக் கூறப்படும் குறைகளில் முக்கியமானதாக, கல்வியறிவின்மையையும், திட்டமிட்டு சேமித்தல் என்ற பழக்கம் இல்லாததும் ஆகும். அத்துடன் இவர்களுக்கு ஆடம்பரமோகம், மனக்கட்டுப்பாடு குறைவு என்பதால், தொழிலிலும் சிறிது சரிவு ஏற்பட்டதுமே இவர்களின் வாழ்வியல் கேள்விக்குரியதாகி விடுகிறது. அத்துடன் விலை மதிப்பான பொருள் கையில் புழங்குவதால், அதில் ஏற்படும் சிறு இழப்பும், பணத் தொகையில் பெரிய அளவாக இருப்பதும் ஒரு காரணம். வேலை செய்யும் பொழுது சிறிதளவு தங்கம் குறைந்தாலோ, தொலைந்தாலோ கையில் இருந்துதான் போட வேண்டும். வேறு வழியின்றி, வட்டிக்கு வாங்கிப் போடுகின்றனர். வட்டி, வட்டிக்கு மேல் வட்டியாகி கடைசியில் சில தொழிலாளர்களின் உயிரையும் குடிக்கிறது. சில தொழிலாளர்களை உயிரைக் காப்பாற்றிக் கொள்ள கண்காணாத இடத்திற்கு துரத்தியடிக்கின்றது.

(நகைத்தொழில்பற்றிய பகுதி அடுத்த இதழில்)

(32ம் பக்கத் தொடர்ச்சி) **மானிட ...**

வாழ்கின்றனர் (Patrilocal). குடும்ப நிர்வாகம் தந்தையிடமே உள்ளது. சொத்துரிமையும் ஆண்வழிதான் அமைகிறது. நான்கு முக்கியமான அளவுகோல்களும் தந்தைவழி அமைந்தாலும் உறவினர்களை இனங்காண்பதில் இருவழி முறையை ஏற்றுக் கொண்டுள்ளனர். திராவிட உறவுமுறைச் சொற்கள் தந்தை வழி உறவினர் யார், தாய் வழி உறவினர் யார் எனப் பிரித்துக் காட்டுவதில்லை. இரு சாராரையும் சமமாகவே இனங்காண்கின்றன. இந்நிலையில் இரு வழியிலும் முறைப் பெண்களை மணந்து கொள்ளும் இருவழி முறை மணம் (bilateral cross-cousin marriage) காணப்படுகிறது. இதுவே திராவிட உறவு முறையின் அடிப்படையாகும்." (பக்தவத்சலபாரதி 2002. 95) என்கிறார்.

ஆனால் "தமிழ்ச்" சமூகத்தில் இன்னும் மேற் சொன்ன நான்கு அளவுகோல்களிலும் (குடிவழி, மணமக்கள் திருமணத்திற்குப்பின் எவருடைய தாய் தந்தையருடன் வாழ்கின்றனர், குடும்ப நிர்வாகம் யார் கையில் உள்ளது, சொத்துரிமை எவர் வழி செல்கிறது. ஆகிய...) தாய் வழியைத் தொடர்பவர் இன்னும் இருக்கின்றனர். தேர்தல் முறைப் பெரும்பான்மை கருதி, அதிகம் பேரிடம் இருப்பதால் தமிழ்ச் சமூகத்தை வகைப்படுத்துவதா அல்லது பண்பாடுகளின் தனித்தன்மைகள் கருதி அவற்றை பொதுமைப் படுத்தாது நுணுகிப்பார்ப்பதா என்பதே எனது வியப்பிற்குரிய வினா? "...மானிடவியல் நூல்கள் ஆசிரியனை அவனால் பேசப்பட்ட மக்களினின்றும் பிரிக்க முயல்கின்றன ஆசிரியனின் சொந்த அனுபவங்களை அவன் நூல் தரும் விளக்கத்தோடு இணைப்பதில்லை." (ப.மருதநாயகம். 'வளரும் மானிடவியல்'. மே.கு.நூல். ப. XXVI). மேலும், மேலே மேற்கோள் காட்டப்பட்ட பந்தியில் அடிக்கோடிட்டவை வாசிப்புத் தொடர்ச்சியை இடறுகின்றன. வாக்கியங்கள் என்ற வகையில் அவை தரும் பொருளும் பந்தி என்ற வகையில் அவை தரும் பொருளும் ஒருபோலவா உள்ளன என்ற வினா எழாமல் இல்லை.

இதன் முந்திய பக்கத்திலேயே உள்ள இன்னொரு முரணையும் சுட்ட விரும்புகின்றேன். "...அறிஞர்கள் கண்டறிந்த தென்னிந்தியப் பகுதியில் இவ்வகைத்திருமணம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது." (பக்தவத்சலபாரதி 2002. 94-95) ஆசிரியர் மதனி மணத்தைக் குறிப்பிடுகின்றார்.

ஒரு இறப்பு நிகழ்வின் போது, அதனை உடனேயே முகம்கொள்ள வேண்டியிருந்தது. இறந்தது எனது நண்பன் ஒருவன். இறப்பு நிகழ்ந்து 5-6 மணித்தியாலங்கள் ஆகாத வேளை இடுகாட்டிற்கும் எடுத்துச் செல்லும் முன்னர் நடந்த நிகழ்வு ஒன்றைச் சுட்ட விரும்புகின்றேன். கணவனை இழந்து அழுகின்ற அந்தப் பெண்ணைச்சுட்டி 'என்னை இது வரை நாளும் மதிக்கவில்லை. அதனால் நான் இவளைக் கட்ட மாட்டேன்' என்று அந்த வீட்டு வாசலில் நின்று வீராப்புப் பேசும் இறந்தவரின் தம்பி சொன்னதை நான் நேரடியாக எதிர் கொண்டேன். இவை போன்றவை, குறித்த கள ஆய்வு முடிவுகளாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் களத்தில் வாழ்வு இருக்கின்றது என்றே கருதுகின்றேன்.

அடுத்த இயல் சாதித் தோற்றத் தொன்மங்கள் பற்றியது. பல்வேறுபட்ட (அனைத்துச் சாதிகளையும் அல்ல) தமிழகச் சாதிகள் தொடர்பான தொன்மங்கள் விவரிக்கப்பட்டதுடன் சில குறுக்கு வெட்டுப் பார்வைகளும் தரப்பட்டுள்ளன.

பின்னர் வரும் சடங்குகள், தெய்வ உலகம், திருவிழா, யாத்திரை ஆகிய இயல்கள் "தமிழகத்தின்" சமயம் சார்ந்த குறுக்கோட்டங்களைக் காட்டுகின்றது. அதுவே அதற்கு முந்தைய சாதித் தென்மங்கள் பற்றி இயலில் கட்டமைத்துவிட்ட சமூகம் பற்றிய பண்பாட்டு பார்வையை மேலும் படம்போட்டுக் காட்டுவதாக அமைகின்றது. "இந்தியப் பண்பாட்டை சாதி யப் பண்பாடாகத்தான் பார்க்கவேண்டும் என்பது மானிடவியலாரின் நிலை" (பக்தவத்சலபாரதி, 2002: 228) வேறு வழியில்லை.

இன்னும் "தமிழ்" பண்பாட்டுப் படிப்புப் புலங்களில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் பெருள்சார் பண்பாடு அல்லது புழங்கு பொருள் பண்பாடு பற்றி இந்த நூலிலும் கடைசி இயலில் இடமும் குறைந்தளவு கவனமும் கிடைத்திருக்கிறது. அது நூலாசிரியரின் நிலையைக் குறிப்பதாகாது. மாறாக தமிழ் ஆய்வுப்புலத்தின் நிலையைக் குறிக்கின்றது.

தமிழர் என்போர் யார்? பலநேரங்களில் இந்தியராகவும், குறைந்தளவு நேரங்களில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களாகவும், இன்னும் சில நேரங்களில் உலகளாவியவர்களாகவும் இருக்கின்றனர். ஆங்கிலேயர் என்பது அமெரிக்கர்களை எவ்வாறு தனியே குறிக்காதோ அல்லது பிர்தானியர்களை எவ்வாறு தனியே குறிக்காதோ அதேபோல தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழர்கள் மட்டும் "தமிழர்" அல்ல. என்றால், "தமிழர் மானிடவியல்" பற்றிய ஆய்வுகளோ அல்லது பிற சமூகவியல் ஆய்வுகளோ பல்வேறு இடங்களிலுமுள்ள தமிழர்களையும் பற்றிக் குறிப்பாகக் கவனம் கெ ாள்ளவேண்டியுள்ளது.

எடுத்துக்காட்டாக மலேயாவில் இருக்கும் தமிழர்களின் நிலை, பலவழிகளிலும் மிகவும் ஒடுக்கப்பட்டதாக தங்களுக்கான பண்பாட்டு ஒழுகலாறுகளை வெளிப்படையாக கடைப்பிடிக்க முடியாநிலையில் உள்ளனர். இலங்கையில் "தமிழ்" பண்பாட்டின் பல முகங்கள் ஒரு போல, தமிழகத்தை ஒத்ததாக, ஒருபோதும் இல்லை. இவ்வாறான நுணுகிய சூழமைவு நிலைகள் இருக்கின்ற நிலையில் "தமிழர்" மானிடவியல் எல்லை கடக்கவேண்டிய தேவை உள்ளது. தமிழில் நிகழும் ஆய்வு முயற்சிகள் வளர, இது சாத்தியமாகும். அவற்றிற்கு இது போன்ற நூல்கள் பெரிதும் உதவியானவை.

இதுவரை நாளும் "தமிழி"ன் பண்பாட்டுப் படிப்புப்புலங்களில் வந்த ஆயவுகளனைத்தையும் ஒருங்கே சேர்த்து தொகுப்பாக்கி, அதனை முறையான ஓட்டத்தில் தந்திருக்கிறார். எடுத்துக்காட்டுக்களுடன் கோட்பாடுகள் எளிதாக தெளிவாக்கப்படுகின்றன. மானிடவியல் புலத்தில் கல்விகற்கும் "தமிழர்" அனைவரும் ஒருதடவை படிக்க வேண்டிய நூல். படிப்புப் புலம் சார்ந்தவர்கள் என்றில்லாமல் அனைத்துப் பிரிவினரும் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டிய தகவல்கள் "தமிழ்"பண்பாட்டைப் பற்றி இந்நூலில் நிறையவே உள்ளன.

படிப்பகம்

www.padippakam.com

கொம்யூனிஸ்ட் கார்த்தி

ஈழத்து இடதுசாரி இயக்கங்கிளில் எழுத்தால் பிரபலமாகிய அளவுக்கு மக்களுக்குள் நின்று உழைத்தவர்கள் அறியப்படவில்லை என்பதற்கு அமரர் மு.கார்த்திகேசன் அவர்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழகத்திலும் இலங்கையிலும் கே. டானியல் , என்.கே.ரகுநாதன், கா.சிவத்தம்பி, டொமினிக் ஜீவா, க.கைலாசபதி என்று அறியப்பட்டவர்கள் வரிசையில் கைலாசபதி போன்றோரை உருவாக்கிய ஆசிரியனும், சமுதாயப் பணியாளனும், பல இடதுசாரிகள் முளைக்கக் காரணமுமாயிருந்த கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அல்லது கார்த்தி அறியப்படாதமை கவலைக்குரியது. இவரை அறியாதவர்களுக்காக, இவருடைய அரச-

ியல் , ஆசிரிய, சமுதாயப் பக்கங்களிலிருந்து சிலவற்றைத் தருவதன் மூலம் மகிழ்ச்சியடைகிறேன்.

1943களில் இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இதில் பங்களிப்புச் செய்த எஸ். ஏ. விக்கிரமசிங்க, பீட்டர் கெனமன், என். சண்முகதாசன், எல், ஆரியவன்ச ஆகியோருடன் மு. கார்த்திகேசனும் ஒருவர் ஆவார். கட்சிக்காக அர்ப்பணிப்புடனும், புத்தார்வத்துடனும் செயற்பட்ட ஒரு போராளியாயிருந்தார். 1947களிலிருந்து இலங்கையின் வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு ஓங்கத் தொடங்கியது. இக்காலகட்டங்களில் இவரின் பங்கு அக்கட்சிக்கு அடித்தளமாயிருந்தது. யாழ்குடாநாட்டில் மார்க்ஸிச-லெனிஸிச கருத்துக்களை கிராமம் கிராமமாகச் சென்றும், தனது சொந்த வீட்டில் வகுப்புக்களை நடத்தியும் பரப்பி வந்தார். அன்றய இளைஞர்கள் பலருக்கு அறிவு - சமூக விழிப்புணர்வு ஏற்பட அதிகளவில் உழைத்தவர் கார்த்திகேசன் ஆவார்.

சொந்த நலன்களை விட்டு மக்கள் - கட்சி என்று கடினமாக உழைத்தவர்களில், இலங்கையில் குறிப்பிடக்கூடியவர்களில் இவரும் ஒருவர். 1955ல் யாழ்மாநகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். இது அவருக்கு மேலும் பல சேவைகளிற்கான வாய்ப்பைக் கொடுத்தது.

மலேசியாவில் பிறந்து, இலங்கையில் உயர்கல்வி பெற்றிருந்தாலும் அந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சொந்த வாழ்வை வளப்படுத்தாது, தான் ஏற்றுக் கொண்ட கருத்தியலுக்கு ஏற்றதாக எளிமையாக வாழ்ந்தார். இந்த எளிமையான போக்கு சமுதாய அடித்தளத்திலிருந்த மக்களை அவருடன் இயல்பாக ஊடாட வைத்திருந்தது. தொழிற்சங்கம், விவசாயிகள் சங்கம், வாலிப சங்கம், ஆசிரிய சங்கம் போன்ற சங்கங்களின் பின்னணியான இவர் வடபகுதியில் தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு உறுதுணையாக இருந்துள்ளார். யாழ்மாவட்டத்தில் வாலிப சங்கக் கிளைகள் பரவலாக நிறுவப்பட்டன. அங்கெல்லாம் கம்யூனிஸக் கருத்துக்களையும், சாதிய சமூக

விழிப்புணர்வுக் கூட்டங்களையும் தலைமை தாங்கி நடத்தி கார்த்திகேயன் ஒரு இளைஞர் படையைத் திரட்டியிருந்தார். இது இலங்கை வடபகுதி கம்யூனிஸ்ட் கட்சியை பலமுள்ளதாக்கியது. அன்று யாழ்நகரில் உள்ள தேநீர்க் கடைகளே இவர்களுக்குத் தேனீர் வழங்க மறுத்திருந்தது. உயர்சாதியினர் என்று அழைக்கப்படுபவர்களால் விரோதிகளாகப் பார்க்கப்பட்டிருந்தும் தான் கொண்ட குறிக்கோளுக்காக இடைவிடாது பாடுபட்ட சிந்தனையாளன் இவர்.

இவருடைய ஆசிரியப் பணியை அதிகமாக யாழ் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது. 1946 - 1971 வரைக்கும் இங்கு இவர் பணிபுரிந்துள்ளார். கட்சி தவிர்ந்து, மாணவர்களின் கல்வியில், அவர்கள் வளர்ச்சியில் அதிக அக்கறையைய் எடுத்திருந்தமையை அவரின் மாணவர்கள் நன்கு அறிவார்கள். இலங்கையில் பாடசாலைகளை அரசமயப்படுத்தவும், ஆசிரியர்களின் உரிமைக்கான போராட்டங்களிலும் இவரின் பங்கு உண்டு.

இவருடைய இலக்கியம் சார்ந்து பக்கங்களாக சிலவற்றைக் குறிப்பிடலாம். பீட்டர் கெனமன் உடன் சேர்ந்து போர்வேட் (Forward) எனும் பத்திரிகையையும், கொழும்பு பல்கலைக் கல்லூாயில், ஏகாதிபத்திய-பாசிஸ எதிர்ப்பு மாணவர் அமைப்பில் முன்னின்று உழைத்தவர். "மாணவர் செய்தி" என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். இடதுசாரி எழுத்தாளர் பலருக்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். ஆங்கிலக் கவிதைகள் எழுதியும், மார்க்சிஸ இலக்கிய விமர்சனங்கள் பலவற்றையும் செய்துள்ளார்.

இப்படியான சேவையாளர்களுக்காக ஆண்டுமலர் தரத்திலான நூல்களை உருவாக்குவதைவிடவும் அவருடைய பெயரால் ஓர் குறிப்பிட்ட அவருடைய மார்க்ஸியப்பார்வையிலான ஆய்வுகளை ஊக்கப்படுத்த இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கலாம். அவை சமூகத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வர வழிவகுக்கும். கனடாவில் ஒரு நூலை அச்சிடும் பணத்தை முதலிட்டால் இலங்கை போன்ற நாடுகளில் இருந்து சமூகப்பிரக்ஞை வாய்த்த பல ஆய்வு நூல்களைக் கொண்டு வரலாம். இதுவே அமரர் கார்த்தி போன்றவரகளின் நினைவை உரிய விதத்தில் மேற்கொள்ள உதவும். இந்த நூலில் உ... தரவுகளைச் சேர்த்து, பிற வாய்மொழ... தரவுகளையும் திரட்டி யாரேனும் கார்த்தியினுடை வாழ்க்கை வரலாற்றை எழுதுவார்களாயின் அ... எதிர்காலச் சமூகத்திற்கு ஊக்கம் தரும் வரலாற்றுச் சான்றாகத் திகழும்.

இவரின் 25வது ஆண்டு நிறைவையொட்டி ரொறன்ரோவில் ஆகஸ்ட் 24 - 2003 "கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்" எனும் நூல் வெளியிடப்பட்டிருந்தது. 406 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் அவருடைய கட்டுரைகள் சிலதும் இடம்பெற்றிருக்கின்றன. நூல் வெயியீட்டுக்கு வந்திருந்த மக்களையும், நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளையும் பார்க்கும்போது அமரர் முருகபிள்ளை கார்த்திகேசனின் மக்களுடனான உறவையும், பணியையும் 25 வருடங்கள் கடந்தும் கண்டுகொள்ளக்கூடியதாக இருந்தது. இத்தகைய சேவைகளைச் செய்த ஒரு சேவையாளனுக்கு இதைவிட மேலான ஒரு நூலை உருவாக்கியிருக்கலாம். ஆனாலும் அதன் உள்ளடக்கம் கற்பனையோ, புனைவோ அல்லாது ஒரு காலகட்டத்தின் பதிவாக இருப்பதனால் சிறப்படைகிறது.

- கௌலசா கந்தையா

இந்தியப் பண்பாட்டை சாதியப் பண்பாடாகத்தான் பார்க்கவேண்டும்

பக்தவத்சல பாரதி. 2002. தமிழர் மானிடவியல். சென்னை: மெய்யப்பன் தமிழாய்வகம். விலை: 150 இந்திய ரூபாய்கள்.

பாண்பாட்டு மானிடவியலுக்குப்பிறகு ஓர் அருமையான நூலைத் தந்திருக்கிறார் பகக்தவத்சல பாரதி. பண்பாட்டுப் புலத்திலிருப்பவர்களும் பண்பாட்டியலைப் படிப்போரும் கண்டிப்பாகப் படிக்கவேண்டிய நூல். பண்பாட்டு மானிடவியலின் பார்வைக்குள்ளால் ஒருவர் பெறும் பார்வை மாற்றம், படிப்பிற்குள்ளால் பலருக்கும் பட்டறிவிற்குள்ளால் பலருக்கும் அதனதன் அளவுகளில் கிடைக்கும். ஆனால் எவராயினும் தமிழில் வந்திருக்கும் இந்நூலைப் பார்க்க வேண்டியது அதி முக்கியம்.

தமிழ் பண்பாட்டுச் சூழலில் கிடைக்கின்ற பல எடுத்துக்காட்டுகளுடன் வழங்கப்படும் கோட்பாட்டு அறிமுகங்கள், இது வரை பண்பாட்டு மானிடவியலின் வீச்சுக்குள் வராதோராயிருப்பினும் அவர்களை எளிதாக வளைத்துப்போடும் தன்மையது.

முதல் இயல் தமிழர்களின் தாய்வழிச் சமூகம் பற்றியது. இதில் தாய்வழிச் சமூகம் குறித்த உலகளாவிய அணுகுமுறைகளும், பல எடுத்துக் காட்டுக்களுடன் தமிழர்களிடையே புழக்கத்தில் இருக்கும் இருவழித் திருமணப் போக்கின் பல்வேறு வடிவங்களும் சுட்டப் படுகின்றன. இதன் வழியே சமூகத்தின் தொடர்ச்சி எவ்வாறு உள்ளது என்று விரிவாக முனைகின்றார். பின்னர் வரும் திருமணம் என்னும் இயல் திருமணத்தில் நெருங்கிய பார்வையை வைக்கின்றது. அதில் திருமணத்தின் மீதான பல அணுகுமுறைகளும், எவ்வகையான அணுகுமுறைகள் மரபாகவும் எவ்வகையின மாறுதலாகவும் இருக்கின்றன என்று முன்வைக்கிறார்.

"தமிழ்ச் சமூகத்தின் குடி வழி ஆண் வகையானதே (patrilinieal). மணமக்கள் திருமணத்தின்பின் கணவனின் தந்தையகத்தில்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

படிப்பகம்